- இந்தியக் கடற்படையானது மூத்தக் கடற்படை வீரர்கள், வீர் நாரிஸ் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கான சுகாதார வசதிகளை மேம்படுத்துவதற்காக மகாராஷ்டிராவில் 4வது ‘SAMPARK’ என்ற பயிற்சியினைத் தொடங்கியுள்ளது.
- 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் நடைபெற உள்ள ஈகிள்னெஸ்ட் என்ற பறவை திருவிழாவின் புதிய முத்திரைச் சின்னத்தினை அருணாச்சலப் பிரதேச முதல்வர் வெளியிட்டுள்ளார்.
- மத்திய அரசானது, பிரதான் மந்திரி பாரதிய ஜன் ஔஷதி பாரியோஜனாவின் கீழ் பிரதான் மந்திரி பாரதிய ஜன் ஔஷதி கேந்திராக்களை (PMBJK) நடத்துவதற்கு முதன்மை வேளாண்மைக் கடன் சங்கங்களுக்கு (PACS) அதிகாரம் அளித்துள்ளது.
- புது டெல்லியில் நடைபெற்ற நான்காவது தேசிய தலைமைச் செயலாளர்கள் மாநாட்டிற்கு பிரதமர் அவர்கள் தலைமை தாங்கினார்.
- கீதா ஜெயந்தி எனும் நிகழ்வில் சுமார் 5,000க்கும் மேற்பட்ட ஆச்சாரியர்கள் இணைந்து 'ஸ்லோகங்கள்' வாசித்ததன் மூலம் போபால் (மத்தியப் பிரதேசம்) புதிய கின்னஸ் உலக சாதனையைப் படைத்துள்ளது.
- புகழ்பெற்ற புரவலரும், எழுத்தாளருமான டாக்டர் தினேஷ் ஷஹ்ரா, 'Dalai Lama’s Secret to Happiness' என்ற தனது புத்தகத்தினை வெளியிட்டுள்ளார்.
- "The Kumbaya Story" எனப்படும் இந்தியத் திரைப்படமானது மிகச் சிறப்பு மிக்க பிரிட்டிஷ் திரைப்பட மற்றும் தொலைக்காட்சிக் கலைகள் கழகத்தில் (BAFTA) நடைபெற்ற 13வது உலக நிலைத்தன்மை திரைப்பட விருது விழாவில் (GSFA) விருதினை வென்றுள்ளது.
- இந்தியாவிற்கும் சுவிட்சர்லாந்திற்கும் இடையேயான இரட்டை வரி விதிப்புத் தவிர்ப்பு ஒப்பந்தத்தில் (DTAA) மிகவும் ஒரு சாதகமான நிலையில் உள்ள நாடு என்ற தனது அந்தஸ்தினை (MFN) சுவிஸ் அரசாங்கம் இடைநிறுத்தியுள்ளது.
- சமீபத்தில் இரண்டாவது இந்தியா-ஈரான்-ஆர்மேனியா முத்தரப்பு பேச்சுவார்த்தைகள் புது டெல்லியில் நடைபெற்றது.
- தமிழ்நாட்டின் துக்காட்சி எனுமிடத்தில் உள்ள ஆபத்சஹாயேஸ்வரர் கோயில் வளங் காப்புத் திட்டமும், மகாராஷ்டிராவின் மும்பையின் BJPCI என்ற வளங்காப்புத் திட்டமும் யுனெஸ்கோ அமைப்பின் 2024 ஆம் ஆண்டிற்கான ஆசிய-பசிபிக் பிராந்தியத்திற்கான கலாச்சாரப் பாரம்பரியப் வளங்காப்பு விருதுகளை வென்றுள்ளன.
- அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் மத்தியத் தரைக் கடலில் ஓர் மிக இளம் ஷார்ட்ஃபின் மாகோ சுறாவைக் கண்டறிந்துள்ளனர் என்ற நிலையில் அருகி வரும் இந்த இனம் ஆனது இப்பகுதியில் கண்டறியப்படுவது இதுவே முதல் முறையாகும்.
- மணிப்பூர் மாநில அரசானது, 1904 மற்றும் 1939 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற நூபி லால் எழுச்சியின் போது நீதி மற்றும் சுதந்திரத்திற்காக போராடிய பெரும் வீரமிக்க பெண்களை கௌரவிப்பதற்காக நூபி லால் நுமித் 2024 நிகழ்வினை அனுசரித்தது.
- உத்தரக்காண்ட் மாநில அரசானது, ஆயுர்வேதத்தினை மேம்படுத்துவதற்கும், நவீன சுகாதார அமைப்புகளில் அதன் ஒருங்கிணைப்பு குறித்து ஆராய்வதற்கும் உலக ஆயுர்வேத மாநாடு மற்றும் ஆரோக்யா கண்காட்சி 2024 ஆகியவற்றை நடத்தியது.
- AVPN அமைப்பு ஆனது 2024 ஆம் ஆண்டு தெற்காசிய உச்சி மாநாட்டினை ‘New Realities, New Opportunities’ என்ற கருத்துருவில் சென்னையில் ஏற்பாடு செய்தது.

- எலான் மஸ்க், நிகர சொத்து மதிப்பில் 400 பில்லியன் டாலர் மதிப்பினைத் தாண்டிய முதல் நபர் என்ற பெருமையுடன் ஒரு புதிய நிதிசார் மைல்கல்லை எட்டியுள்ளார்.
- பிரான்ஸ் நாட்டின் அதிபரான இம்மானுவேல் மேக்ரான் ஃபிராங்கோயிஸ் பெய்ரூவை அந்நாட்டின் பிரதமராக நியமித்துள்ளார்.
- தமிழக முதல்வர், இராணிப்பேட்டை மாவட்டத்தில் 1,500 கோடி ரூபாய் முதலீட்டில் ஹாங் ஃபூ குழுமத்தின் தோல் பொருள் சாராத காலணி மற்றும் தடகளப் பயன்பாட்டுக் காலணிகள் தயாரிப்பு ஆலையினை அமைக்கச் செய்வதற்கான அடிக்கல்லை நாட்டினார்.
- தமிழ்நாடு திட்ட ஆணையத்தின் நிர்வாகத் துணைத் தலைவர் J.ஜெயரஞ்சன், அந்த ஆணையத்தினால் தயாரிக்கப்பட்ட வரைவுக் கொள்கைகள் மற்றும் அறிக்கைகளை முதலமைச்சரிடம் சமர்ப்பித்தார்.
- இந்திய மருத்துவ ஆராய்ச்சி சபையானது, சென்னை நீரிழிவு நோய் ஆராய்ச்சி அறக்கட்டளையுடன் (MDRF) இணைந்து நாட்டில் முதல் முறையாக நீரிழிவு நோய்க்கான உயிரி வங்கியை சென்னையில் நிறுவியுள்ளது.
- மால்டோவா குடியரசு ஆனது, சர்வதேச சூரியசக்தி கூட்டணி அமைப்பின் 121வது உறுப்பினராக இணைந்துள்ளது.
- பிரிட்டன் நாடானது, பசிபிக் நாடுகளுக்கிடையிலான கூட்டாண்மை வர்த்தக அமைப்பிற்கான விரிவான மற்றும் பல்வேறு முற்போக்கு அம்சங்கள் கொண்ட ஒப்பந்தத்தில் (CPTPP) அதிகாரப்பூர்வமாக இணைந்ததுடன், இந்த ஒப்பந்தத்தில் இணைந்த முதல் ஐரோப்பிய உறுப்பினராகவும், 12வது உறுப்பினராகவும் மாறி உள்ளது.
- 22வது திவ்ய கலா மேளா நிகழ்வானது 'Empowered Divyangjan' என்ற கருத்துருவின் கீழ் டெல்லியில் இந்தியா கேட் பகுதியில் நடைபெறவுள்ளது.
- இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் ஆனது (NHAI) வாகனங்கள், பாதசாரி நடைபாதைகள், சாலைப் போக்குவரத்து குறித்த அடையாளங்கள் மற்றும் பிற உள்கட்டமைப்புச் சொத்துக்கள் உட்பட விரிசல்கள் மற்றும் பள்ளங்கள் மற்றும் பிற கூறுகளை ஆய்வு செய்து அடையாளம் காண்பதற்காக 'ராஜ்மார்க் சாத்தி' என்ற புதிய வழித்தட ரோந்து வாகனங்களை (RPVs) அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்தியாவின் முதல் பிரத்தியேக யோகா கொள்கையினை அறிமுகப்படுத்தச் செய்ததோடு உத்தரகாண்ட் மாநிலமானது உலகளாவிய யோகா மையமாக மாற உள்ளது.
- வரலாற்றாசிரியர் A.R.வெங்கடாசலபதி, தனது திருநெல்வேலி எழுச்சியும் வ.உ.சியும் 1908 என்ற புத்தகத்திற்காக 2024 ஆம் ஆண்டிற்கான சாகித்ய அகாடமி விருதினை வென்றுள்ளார்.
- காங்கிரஸ் தலைவர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் மறைவைத் தொடர்ந்து, ஈரோடு கிழக்கு தொகுதிக்கான உறுப்பினர் பதவி காலியாக உள்ளதாக தமிழ்நாடு சட்டப் பேரவை செயலகம் அறிவித்துள்ளது.
- ‘சுகாதாரமும் பருவநிலை மாற்றமும்’ என்ற தலைப்பிலான தமிழ்நாடு கருத்தரங்கம் ஆனது சென்னையில் நடைபெற்றது.
- இந்திய ராணுவம் ஆனது ஜப்பான், அமெரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளின் இராணுவத் தலைவர்கள் மற்றும் மூத்த அதிகாரிகளுடன் இரண்டாவது தரைப்படை உச்சி மாநாட்டில் (LFS- 2024) பங்கேற்றது.

- டெல்லியின் தேசியத் தலைநகர் பிராந்தியத்திற்கான மத்திய அரசின் காற்றுத் தரக் குழுவானது, சாதகமற்ற ஒரு வானிலை காரணமாக காற்றின் தரம் மோசமடைந்துள்ள நிலையில் அங்கு காற்று மாசுக் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் மூன்றாம் கட்டத்தின் கீழ் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.
- மும்பை கிரிக்கெட் அணியானது மத்தியப் பிரதேச கிரிக்கெட் அணியினை வீழ்த்தி அதன் இரண்டாவது சையது முஸ்தாக் அலி கோப்பையை வென்றுள்ளது.
- அடுத்து புதிதாக உருவாக்கப்பட உள்ள தலைநகரான அமராவதியின் உருவாக்கப் பணிகளுக்கான 24,276 கோடி ரூபாய் மதிப்பிலான உள்கட்டமைப்புத் திட்டங்களுக்கு ஆந்திரப் பிரதேச தலைநகர மண்டல மேம்பாட்டு ஆணையம் (APCRDA) ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்தியா மற்றும் இலங்கை இடையேயான கடல்சார் ஒத்துழைப்பை வலுப்படுத்தும் SLINEX 2024 எனப்படுகின்ற இருதரப்புக் கடற்படைப் பயிற்சியானது விசாகப்பட்டினம் கடற்கரையில் நடைபெற்றது.
- இந்தோனேசியாவின் கிழக்கு ஜாவாவில் அமைந்துள்ள செமேரு எரிமலை சமீபத்தில் வெடித்தது.
- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது 1973 ஆம் ஆண்டில் அரபு மொழியை அதன் ஆறாவது அதிகாரப்பூர்வ அலுவல் மொழியாக ஏற்றுக்கொண்ட தினத்தை நினைவு கூரும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர் 18 ஆம் தேதியன்று அரபு மொழி தினம் கொண்டாடப் படுகிறது.
- 2025 ஆம் ஆண்டில் தமிழ்நாடு சட்டமன்றத்தின் முதல் கூட்டத்தொடர் ஆனது ஜனவரி 06 ஆம் தேதி வழக்கமான ஆளுநர் உரையுடன் தொடங்க உள்ளது.
- தமிழ்நாடு மாநிலத் தொழில்துறை மேம்பாட்டுக் கழகம் (SIPCOT) ஆனது, மாநிலத்தில் உள்ள 17 SIPCOT தொழிற்துறைப் பூங்காக்களில் குழந்தைகள் காப்பகங்களை உருவாக்குவதற்காக வேண்டி சென்னையின் FICCI-FLO நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- புகழ்பெற்ற கன்னட எழுத்தாளரும் சமூக ஆர்வலருமான தேவனுரா மகாதேவாவுக்கு தமிழக அரசின் 2024 ஆம் ஆண்டிற்கான சமூக நீதிக்கான மதிப்பு மிக்க வைக்கம் விருது வழங்கப்பட்டுள்ளது.
- திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள கிராமங்களில் கொட்டப்பட்ட உயிரி மருத்துவ மற்றும் கலப்பு திடக்கழிவுகளை அகற்றுமாறு கேரள அரசு மற்றும் கேரள மாநிலக் மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்திற்கு (KSPCB) தேசியப் பசுமைத் தீர்ப்பாயத்தின் (NGT) தெற்கு அமர்வு உத்தரவிட்டுள்ளது.
- சென்னையைச் சேர்ந்த 19 வயதான இந்திய-அமெரிக்கரான கெய்ட்லின் சாண்ட்ரா நீல், 2024 ஆம் ஆண்டு இந்திய அமெரிக்க அழகிப் போட்டியில் பட்டம் வென்றுள்ளார்.
- சீன டியாங்காங் விண்வெளி நிலையத்தின் இரண்டு விண்வெளி வீரர்களான காய் சூஷே மற்றும் சாங் லிங்டாங் ஆகியோர் ஒன்பது மணி நேர விண்வெளி பயணத்தை நிறைவு செய்து புதிய உலக சாதனை ஒன்றைப் படைத்துள்ளனர்.
- 2024 ஆம் ஆண்டு மூத்தோர் நிலை தேசிய பேட்மிண்டன் சாம்பியன்ஷிப் போட்டியில் முறையே கர்நாடகா மற்றும் ஹரியானா ஆகிய மாநிலங்களின் ஆடவர் மற்றும் மகளிர் அணி வெற்றி பெற்றுள்ளன.

- சுமார் 50 ஆண்டுகளில் முதல் முறையாக கர்நாடகா அதன் முதல் ஆடவர் பட்டத்தைப் பெற்றுள்ளது.

- 2024 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் ஏற்றுமதி மதிப்பு ஆனது 20,000 கோடி ரூபாயைத் தாண்டியதையடுத்து, 2019 ஆம் ஆண்டில் 23வது இடத்தில் இருந்த இந்தியா, உலகளவில் 3வது பெரிய திறன்பேசி ஏற்றுமதியாளராக முன்னேறி உள்ளது.
- முதலாவது இந்திய கடல்சார் பாரம்பரிய மாநாடு (IMHC 2024) எனப்படும் ஒரு முக்கிய நிகழ்வானது துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழித் துறை அமைச்சகத்தினால் (MoPSW) ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- பயோகான் குழுமத்தின் தலைவர் கிரண் மஜும்தார்-ஷா, இந்தியாவில் உயிரியியல் சார் பொருட்களின் உற்பத்தி இயக்கத்திற்கு முன்னோடியாக விளங்கியதற்காக இந்தியத் தர நிர்ணயச் சங்கத்தின் (ISQ) மதிப்புமிக்க ஜாம்செட்ஜி டாடா விருதை பெற்றுள்லார்.
- கட்டுமானப் பணிகளின் போது செயல்படுத்தப்பட்ட மகத்தானப் பாதுகாப்பு நெறிமுறைகளை வெகுவாக அங்கீகரித்து அயோத்தியில் கட்டப்பட்ட இராமர் கோவிலுக்கு பிரிட்டிஷ் பாதுகாப்பு சபையின் 'கௌரவ வாள்' விருது வழங்கப் பட்டுள்ளது.
- சென்னையில் உள்ள அப்பல்லோ ஃபர்ஸ்ட் மெட் மருத்துவமனையின் மூத்த மருத்துவர் மற்றும் இரைப்பை குடல் அறுவை சிகிச்சை நிபுணரான இரவீந்திரன் குமேரனுக்கு சமீபத்தில் எடை இழப்பு/ வளர்சிதை மாற்ற அறுவை சிகிச்சைக்கான உலகளாவிய மருத்துவச் சிறப்பு விருது லண்டனில் வழங்கப்பட்டுள்ளது.
- தமது பணியின் போது உயிரிழந்தப் பத்திரிகையாளர்களின் குடும்பங்களுக்கான இழப்பீட்டுத் தொகையினை 10 லட்சம் ரூபாயாக உயர்த்தி தமிழக அரசானது ஆணை பிறப்பித்துள்ளது.
- உளுந்தூர்பேட்டை விமான ஓடுபாதையில் சுமார் 6 மாத காலத்திற்கு என்று ஆளில்லா விமானங்களின் திரள் சோதனைகளை நடத்தச் செய்வதற்கு விண்வெளி ஆராய்ச்சி மையத்திற்கு (CASR) தமிழக அரசு அனுமதி வழங்கியுள்ளது.
- பத்மஸ்ரீ விருது பெற்ற (2023) மத்தியப் பிரதேசத்தின் புகழ்பெற்ற பைகா பழங்குடியின கலைஞர் ஜோதையா பாய் சமீபத்தில் காலமானார்.
- ஜம்மு காஷ்மீர் மாநில குப்வாரா, பாரமுல்லா மற்றும் பந்திப்பூர் மாவட்டங்களின் ஏழு எல்லையோரக் கிராமங்களில் தமது கைபேசி சேவைகளை அறிமுகப்படுத்திய முதல் தனியார் தொலைத்தொடர்பு நிறுவனமாக பாரதி ஏர்டெல் மாறியுள்ளது.
- நாகப்பட்டினம் மாவட்ட நிர்வாகம் ஆனது, நாகப்பட்டினம் மற்றும் இலங்கையில் உள்ள காங்கேசன்துறை ஆகியவற்றுக்கு இடையே 150-200 டன்கள் சுமந்து செல்லும் திறன் கொண்ட சிறிய சரக்குப் போக்குவரத்து கப்பல் சேவையைத் தொடங்க உள்ளது.
- மறைந்த தி.மு.க தலைவரும், முன்னாள் முதல்வர் மு. கருணாநிதி அவர்களின் 15 புதினங்கள், 20 நாடகங்கள், 15 சிறுகதைகள், 200க்கும் மேற்பட்ட கவிதைகள் மற்றும் பிற இலக்கியப் படைப்புகள் ஆனது காப்புரிமைத் தொகை ஏதுமின்றி நாட்டுடைமை ஆக்கப் பட்டுள்ளது.
- வடகிழக்கு சபையின் (NEC) 72வது முழு அளவிலான கூட்டம் ஆனது திரிபுராவின் அகர்தலா நகரில், 2008 ஆம் ஆண்டிற்குப் பிறகு இரண்டாவது முறையாக நடத்தப் பட்டது.
- உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி மதன் B.லோகூர் ஐக்கிய நாடுகள் சபையின் உள் நீதிமன்றச் சபையின் தலைவராக 2028 ஆம் ஆண்டு நவம்பர் 12 ஆம் தேதி வரைக்கும் நியமிக்கப் பட்டுள்ளார்.

- அமெரிக்க நாட்டிவின் ஜார்ஜியா மாகாண டெக் கல்வி நிறுவனத்தினைச் சேர்ந்த கணிதப் பேராசிரியரான அலெக்சாண்டர் டன், 2024 ஆம் ஆண்டிற்கான சாஸ்த்ரா இராமானுஜன் விருதைப் பெற்றுள்ளார்.
- இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள், ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதியான V.இராம சுப்ரமணியனை தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவராக நியமித்துள்ளார்.
- அமெரிக்க அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள டொனால்ட் டிரம்ப் அவர்கள், இந்திய வம்சாவளியைச் சேர்ந்த தொழிலதிபரான ஸ்ரீராம் கிருஷ்ணந என்பவரை செயற்கை நுண்ணறிவிற்கான மூத்த கொள்கை ஆலோசகராக நியமித்துள்ளார்.
- இந்திய அணியானது மலேசியாவின் கோலாலம்பூர் நகரில் நடைபெற்ற 10 வயதிற்கு உட்பட்டோருக்கான முதல் மகளிர் ஆசியக் கோப்பை டி20 இறுதிப் போட்டியில் வங்காள தேச அணியினை வீழ்த்தி சாம்பியன் பட்டத்தினை வென்றுள்ளது.
- இந்திய இணை சினிமா என்ற இயக்கத்தின் ஒரு முன்னோடியான மூத்தத் திரைப்பட இயக்குனர் ஷியாம் பெனேகல் காலமானார்.
- இந்தியாவின் மிகவும் புகழ்பெற்ற மாற்றுத் திறனாளி தடகள வீராங்கனையான டாக்டர். தீபா மாலியின் நினைவுக் குறிப்பு ஆனது, 'BRING IT ON: The Incredible Story of My Life' என்ற பெயரில் வெளியிடப் பட்டுள்ளது.
- 2009 ஆம் ஆண்டு கல்வி உரிமைச் சட்டத்தில் மத்திய அரசு திருத்தங்களைக் கொண்டு வந்திருந்தாலும் தமிழகத்தில் உள்ள பள்ளிகளில் 8 ஆம் வகுப்பு வரையில் பயிலும் அனைத்து குழந்தையினையும் தேர்ச்சி பெறச் செய்யும் நடைமுறை தொடரும்.
- சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் திறன் பேசிகள், வரைப் பட்டிகைகள், கைக் கடிகாரங்கள் மற்றும் அணியக்கூடிய சாதனப் பொருட்களுக்கான அடுத்தத் தலைமுறைத் தொழில் நுட்பம் சார்ந்த Amoled திரைகளை உருவாக்குவதற்கு ஓர் ஆராய்ச்சி மையத்தினைத் தொடங்கியுள்ளது.
- இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம், இந்திய அறிவியல் கல்வி நிறுவனம் மற்றும் எய்ம்ஸ் போன்ற சில முதன்மையான உயர்கல்வி நிறுவனங்களில் சேர்க்கை பெறும் அரசுப் பள்ளி மாணவர்களின் இளங்கலை (UG) படிப்பிற்கான முழுச் செலவையும் தமிழக அரசே ஏற்க உள்ளது.
- மத்தியப் பிரதேச மாநிலமானது, அதன் செழுமையான பாரம்பரியம், வனவிலங்குகள் மற்றும் கண் கவர் நிலப்பரப்புகளைச் சிறப்பித்துக் காட்டும் வகையில் வால் ஸ்ட்ரீட் இதழால் 2025 ஆம் ஆண்டிற்கான உலகளாவியச் சிறப்புப் பெற்ற இடங்களில் ஒன்றாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- பாதுகாப்புத் துறை அமைச்சகமானது 2025 ஆம் ஆண்டு குடியரசு தினத்திற்கான அணி வகுப்புக் காட்சி வாகனங்களின் கருத்துருவாக, "Swarnim Bharat: Virasat aur Vikas" (பொன் மயமான இந்தியா : பாரம்பரியம் மற்றும் மேம்பாடு) என்பதை அறிவித்துள்ளது.
- இந்தூரில் உள்ள தேவி அஹில்யாபாய் ஹோல்கர் விமான நிலையம் ஆனது நாட்டின் முதல் சுழிய அளவிலான கழிவு வெளியேற்றம் கொண்ட ஒரு விமான நிலையமாக அதிகாரப் பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- OpenAI ஆனது Sora எனப்படுகின்ற அதன் ஒளிப்படக் காட்சி உருவாக்க மாதிரியினை அறிமுகப் படுத்தியுள்ளதோடு உரை, படம் மற்றும் ஒளிப்படம் போன்ற உள்ளீடுகளை பெற்று புதிய ஒளிப்படக் காட்சியினை வெளியீடாக உருவாக்கும் வகையில் அது நன்கு வடிவமைக்கப் பட்டுள்ளது.

- புது டெல்லியில் இந்தியக் கத்தோலிக்க ஆயர்கள் பேரவை (CBCI) நடத்திய கிறிஸ்துமஸ் கொண்டாட்டங்களில் பிரதமர் பங்கேற்றார்.
  - இந்தியாவில் உள்ள கத்தோலிக்க திருச்சபையின் தலைமையகத்தில் இது போன்ற நிகழ்ச்சி ஒன்றில் பிரதமர் ஒருவர் கலந்து கொள்வது இதுவே முதல் முறையாகும்.
- கூகுள் நிறுவனமானது, சமீபத்தில் வில்லோ என்ற குவாண்டம் சில்லினை வெளியிட்டு உள்ளதோடு அதன் முந்தைய சில்லுகளில் உள்ள பிழை உருவாக்க வாய்ப்புகளை இது குறைத்துள்ளது.
  - வில்லோ ஆனது இன்றைய அதிவேக மீத்திறன் கணினிகள் 10 செப்டில்லியன் ஆண்டுகள் எடுத்துக் கொள்ளும் ஒரு கணக்கீட்டை ஐந்து நிமிடங்களுக்குள் செய்து விடும் திறன் கொண்டது.
- தமிழ்நாடு அரசானது, 2030 ஆம் ஆண்டிற்குள் மாநிலத்தின் 50% ஆற்றல் நுகர்வினைப் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலங்களில் இருந்து பெற வேண்டும் என்ற இலக்கினை நிர்ணயித்துள்ளது.
- சென்னை தாம்பரத்தில் உள்ள தேசிய சித்த மருத்துவ நிறுவனம் (NIS) ஆனது, ஒரே நேரத்தில் 567 நபர்களுக்கு வர்மம் சிகிச்சையளித்து கின்னஸ் சாதனையைப் படைத்து உள்ளது.
- பிரதான் மந்திரி சூர்யா கர் முஃப்த் பிஜிலி யோஜனா திட்டத்தின் கீழ் குஜராத்தின் பனஸ்கந்தா மாவட்டம் மசலியில் உள்ள 199 வீடுகளிலும் சூரிய மின்னாற்றலை உற்பத்தி செய்யும் மேற்கூரைத் தகடுகளைப் பொறுத்தும் பணி நிறைவடைந்ததை அடுத்து நாட்டின் முதல் "எல்லைப்புற சூரிய மின்னாற்றல் உற்பத்தி கிராமமாக" மாறி உள்ளது.
- இந்தியத் தொலைதொடர்பு ஒழுங்குமுறை ஆணையம் (TRAI) ஆனது, பாதுகாப்பான மற்றும் தேவையற்ற செய்திகள் அல்லாத குறுஞ்செய்தி அனுப்பும் சூழலை உருவாக்குவதற்கான ஒரு முக்கியப் படிநிலையாக அனைத்து வணிக ரீதியான குறுஞ் செய்திகளின் தோற்றுருவினைக் கண்டறியும் ஒரு கட்டமைப்பை மிக வெற்றிகரமாக செயல்படுத்தியுள்ளது.
- மின்துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள மகாரத்னா அந்தஸ்து பெற்ற பொதுத்துறை நிறுவனமான REC லிமிடெட் என்ற நிறுவனத்திற்கு, அதன் சிறப்பான பெருநிறுவன நிர்வாகத்திற்காக 2024 ஆம் ஆண்டின் தங்க மயில் (கோல்டன் பீகாக்) விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.
- இந்தி மொழி எழுத்தாளர் சூர்யபாலா, தனது “Kaun Des Ko Vasi: Venu Ki Diary” என்ற ஒரு புதினத்திற்காக 34வது வியாஸ் சம்மான் (2024) விருதினைப் பெற்றுள்ளார்.
- இந்தியாவின் ஜவுளித் துறை அமைச்சகமானது, SASMIRA கூட்டமைப்புடன் இணைந்து, குஜராத்தின் நவ்சாரி எனுமிடத்தில் பருவநிலை நெகிழ் திறன் மிக்க அணுகுமுறைகள் கொண்ட வேளாண் சார் ஜவுளி செயல்விளக்க மையத்தினைத் தொடங்கியுள்ளது.
- மத்தியப் பிரதேச மாநிலத்தின் போபால் நகரில் 10வது சர்வதேச வனக் கண்காட்சி நடைபெற்றது.
- குஜராத்தில் உள்ள குறைகடத்தி உற்பத்தி நிறுவனமான சுசி செமிகான், சூரத் நகரில் அம்மாநிலத்தின் முதல் வகையான ஒப்பந்தச் சேவை அமர்த்தம் சார்ந்த குறைகடத்தி ஒருங்கு சேர்ப்பு மற்றும் சோதனை (OSAT) மையத்தினைத் தொடங்கியுள்ளது.
- இமாச்சலப் பிரதேசத் தேசியச் சட்டப் பல்கலைக்கழகத்தின் (HPNLU) துணைவேந்தர் பிரித்தி சக்சேனாவிற்கு, உயர்கல்வி மற்றும் கல்வித் துறையின் தலைமைத்துவத்தில்

அவர் ஆற்றியப் பெரும் பங்களிப்பைப் பாராட்டி, லக்னோவில் உள்ள சரஸ்வதி சங்கீத் அகாடமியின் மதிப்புமிக்க 'சரஸ்வதி சம்மான்-2024' விருது வழங்கப்பட்டுள்ளது.

- ❖ அடல் புத்தாக்கத் திட்டம் (AIM), நிதி ஆயோக், ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுத் திட்ட அமைப்பு மற்றும் சிட்டி ஃபவுண்டேஷன் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன், Youth Co:Lab நிறுவனத்தின் ஏழாவது தேசிய அளவிலான பெரும் சவால் போட்டியானது (2024-2025) தொடங்கப் பட்டுள்ளது.
- ❖ இந்தியா உட்பட 39 நாடுகளைச் சேர்ந்த குடிமக்களுக்கு இலவச நுழைவு இசைவு சீட்டு பயண வாய்ப்பினை வழங்குகின்ற, 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் அமலுக்கு வர உள்ள புதிய நுழைவு இசைவு சீட்டுக் கொள்கையை இலங்கை அரசு அறிமுகப் படுத்தியுள்ளது.
- ❖ புகழ்பெற்ற இந்தியக் கல்வியாளர் அருண் கபூருக்கு பூடான் நாட்டின் 117வது தேசிய தினக் கொண்டாட்டத்தில் பூடான் மன்னர் ஜிக்மே கேசர் நம்கெயேல் அவர்களால் 'புரா மார்ப்' (red scarf) மற்றும் 'பதாங்' (சம்பிரதாய வாள்) ஆகியவை வழங்கப்பட்டன.
- ❖ இந்தியாவில் முதன்முறையாக, 2025 ஆம் ஆண்டு மாற்றுத் திறனாளிகளுக்கான 12வது தடகள உலக சாம்பியன்ஷிப் போட்டியை புது டெல்லி நடத்த உள்ளது.
- ❖ பாலிவுட் நடிகரான சல்மான் கான், புது டெல்லியில் நடைபெறவுள்ள 2025 ஆம் ஆண்டு கோ கோ உலகக் கோப்பை போட்டிக்கான விளம்பரத் தூதராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- ❖ தமிழகத்தில் ஒரு லட்சம் வீடுகள் கட்டுவதற்காக எனத் தொடங்கப்பட்ட கலைஞர் கனவு இல்லம் திட்டத்திற்குக் கூடுதலாக 400 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளதாக தமிழக முதல்வர் அறிவித்துள்ளார்.
  - ○ 2024-25 ஆம் நிதியாண்டில், இந்தத் திட்டத்திற்காக 3,500 கோடி ரூபாய் ஒதுக்கப் பட்டுள்ளது, மேலும் ஒவ்வொரு பயனாளிக்கும் 3,50,000 ரூபாய் வழங்கப்பட உள்ளது.
- ❖ தமிழகத்திற்கானச் சுற்றுலாப் பயணிகளின் (உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு) வருகை 2020 ஆம் ஆண்டில் 14.18 கோடியாக இருந்த நிலையில், 2023 ஆம் ஆண்டில் 28.71 கோடியாக உயர்ந்துள்ளது.
- ❖ தமிழக விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் (SDAT) கீழ், ஹோம் ஆஃப் செஸ் எனப்படுகின்ற சதுரங்கப் பயிற்சி அகாடமி நிறுவப்படும் என தமிழக முதல்வர் அறிவித்துள்ளார்.
- ❖ சமீபத்தில் இந்தியத் தேசிய லோக் தால் (INLD) கட்சித் தலைவரும், ஹரியானா மாநிலத்தின் முன்னாள் முதல்வருமான ஓம் பிரகாஷ் சௌதாலா காலமானார்.
- ❖ தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனமானது (EPFO), அதன் உறுப்பினர்கள் 2025 ஆம் ஆண்டு முதல் தானியங்கு பண வழங்கீட்டு இயந்திரங்களில் இருந்து நேரடியாக பணம் (50%) எடுத்தல் மற்றும் காப்பீட்டுக் கோரிக்கைகளை பெற வழி வகை செய்துள்ளது.
- ❖ NLC இந்தியா லிமிடெட் நிறுவனமானது, உத்தரப் பிரதேசத்தில் அமைக்கப் பட்டு உள்ள மிகை மாறுநிலை வெப்பநிலை மற்றும் அழுத்தத்தினை விட அதிகபட்ச நிலையில் செயல்படும் 1,980 மெகாவாட் திறன் கொண்ட அதன் முதல் கதம்பூர் அனல் மின் நிலையம் (GTPP) ஆனது அதன் வணிக ரீதியிலான உற்பத்தியைத் தொடங்கியுள்ளது.
- ❖ இந்தியா மற்றும் பிரான்சு ஆகிய நாடுகள் பாரீசில் உள்ள லூவ்ரே என்ற அருங்காட்சியகம் போன்று யுக யுஜீன் பாரத் என்ற புதியதொரு தேசிய அருங்காட்சியகத்தினை உருவாக்குவதற்காக என்று புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.

- இந்த அருங்காட்சியகம் கட்டி முடிக்கப்பட்டால், இது உலகிலேயே மிகப்பெரிய ஒன்றாக இருக்கும்.

❖ டாடா எஃகு நிறுவனம் ஆனது, தனது நோமுண்டி இரும்புச் சுரங்கத்தில், இந்தியாவில் முதல் முறையாக அனைத்து மகளிர் பணி நேரத்தினை (shift) அறிமுகப் படுத்தி வரலாறு படைத்துள்ளது.

❖ ஊபர் நிறுவனம் ஆனது, மகளிர் இருசக்கர வாகன ஓட்டிகளுக்காக மற்றும் என்று பிரத்தியேகமாக 'Moto Women' என்ற சோதனைத் திட்டத்தினை அறிமுகப் படுத்தி உள்ளது.

❖ திபெத்திய நாட்காட்டியில் அதன் புத்தாண்டைக் குறிக்கும் வகையிலான லடாக்கி லோசர் கொண்டாட்டம் ஆனது லடாக் முழுவதும் மிகுந்த ஒரு உற்சாகத்துடன் கொண்டாடப் படுகிறது.

❖ பாலியல் தொழிலாளர்களுக்கு எதிரான வன்முறையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான சர்வதேச தினம் ஆனது ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர் 17 ஆம் தேதி அன்று அனுசரிக்கப்படுகிறது.

❖ மதுரை அழகர்கோவில் கள்ளழகர் கோவிலிலும், கோவை மருதமலை சுப்பிரமணிய சுவாமி கோவிலிலும் தமிழக முதல்வர் நாள் முழுவதும் வழங்கப் படுகின்ற அன்னதான சேவையினைத் துவக்கி வைத்தார்.

❖ சென்னையின் நந்தனத்தில் உள்ள YMCA மைதானத்தில் 48வது சென்னைப் புத்தகக் கண்காட்சி தொடங்கப்பட்டுள்ளது.

❖ SWITCH மொபிலிட்டி லிமிடெட் நிறுவனமானது (அசோக் லேலண்ட் நிறுவனத்தின் துணை நிறுவனம்), SWITCH EiV12 - இந்தியச் சந்தைக்கான முதல்முறையான தாழ்தள மின்சார நகரப் பேருந்து – எனப்படுகின்ற அதன் சமகால மின்சாரப் பேருந்தினை அறிமுகப் படுத்தியுள்ளது.

❖ சுசுகி மோட்டார் கார்ப்பரேஷன் நிறுவனத்தின் முன்னாள் தலைவரும் அது உலக அளவில் விரிவடைவதற்கான உந்துதலாக இருந்தவருமான ஜப்பான் நாட்டின் ஒசாமு சுசுகி சமீபத்தில் காலமானார்.

❖ மத்திய அரசானது பால் பொருட்கள் மற்றும் மீன்வளக் கூட்டுறவு சங்கங்களுடன் இணைந்து புதிதாக நிறுவப்பட்ட சுமார் 10,000 பல்நோக்கு முதன்மை வேளாண் கடன் சங்கங்களை (MPACS) தொடங்கியுள்ளது.

❖ அகில இந்தியத் தொழில்நுட்பக் கல்வி வாரியம் (AICTE) மற்றும் தேசிய துளிமக் கணினி திட்டம் (NQM) ஆகியவை இணைந்து இந்தியாவில் முதல் முறையாக துளிமக் கணினி தொழில்நுட்பங்களில் இளங்கலை இரண்டாம் நிலை கல்வித் திட்டத்தினை அறிமுகப் படுத்தியுள்ளன.

❖ மத்திய அரசின் 'ஹர் கர் ஜல்' திட்டத்தின் கீழ் கிராமப்புற வீடுகளுக்கு முழுமையான குடிநீர் குழாய் சேவை விநியோகத்தினை வழங்கும் நாட்டின் ஐந்தாவது மாநிலமாக பஞ்சாப் மாறியுள்ளது.

❖ ஐக்கிய நாடுகள் சபையின் அமைதி காப்புப் படையின் தளபதியாகப் பணியாற்றிய பிரிகேடியர் அமிதாப் ஜா, சிரியாவின் கோலன் ஹைட்ஸ் பகுதியில் காலமானார்.

❖ சச்சின் டெண்டுல்கர் ஆஸ்திரேலியாவில் மெல்போர்ன் கிரிக்கெட் குழுமத்தின் (MCC) கௌரவ கிரிக்கெட் உறுப்பினர் பதவியை ஏற்றுள்ளார்.

❖ நிதித்துறையில் செயற்கை நுண்ணறிவின் (AI) நெறிமுறை சார்ந்த மற்றும் பொறுப்பு மிக்க ஏற்பிற்கான ஒரு கட்டமைப்பினை உருவாக்குவதற்காக வேண்டி டாக்டர் புஷ்பக்

பட்டாச்சார்யா தலைமையின் கீழ் எட்டு பேர் கொண்ட குழுவை இந்திய ரிசர்வ் வங்கி அமைத்துள்ளது.

- ❖ மஹாராஷ்டிர மாநிலத்தின் நாக்பூரில் உள்ள மன்சார் நகரத்தில் 44வது தேசிய நெடுஞ்சாலையில் (NH-44) உயிரி சார் கரிக்கீல் (பிட்டுமின்) கொண்டு போடப்பட்ட இந்தியாவின் முதல் தேசிய நெடுஞ்சாலையானது திறக்கப் பட்டுள்ளது.
- ❖ மத்திய விமானப் போக்குவரத்து அமைச்சகம் ஆனது விமான நிலையங்களில் உணவு மற்றும் பானங்கள் அதிக விலைக்கு விற்கபடுவதைத் தடுப்பதற்காக வேண்டி, பயணிகளுக்காக 'உதான் யாத்ரி கஃபே' எனப்படுகின்ற ஒரு உணவு விற்பனை நிலையத்தினைத் தொடங்கும் முன்னெடுப்பினை மேற்கொண்டுள்ளது.
- ❖ உத்தரகாண்டின் டேஹ்ராடூனில் உள்ள இந்திய வனவிலங்குக் கழகத்தில் (WII) மேம்படுத்தப் பட்ட பாஷ்மினா சான்றிதழ் வழங்கீட்டு மையம் மற்றும் அடுத்த தலைமுறை நுட்பம் சார்ந்த டிஎன்ஏ வரிசையாக்க மையமானது தொடங்கப் பட்டு உள்ளது.
- ❖ இந்திய அரசானது காச நோயினை முடிவிற்குக் கொண்டுவரச் செய்வதற்கான முன்னேற்றத்தைத் தீவிரப்படுத்துவதற்காக 2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் 100 நாட்கள் அளவிலான காசநோய் ஒழிப்புப் பிரச்சாரத்தினைத் தொடங்கியுள்ளது.
- ❖ ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர் 21 ஆம் தேதியன்று, கூடைப்பந்து விளையாட்டின் முக்கிய மேம்பாடு மற்றும் முக்கியத்துவத்தினைப் போற்றும் வகையில் உலகக் கூடைப்பந்து தினம் ஆனது அனுசரிக்கப்படுகிறது.
- ❖ தூத்துக்குடியில் உள்ள மீளவிட்டான் எனுமிடத்தில் அமைக்கப்பட்டுள்ள சிறிய டைடல் தொழில் துறைப் பூங்காவினைத் தமிழக முதல்வர் திறந்து வைத்துள்ளார்.
- ❖ தமிழ்நாடு மாநில அரசு ஆனது, அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஆறாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை பயின்ற 75,028 மாணவியர்களுக்கு உதவும் வகையில் புதுமைப் பெண் திட்டத்தினை விரிவுபடுத்தியுள்ளது.
- ❖ இந்திய இராணுவம் மற்றும் நேபாள இராணுவம் ஆகியவை இடையேயான 18வது சூர்ய கிரண் கூட்டு இராணுவப் பயிற்சியானது நேபாளத்தில் நடைபெற்று வருகிறது.
- ❖ ஆந்திரப் பிரதேச மாநில அரசு ஆனது இரத சப்தமி விழாவினை அதன் அரசு விழாவாக அறிவித்துள்ளது.
- ❖ மத்தியப் பிரதேசத்தின் குவாலியர் நகரில் உள்ள விக்டோரியா சந்தைக் கட்டிடத்தில் இந்தியாவின் புவியியல் ஆய்வு மையத்தின் புவி அறிவியல் அருங்காட்சியகமானது திறக்கப் பட்டுள்ளது.
- ❖ இந்திய வீராங்கனை கோனேரு ஹம்பி, ஐந்து ஆண்டு கால இடைவெளிக்குப் பிறகு அமெரிக்காவின் நியூயார்க்கில் மகளிர் உலக சதுரங்க விரைவுச் சுற்று சாம்பியன்ஷிப் போட்டியில் மீண்டும் பட்டம் வென்றுள்ளார்.
- ❖ மகேந்திரகிரியில் உள்ள இஸ்ரோ நிறுவனத்தின் உந்து விசை சோதனை வளாகத்தில் 100 குழாய் முனை பரப்பு விகிதத்தைக் கொண்ட அதன் CE20 கிரையோஜெனிக் எஞ்சினின் கடல் மட்ட வெப்பச் சோதனையை இஸ்ரோ வெற்றிகரமாக மேற்கொண்டு உள்ளது.
- ❖ மிகவும் பெரிய ஆய்வுக் கப்பல் உருவாக்கத் திட்டத்தின் இரண்டாவது கப்பலான INS நிர்தேஷாக், சமீபத்தில் இந்தியக் கடற்படையில் இணைக்கப்பட்டுள்ளது.
- ❖ பெங்களூருக்கு அருகில் SWIFT (புத்தொழில் நிறுவனங்கள், பணியிடங்கள், புத்தாக்கம், நிதி மற்றும் தொழில்நுட்பம்) நகரத்தினை உருவாக்கும் திட்டத்தினை கர்நாடக அரசு அறிவித்துள்ளது.

# தமிழ்நாடு செய்திகள்

## தமிழ்நாட்டில் குறைவான டெங்கு பாதிப்பு

- தற்போது காய்ச்சலுக்குச் சிகிச்சை பெற்று வரும் 75% பேருக்கு டெங்கு காய்ச்சல் ஏற்படுத்தும் வைரசின் பாதிப்பு இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.
- இதனால் டெங்கு பாதிப்பு கட்டுக்குள் உள்ளது என்பதோடு மேலும், டெங்குவை பரப்பும் ஏடிஸ் கொசுக்களின் எண்ணிக்கையும் குறைந்துள்ளது.
- 2017 ஆம் ஆண்டில் சென்னையின் தேசிய தொற்றுநோயியல் நிறுவனம் நடத்திய ஆய்வில், டெங்கு IgG 77% அதிகமாக இருப்பதாகக் கண்டறியப்பட்டது.
- தற்போது, பெண் ஏடிஸ் கொசுக்கள் 3.76% மட்டுமே DENV பாதிப்பினை ஏற்படுத்தச் செய்வதற்கு நேர்மறையான விளைவைக் கொண்டிருந்தது.




## தமிழ்நாட்டில் குழிநரிப் பூச்சிகள்

- அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் சென்னையில் பால்பரேஸ் கான்ட்ராரியஸ் எனப்படும் ஒரு பெரிய அளவிலான வளர்ச்சியடைந்த குழிநரி பூச்சியினைக் கண்டறிந்துள்ளனர்.
- இது ஒரு தும்பி வகை பூச்சியினைப் போல் இருந்தாலும், அது ஒரு உணர் கொம்புகள் மற்றும் ஒரு தனித்துவமானச் சிறகடிக்கும் வகையிலான சிறகுகளையும் கொண்டு உள்ளதால் இந்த அம்சங்கள் இதனைத் தும்பி போன்ற ஒரு வகையிலிருந்து நன்கு வேறுபடுத்திக் காட்டுகிறது.
- குழிநரிப் பூச்சிகள் என்பவை பெரும்பாலும் ஆப்பிரிக்கா, மியான்மர், தாய்லாந்து மற்றும் இலங்கையில் காணப் படுகின்றன மற்றும் ஒடிசா, மகாராஷ்டிரா, கர்நாடகா, மிசோரம், உத்தரகாண்ட் மற்றும் மத்தியப் பிரதேசம் போன்ற இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் காணப்படுகின்றன.
- சென்னை மாநகராட்சியின் பகுதியில் பல்பரேஸ் கான்ட்ராரியஸ் தென்பட்டுள்ளது தமிழகத்தில் ஒரு புதிய பதிவாகும்.




## தமிழ்நாட்டில் கடல் மட்ட உயர்வு பாதிப்பு

- கடல் மட்டம் உயர்வதால் தமிழ்நாட்டின் பிச்சாவரம் மற்றும் முத்துப்பேட்டை ஆகிய பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஹெக்டேர் பரப்பிலான சதுப்பு நிலங்கள் இழக்க நேரிடும் என்று சமீபத்திய ஆய்வு எச்சரிக்கிறது.
- கடல் மட்ட உயர்வு காரணமாக முத்துப்பேட்டை மண்டலத்தில் 2,382 ஹெக்டேர் வரையிலான சதுப்புநிலக் காடுகளும், பிச்சாவரத்தில் 413 ஹெக்டேர்களும் 2100 ஆம் ஆண்டிற்குள் நீரில் மூழ்கக் கூடும்.
- இந்தக் கடலோரக் காடுகளின் பெரும் இழப்பின் காரணமாக, முத்துப்பேட்டை மற்றும் பிச்சாவரம் பகுதிகளில் இருந்து 2.24 Tg (டெராகிராம்) கார்பன் வெளியிடப்பட்டு, பருவ நிலை மாற்றத்திற்குப் பங்களிக்கும் என்று ஆய்வு மதிப்பிடுகிறது.



## LPG தொகுப்புகளின் சோதனைத் திட்டம் – தமிழ்நாடு




- மண்ணெண்ணெய்யைப் பெரும்பாலும் பயன்படுத்துகின்ற, படகு வெளிப்புற உந்து விசை இயக்கிகள் (OBM) கொண்ட மீன்பிடி படகுகள் விரைவில் சுற்றுச்சூழலுக்கு நன்கு உகந்ததாக மாற உள்ளது.
- அவை மண்ணெண்ணெயால் இயங்கும் எஞ்சின்களுக்குப் பதிலாக திரவமாக்கப்பட்ட பெட்ரோலிய வாயுவால் இயங்கும் வெளிப்புற உந்துவிசை இயக்கிகளால் இயங்கும் எஞ்சின்களைப் பெற உள்ளன.
- திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் இதுபோன்ற 150 படகுகளுக்கு LPG தொகுப்புகள் வழங்கப்படும்.
- மாசுபடுத்தும் மண்ணெண்ணெய்க்கு ஒரு நல்மாற்றாக இந்த எரிபொருளை அறிமுகப் படுத்துவதற்கு இது போன்ற ஒரு சோதனைத் திட்டத்தை அறிமுகப்படுத்திய முதல் மாநிலம் தமிழ்நாடு ஆகும்.
- மண்ணெண்ணெய் எந்திரங்களில் கார்பன் மோனாக்சைடு உமிழ்வு ஆனது 1.2% ஆக இருந்தது, அதே சமயம் LPG வாயுவினால் 0.32% மட்டுமே வெளியிடப்படுகிறது.

## 2023 ஆம் ஆண்டில் பால் உற்பத்தி – தமிழ்நாடு



- 2017 ஆம் ஆண்டில் 7.742 மில்லியன் டன்னாக இருந்த பால் உற்பத்தியானது 2023 ஆம் ஆண்டில் 10.317 மில்லியன் டன்னாக உயர்ந்துள்ளதுடன் மாநிலத்தின் பால் உற்பத்தி என்பது தொடர்ந்து அதிகரித்து வருகிறது.
- தமிழகத்தின் பால் உற்பத்தியானது 2017 முதல் 2020 ஆம் ஆண்டு வரை முறையே 7.742, 8.362, 8.759 மில்லியன் டன்னாக இருந்தது.
- தற்போது 2021-2023 ஆம் ஆண்டுகளில் முறையே 9.790, 10.107, 10.317 மில்லியன் டன்னாக அதிகரித்துள்ளது.
- இங்கு 2019-2020 ஆம் ஆண்டில் பால் கிடைக்கப் பெறுவதற்கான தனிநபர் வீதம் ஒரு நாளைக்கு 316 கிராமாக இருந்தது.
- 2022-23 ஆம் ஆண்டில் இது 369 கிராமாக அதிகரித்துள்ளது.

## GCC Next உச்சிமாநாடு 2024

- உலகளாவிய திறன் மையங்களின் (GCCs) Next உச்சி மாநாடு ஆனது சென்னையில் நடத்தப் பட்டது.
- இது கெய்டன்ஸ் தமிழ்நாடு மற்றும் கிரியேட்வொர்க்ஸ் ஆகியவற்றின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டது.
- இந்தியாவில் உள்ள 1,800 GCC மையங்களில் சுமார் 300 மையங்கள் தமிழ்நாட்டில் உள்ளன.
- இந்தியாவின் GCC மையங்களில் சுமார் 10% மையங்களை தமிழக அரசு நடத்துகிறது.
- ஆனால் உலகளாவியத் திறன் மையங்களின் (GCCs) அடிப்படையில் தமிழக அரசானது இன்னும் சிறப்பு இடத்தினை பெறவில்லை.



## தமிழ்நாட்டில் பாம்புக்கடிப் பாதிப்புகள் குறித்த தரவு

**WHAT THE NUMBERS SAY**

Snake bites cases and deaths from 2020 to 7 Nov 2024

| Year | 2020 | 2021 | 2022 | 2023 | 2024* |
|---|---|---|---|---|---|
| Cases | 21,698 | 7,281 | 15,120 | 19,795 | 13,518 |
| Death | - | 0 | 17 | 43 | 21 |

*(Till 7 Nov 2024)

- ❖ இது சமமற்ற முறையில் நாட்டின் மிகவும் எளிதில் பாதிக்கப்படக் கூடிய மக்களையே அதிகம் பாதிக்கிறது என்பதால் பாம்புக்கடி என்பது "ஏழைகளின் நோய்" ஆகும்.
- ❖ கட்டு விரியன், இந்திய நாகப்பாம்பு, கண்ணாடி விரியன் பாம்பு மற்றும் சுருட்டை விரியன் ஆகியவை கூட்டாக நான்கு பெரும் பாம்பினங்கள் (Big four) என்று அழைக்கப் படுகின்றன.
- ❖ இந்தியாவில் ஏறத்தாழ 90% பாம்புக்கடி நிகழ்வுகளுக்கு இந்தப் பாம்புகளே காரணம் ஆகும்.
- ❖ ஒரு புதிய விதிமுறையின் கீழ், இனி அனைத்து மருத்துவமனைகளும் - பொது மற்றும் தனியார் – தற்போது பாம்புக்கடிப் பாதிப்புகள் குறித்து மாநில சுகாதாரத் துறை அதிகாரிகளிடம் தெரிவிக்க வேண்டும்.
- ❖ இந்த ஆண்டின் ஜூன் மாதம் வரையில் தமிழகத்தில் 7,300 பாம்புக்கடிப் பாதிப்புகள் பதிவாகி 13 பேர் உயிரிழந்துள்ளனர்.
- ❖ கடந்த ஆண்டு 43 உயிரிழப்புகளுடன் 19,795 பாதிப்புகளும், 2022 ஆம் ஆண்டில் 17 உயிரிழப்புகளுடன் 15,120 பாதிப்புகளும் பதிவாகியுள்ளன.
- ❖ மில்லியன் உயிரிழப்பு ஆய்வு (2001-2014) அடிப்படையிலான ஓர் ஆய்வு ஆனது, ஒவ்வோர் ஆண்டும் சுமார் 58,000 பேர் பாம்புக்கடியால் உயிரிழப்பதாக மதிப்பிட்டு உள்ளதோடு இது மருத்துவமனைகளால் அறிவிக்கப்பட்ட ஒரு அதிகாரப்பூர்வப் புள்ளி விவரங்களை விட அதிகமாகும்.
- ❖ இந்த ஆண்டின் தொடக்கத்தில் பாம்புக்கடியை அறிவிக்கக்கூடிய நோயாக அறிவித்த முதல் மாநிலமாக கர்நாடகா ஆகும்.
- ❖ 1939 ஆம் ஆண்டின் தமிழ்நாடு பொது சுகாதாரச் சட்டத்தின் கீழ், பாம்புக் கடி மூலமான விஷமேற்றத்தினை அறிவிக்கக்கூடிய நோயாக தமிழ்நாடு மாநிலம் அறிவித்தது.
- ❖ இந்திய அரசாங்கம் ஆனது பாம்புக்கடி நோய்த் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டுக்கான தேசிய செயல் திட்டத்தை (NAPSE) அறிமுகப்படுத்தியது.
- ❖ உலக சுகாதார அமைப்பானது, ஏற்கனவே பாம்புக்கடியால் ஏற்படும் உயிரிழப்புகள் மற்றும் குறைபாடுகளைக் கட்டுப்படுத்துவதற்காக உலகளாவிய உத்தியை அறிமுகப் படுத்தியுள்ளது.
- ❖ தேசிய செயல்திட்டம் ஆனது 2030 ஆம் ஆண்டிற்குள், ஒரு சுகாதார அணுகுமுறை மூலம் பாம்புக் கடியினால் ஏற்படும் உயிரிழப்புகளைப் பாதியாகக் குறைப்பதை ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.

## அரிட்டாபட்டி டங்ஸ்டன் சுரங்கம்

- ❖ மதுரை மாவட்டத்தில் ஒரு தனியார் நிறுவனத்திற்கு டங்ஸ்டன் சுரங்க உரிமையை வழங்குவதை ரத்து செய்யுமாறு தமிழக அரசானது மத்திய அரசிற்கு கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளது.
- ❖ மதுரையில் அரிட்டாபட்டி உட்பட ஆறு கிராமங்களை உள்ளடக்கிய நாயக்கர்பட்டி டங்ஸ்டன் தொகுதியின் முன் மதிப்பிடப்பட்ட ஒரு ஏலதாரராக இந்துஸ்தான் ஜிங்க் லிமிடெட் நிறுவனத்தினைச் சுரங்கத் துறை அமைச்சகம் அறிவித்தது.
- ❖ ஓர் அறிவிக்கப்பட்ட பல்லுயிர்ப்பெருக்க பாரம்பரிய தளமான இது குகை கோவில்கள், சிற்பங்கள், சமணச் சின்ன அடையாளங்கள், தமிழ் பிராமி எழுத்துக்கள் மற்றும் பஞ்ச பாண்டவர் கல் படுக்கைகள் உள்ளிட்ட தொல்பொருள் நினைவுச் சின்னங்களுக்குப் பிரபலமானது.




## மத மாற்றம் தொடர்பான உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு

- ❖ எந்த ஓர் உண்மையான சமய நம்பிக்கையும் இல்லாமல், பெரும்பாலும் ஒதுக்கீட்டுப் பலன்களைப் பெறுவதை நோக்கமாகக் கொண்ட மத மாற்றம் ஆனது, இடஒதுக்கீட்டுக் கொள்கையின் சமூக நெறிமுறைகளை வீழ்த்துவதற்குச் சமம் என்றும், அரசியல் அமைப்பின் மீதான மோசடிக்கு சமமானது என்றும் உச்ச நீதிமன்றம் (செல்வ ராணி வழக்கு) கூறியுள்ளது.
- ❖ பிறப்பால் கிறிஸ்தவரான புதுச்சேரியைச் சேர்ந்த செல்வராணி என்ற பெண் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.
- ❖ அவர் இந்து மதத்தைத் தழுவியதாகக் கூறி, பட்டியலிடப்பட்டச் சாதியினர் சமூகச் சான்றிதழை வழங்குமாறு கோரினார்.
- ❖ ஒருவர் மாறுகின்ற மற்றொரு மதத்தின் மீது உண்மையான நம்பிக்கை இல்லாமல் இருந்து, இட ஒதுக்கீட்டின் பலன்களைப் பெறுவதே அந்த மதமாற்றத்தின் நோக்கமாக கொண்டிருந்தால் இவ்வாறு சான்றிதழ் வழங்க முடியாது என நீதிமன்றம் கூறியது.




## திருமங்கை ஆழ்வார் சிலை

- துறவியக் கவிஞர் திருமங்கை ஆழ்வாரின் அரிய வகை வெண்கலச் சிலையானது, ஆக்ஸ்போர்டில் (ஐக்கியப் பேரரசு  உள்ள ஆஷ்மோலியன் என்ற அருங்காட்சியகத்தில் இருந்து தமிழகத்திற்குத் திருப்பி அனுப்பப்பட உள்ளது.
- இந்தச் சிலையானது, கும்பகோணத்தில் உள்ள சௌந்தரராஜப் பெருமாள் கோயிலில் இருந்து 1957 முதல் 1967 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் திருடப்பட்டது.
- திருமங்கை ஆழ்வார் கிபி 8 ஆம் நூற்றாண்டில் பிறந்தவர் ஆவார் என்பதோடு இந்து மதத்தின் வைணவப் பாரம்பரியத்துடனான தொடர்பிற்காக பிரபலமாக அறியப்பட்ட தென்னிந்தியாவின் 12 ஆழ்வார் துறவிகளில் ஒருவர் ஆவார்.



## எச்.ஐ.வி/எய்ட்ஸ் பாதிப்பு – தமிழ்நாடு

- 2023-2024 ஆம் ஆண்டில் தமிழகத்தில் எச்.ஐ.வி பாதிப்பு 0.16% ஆகக் குறைந்துள்ளது.
- 1997 ஆம் ஆண்டில் 1.18% ஆக இருந்த எச்.ஐ.வி பாதிப்பானது 2023-2024 ஆம் ஆண்டில் 0.16% ஆகக் குறைந்துள்ளது.
- இது தேசியச் சராசரியான 0.23 சதவீதத்தினை விடக் குறைவாகும்.
- 2024 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் வரை, 73 எச்.ஐ.வி எதிர்ப்பு மருந்து சிகிச்சை (ART) மையங்கள் ஆனது, மாநிலம் முழுவதும் உள்ள எச்.ஐ.வி/எய்ட்ஸ் (PLHIV) பாதிப்பினைக் கொண்டுள்ள சுமார் 1,32,590 நபர்களுக்கு தொடர்ச்சியான பராமரிப்பு, ஆதரவு மற்றும் சிகிச்சையை வழங்குகின்றன.




## மராட்டிய தர்பார் மண்டபத்தின் வளங்காப்பு

- தொல்லியல் துறையும், பொதுப்பணித் துறையின் பாரம்பரியப் பிரிவும் இணைந்து தஞ்சாவூர் அரண்மனையில் உள்ள ஒரு தர்பார் மண்டபத்தினை சீரமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளன.
- இது நாட்டிலேயே சாய்ந்த மேற்கூரையுடன் கூடிய மிகப்பெரிய கட்டமைப்பாகும்.
- 1684 ஆம் ஆண்டில் மராட்டிய மன்னர் சாஜியால் புதுப்பிக்கப்பட்ட இந்த மண்டபத்தின் கட்டிட அம்சத்தின் மரபினை மீட்டெடுப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.




## செலவு குறைந்த இறக்குமதி மற்றும் ஏற்றுமதி 2024

- நாகப்பட்டினம் மற்றும் கடலூரில் உள்ள துறைமுகங்களைச் செயல் திறம் மிக்க மற்றும் செலவு குறைந்தச் செயல்பாடுகளுக்கு பயன்படுத்துமாறு ஏற்றுமதியாளர்கள், இறக்குமதியாளர்கள், முகவர்கள் மற்றும் கப்பல் உரிமையாளர்கள் ஆகியோர் நன்கு ஊக்குவிக்கப் படுகின்றனர்.

- சுங்கம், குடியேற்றம் மற்றும் துறைமுக சுகாதாரச் சேவைகள் உள்ளிட்ட தேவையான வசதிகளுடன் கூடிய இந்தத் துறைமுகங்கள் ஆனது, நெறிப்படுத்தப்பட்டச் சரக்குப் போக்குவரத்துச் செயல்பாடுகளுக்கு உதவுகின்றன.
- இந்தத் துறைமுகங்கள் ஆண்டிற்கு சுமார் 75,000 டன்கள் வரையிலான வேளாண்மை, மீன்வளம் மற்றும் நுகர்வோர் பொருட்களின் இறக்குமதி ஏற்றுமதிகளைக் கையாளும் திறனைக் கொண்டுள்ளன.




## மின்சார மானியங்களுக்கான செலவினம் 2024




- மானிய வழங்கீடுகளுக்கான மாநில அரசின் செலவினம் 2022-23 ஆம் ஆண்டிற்கான வருவாய் வரவுகளில் 12% ஆகும் என்ற நிலையில் இது 9% என்ற தேசியச் சராசரியினை விட அதிகமாக உள்ளது.
- ஒரு ஒப்பீட்டளவில் மானியங்களுக்கான மிக அதிக செலவினங்களைக் கொண்ட பிற மாநிலங்களில் பஞ்சாப் (வருவாய் வரவுகளில் சுமார் 24%), ஆந்திரப் பிரதேசம் (15%), இராஜஸ்தான் (13%), மற்றும் குஜராத் (13%) ஆகியவை அடங்கும்.
- பஞ்சாப் மற்றும் ராஜஸ்தான் ஆகிய இரு மாநிலங்களில் வழங்கபபட்ட ஒட்டு மொத்த மானியங்களில் 95% ஆனது மின்சாரத் துறைக்கு வழங்கப்பட்டதாகும்.

- தமிழ்நாடு மாநிலத்தில், சராசரி விநியோகச் செலவிற்கும் (ACS) சராசரி வருவாய்க்கும் (ARR) இடையே உள்ள இடைவெளி ஓர் அலகிற்கு 0.89 ரூபாயாக இருந்தது.
- 2019-20 ஆம் ஆண்டில் 14% ஆக இருந்த மாநிலத்தின் மொத்தத் தொழில்நுட்ப மற்றும் வணிக இழப்புகள் (AT&C) ஆனது, 2022-23 ஆம் ஆண்டில் 10% ஆகக் குறைந்துள்ளது.
- தமிழ்நாடு அரசு ஆனது, TANGEDCO நிறுவனத்திற்கு 12,069.97 கோடி ரூபாயினை கட்டண மானியமாகவும், 12,315.36 கோடி ரூபாயினை இதர மானியமாகவும் வழங்கியுள்ளது.

## அரசாங்கத்தின் மொத்த சந்தை கடன்கள்




- 2024-2025 ஆம் நிதியாண்டின் முதல் பாதியில் தமிழக மாநில அரசின் மொத்த சந்தைக் கடன்கள் 50,000 கோடி ரூபாயாக இருந்தது.
- தமிழ்நாடு அரசானது, மாநில மேம்பாட்டுக் கடன்கள் (SDLs) எனப்படும் பத்திரங்களை வெளியிடுவதன் மூலம் சந்தையில் இருந்து கடன் பெறுகிறது.
- 2024-2025 ஆம் நிதியாண்டின் முதல் பாதியில், மொத்தமாக சுமார் 64,000 கோடி ரூபாய் மதிப்பிலான கடன் பெற்ற மாநிலமாக மகாராஷ்டிரா முதலிடத்தில் உள்ளது.
- அதைத் தொடர்ந்து 44,000 கோடி ரூபாய் மதிப்பிலான கடனுடன் ஆந்திரப் பிரதேசம் இடம் பெற்றுள்ளது.
- 2024-25 ஆம் ஆண்டின் முதல் பாதியில் தமிழகத்தின் மொத்த வருவாய் வரவுகள் சுமார் 1,23,970.01 கோடி ரூபாய் ஆகும்.
- இது 2024-25 ஆம் ஆண்டிற்கான மாநில நிதிநிலை மதிப்பீட்டில் 41.46% ஆகும்.
- தமிழகத்தின் மொத்த வருவாய் வரவுகளில் மாநிலத்தின் சொந்த வரி வருவாய் (SOTR) 75.6% ஆகும்.
- மீதமுள்ள 24.4% ஆனது வருவாய் வரவுகள் ஆனது மத்திய அரசின் வரிகள் மற்றும் மானியங்களின் பங்கில் இருந்து பெறப்படுகின்றன.
- 2024-25 ஆம் ஆண்டின் முதல் பாதியில் தமிழ்நாட்டின் வருவாய்ப் பற்றாக்குறை ஆனது, வரவுகளை விட செலவினம் அதிகமாக இருப்பதைக் குறிக்கிறது.
- மொத்த வரவு மற்றும் மொத்தச் செலவினங்களுக்கு இடையேயான வித்தியாசமான நிதிப் பற்றாக்குறையானது 53,934.32 கோடி ரூபாயாக இருந்தது.

## தமிழ்நாடு மாநிலத்தின் அருகி வரும் உயிரினங்களின் வளங்காப்பு நிதியம்




- சுமார் 50 கோடி ரூபாய் மதிப்பிலான ஒரு தொடக்கத் தொகுப்பு நிதியுடன் தமிழ்நாடு மாநிலத்தின் அருகி வரும் உயிரினங்களின் வளங்காப்பு நிதியத்தினை நிறுவுவதற்கு மாநில அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.
- இது அருகி வரும் மற்றும் மிகவும் அருகி வரும் உயிரினங்களைப் பாதுகாப்பதை ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 5 கோடி ரூபாய் மதிப்பிலான அரசாங்கத்தின் பங்களிப்புடன் இந்த நிதி தொடங்கப்பட உள்ளது.
- அரசு நிறுவனங்கள், பெருநிறுவனச் சமூகப் பொறுப்புப் பங்களிப்புகள் மற்றும் தேசிய மற்றும் சர்வதேச நன்கொடைகள் மூலம் கூடுதல் நிதி திரட்டப்படும்.
- கூடுதலாக, இந்த நிதி நம் மாநிலத்தின் புனித தோப்புத் திட்டங்கள் மூலம் அரசின் கலாச்சார வளங்காப்பு முறையினையும் பயன்படுத்த உள்ளது.
- வளங்காப்பு முயற்சிகளை வலுப்படுத்துவதற்காக என்று 1949 அம் ஆண்டு தமிழ்நாடு தனியார் காடுகள் வளங்காப்புச் சட்டம் மற்றும் 1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு மலைப் பாதுகாப்புச் சட்டம், 1955 ஆகியவற்றை அரசு பயன்படுத்துகிறது.
- ஆரம்பத்தில், இந்த நிதியத்தின் மேற்பார்வைப் பணிகளை முதுமலை புலிகள் வளங் காப்பக அறக்கட்டளையானது மேற்கொள்ளும்.
- பின்பு கூடுதல் ஏற்பாடுகள் செய்யப்படும் வரை தமிழ்நாடு மின்னாற்றல் நிதிக் கழகம் அல்லது தமிழ்நாடு போக்குவரத்து மேம்பாட்டு நிதிக் கழகத்தில் இந்த நிதி கையாளப் படும்.

## மாஞ்சோலை குறித்த உயர்நீதிமன்றத் தீர்ப்பு

- திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள மாஞ்சோலை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு பாம்பே பர்மா டிரேடிங் கார்ப்பரேஷன் லிமிடெட் (BBTCL) நிறுவனம் வழங்கும் தன்னார்வ ஓய்வூதியத் திட்டத்தினை (VRS) எதிர்த்து தாக்கல் செய்யப் பட்ட மனுக்களை சென்னை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

- வேலைவாய்ப்பு இழப்பால் பாதிக்கப்பட்டத் தொழிலாளர்களுக்கு வழங்க ஒப்புக் கொண்ட அனைத்து நிவாரணங்களையும் தமிழக அரசு நீட்டிக்க வேண்டும் என்றும் அது அறிவுறுத்தியுள்ளது.
- 1928 ஆம் ஆண்டில் சிங்கம்பட்டி ஜமீன்தார் வழங்கிய 99 ஆண்டு காலக் குத்தகை முடிவதற்கு முன்பே ஒட்டு மொத்தமாக மாஞ்சோலைத் தோட்டங்கள் என அழைக்கப் படும் மாஞ்சோலை, காக்காச்சி, நாலுமுக்கு, ஊத்து மற்றும் குதிரைவெட்டி ஆகிய இடங்களில் BBTCL நிறுவனம் தனது செயல்பாடுகளை முடிவிற்குக் கொண்டுவர முடிவு செய்தது.
- அந்தப் பகுதியின் ஜமீன்தார் 3,388.78 ஹெக்டேர் பரப்பிலான நிலத்தினைத் தனியார் நிறுவனத்திற்கு குத்தகைக்கு வழங்கியிருந்தார்.
- ஆனால் 1882 ஆம் ஆண்டு அப்போதைய மதராஸ் வனச்சட்டத்தின் 26 மற்றும் 32 ஆகிய பிரிவுகளின் கீழ் 1937 ஆம் ஆண்டு மார்ச் 22 ஆம் தேதியன்று சிங்கம்பட்டி தோட்டம் முழுவதையும் காடுகள் என்று அரசாங்கம் அறிவித்தது.
- அதனைத் தொடர்ந்து, 1962 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 02 ஆம் தேதியன்று, அப்போதைய வனப் பறவைகள் மற்றும் விலங்குகள் (பாதுகாப்பு) சட்டம், 1912 என்ற சட்டத்தின் கீழ் அந்தத் தோட்டத்தின் ஒரு பகுதியாக இருந்த பகுதி என்பது முண்டந்துறை புலிகள் சரணாலயத்தின் ஒரு பகுதியாக அறிவிக்கப்பட்டது.
- இது நாட்டின் முதல் அறிவிக்கப்பட்ட புலிகள் சரணாலயமாக மாறியது.
- 2007 ஆம் ஆண்டு டிசம்பர் 28 ஆம் தேதியன்று, 1972 ஆம் ஆண்டு வனவிலங்குகள் (பாதுகாப்பு) சட்டத்தினைச் செயல்படுத்துவதன் மூலம் தோட்டத்தின் ஒரு பகுதியாக உள்ளடங்கியிருந்த பகுதிகளை முக்கியப் புலி வாழ்விடமாக அரசாங்கம் அறிவித்தது.




## தமிழ்நாட்டில் 'ஒரே நாடு ஒரே குடும்ப அட்டை' திட்டம்

- 'ஒரே நாடு ஒரே குடும்ப அட்டை' (ONOR) என்ற திட்டத்தின் கீழ் தமிழகத்திற்கு உணவு தானியங்கள் ஒதுக்கீடு எதுவும் வழங்கப்படவில்லை.
- பொதுவாக அத்தகைய அட்டைதாரர்களுக்கு, மாநில அரசினால் வழங்கப் படுகின்ற ஒதுக்கீட்டை விட அதிகமாக 5% உணவு தானியங்கள் ஒதுக்கப்படும்.
- 2023-24 ஆம் ஆண்டில் 13.816 டன் உணவு தானியங்கள் - 13.263 டன் அரிசி மற்றும் 0.553 டன் கோதுமை – மாநிலத்திற்காக ஒதுக்கப்பட்டது.

- நடப்பு நிதியாண்டின் முதல் ஆறு மாதங்களில், மாநிலங்களுக்கு இடையே ஒரே அட்டைகளைப் பயன்படுத்துதல் வசதியின் கீழ் மாநிலத்தில் சுமார் 22.8 டன் கோதுமை மற்றும் 0.036 டன் அரிசி விநியோகிக்கப்பட்டுள்ளது.
- தமிழக மாநிலம் ஆனது ஒவ்வொரு மாதமும் சராசரியாக சுமார் 65,000 டன் அரிசியைப் பெறுகிறது.
- கோதுமையைப் பொறுத்தவரையில், மத்திய அசரானது ஒரு மாதத்திற்கு சுமார் 8,575 டன்களை வழங்குகிறது.
- கூடுதலாக, வெளிச்சந்தை விற்பனைத் திட்டத்தின் கீழ் தேசியக் கூட்டுறவு நுகர்வோர் கூட்டமைப்பிலிருந்து (NCCF) ஒவ்வொரு மாதமும் மேலும் 8,500 டன் அரிசியை மாநில அரசு கொள்முதல் செய்கிறது.




## 2070 ஆம் ஆண்டிற்குள் நிகரச் சுழிய அளவிலான உமிழ்வு

- இலக்கு சார்ந்த நடவடிக்கைகள் மூலம் 2070 ஆம் ஆண்டிற்குள் நிகரச் சுழிய உமிழ்வு நிலையினை அடைவதில் தமிழ்நாடு மாநில அரசு தீவிரமாக செயல்பட்டு வருகிறது.
- புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மீதான உற்பத்தியில் தமிழக மாநிலம் இந்தியாவிலேயே மூன்றாவது இடத்தில் உள்ளது.
- காற்றாலை மூலமாக மட்டும் ஓராண்டிற்கு 11,900 மில்லியன் அலகுகள் மின்னாற்றல் உற்பத்தி செய்யப்படுகிறது.
- 2030 ஆம் ஆண்டிற்குள், தமிழ்நாடு மாநிலம் தனது ஆற்றல் தேவையில் 50% ஆற்றலைப் புதுப்பிக்கத்தக்க மூலங்களிலிருந்துப் பெற திட்டமிட்டுள்ளது.

| Sector | 2005 | 2019 |
|---|---|---|
| Energy | 82% | 77% |
| Industrial processes and product use | 6% | 6% |
| Waste | 8% | 5% |
| Agriculture, forestry, and other land use | 4% | 12% |

## ஆபத்சஹாயேஸ்வரர் கோவில்

- தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள துக்காட்சி எனுமிடத்தில் உள்ள சுமார் 1,300 ஆண்டுகள் மிகவும் பழமையான ஆபத்சகாயேஸ்வரர் கோயில், யுனெஸ்கோ அமைப்பின் 2023 ஆம் ஆண்டு சிறப்பு விருதினைப் பெறுவதற்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளது.
- விக்ரம சோழன் மற்றும் குலோத்துங்க சோழன் ஆகியோரால் கட்டப்பட்டதாக நம்பப் படும் இந்த கோவிலில் முன்பு ஐந்து பிரகாரங்கள் இருந்ததாக கூறப்படுகிறது.
- இந்த ஊர் ஆனது விக்ரம சோழீஸ்வரம் என்றும் குலோத்துங்க சோழ நல்லூர் என்றும் அழைக்கப் பட்டது.
- சரபேஸ்வரருக்கு முதன்முதலில் சிலையை நிறுவியவர் குலோத்துங்க மன்னராவார், அதனால்தான் இந்த தெய்வம் ஆதி சரபேஸ்வரர் என்று அழைக்கப்படுகிறது.
- சுமார் 1000 ஆண்டுகளுக்கும் மேலான கோவில்களைப் புனரமைக்கவும் புதுப்பிக்கவும் தமிழக அரசு ஆண்டிற்கு 100 கோடி ரூபாய் மானியம் வழங்கியுள்ளது.




## யானைத் தாக்குதலைக் குறைப்பதற்கான தமிழ்நாடு மாதிரி

- கர்நாடக அரசானது, மாநிலத்தில் காட்டு யானைகளின் மிகப்பெரும் அச்சுறுத்தலைக் கட்டுப்படுத்துவதற்காக தமிழ்நாடு மாதிரியை ஆய்வு செய்யுமாறு அதன் வனத்துறை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளது.
- தற்போது, சுமார் ஒரு கிலோமீட்டருக்கு சுமார் 1.5 கோடி ரூபாய் என்ற ஒரு செலவின மதிப்பீட்டினைக் கொண்ட இரயில்வே வழித்தட தடுப்புகளை நிறுவுவது யானைகளின் அச்சுறுத்தலைத் தணிப்பதற்கான நிரூபிக்கப்பட்ட தீர்வாக உள்ளது.
- இருப்பினும், இந்த நோக்கத்திற்காக வேண்டி போதுமான இரயில் பாதை தடங்களை வாங்குவதில் வரம்பு உள்ளது.
- தமிழகத்தில் ஒரு கிலோ மீட்டருக்கு சுமார் 45 லட்சம் ரூபாய் செலவில் இரும்புக் கயிறு வேலிகள் தடுப்புச்சுவராக அமைக்கப்பட்டுள்ளன.

- இரயில்வே தடுப்புகளுடன் ஒப்பிடும்போது, உள்நாட்டில் கிடைக்கும் பொருட்களைப் பயன்படுத்துதல் ஆனது சுற்றுச்சூழல் சீர்குலைவுகளைக் குறைக்கிறது.




## ஃபெங்கல் புயல் நிவாரணம்

- இந்திய உள்துறை அமைச்சகம் ஆனது, ஃபெங்கல் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக என்று மாநிலப் பேரிடர் நிவாரண நிதியில் (SDRF) இருந்து தமிழகத்திற்கு 944.80 கோடி ரூபாயை வழங்குவதற்காக ஒப்புதல் அளித்துள்ளது.
- SDRF என்பது மாநில அரசுகள் ஆனது, அறிவிக்கப்பட்டப் பேரிடர்களுக்கான பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக வழங்கப்படும் ஒரு முக்கிய நிதியாகும்.
- பொதுப் பிரிவு மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களுக்கான SDRF ஒதுக்கீட்டில் 75% பங்கினை மத்திய அரசு வழங்குகிறது.
- ஆனால் சிறப்புப் பிரிவு மாநிலங்கள் / ஒன்றியப் பிரதேசங்களுக்கான (வடகிழக்கு மாநிலங்கள், சிக்கிம், உத்தரகாண்ட், இமாச்சலப் பிரதேசம் மற்றும் ஜம்மு மற்றும் காஷ்மீர்) SDRF ஒதுக்கீட்டில் மத்திய அரசின் பங்களிப்பு 90% ஆகும்.
- 2005 ஆம் ஆண்டு பேரிடர் மேலாண்மைச் சட்டத்தின் 46வது பிரிவின் படி, "கடுமையான இயற்கைப் பேரழிவு ஏற்படும் சூழலில், SDRF நிதியில் போதுமான நிதி இல்லை எனில், மாநிலப் பேரிடர் மீட்பு நிதிக்கு NDRF கூடுதல் நிதியினை வழங்குகிறது".



## பள்ளிச் செயல்பாடுகளை வழி நடத்துவதற்கான சீர்தர இயக்கச் செயல்முறை

- தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறையானது, பள்ளிகளில் சுற்றுலா, மன்ற விவாதங்கள் மற்றும் செயல்பாடுகளை நடத்துவதற்கான சீர்தர செயல்பாட்டுச் செயல்முறைகளை வெளியிட்டுள்ளது.
- இந்த வகையான நிகழ்வுகளுக்கு விருந்தினாராக யாரை அழைக்கலாம் என்பதையும் இது குறிப்பிடுகிறது.
- இதில் பள்ளிகளானது, கல்வித் துறையால் பராமரிக்கப்படும் முன் அங்கீகரிக்கப்பட்ட முதுநிலைப் பட்டியலைத் தேர்வு செய்ய வேண்டும் என்று வழிகாட்டுதல்களில் கூறப் பட்டுள்ளன.
- இந்த வழிகாட்டுதல்கள் ஆனது, CBSE மற்றும் பிற துறைகளின் கீழ் உள்ள பள்ளிகள் உட்பட தமிழ்நாட்டில் செயல்படும் அனைத்து வகை பள்ளிகளுக்கும் பொருந்தும்.
- பள்ளிக் கல்வித்துறைச் செயலாளரைத் தலைவராகக் கொண்டு மாநில அளவிலான குழுவும், ஆட்சியாளரைத் தலைவராகக் கொண்ட மாவட்ட அளவிலான குழுவும் இதில் அமைக்கப் பட உள்ளது.
- இந்தக் குழுவில் மாவட்டக் காவல் கண்காணிப்பாளர், மாவட்டச் சமூக நல அலுவலர், மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர், குழந்தைகள் நல அலுவலர், கல்வி அலுவலர் ஆகியோர் உறுப்பினர்களாக இருப்பர்.

## 'காசநோய் இல்லாத தமிழ்நாடு' பிரச்சாரம்

- தூத்துக்குடி தொகுதியின் மக்களவை உறுப்பினர் கனிமொழி, "காசநோய் இல்லாத தமிழ்நாடு" என்ற 100 நாட்கள் பிரச்சாரத்தினைத் தொடங்கி வைத்தார்.
- காசநோய் இல்லாத தமிழ்நாடு என்ற விழிப்புணர்வுப் பிரச்சார வாகனத்தை சென்னை மேயர் பிரியா அவர்கள் தொடங்கி வைத்தார்.
- இந்தப் பிரச்சாரம் ஆனது, பொதுமக்களிடையே காசநோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டதாகும்.
- 2025 ஆம் ஆண்டிற்குள் காசநோயை ஒழிப்பதற்கு மாநில அரசு இலக்கு வைத்துள்ளது.
- 2024 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திற்குள், 2,88,331 பேர் காசநோய் பாதிப்பு உள்ளதா என்று பரிசோதிக்கப் பட்டுள்ள நிலைமையில் இதில் 7,968 பேர் பொது சுகாதார மையங்களிலும், 4,857 பேர் தனியார் மருத்துவ மையங்களிலும் தற்போது சிகிச்சை பெற்று வருகின்றனர்.
- கண்டறியப்பட்ட காசநோயாளிகளின் வீடுகளின் மூலம் ஏற்பட்ட 8,735 தொடர்புகளில், 5,767 பேருக்கு நோய் தடுப்பு சிகிச்சை அளிக்கப்பட்டது.

## கணக்கு வைப்புத் தொகை மாற்று மோசடி

- தமிழ்நாடு காவல்துறையின் இணையவெளிக் குற்றப் பிரிவு ஆனது, குடிமக்களை ஒரு புதிய மற்றும் அதிநவீன மோசடி - 'கணக்கு வைப்புத் தொகை மாற்று மோசடி' பற்றி எச்சரித்துள்ளது.
- இது ஒருங்கிணைந்தப் பணவழங்கீட்டு இடைமுகம் (UPI) மூலம் மோசடியான பணம் பெறல் கோரல்களை ஏற்கச் செய்வதன் மூலம் ஏமாற்றுவதற்காக வடிவமைக்கப்பட்ட ஒரு தந்திரச் செயல்முறையாகும்.

- மோசடி செய்பவர் இதில் ஒரு சிறிய தொகையை, பொதுவாக சுமார் 5,000 ரூபாய் தொகையை, UPI மூலம் ஒருவரின் வங்கிக் கணக்கிற்கு அனுப்புவதிலிருந்து தனது மோசடியினைத் தொடங்குவர்.

## ஆலத்துடையான்பட்டி கோயிலில் தமிழ் கல்வெட்டுகள் கண்டெடுப்பு



- தமிழ்நாடு மாநிலக் கல்வெட்டுப் பிரிவு ஆனது, திருச்சி மாவட்டம் துறையூர் அருகே ஆலத்துடையான்பட்டியில் உள்ள அருள்மிகு சோமநாதர் கோயிலில் இருந்து கண்டு எடுக்கப்பட்ட இரண்டு கல்வெட்டுகளின் பொருளினைச் சமீபத்தில் அறிந்துள்ளது.
- இந்தக் கல்வெட்டுகள் சோழர் காலத்தைச் சேர்ந்தவையாகும்.
- தமிழில் எழுதப்பட்ட இந்த இரண்டு கல்வெட்டுகளும் மிகச் சமீபத்தில் வல்லுநர்களால் புரிந்து கொள்ளப் பட்டு 13 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை எனக் கண்டறியப்பட்டது.
- ஒரு கல்வெட்டில் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு திருஞானசம்பந்த பண்டிதர் கோயிலில் திருப்பணி நடத்துவதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டது குறித்த தகவல் உள்ளது.
- இது சோழ மன்னன் மூன்றாம் இராஜராஜன் காலத்தைச் சேர்ந்தது.
- மற்றொரு கல்வெட்டில் நாட்டார் வள்ளுவப்பாடி (நாட்டோலை) தேவர்கண்மி மற்றும் பெரியநாவலூர் அழகிய சோமேஸ்வரமுடிய நாயனார் கோவிலின் கணக்காளர் வறண்ட மற்றும் ஈர நிலங்களை வழங்குவதற்கான ஆணை பதிவாகியுள்ளது.

## பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளுக்கு வரி

- தமிழக மாநில அரசானது, 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் கேளிக்கை வரி சட்டத்தில் திருத்தம் செய்வதற்கான மசோதாவினைச் சட்டசபையில் தாக்கல் செய்துள்ளது.
- நுழைவுக் கட்டணம் வசூலிக்கப்படும் நிகழ்ச்சிகளில் 10% கேளிக்கை வரி விதித்திட என்று உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரம் அளிப்பதை நோக்கமாகக் கொண்டு இந்தத் திருத்தம் மேற்கொள்ளப் படுகிறது.
- இதில் கல்வி நிறுவனங்கள் உட்பட எந்தவொரு நிறுவனத்தினாலும் நடத்தப்படும் இசைக் கச்சேரிகள், நாடகங்கள் மற்றும் பிற நிகழ்வுகளும் அடங்கும்.
- தற்போது வரை, இது போன்ற நிகழ்வுகளில் கேளிக்கை வரி எதையும் விதிப்பதற்கும் வசூலிப்பதற்கும் எந்தவொரு விதிமுறையும் இல்லை.




### தமிழ்நாடு தனியார் பல்கலைக்கழகங்கள் சட்டம், 2019

- இந்தச் சட்டத்தின் விதிகளின் கீழ் எட்டு தனியார் பல்கலைக்கழகங்களைச் சேர்க்கும் வகையில், 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் பல்கலைக்கழகங்கள் சட்டத்தினைத் திருத்தியமைப்பதற்கான மசோதாவினைச் சட்டமன்றம் நிறைவேற்றியுள்ளது.
- தற்போது இந்த எட்டு பல்கலைக்கழகங்களும் பல்கலைக்கழக மானியக் குழு (UGC) சட்டம் மற்றும் ஒழுங்குமுறைகளுடன் முழுமையாக ஒருங்கிணைக்கப் படவில்லை.
- மாநில அரசானது, இந்த எட்டு தனியார் பல்கலைக்கழகங்களை அறிவிப்புகள் மூலம் முன்பே அறிவித்திருந்தாலும், ஒரு பல்கலைக்கழகத்தினைப் பாராளுமன்றச் சட்டம் அல்லது மாநில சட்டமன்றச் சட்டத்தின் மூலமாகவே நிறுவ முடியும் என்று UGC கூறி உள்ளது.
- மேலும் சென்னைப் பல்கலைக் கழகத்தில் செவித் திறன் குறைபாடு உடையோர் மற்றும் தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் அதிகாரப் பதவிகளை வகிப்பதற்குத் தகுதியற்றவர்கள் என்று கூறும் சில விதிகளைத் திருத்தியமைப்பதற்காக வேண்டி மற்றொரு மசோதா தாக்கல் செய்யப் பட்டுள்ளது.



## 2022-2023 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாட்டின் GSDP

- 2022-2023 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாட்டின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி (GSDP) ஆனது முந்தைய ஆண்டை ஒப்பிடும் போது 14.16% அதிகரித்துள்ளது.
- இது முதன்மையாகத் தொழில்துறை மற்றும் சேவைத் துறைகளால் ஏற்பட்டுள்ளது.
- மாநிலத்தின் தனிநபர் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது தேசியச் சராசரியை விட சுமார் 56% அதிகமாக இருந்தது.
- 'மாநில நிதி நிலைமை – தமிழ்நாடு அரசு 2022-2023' குறித்த தலைமைக் கணக்குத் தணிக்கையாளரின் தணிக்கை அறிக்கையில் இந்தத் தரவு வெளியிடப்பட்டுள்ளது.
- 2021-22 ஆம் ஆண்டில், சுமார் 15.84% ஆக இருந்த GSDP வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் பதிவானது.
- 2022-23 ஆம் ஆண்டில் நடப்பாண்டு விலையிலான GSDP 23,64,514 கோடி ரூபாயாகவும், 2022-23 ஆம் ஆண்டில் நடப்பாண்டு விலையிலான GDP 2,72,40,712 கோடி ரூபாயாகவும் இருந்தது.
- மேலும், 2022-23 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாட்டின் தனிநபர் ஒட்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியானது 3,08,020 ரூபாயாகவும், நாட்டின் தனிநபர் ஒட்டு மொத்த உள்நாட்டு உற்பத்தி 1,96,983 ரூபாயாகவும் இருந்தது.
- 2018-19 முதல் 2022-23 ஆம் ஆண்டு வரையிலான காலக் கட்டத்தில், வருவாய் வரவுகள் ஆனது 1,73,741 கோடி ரூபாயிலிருந்து 2,43,749 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளதோடு, இதன் சராசரி வருடாந்திர வளர்ச்சி விகிதம் 11.13% ஆகும்.
- இந்த காலகட்டத்தில் மூலதன வரவு ஆனது 54,850 கோடி ரூபாயிலிருந்து 1,02,182 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது.
- 2018-19 ஆம் ஆண்டில் 13.45% ஆக இருந்த வருவாய் வரவுகளில் மானிய நிதி உதவியின் பங்கு 2022-23 ஆம் ஆண்டில் 15.48% ஆக குறைந்துள்ளது.
- அந்த ஆண்டு மத்திய அரசின் நிதியுதவி பெறும் திட்டங்களுக்காக (CSS) மாநில அரசு 15,270 கோடி ரூபாயை மத்திய அரசின் பங்காகப் பெற்றது.
- 2022-23 ஆம் ஆண்டின் இறுதிக்குள் சுமார் 393 என்ற நிதிப் பயன்பாட்டு முறைகேடு வழக்குகள் பதிவாகின மற்றும் 30.81 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது.

| வருடம் | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 | 2022-23 |
|---|---|---|---|---|---|
| தமிழ்நாடு மாநிலம் | | | | | |
| GSDP தற்போதைய விலையில் (2011-12 வரிசை) | 16,30,209 | 17,43,144 | 17,88,074 | 20,71,286 | 23,64,514 |
| GSVA | 14,90,042 | 16,01,332 | 16,54,821 | 19,15,234 | 21,76,648 |
| முந்தைய ஆண்டுடன் ஒப்பிட்டவாறு GSDP வளர்ச்சி விகிதம் (விழுக்காடு) | *11.27* | *6.93* | *2.58* | *15.84* | *14.16* |
| முந்தைய ஆண்டுடன் ஒப்பிட்ட வகையில் GSVAன் வளர்ச்சி விகிதம் (விழுக்காடு) | *11.99* | *7.47* | *3.34* | *15.74* | *13.65* |
| தனிநபர் GSDP (₹) | 2,15,785 | 2,29,657 | 2,34,486 | 2,70,629 | 3,08,020 |

## தமிழ்நாட்டில் பொதுத்துறை நிறுவனங்களின் இழப்புகள்

- 2021-22 ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசின் (GoTN) 68 பொதுத்துறை நிறுவனங்களில் (PSU) சுமார் 30 நிறுவனங்கள் நஷ்டத்தை/ இழப்பினை எதிர்கொண்டுள்ளன.
- ஆனால், 2020-21 ஆம் ஆண்டில் சுமார் 25,476.43 கோடி ரூபாயாக இருந்த பொதுத்துறை நிறுவனங்களுக்கு ஏற்பட்ட இழப்பு ஆனது 2021-22 ஆம் ஆண்டில் சுமார் 22,192.94 கோடி ரூபாயாக குறைந்துள்ளது.
- தமிழ்நாடு அரசின் மேம்பட்ட உற்பத்திக்கான சிறப்பு மையம் என்ற ஒரு புதிய பொதுத் துறை நிறுவனமும் அதன் செயல்பாட்டின் முதல் ஆண்டில் இழப்பினை மட்டுமே எதிர் கொண்டது.
- மொத்த இழப்பில், மின்சாரத் துறையில் மூன்று பொதுத்துறை நிறுவனங்கள் 15,357.90 கோடி ரூபாய் பங்கினையும், மாநிலப் போக்குவரத்துத் துறையில் எட்டு பொதுத்துறை நிறுவனங்கள் 6,622.19 கோடி ரூபாய் பங்கினையும் கொண்டுள்ளன.
- சுமார் 10 பொதுத்துறை நிறுவனங்களில் சுயாதீன இயக்குநர்களின் பிரதிநிதித்துவம் தேவையான எண்ணிக்கையை விட குறைவாக இருந்தது.
- இரண்டு பொதுத்துறை நிறுவனங்களின் இயக்குநர்கள் குழுவில் பெண் இயக்குநர்கள் இல்லை.
- மேலும் ஆறு பொதுத்துறை நிறுவனங்களில், பொதுத்துறை நிறுவனங்களின் பொதுக் கூட்டங்களில் சுயேச்சையான இயக்குநர்கள் கலந்து கொள்ளவில்லை.
- மேலும் இரண்டு பொதுத்துறை நிறுவனங்களில் தணிக்கைக் குழு அமைக்கப் பட வில்லை என்பதோடு தணிக்கைக் குழுவின் பெரும்பான்மையான உறுப்பினர்கள் 13 பொதுத்துறை நிறுவனங்களில் சுயாதீன இயக்குநர்களாக இல்லை.
- 22 பொதுத்துறை நிறுவனங்களில் நியமனம் மற்றும் ஊதியக் குழு ஏதும் அமைக்கப்பட வில்லை.
- 12 பொதுத்துறை நிறுவனங்களில் இடித்துரைப்பாளர் செயல்முறை இல்லை.

அட்டவணை 5.8: 2020-21 முதல் 2022-23 வரையிலான ஆண்டுகளில் இழப்பு ஏற்பட்டுள்ள பொதுத்துறை நிறுவனங்களின் எண்ணிக்கை

(₹ கோடியில்)

| ஆண்டு | இழப்பை சந்தித்த பொதுத்துறை நிறுவனங்களின் எண்ணிக்கை | நடப்பாண்டின் நிகர இழப்பு | திரண்ட இழப்பு | நிகர மதிப்பு[1] |
|---|---|---|---|---|
| 2020-21 | 33 | 25,542.52 | 1,64,785.03 | (-)1,05,425.53 |
| 2021-22 | 34 | 22,232.33 | 1,83,123.14 | (-)1,25,300.27 |

## தமிழ்நாடு உணவு சேவை நிறுவனங்கள் சட்டம் - 1958

- 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவுச் சேவை நிறுவனங்கள் சட்டத்தினைத் திருத்தி யமைப்பதற்கான மசோதாவினைத் தமிழக அரசு தாக்கல் செய்துள்ளது.
- சிறைத்தண்டனையை நீக்குவதையும், சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சில குற்றங்கள் தொடர்பான விதிகளை மீறியதற்காக அபராதம் மட்டும் விதிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

- சிறு குற்றங்கள் தொடர்பான விதிமுறைகளை மீறினால், "சிறை தண்டனை விதிக்கும் ஒரு செயல்முறையினை நீக்கி, அபராதத்தினை மட்டும் தண்டனையாக வழங்க" அரசு முடிவு செய்துள்ளது.
- இது உணவுச் சேவை நிறுவனங்களின் முதலாளிகள், உணவுச் சேவைத் தொழிலை மேற்கொள்வதை எளிதாக்கும்.
- முன்னதாக, 3-A, 4, 5, 6, 11-A மற்றும் 14-A ஆகிய பிரிவுகளின் சில விதிகளை மீறினால் சிறைத் தண்டனை விதிப்பதற்கு இந்தச் சட்டம் வழிவகை செய்தது.

> **23. Penalties.** - (1) Any employer who contravenes any of the provisions of sections 3-A, 4, 5, 6, 7, 9, 10, 11,11-A, 12 and 14-A or fails to pay wages or compensation in accordance with any order of the appellate authority passed under clause (b) of sub-section (2) of section 19 shall, on conviction, be punishable [1] [with fine which, for a first offence, may extend to five thousand rupees and for a second or subsequent offence, with fine which may extend to ten thousand rupees] or with imprisonment which may extend to three months or with both.
>
> (2) (a) Any employer who fails to reinstate an employee in accordance with any order of the appellate authority passed under clause (b) of sub-section (2) of section 19 shall, on conviction, be punishable [1] [with fine which may extend to five thousand rupees.]

## தமிழ்நாடு விடுதிகள் மற்றும் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான இல்லங்கள் (ஒழுங்குமுறை) சட்டம், 2014




- உண்டுறை விடுதிகள், வாடகை விடுதி மனைகள் மற்றும் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான வீடுகளுக்கு உரிமம் வழங்கும் நடைமுறையை மாற்றியமைக்க தமிழக அரசு முடிவு செய்துள்ளது.
- 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் வீடுகள் (ஒழுங்குமுறை) சட்டத்தினை ஏற்ற வகையில் திருத்தம் செய்யும் மசோதாவை தமிழக அரசு சட்டசபையில் முன்வைத்துள்ளது.
- இது போன்ற உண்டுறை விடுதிகள், வாடகை விடுதி மனைகள் மற்றும் வீடுகளின் உரிமத்திற்கான விண்ணப்பத்தினை மின்னணு வடிவில் பெற வழி வகை செய்கிறது என்ற நிலையில் இது சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு "தானாகவே மின்னணு வடிவில் உருவாக்கப் படும்".
- முன்னதாக, இந்த விண்ணப்பங்கள் அந்தந்த மாவட்ட ஆட்சியரிடம் கொடுக்கப் பட வேண்டும்.
- செல்லுபடியாகும் காலம் மூன்று ஆண்டுகளாக இருந்த நிலையில், இந்த மசோதா தற்போது அதை 10 ஆண்டுகளுக்கு நீட்டிக்க முயல்கிறது.

## 2024/25 ஆம் ஆண்டின் முதல் துணை மதிப்பீடுகள்

### Trend tracker

A look at Tamil Nadu's fiscal deficit over the years



| Year | Fiscal deficit (₹ in crore) | (% of GSDP) | Year | Fiscal deficit (₹ in crore) | (% of GSDP) |
|---|---|---|---|---|---|
| 2011-12 | 17,274 | 2.3 | 2018-19 | 47,334.89 | 2.9 |
| 2012-13 | 16,519 | 1.93 | 2019-20 | 60,178.64 | 3.35 |
| 2013-14 | 20,584 | 2.13 | 2020-21 | 87,742.11 | 4.61 |
| 2014-15 | 27,162.44 | 2.49 | 2021-22 | 73,739.28 | 3.38 |
| 2015-16 | 32,627.56 | 2.69 | 2022-23 | 81,885.82 | 3.46 |
| 2016-17 | 56,171.35 | 4.2 | 2023-24* | 94,059.72 | 3.45 |
| 2017-18 | 39,839.52 | 2.72 | 2024-25** | 1,08,689.91 | 3.44 |

*Revised Estimates **Budget Estimates

Source: T.N. Finance Department documents

- ❖ தமிழக அரசின் 2024-25 ஆம் ஆண்டிற்கான 3,531 கோடி ரூபாய்க்கான முதல் துணை மதிப்பீடுகளை சட்டமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது.
- ❖ தமிழ்நாடு மின்பகிர்மானக் கழகம் லிமிடெட் நிறுவனத்திற்கு கூடுதல் இழப்பு நிதி மானியமாக 1,634.86 கோடி ரூபாயை வழங்க அரசு அனுமதித்துள்ளது.
- ❖ மத்திய அரசினால் உருவாக்கப்பட்ட மின்துறையின் செயல்திறனுடன் இணைக்கப் பட்ட 0.50% GSDP கூடுதல் கடன் பெறும் பிரிவின் சில வழிகாட்டுதல்களின்படி இது மேற் கொள்ளப் படுகிறது.
- ❖ 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாரா செலவு நிதிச் சட்டம் திருத்தப்பட்டு, எதிர்பாரா செலவு நிதியானது 150 கோடி ரூபாயிலிருந்து 500 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டு உள்ளது.

- பால் உற்பத்தியாளர்களுக்கு ஊக்கத்தொகை வழங்குவதற்காக வேண்டி தமிழ்நாடுக் கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் கூட்டமைப்பு லிமிடெட் நிறுவனத்திற்கு 70 கோடி ரூபாயை அரசு அனுமதித்துள்ளது.

## இரு சக்கர வாடகை வாகன சேவைகளுக்குத் தடை

- இரு சக்கர வாடகை வாகன சேவைகளுக்குத் தடை எதுவும் இல்லை என்றும், அவை தமிழகத்தில் தொடர்ந்து இயங்கலாம் என்றும் மாநில அரசு தெளிவுபடுத்தியுள்ளது.
- வாடகை அல்லது வணிக நோக்கங்களுக்காக வேண்டி இரு சக்கர வாகனங்களைப் பயன்படுத்துவதற்கான தெளிவான விதிகளை மத்திய அரசு வழங்கவில்லை.
- சென்னை உயர் நீதிமன்றம் ஆனது, 2018 ஆம் ஆண்டில் இரு சக்கர வாடகை வாகன சேவைகளுக்குத் தடை விதித்தது, ஆனால் மேல்முறையீடு காரணமாக இந்த உத்தரவு நிறுத்தி வைக்கப்பட்டது.
- தமிழகத்தில் ரேபிடோ, ஓலா, ஊபர், ஸ்விகி, டன்சோ மற்றும் சோமாட்டோ போன்ற சேவை தளங்களில் பணியாற்றும் நான்கு லட்சத்திற்கும் அதிகமான தொழிலாளர்கள் உள்ளனர்.




## ஆனைமலை புலிகள் வளங்காப்பகத்தில் வன உரிமைகள்

- ஆனைமலை புலிகள் வளங்காப்பகத்தில் (ATR) வசித்து வரும் மூன்று பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு, 2006 ஆம் ஆண்டு வன உரிமைச் சட்டத்தின் கீழ், கோவை மாவட்ட நிர்வாகமானது சமூக வன உரிமைகளை வழங்கியுள்ளது.
- மேலும் மாவட்ட நிர்வாகமானது, இந்தச் சட்டத்தின் கீழ் வழங்கப்படும் தனிப்பட்ட வன உரிமைகளை ATR வளங்காப்பகத்தில் உள்ள 14 குடும்பங்களுக்கு வழங்கியுள்ளது.
- நகரூத்து I, நகரூத்து II மற்றும் சின்னார்பதி பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு மரப் பொருட்களைத் தவிர இதர மற்ற வனப் பொருட்களைச் சேகரிக்கச் சமூக உரிமை வழங்கப்பட்டது.
- இந்தக் குடியிருப்புகளில் வசிப்பவர்கள் மா, நெல்லிக்காய், தேன், புளி மற்றும் துடைப்பம் தயாரிப்பதற்கான புல் உள்ளிட்ட பல்வேறு சிறு வனப் பொருட்களைச் சேகரிக்கலாம்.

- பழைய சர்க்கார்பதி பழங்குடியினர் குடியிருப்பைச் சேர்ந்த 14 குடும்பங்களுக்கு தனி வன உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன.

## கலைஞர் கைவினைப் பொருட்கள் திட்டம்

- சமூக நீதியின் அடிப்படையில் கலைஞர்கள் மற்றும் கைவினைஞர்களுக்கு அதிகாரம் அளிக்கும் நோக்கில் தமிழ்நாடு மாநில அரசானது 'கலைஞர் கைவினைப் பொருட்கள் திட்டத்தினை' செயல்படுத்த உள்ளது.
- 25 வணிகங்கள்/கைவினைகளில் ஈடுபட்டுள்ள அனைத்துப் பிரிவினரும் பயன்பெறும் வகையில் இத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.
- இந்தத் திட்டமானது குடும்ப அடிப்படையிலான பாரம்பரிய வர்த்தகத்தை அடிப்படை ஆக கொண்டதல்ல.
- இது மானியத்துடன் இணைக்கப்பட்ட ஒரு கடன் ஆதரவு, அதற்கான திறன் மற்றும் தொழில்முனைவோர் மேம்பாடு ஆகியவற்றுடன் தற்போதுள்ள வர்த்தகத்தை நன்கு விரிவுபடுத்துவதற்கும் புதிய முன்னெடுப்புகளைத் தொடங்குவதற்கும் திட்டமிட்டு உள்ளது.
- இத்திட்டத்தின் கீழ், 25 சதவீத மானியம் (அதிகபட்சம் 50,000 ரூபாய்), 5 சதவீத வட்டி மானியம் மற்றும் தேவையான அனைத்து ஆதரவையும் உள்ளடக்கிய 3 லட்சம் ரூபாய் கடன் ஆதரவு வழங்கப்படும்.




## தமிழ்நாடு பொது வளாகங்கள் (அங்கீகரிக்கப்படாத ஆக்கிரமிப்பாளர்களை வெளியேற்றுதல்) சட்டம், 1975

- இந்த மசோதாவானது 1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது வளாகங்கள் (அங்கீகரிக்கப் படாத ஆக்கிரமிப்பாளர்களை வெளியேற்றுதல்) சட்டத்தினை 1995 ஆம் ஆண்டு வக்ஃப் சட்டத்திற்கு இணங்கும் வகையில் 2021 ஆம் ஆண்டு ஜனவரி 07 ஆம் தேதி முதலான நாட்களிலிருந்து பின்னோக்கிய தேதிகளிலும் பொருந்தச் செய்யும் வகையில் திருத்த முயல்கிறது.

- இந்த மசோதாவானது, தேவையான சரிபார்ப்பு விதிமுறைகள் மற்றும் அரசியல் அமைப்பின் 254(2) என்ற ஒரு சரத்தின் கீழ் குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்கு ஒதுக்கப் பட வேண்டும்.
- 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது வளாகங்கள் திருத்தச் சட்டத்தின் (அங்கீகரிக்கப் படாத ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்) 7வது பிரிவின் (இ) வகுப்பில் ஒரு திருத்தம் செய்யப் பட்டது.
- "பொது வளாகம்" என்ற சொல்லின் வரையறைக்குள் தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தில் பதிவு செய்யப்பட்ட வக்ஃப் வளாகத்தினைச் சேர்த்துள்ளது.
- இதன் மூலம் தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தில் பதிவுசெய்யப்பட்ட வக்ஃப் அமைப்பிற்குச் சொந்தமான வளாகத்தில் இருந்து அதில் அங்கீகரிக்கப்படாத ஆக்கிரமிப்பாளர்கள் வெளியேற்றப் படுவர்.




## கனிம வளம் நிறைந்த நிலங்கள் மீது வரி

- கனிமவளம் நிறைந்த நிலங்களுக்கு வரி விதிக்க வகை செய்யும் ஒரு மசோதாவை தமிழ்நாடு சட்டசபை ஏற்றுக் கொண்டுள்ளது.
- இந்தச் சட்டத்தின் மூலம் தனது வருவாயைப் பெருக்கிக் கொள்ளவும் மாநில அரசு திட்டமிட்டுள்ளது.
- இந்த ஆண்டின் தொடக்கத்தில், ஏழாவது அட்டவணையின் இரண்டாவது பட்டியலின் 49வது உட்சேர்ப்பின் கீழ் கூறப்படும் 'நிலங்கள்' என்ற விளக்கத்திற்குள் கனிம வளம் நிறைந்த நிலம் அடங்கும் என்று உச்ச நீதிமன்றம் கூறியது.
- சுரங்கங்கள் மற்றும் கற்குவாரிகளை உள்ளடக்கிய நிலங்களுக்கு வரி விதிக்க மாநில சட்டமன்றங்களுக்கு 29வது சரத்தின் கீழ் சட்டப்பூர்வமான தகுதி உள்ளது.

> Royalty is not a tax. **Royalty is a contractual consideration paid by the mining lessee to lessor for enjoyment of mineral rights.** The liability to pay royalty arises out of the contractual conditions of the mining lease. **Payments made to the govt cannot be deemed to be a tax** merely because the statute provides for their recovery as arrears **—SC's majority order**
>
> The **state legislatures have legislative competence** under Article 246 read with Entry 49-List II **to tax lands and buildings but not lands which comprise of mines and quarries** or have mineral deposits as mineral bearing lands do not fall within the description of lands (under Entry 49-List II)
>
> **—Justice B V Nagarathna's dissenting order in 8:1 verdict**

## குறைபாடுகள் குறித்து CAG அறிக்கை

- இந்தியத் தலைமைக் கணக்குத் தணிக்கை அமைப்பானது, தமிழ்நாட்டில் 2011 ஆம் ஆண்டு கடலோர ஒழுங்குமுறை மண்டலம் (CRZ) அறிவிப்பின் அமலாக்கத்தில் உள்ள குறிப்பிடத்தக்க தாமதங்கள், மீறல்கள் மற்றும் குறைபாடுகளை எடுத்துரைத்துள்ளது.
- 2015 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை தமிழ்நாடு மாநிலக் கடலோர மண்டல மேலாண்மை ஆணையம் ஆனது (TNSCZMA), 175 திட்டங்களில் 114 திட்டங்களை மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் பரிசீலனைக்குப் பரிந்துரைக்காமலேயே அவற்றிற்கு நேரடியாக ஒப்புதல் அளித்துள்ளது.
- தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்திடம் இருந்து கட்டாயமாக தடையில்லாச் சான்றிதழ் பெறாமல் கழிவுநீர் வெளியேற்றம் செய்வது தொடர்பான சுமார் 23 திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.
- சென்னை, செங்கல்பட்டு மற்றும் தூத்துக்குடி ஆகிய பகுதிகளில் மேம்பாட்டுப் பணிகள் எதுவும் மேற்கொள்ள அனுமதியில்லா மண்டலத்தில் 90 அங்கீகரிக்கப்படாத கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்படுவது குறித்து கண்டறியப்பட்டன.
- மேலும், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை (HR&CE) ஆனது, தணிக்கைக்காக தலைமைக் கணக்குத் தணிக்கை அலுவலகத்திடம் எந்தப் பதிவுகளையும் அளிக்க இல்லை.
- ஆனால் HR & CE துறையின்படி, சமய நிறுவனங்கள் தொடர்பான பதிவுகளை ஆய்வு செய்வதற்கு CAGக்கு அதிகாரம் இல்லை.
- CAG தணிக்கையின் வரம்பு மாநிலத்தின் ஒருங்கிணைந்த நிதியில் இருந்து வழங்கப் படும் நிதிக்குள் மட்டுமே அமைய வேண்டும்.
- கடமைகள், அதிகாரங்கள் மற்றும் பணி நிபந்தனைகள் (DPC) என்ற சட்டத்தின் 14வது பிரிவின் கீழ் அரசாங்க மனிதவள மற்றும் அறநிலையத் துறையால் வழங்கப் பட்ட மானியங்கள் தனியாக தணிக்கை செய்யப்படலாம்.




## பேச்சு சுதந்திரம் குறித்து உயர்நீதிமன்றம்

- நற்பாங்குகளின் வரம்பினை மீறுவதற்காக என்று பேச்சு/கருத்துச் சுதந்திரத்திற்கான ஒரு உரிமையை யாரும் பயன்படுத்திக் கொள்ள முடியாது என்று சென்னை உயர் நீதிமன்றம் கூறியுள்ளது.
- 2023 ஆம் ஆண்டு பாரதிய நியாய சன்ஹிதா (BNS) சட்டத்தின் 296(b) (ஆபாசமானச் சொற்களை உச்சரித்தல்), 352 (அமைதியைச் சீர்குலைக்கும் நோக்கத்துடனான ஒரு அவமதிப்பு) மற்றும் 353 (பொது அமைதிக்கு குந்தகம் விளைவிக்கும் நோக்கத்துடன் கூற்றுக்களை கூறுதல்) ஆகிய பிரிவுகள் இந்த சிக்கல் குறித்த விதிகளைக் கொண்டு உள்ளன.
- கருத்துச் சுதந்திரம் என்பது யாருக்கும் "துஷ்பிரயோகம் செய்வதற்கான உரிமத்தை" வழங்கவில்லை என்று கொல்கத்தா உயர் நீதிமன்றமும் சமீபத்தில் கூறியுள்ளது.



## அதிக ஊக்கமளிப்பு அவசியமான துறைகளுக்கான திட்டம்

- தமிழ்நாடு மாநில அரசானது, புவியின் நிலையான பயன்பாடு சார்ந்த பொருட்களின் உற்பத்தி நிறுவனங்கள், அதிக ஊக்கமளிப்பு அவசியமான துறைகள் திட்டத்தின் கீழ் பலன்களை பெறும் வகையில் அந்தத் திட்டத்தின் நோக்க எல்லையினை விரிவுபடுத்தி உள்ளது.
- இந்தத் திட்டம் மூலம், மிகவும் தகுதியான குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு (MSME) சுமார் 25% அல்லது அதிகபட்சமாக 1.5 கோடி ரூபாய் மூலதன மானியம் வழங்கப்படும்.
- இந்த அலகுகள் உத்யன் தளத்தில் பதிவு செய்திருக்க வேண்டும் என்பதோடு மேலும், அதிக ஊக்கமளிப்பு அவசியமான துறையில் சேர்க்கப்படுவதற்கான வகையில் நன்கு அடையாளம் காணப்பட்ட சுமார் 26 தயாரிப்புகளில் ஏதேனும் ஒரு பொருளினைத் தயாரிக்கும் நிறுவனமாக அது இருக்க வேண்டும்.

## தமிழகத்தின் கடன் நிலுவைகள்




- 2024 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதி நிலவரப்படி, திறந்தநிலைச் சந்தைக் கடன்கள் மூலம் பெறப்பட்ட தமிழ்நாடு அரசின் நிலுவைக் கடன்கள் 6,00,993 கோடி ரூபாயாக உள்ளது.
- 2024 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதியின் இறுதியில் இந்த மாநிலத்தின் ஒட்டு மொத்த கடன்கள் நிலுவை 8,34,544 கோடி ரூபாயாக இருந்தது.
- 2023 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதி நிலவரப்படி, தமிழகத்திற்கான ஒட்டு மொத்த நிலுவைக் கடன் 7,41,498 கோடி ரூபாயாகும்.
- வட்டியின் அடிப்படையில் மாநிலத்தின் நிலுவை 28,263.67 கோடி ரூபாயாக இருக்கும்.
- அடுத்த 10 ஆண்டுகளில் (2023-24 முதல்) சந்தைக் கடனின் அசல் தொகைக்கான கடன் தொகை 3,75,951.97 கோடி ரூபாயாக இருக்கும்.
- 2024-25 ஆம் ஆண்டிற்கான மாநில நிதிநிலை அறிக்கையின் படி, 2024-25 ஆம் ஆண்டில் மொத்தம் 1,55,584.48 கோடி ரூபாய் கடன் பெற்று, 49,638.82 கோடி ரூபாயை திருப்பிச் செலுத்த தமிழக அரசு திட்டமிட்டுள்ளது.

- இதன் விளைவாக, 2025 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதியன்று நிலுவையில் உள்ள கடன் மதிப்பு 8,33,361.80 கோடி ரூபாயாக இருக்கும்.
- இது 2024-25 ஆம் ஆண்டில் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் (GSDP) 26.41% பங்கினைக் கொண்டிருக்கும்.

## குறைந்தபட்ச உள்நாட்டு மின்சாரச் செலவினம்

- தமிழகத்தில் 2023 ஆம் ஆண்டு மார்ச் மாத நிலவரப்படி சராசரியாக 100 அலகு மின்சார 113 ரூபாயாக உள்ளது.
- இதனுடன் ஒப்பிடுகையில், மற்ற மாநிலங்களில் மின்சாரச் செலவினம் அதிகமாக - மகாராஷ்டிரா மாநிலத்தில் 643 ரூபாய், இராஜஸ்தான் மாநிலத்தில் 833 ரூபாய், மத்தியப் பிரதேசத்தில் 618 ரூபாய், உத்தரப் பிரதேசத்தில் 689 ரூபாய், மேற்கு வங்காளத்தில் 654 ரூபாய், மற்றும் ஒடிசாவில் 426 ரூபாய் ஆக உள்ளது.
- தமிழக விவசாயிகள், முழு மானியத்துடன் கூடிய 2 லட்சம் வேளாண் பயன்பாட்டு நீரேற்றிகள் உள்ளிட்ட இலவச மின்சார வசதிகளைப் பெறுகின்றனர்.
- இங்கு விசைத்தறி நெசவாளர்களுக்கு 1,000 அலகு இலவச மின்சாரமும், கைத்தறி நெசவாளர்களுக்கு இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை 300 அலகு இலவச மின்சாரமும் வழங்கப்படுகிறது.
- கூடுதலாக, வீடுகளுக்கு 100 அலகு இலவச மின்சாரம் வழங்கப்படுகிறது.



## 2024 ஆம் ஆண்டில் நலத் திட்டங்களுக்கான வருடாந்திர வருமான வரம்பு




- ❖ தமிழ்நாட்டின் சமூக நலன் மற்றும் பெண்கள் அதிகாரமளித்தல் துறையானது இங்கு குடும்பங்களின் வருடாந்திர வருமான உச்ச வரம்பினை 72,000 ரூபாயிலிருந்து 1.20 லட்சம் ரூபாயாக அதிகாரப்பூர்வமாக உயர்த்தியுள்ளது.
- ❖ பொருளாதார நிலையின் மாற்றத்தினால், தமிழகத்தில் தனிநபர் வருமானம் மற்றும் வாழ்க்கைத் தரம் உயர்ந்துள்ளது.
- ❖ வருமான உச்ச வரம்பு திருத்தப்பட்டதால், நலத் திட்டங்களுக்கான பயனாளிகளின் ஒட்டு மொத்த எண்ணிக்கையில் உயர்வு ஏற்படும்.
- ❖ இத்துறையானது, 1993 ஆம் ஆண்டில் 12,000 ரூபாயாக இருந்த வருடாந்திர வருமான உச்ச வரம்பினை 2008 ஆம் ஆண்டில் 24,000 ரூபாயாக திருத்தியமைத்தது.
- ❖ மேலும், 2012 ஆம் ஆண்டில், கிராமப்புறங்களுக்கு 24,000 ரூபாயாக இருந்த இந்த வரம்பு 40,000 ரூபாயாகவும், நகர்ப்புறங்களுக்கு 60,000 ரூபாயாகவும் திருத்தப்பட்டது.
- ❖ இருப்பினும், 2014 ஆம் ஆண்டில் வருமான உச்ச வரம்பில் கடைசித் திருத்தம் செய்யப் பட்டு அது 72,000 ரூபாயாக உயர்த்தப்பட்டது.

## மக்களைத் தேடி மருத்துவம் 2024

- ❖ தமிழ்நாடு மாநில அரசின் மிகவும் முதன்மை சுகாதாரத் திட்டமான மக்களைத் தேடி மருத்துவம் (MTM) ஆனது, இரண்டு கோடி மக்களுக்குப் பயனளித்துள்ளது.
- ❖ இந்தத் திட்டம் ஆனது, மாநிலம் முழுவதும் உயர் இரத்த அழுத்தம் மற்றும் நீரிழிவு நோய்களுக்கு விரிவான வீடு தேடி சேவை வழங்கீடு அடிப்படையிலான சுகாதாரச் சேவைகளை வழங்குகிறது.
- ❖ இது 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 05 ஆம் தேதியன்று கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தமிழக முதல்வரால் தொடங்கி வைக்கப் பட்டதோடு இது 45 வயதிற்கு மேற்பட்டவர்களுக்குப் பயனளிக்கிறது.
- ❖ இதில் நோயாளிகளுக்கு உடலியக்க மருத்துவச் சிகிச்சையும் வழங்கப்படுகிறது.
- ❖ இத்திட்டம் ஆனது மாநிலத்தில் 8,713 சுகாதார துணை மையங்களுடன் 385 கிராமப்புற தொகுதிகளுக்கும், 460 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுடன் சேர்த்து 21 மாநகராட்சிகளுக்கும் சேவையினை வழங்கி வருகிறது.

- இத்திட்டத்திற்காக, தமிழக மாநிலத்தின் சுகாதாரத் துறைக்கு 2024 ஆம் ஆண்டிற்கான ஐக்கிய நாடுகள் சபையின் முகமைகளுக்கு இடையிலான பணிக்குழு விருதானது வழங்கப் பட்டுள்ளது.




## UIP திட்டத்தில் பொன்னுக்கு வீங்கி நோய்க்கான தடுப்பூசி




- தமிழகத்தில் தற்போது ஒரு மாதத்தில் குறைந்தது 150 பொன்னுக்கு வீங்கி நோய்கள் பதிவாகியுள்ளன.
- 2021-22 ஆம் ஆண்டில் 61 பாதிப்புகளும், 2022-23 ஆம் ஆண்டில் சுமார் 129 பாதிப்புகளும் பதிவாகியிருந்தன என்பதோடு 2023-24 ஆம் ஆண்டில் இந்த நோயின் பாதிப்பு 1,091 ஆக உயர்ந்தது.
- சுமார் 40% பாதிப்புகள் ஆறு முதல் ஒன்பது வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு ஏற்பட்டு உள்ள நிலையில் அதைத் தொடர்ந்து 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளில் இந்த பாதிப்பு விகிதம் 33% ஆக இருந்தது.

- பொது நோய்த் தடுப்பு மருந்து வழங்கீட்டுத் திட்டத்தின் (UIP) கீழ் பொன்னுக்கு வீங்கி நோய்க்கான தடுப்பூசி வழங்குவது குறித்து பரிசீலிக்குமாறு மத்திய அரசிடம் மாநில அரசு கோரியது.
- தமிழ்நாட்டில் UIP திட்டத்தின் கீழ், தடுப்பூசி மூலம் தடுக்கக் கூடிய 12 நோய்களுக்கு எதிராக குழந்தைகள் மற்றும் கர்ப்பிணிப் பெண்களுக்கு 11 தடுப்பூசிகள் வழங்கப் படுகின்றன.
- தட்டம்மை-ரூபெல்லா (MR) தடுப்பூசியானது 2017 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் UIP திட்டத்தில் சேர்க்கப் பட்டது.

## தொடர் புயல் அமைப்புகள்




- இதற்கு முன்னரும் வடகிழக்குப் பருவமழையின் போது வங்காள விரிகுடாவில் இந்த ஆண்டைப் போலவே தொடர் புயல் (வானிலை) அமைப்புகள் உருவாகியுள்ளன.
- ஆனால் இந்த அமைப்புகள் பெரும்பாலும் அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் உருவாகின.
- 1961 மற்றும் 2010 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் 15 புயல்கள் ஏற்பட்டுள்ளன.
- 2011 ஆம் ஆண்டிற்குப் பிறகும் இதுபோன்ற நிகழ்வுகள் நடந்துள்ளன.
- இந்த ஆண்டின் டிசம்பர் மாதத்தில், ஃபெங்கல் புயல் கரையை நோக்கி நகர்ந்த சில நாட்களில் டிசம்பர் 07 ஆம் தேதியன்று வங்காள விரிகுடாவில் குறைந்த காற்றழுத்தத் தாழ்வு பகுதி உருவானது.
- அதன்பிறகு, வங்கக் கடலில் தற்போது நன்கு அடையாளம் காணப்பட்ட / நிலை கொண்ட குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி உருவானது.

- 1999 மற்றும் 2010 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் இது போன்ற நிகழ்வுகள் உருவாகச் செய்வதில் இடைவெளி ஏற்பட்டது.
- சுமார் எட்டு நாட்கள் இடைவெளியில் உருவாகும் இரண்டு புயல்கள் அல்லது இரண்டு காற்றழுத்தங்கள், வானிலை திரள் நிகழ்வுகள் எனப்படும்.
- 1966 ஆம் ஆண்டில் வங்காள விரிகுடாவில் நான்கு வெப்பமண்டலப் புயல்களுடன் இரண்டு தனித்தனி வெப்பமண்டலப் புயல் திரள்கள் உருவாகின.
- 2011 ஆம் ஆண்டு முதல் கடந்த 13 ஆண்டுகளில், 2013, 2016, 2020 மற்றும் 2021 ஆகிய ஆண்டுகளில் நவம்பர் மாதத்தில் நான்கு புயல் திரள்கள் உருவாகியுள்ளன.

## மாநிலப் பறவைகள் ஆணையம் 2024




- மாநிலப் பறவைகள் ஆணையத்தினை மறுசீரமைப்பதற்கு என தமிழக அரசு ஆணை ஒன்றைப் பிறப்பித்துள்ளது.
- இது பறவைகள் சரணாலயங்கள், பறவைகள் கூடு கட்டும் சூழ்நிலைகள் மற்றும் சுற்றுச்சூழல் சார் சுற்றுலா வசதிகளைக் கண்காணித்து மேம்படுத்தும் பணியை மேற் கொள்ள உள்ளது.
- இந்த ஆண்டின் தொடக்கத்தில், தமிழக மாநிலப் பறவைகள் ஆணையத்தில் மும்பை இயற்கை சார் வரலாற்றுச் சங்கத்தினை (BNHS) ஒரு உறுப்பினராக சேர்ப்பதற்காக ஒரு திருத்தம் செய்யப்பட்டது.

## வழக்குகளை விரைவாக தீர்ப்பதற்கான சீர்தரச் செயல்பாட்டு நடைமுறை

- சென்னை உயர் நீதிமன்றம் ஆனது, மிகவும் அதிக எண்ணிக்கையிலான வழக்குகளை தீர்ப்பதற்கு உதவும் ஒரு சீர்தர செயல்பாட்டு நடைமுறையை (SOP) உருவாக்கியுள்ளது.
- பல விவகாரங்களைக் குறிப்பிடுவதன் மூலம் நீதிமன்ற நேரத்தை வீணடிப்பதைத் தவிர்ப்பத்தையும், தேவையற்ற வழக்கு ஒத்தி வைப்புகளைத் தடுப்பதையும் இது மிக நன்கு உறுதி செய்கிறது.
- வழக்கறிஞர்கள் நேரடியாக அவரது நீதிமன்ற அதிகாரியிடம் இருந்து வழக்காடல் நேர நிர்ணய சீட்டுகளைப் பெற்று, மதிய உணவு இடைவெளி நேர வழக்காடல்களுக்கு

முன்னதாக அவற்றை முன் வைக்கவும், மறுநாளில் புதிய வழக்குகளைப் பட்டியல் இடுவதற்கும் பதிவேட்டில் சமர்ப்பிக்கலாம்.




## தமிழ்நாட்டில் மின் தேவையின் அதிகரிப்பு




- 660-மெகாவாட் உற்பத்தி திறன் கொண்ட எண்ணூர் அனல் மின் நிலைய (ETPS) விரிவாக்கத் திட்டம் ஆனது மின் விநியோகக் கட்டமைப்பின் மீது நிலைத்தன்மையை உறுதிப்படுத்தவும், மின் உற்பத்தியை அதிகரிக்கவும் உதவும்.
- மாநிலத்தின் மின் தேவை ஒவ்வோர் ஆண்டும் 10% அதிகரித்து வருகிறது.
- 11,000 மெகாவாட் என்ற காற்றாலை ஆற்றல் உற்பத்தி திறனுடன், தமிழ்நாடு மாநிலம் நாட்டிலேயே இரண்டாவது இடத்தில் உள்ளது.
- சூரிய ஆற்றல் உற்பத்தி திறன் அடிப்படையில், 9,400 மெகாவாட் திறனுடன் மாநிலம் மூன்றாவது இடத்தில் உள்ளது.

- 2030 ஆம் ஆண்டிற்குள் 100 பில்லியன் அலகுகள் அளவிலான கூடுதல் பசுமை ஆற்றல் திறனை உற்பத்தி செய்வதற்கு மாநில அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது.
- 2030 ஆம் ஆண்டிற்குள் மாநிலத்தின் எரிசக்தித் தேவையில் 50 சதவீதமானது, பசுமை எரிசக்தி மூலம் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்று அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது.
- தமிழ்நாடு பசுமை ஆற்றல் நிறுவனம் லிமிடெட் ஆனது மாநிலத்தின் பசுமை ஆற்றல் உற்பத்தி முன்னெடுப்புகளை மேற்பார்வை செய்து வருகிறது.

## தெரு நாய்களின் எண்ணிக்கை மேலாண்மைக்கான கட்டமைப்பு




- தமிழ்நாடு மாநில திட்ட ஆணையமானது (SPC) தெரு நாய்கள் மேலாண்மை மற்றும் ஒழுங்குமுறைக்கான ஒரு விரிவான வரைவு கொள்கை கட்டமைப்பினை வெளியிட்டு உள்ளது.
- மாநிலத்தில் அதிகரித்து வரும் நாய்களின் எண்ணிக்கையால் ஏற்படும் சவால்களை எதிர்கொள்வதையும், பொது சுகாதாரம் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மனிதாபிமான முறையில், பயனுள்ள மற்றும் மிக நிலையான முறையில் நாய்களின் எண்ணிக்கையை மேலாண்மை செய்வதற்கான ஓர் உத்தி சார் அணுகுமுறையை இந்தக் கொள்கை குறிப்பிட்டுக் காட்டுகிறது.
- தெரு நாய்களில் வெறிப்பிடித்தல் நோயின் பரவலை எதிர்த்துப் போராடுவதற்காக, ரேபிஸ் எதிர்ப்பிற்கான மாபெரும் தடுப்பூசி வழங்கீட்டுப் பிரச்சாரமானது குறிப்பிட்ட நாட்களில் ஆனது நடத்தப்பட வேண்டும்.
- எந்த நாய்க்கும் இரண்டு முறையில் தடுப்பூசி போடப்படவில்லை அல்லது எந்த நாயும் விடுபடவில்லை என்பதை உறுதி செய்வதற்கு தடுப்பூசி போடப்பட்ட விலங்குகளைக் குறியிடுவதன் மூலம் அவற்றை எளிதில் அடையாளம் காண முடியும்.

- தொலைதூர இடங்களில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளும் கூட கால அடிப்படியிலான விலங்குப் பிறப்பு கட்டுப்பாட்டு திட்டங்களை அணுகுவதை உறுதி செய்வதற்காக என நடமாடும் சேவை வழங்கீட்டு வசதியை உருவாக்கப் பரிந்துரைப்பது அவசியமாகும்.
- பொறுப்பான செல்லப்பிராணி உரிமையை மேம்படுத்துவதற்கும், நாய்கள் கைவிடப் படும் பிரச்சினைகளை நன்கு நிவர்த்தி செய்வதற்கும் அனைத்து வளர்ப்பு நாய்களின் பதிவும் கட்டாயமாகும்.

## ஒருங்கிணைந்த சுகாதார முன்னெடுப்புகள்

- 'ஒருங்கிணைந்த சுகாதாரம்/நல்வாழ்வு மற்றும் பருவநிலை மாற்றம்' என்ற தமிழ்நாடு கருத்தரங்கம் ஆனது சமீபத்தில் சென்னையில் நடத்தப் பட்டது.
- தமிழ்நாடு அரசானது, 'ஒருங்கிணைந்த சுகாதாரம்' முத்திரையினை அறிமுகப்படுத்தி உள்ளதோடு 'ஒருங்கிணைந்த சுகாதாரம் மற்றும் பருவநிலை மாற்றம்: தமிழ்நாடு ஒரு கண்ணோட்டம்' என்ற ஓர் அறிமுகக் கையேட்டினையும் வெளியிட்டுள்ளது.
- தமிழகத்தில் பசுமைப் பரவலை சுமார் 33 சதவீதமாக உயர்த்துவதற்கு மாநில அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.
- மாநில அரசானது சமீபத்தில் வெப்ப அலைகளை மாநில அளவில் குறிப்பிடப்பட்டப் பேரிடராக அறிவித்துள்ளது.

## தமிழ்நாட்டில் சிறிய காற்றாலை விசையாழி



- திருச்சி-மதுரை தேசிய நெடுஞ்சாலையில் பஞ்சப்பூர் என்னுமிடத்தில் அமைக்கப்பட உள்ள ஒருங்கிணைந்தப் பேருந்து நிலையத்தில் (IBT) காற்றாலை விசையாழிகள் நிறுவப் பட உள்ளன.
- மரங்களைப் போன்று வடிவமைக்கப்பட்டுள்ள இந்த 30 அடி உயர சிறிய காற்றாலை விசையாழி கம்பங்கள் மின்சாரம் உற்பத்தி செய்யப் பயன்படுத்தப்படுகின்றன.
- இது மின்சாரம் தயாரிப்பதற்கு மணிக்கு 7 கிலோ மீட்டர் காற்றின் வேகம் தேவைப் படுகின்ற வழக்கமான காற்றாலை போன்றல்லாமல் இவை இயங்க சுமார் 2.5 கி.மீ வேகத்தில் காற்று போதுமானது.

- ❖ இந்தக் காற்றாலை விசையாழி கம்பம் ஆனது ஒரு மணி நேரத்திற்கு சுமார் 10 KW மின்னாற்றல் உற்பத்தி செய்யும் திறன் கொண்டதாக இருக்கும், இதனால் மூலம் ஒரு நாளில் 240 KW மின்சாரம் உற்பத்தி செய்யப்படும்.
- ❖ இந்தப் பிராந்தியத்தில் உள்ள பகுதிகளில் இதுவே இம்மாதிரியிலான முதலாவதான சிறிய காற்றாலை விசையாழி ஆகும்.

## தமிழகத்தின் பட்டியலிடப்பட்ட சாதியினர்/பழங்குடியினர் நலத் திட்டம்

- இந்த அரசு அமைந்தவுடன் தன்னாட்சி அதிகாரத்துடன் செயல்படும் தமிழ்நாடு மாநில ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல ஆணையம் அமைக்கப்பட்டது. **இவ்வாணையத்தின் மூலம் தற்போது வரை 3695 மனுக்கள் பெறப்பட்டு 2945 மனுக்களின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.**
- ரூ.**46.65 கோடி மதிப்பீட்டில்**, 2,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு துரித மின் இணைப்புத் திட்டத்தின் (Tatkal Scheme) **கீழ் மின் இணைப்புப் பெற 90 சதவிகிதம் மானியம் வழங்கப்பட்டுள்ளது.**
- ரூ.**10 கோடி மதிப்பீட்டில், 200 நிலமற்ற ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின விவசாயத் தொழிலாளர்கள் நிலம் வாங்க மானியம் வழங்கப்பட்டுள்ளது.**
- ரூ.**100 கோடி மதிப்பீட்டில்** மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, நீலகிரியில் **மாணவர்கள் பயன்பெறும் வகையில் நவீன வசதிகளுடன் நான்கு புதிய விடுதிக் கட்டடங்கள் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன. இதுபோல எண்ணற்றத் திட்டங்களை அரசு செயல்படுத்திவருகிறது.**

- ❖ தமிழக அரசு ஆனது, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மூலம் செயல் படுத்தப் படும் பல்வேறு நலத்திட்டங்களைப் பட்டியலிட்டுள்ளது.
- ❖ அண்ணல் அம்பேத்கர் வணிக வாகையர் திட்டம் ஆனது, பட்டியலிடப்பட்ட சாதியினர் / பழங்குடியினர் பிரிவைச் சேர்ந்த தொழில்முனைவோரின் பெரும் பொருளாதார மேம்பாட்டினை உறுதி செய்கிறது.
- ❖ இந்த முன்னெடுப்பின் கீழ் மொத்தம் 1,303 பயனாளிகள் சுமார் 159.76 கோடி ரூபாய் மதிப்பிலான மானியங்களைப் பெற்றுள்ளனர்.
- ❖ அயோத்தி தாசப் பண்டிதர் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டம் ஆனது, சாலைகள் மற்றும் தெரு விளக்குகள் போன்ற வசதிகளை மேம்படுத்துவதற்கும், நகர்ப்புற மற்றும் கிராமப்புறங்களில் உள்ள ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி வழங்கச் செய்வதற்காகவும் செயல்படுத்தப்பட்டது.
- ❖ 2024-25 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 1,966 திட்டங்கள் மேற்கொள்ளப் பட்டன.
- ❖ தொல்குடி திட்டத்தின் கீழ், சுமார் 1,000 கோடி ரூபாய் செலவில் பழங்குடியினர் குடியிருப்புகளில் உள்ள உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படுகிறது.
- ❖ பழங்குடியின மக்களுக்காக மொத்தம் 3,594 வீடுகள் கட்டப்படும்.
- ❖ 117.27 கோடி ரூபாய் செலவில் 120 இடங்களில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கான அறிவு மையங்களை இத்துறை அமைத்துள்ளது.

- 300 கோடி ரூபாய் செலவில் 60 விடுதிகளும், ஆதி திராவிடர் நலப் பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைகளும் கட்டப்பட்டது.
- வெளிநாடுகளில் உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு ஊக்கத் தொகையையும் இதில் வழங்கப் படுகிறது.

## தமிழ்நாடு அரசின் நிலையான நிலப் பயன்பாட்டுக் கொள்கை வரைவு




- மாநில அரசானது, 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலப் பயன்பாட்டுக் கொள்கையின் வரைவினை வகுத்த இருபது ஆண்டுகளுக்குப் பிறகு, மாநிலத் திட்ட ஆணையமானது (SPC) தமிழ்நாடு நிலையான நிலப் பயன்பாட்டுக் கொள்கை வரைவினை (SLUP) தயாரித்துள்ளது.
- மிகவும் நீண்ட கால நிலைத்தன்மை இலக்குகளுடன் கூடிய நிலப் பயன்பாட்டினைச் சீரமைப்பதன் மூலம் நகரமயமாக்கல், சுற்றுச்சூழல் வளங்காப்பு மற்றும் பெரும் பொருளாதார மேம்பாடு ஆகியவற்றை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஒரு நிலத்தை மேம்பாட்டு, வளங்காப்பு, வேளாண்மை மற்றும் மாறுதல் மண்டலங்களாக மாற்றுவதற்காக என, நகர்ப்புற வளர்ச்சியை மேம்படுத்துவதற்கும், சுற்றுச்சூழல் அமைப்புகளைப் பாதுகாப்பதற்கும், வேளாண்மையினை மிகவும் நன்கு ஆதரிப்பதற்கும், மேம்பாட்டினைக் கட்டுப்படுத்துவதற்கும் இது முன்மொழிகிறது.
- ஒருங்கிணைக்கப்பட்ட இடஞ்சார்ந்தத் திட்டமிடல், வள மேலாண்மையில் நிலையான நடைமுறைகள் மற்றும் நீடித்த நிலையான மேம்பாட்டு இலக்குகளுடன் (SDGs) நன்கு ஒருங்கிணைத்தல் ஆகியவற்றையும் இந்தக் கொள்கை வலியுறுத்துகிறது.
- 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேலைவாய்ப்புக் கொள்கை, தண்ணீர்க் கொள்கை மற்றும் தெரு நாய் மேலாண்மை மற்றும் ஒழுங்குமுறைக் கொள்கை ஆகியவையும் ஆணையத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட மற்ற மூன்று கொள்கைகளாகும்.

## தமிழ்நாடு மூலதனச் செலவினம் 2024-25

**Table 3: Committed Expenditure in 2024-25 (in Rs crore)**

| Committed Expenditure | 2022-23 Actuals | 2023-24 Budgeted | 2023-24 Revised | % change from BE 23-24 to RE 23-24 | 2024-25 Budgeted | % change from RE 23-24 to BE 24-25 |
|---|---|---|---|---|---|---|
| Salaries | 68,588 | 77,240 | 75,546 | -2% | 84,932 | 12% |
| Pension | 32,177 | 41,232 | 37,542 | -9% | 42,509 | 13% |
| Interest payment | 46,911 | 54,676 | 54,669 | -0.01% | 62,456 | 14% |
| **Total Committed Expenditure** | **1,47,676** | **1,73,148** | **1,67,756** | **-3%** | **1,89,897** | **13%** |

Sources: Annual Financial Statement, Tamil Nadu Budget 2024-25; PRS.

- 2023-24 ஆம் நிதியாண்டின் முதல் பாதியில் சுமார் 17,773.80 கோடி ரூபாயாக இருந்த தமிழகத்தின் மூலதனச் செலவினமானது, 2024-25 ஆம் நிதியாண்டின் முதல் பாதியில் சுமார் 8.4% குறைந்து 16,283.84 கோடி ரூபாயாக இருந்தது.
- 2024-25 ஆம் ஆண்டில், மாநிலத்தின் மொத்த மூலதனச் செலவினம் ஆனது, சுமார் 47,681 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது.
- இது 2023-24 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட மதிப்பீடுகளான 42,532 கோடி ரூபாயை விட 12.11% அதிகரித்துள்ளது.
- மொத்தத்தில், 20 முன்னணி மாநிலங்களின் மூலதனச் செலவினம் ஆனது 2024-25 ஆம் நிதியாண்டின் முதல் பாதியில் 9.8% குறைந்துள்ளது.
- ஆந்திரப் பிரதேசம் (-72% வருடாந்திர வளர்ச்சி), தெலுங்கானா (-56%), ஹரியானா (-38%), உத்தரகாண்ட் (-35%), மற்றும் உத்தரப் பிரதேசம் (-16%) ஆகியவற்றில் மூலதனச் செலவினங்களின் வீழ்ச்சி குறிப்பிட்ட அளவில் கடுமையாக இருந்தது.
- இருப்பினும், 2024-2025 ஆம் நிதியாண்டின் முதல் பாதியில் பஞ்சாப், கர்நாடகா, மகாராஷ்டிரா மற்றும் இராஜஸ்தான் போன்ற சில மாநிலங்களின் மூலதனச் செலவில் இரட்டை இலக்க வளர்ச்சியானது பதிவாகியுள்ளது.

## தமிழ்நாட்டின் வனப்பகுதி 2023

- தமிழ்நாடு மாநிலத்தின் வனப் பரப்பானது கடந்த பத்தாண்டுகளில் இருந்த அளவை விட 9.09% அதிகரித்து, 2,205.01 சதுர கிலோமீட்டர் பசுமைப் பரவலைக் கொண்டுள்ளது.
- தமிழ்நாட்டின் வனப் பரப்பளவு 24,245.21 சதுர கிலோமீட்டராக இருந்த நிலையில் 2023 ஆம் ஆண்டில் அது 26,450.22 சதுர கிலோமீட்டராக அதிகரித்துள்ளது.
- 2023 மற்றும் 2021 ஆகிய ஆண்டுகளுக்கு இடையேயான ஒரு ஒப்பீடானது, மாநிலத்தில் சுமார் 61 சதுர கிலோமீட்டர் காடுகளின் இழப்பைக் குறிப்பிடுகிறது.
- இதில் உரிமை அல்லது சட்ட அந்தஸ்தைப் பொருட்படுத்தாமல், "வனப் பரவல்" என்ற சொல்லானது, குறைந்தபட்சம் ஒரு ஹெக்டேர் பரப்பளவு மற்றும் 10% அல்லது அதற்கு மேற்பட்ட மரங்களின் பரவல் கொண்ட அனைத்து நிலங்களையும் உள்ளடக்கியது.

- மாநிலத்தின் மொத்த 26,450.22 சதுர கிலோ மீட்டர் பரப்பளவிலான காடுகளில்,
  - 13% (3,586.19 சதுர கி.மீ.) மட்டுமே மிகவும் அடர்ந்த காடுகளாக வகைப்படுத்தப் பட்டுள்ளது,
  - 41.7% (11,027.03 சதுர கி.மீ) மிதமான அடர்த்தியான காடுகளாகவும், மற்றும்
  - 44.83% (11,837 சதுர கி.மீ) திறந்த வெளிக் காடுகளாகவும் வகைப்படுத்தப் பட்டு உள்ளன.

| | | |
|---|---|---|
| Tamil Nadu | 23,188 | Bamboo forest (0.49), Eucalyptus (7.47), Eucalyptus with Miscellaneous (1.89), Khair forest (0.25), Low land Hardwood (0.25), Mangrove (0.11), Miscellaneous forest (82.67), Mixed bamboo (1.15), Orchard (0.16), Teak (0.33), Teak with Misc (0.66),<br>Not Applicable (4.59) |

## உள்ளாட்சி தேர்தல் 2025

- 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் பதவிக்காலம் முடிவடைகின்ற 28 மாவட்டங்களில் உள்ள ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல் தாமதமாகும் என எதிர்பார்க்கப் படுகிறது.
- தொகுதி மறுசீரமைப்பு மற்றும் இட ஒதுக்கீட்டுச் செயல்முறையை முடித்த பின்னரே தேர்தல் நடத்தப்படும் என்று சென்னை உயர்நீதிமன்றத்தில் மாநில அரசு தெரிவித்து உள்ளது.
- 2019 ஆம் ஆண்டு டிசம்பர் 27 மற்றும் 30 ஆம் தேதியன்று, மொத்தம் உள்ள 3.31 கோடி வாக்காளர்களில் சுமார் 77% பேர் - சுமார் 2.55 கோடி பேர் உள்ளாட்சித் தேர்தலில் பங்கு பெற்றனர்.
- அவர்கள் 27 மாவட்டங்களில் உள்ள 515 மாவட்டப் பஞ்சாயத்து (DP) வார்டுகள் (மன்றங்கள்), 5,090 பஞ்சாயத்து ஒன்றியங்கள் (PU) வார்டுகள் மற்றும் 76,746 கிராமப் பஞ்சாயத்து (VP) வார்டுகளுக்குப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தனர்.
- மேலும், இதில் 9,264 கிராமப் பஞ்சாயத்து தலைவர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக தேர்தல் நடத்தப் பட்டது.
- மீதமுள்ள ஒன்பது மாவட்டங்களுக்கு 2021 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் தேர்தல் நடைபெற்றது.

| Details of PRIs and ULBs | PRIs | | ULBs | |
|---|---|---|---|---|
| | District Panchayats[a] | 36 | Municipal Corporations[1] | 21 |
| | Block Panchayats | 388 | Municipalities | 138 |
| | Village Panchayats | 12,525 | Town Panchayats | 490 |
| | Total | 12,949 | Total | 649 |

## விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்குக் காப்பீடு

- ‘இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும் 48’ திட்டத்தின் கீழ் விபத்தில் பாதிக்கப் பட்டவர்களுக்கு சுமார் 2 லட்சம் ரூபாய் வரையிலான சிகிச்சைக்கான காப்பீட்டுத் தொகையை தமிழ்நாடு மாநில அரசு உயர்த்தியுள்ளது.
- 2021 ஆம் ஆண்டு டிசம்பர் 18 ஆம் தேதி தொடங்கப்பட்ட இத்திட்டத்தின் கீழ் இதுவரை விபத்தில் பாதிக்கப்பட்ட சுமார் 3,20,264 நபர்களின் முதல் 48 மணி நேரங்களுக்கான மருத்துவமனை சிகிச்சைக்கான செலவிற்கு அரசு காப்பீடு வழங்கியுள்ளது.
- தற்போது, 248 அரசு மற்றும் 473 தனியார் மையங்கள் உட்பட 721 சுகாதார மையங்கள், இத்திட்டத்தின் கீழ் சிகிச்சை அளிப்பதற்காக பதிவு செய்யப்பட்டுள்ளன.
- மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனை மற்றும் திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு இந்தத் திட்டத்தின் கீழ் சிறப்பாக செயல்பட்டதற்காக விருதுகள் வழங்கப்பட்டன.
- சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனைக்குச் சிறப்பு பரிசும் வழங்கப் பட்டது.




## தமிழகத்தின் கடற்கரையோரப் பகுப்பாய்வு

- 2011 ஆம் ஆண்டு கடலோர ஒழுங்குமுறை மண்டலம் (CRZ) அறிவிப்பின் படி, வலியுறுத்தப் பட்ட கடற்கரை மேலாண்மைத் திட்டத்தின் (SMP) ஒரு பகுதியாக ஒரு பகுப்பாய்வு ஆனது மேற்கொள்ளப்பட்டது.

- தேசியக் கடலோர ஆராய்ச்சி மையம் (NCCR) மேற்கொண்ட இந்தக் கடற்கரையோரப் பகுப்பாய்வில், தமிழ்நாடு கடற்கரையோரத்தில் 69 கடல் அரிமானத்திற்கு உட்படும் பகுதிகள் கண்டறியப்பட்டு, 20 பகுதிகள் சீரமைப்புகள் தேவைப்படும் பகுதிகளாகக் குறிக்கப் பட்டுள்ளன.
- தமிழ்நாட்டின் கடலோரப் பகுதியில் சுமார் 13.5% பகுதிகள் பெரும் செயற்கையான கட்டமைப்புகளால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.
- கன்னியாகுமரி மற்றும் திருவள்ளூர் ஆகிய பகுதிகள் மிக அதிகளவிலான இத்தகைய கட்டமைப்புகளைக் கொண்ட பகுதிகளாக உள்ளன.

**ea change**

| oastal zone rules, 2011 | Coastal zone rules, 2018 |
|---|---|
| No development in CRZ-, the most ecologically ensitive zone, except for lefence, strategic purposes | • Eco-tourism activities such as mangrove walks, tree huts and nature trails, among others, in identified stretches, subject to permissions |
| The 500-metre CRZ s apportioned into 4 ubdivisions | • There are now further subdivisions within these 4 regions. For instance, the CRZ-1 is split into CRZ-1a and CRZ-1b and CRZ-3 has 3a and 3b |
| Coastal Regulation Zone hall apply to the land etween high tide line to OO metres on landward side f creeks, estuaries, rivers | • CRZ shall apply to the land area between high tide line to 50 mts on the landward side of creeks, estuaries, backwaters and rivers |
| States have no discretion | • 50 metre-limit after approval of State |



## 2022 ஆம் ஆண்டில் சாலை விபத்துகள்




- தமிழகத்தில் 2023 ஆம் ஆண்டில் பதிவான 66,841 சாலை விபத்துகளில் மொத்தம் 18,074 பேர் உயிரிழந்துள்ளனர்.

- 2022 ஆம் ஆண்டில் பதிவான 64,105 விபத்துகளில் 17,884 உயிரிழப்புகள் பதிவாகி உள்ளன.
- 2019 ஆம் ஆண்டில் பதிவான 62,685 விபத்துக்களில் மொத்தம் 18,129 உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன, அதே சமயம் 2018 ஆம் ஆண்டில் 67,279 பதிவான விபத்துகளில் 18,392 உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன.
- தமிழ்நாட்டில், பதிவாகும் ஒவ்வொரு நான்கு விபத்துகளுக்கும் ஒரு உயிரிழப்பு என்பது பதிவாகி வருகிறது, மேலும் 25% விபத்துகள் உயிர்களைப் பலி வாங்கிய விபத்துகளாக மாறியுள்ளன.
- சென்னை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நகரங்கள் சுமார் 3,642 விபத்துகளுடன் முதல் இடத்தில் உள்ளன என்பதோடு மேலும் அவை விபத்துகளில் தலா 5.45% பங்கினைக் கொண்டுள்ளன.
- அடுத்தபடியாக, செங்கல்பட்டில் 3,387 விபத்துகளும் (5.07%), திருப்பூரில் 3,292 (4.93%) மற்றும் சேலத்தில் 3,174 (4.75%) விபத்துகளும் பதிவாகியுள்ளன.
- உயிரிழப்புகளைப் பொறுத்தவரையில், கடந்த ஆண்டு சுமார் 1,040 உயிரிழப்புகளுடன் - 18,074 என்ற மொத்த உயிரிழப்புகளில் 5.75% - கோயம்புத்தூர் முதலிடத்தில் உள்ளது.
- செங்கல்பட்டு மாவட்டத்தில் சாலை விபத்துகளில் 912 பேர் உயிரிழந்துள்ள நிலையில் (மொத்த உயிரிழப்புகளில் 5.05%), மதுரையில் 864 பேரும் (4.80%), திருப்பூரில் 861 பேரும் (4.76%) மற்றும் சேலத்தில் 787 பேரும் (4.35%) உயிரிழந்துள்ளனர்.

## LPG மற்றும் பெட்ரோல்-டீசல் ஒப்பந்தம் – தமிழ்நாடு

- மாநில நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைக் கடைகள் ஆனது 26 LPG விநியோக அலகுகளை இயக்கி வருகின்றன.
- நீலகிரி மாவட்ட கூட்டுறவுச் சந்தைப்படுத்தல் சங்கம் (NCMS) ஆனது திரவமாக்கப்பட்ட பெட்ரோலிய எரிவாயு (LPG) முகமை வணிகத்தை நடத்தி வருகிறது.
- கூடுதலாக, பெட்ரோல் / டீசல் ஒப்பந்த விற்பனைக்கான தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் (PACCS) உட்பட 58 விற்பனை நிலையங்கள் பல்வேறு வகையான கூட்டுறவு சங்கங்களால் இயக்கப்படுகின்றன.
- 2023-24 ஆம் ஆண்டில் இவை 91.09 கோடி ரூபாய் மதிப்புள்ள 9,135 KL பெட்ரோல் மற்றும் டீசலை விற்பனை செய்துள்ளன.

## டங்ஸ்டன் கனிமத் தொகுதியின் மறு மதிப்பாய்வு

- மத்திய சுரங்க அமைச்சகம் ஆனது, அரிட்டாப்பட்டியில் இந்துஸ்தான் ஜிங்க் லிமிடெட் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட டங்ஸ்டன் கனிமத் தொகுதி குறித்த மறு மதிப்பு ஆய்வினை மேற்கொள்ளுமாறு இந்தியப் புவியியல் ஆய்வு மையத்திடம் (GSI) கோரி உள்ளது.
- கனிம சுரங்கத் தொகுதியில் இருந்து மாநிலத்தின் முதல் உயிரியல் பன்முகத்தன்மை மிகுந்த தளத்தை விலக்கி அதன் எல்லையை மறுவரையறை செய்வதற்கான பெரும் சாத்தியக் கூறுகளை ஆராயுமாறு அது கோரியுள்ளது.
- அரிட்டாபட்டி கிராமத்தில் உள்ள மலைகளில், சுமார் 250 பறவை இனங்கள் காணப் படுவதால், அவை உயிரியல் மற்றும் வரலாற்று ரீதியிலான பெரும் முக்கியத்துவம் வாய்ந்தவை யாகும்.

- இதில் – வெள்ளை வல்லூறு (பால்கோ ஜக்கர்), இராசாளிக் கழுகு (பால்கோ பெரெக்ரைன்ஸ்), மற்றும் இராசாளி பருந்து (அக்விலா ஃபேசியாட்டா) ஆகிய 3 முக்கிய வேட்டையாடும் பறவை இனங்களும் அடங்கும்
- இந்தக் கிராமத்தில் பல்வேறு மிகப்பெருங்கற்காலக் கட்டமைப்புகள், தமிழ் பிராமி எழுத்துகள் கொண்ட கல்வெட்டுகள், சமணப் படுக்கைகள் மற்றும் 2200 ஆண்டுகள் பழமையான குடைவறைக் கோயில்கள் உள்ளன.

**துணை வேந்தருக்கான தேடல் குழு**




- தமிழக ஆளுநர் அவர்கள், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவிக்கான தேடல் குழு தொடர்பான அறிவிப்பை திரும்பப் பெறுமாறு மாநில அரசிடம் கோரியுள்ளார்.
- இது பல்கலைக்கழக மானியக் குழுவின் (UGC) பரிந்துரைக்கப்பட்ட நபரைச் உள்ளடக்கியதாக இல்லை என்றும், மேலும் அது உச்ச நீதிமன்றத்தின் உத்தரவுகளை மீறியதாகவும் ஆளுநர் கூறினார்.
- தமிழ்நாட்டின் பல்கலைக்கழகங்களின் சட்டங்களின் படி, தேடல் குழுக்கள் வேந்தர் - ஆளுநரால் பரிந்துரைக்கப்பட்ட ஒரு நபர், அரசினால் பரிந்துரைக்கப்பட்ட ஒரு நபர் மற்றும் ஆட்சி மன்றம் அல்லது அதன் செனட் அல்லது அதன் மேலவையினால் பரிந்துரைக்கப்பட்டஒரு நபர் என மூன்று உறுப்பினர்களைக் கொண்டிருக்கும்.
- 13 மாநிலப் பல்கலைக்கழகங்களுள் ஆறு பல்கலைக்கழகங்கள் துணைவேந்தர்கள் இல்லாமல் இயங்கி வருகின்றன.
- பாரதிதாசன் பல்கலைக்கழகம் மற்றும் பெரியார் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர்களின் நீட்டிக்கப்பட்ட பதவிக் காலமானது பிப்ரவரி மற்றும் மே மாதங்களில் முடிவடைகிறது.
- உச்ச நீதிமன்றம் ஆனது, 'ஜெகதீஷ் பிரசாத் சர்மா எதிர் பீகார் அரசு' இடையிலான வழக்கில், மாநில அரசுகள் ஆனது UGC குழுவின் அனைத்து வழிகாட்டுதல்களையும் பின்பற்றத் தேவையில்லை என்றும், அவை எந்த விதிகளை வேண்டுமானாலும் அதன் விருப்பம் போல ஏற்கலாம் என்றும் கூறியுள்ளது.

## தமிழ்நாட்டில் சுய ஆட்சி அமைப்புகள்

- சமீபத்தில் குன்றத்தூர் மற்றும் உள்ளாவூர் ஆகிய வட தமிழ்நாட்டின் இரண்டு கிராமங்கள் குறித்து கொள்கை ஆய்வுகள் மையம் (CPS) என்ற ஓர் இலாப நோக்கற்ற ஆராய்ச்சி நிறுவனம் ஆய்வுகளை நடத்தியுள்ளது.
- இது ஆங்கிலேயர்களின் வருகைக்கு முன்பிருந்தே கிராம அளவில் பரந்த அளவிலான சுயாட்சி நிர்வாக அமைப்புகள் எவ்வாறு இருந்தன என்பதை எடுத்துக்காட்டுகிறது.
- இந்த ஆய்வு 1767 மற்றும் 1774 ஆம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலத்தில், செங்கல்பட்டு ஜாகிர் அமைப்பிற்குட்பட்ட சுமார் 2,000 இடங்களில் ஒரு ஆங்கிலேய இராணுவ அதிகாரியான தாமஸ் பர்னார்ட் நடத்திய ஆய்வின் அடிப்படையில் மேற்கொள்ளப் பட்டது.
- ஆங்கிலேயர்கள் இந்தப் பகுதியை 1762 ஆம் ஆண்டில் ஆற்காடு நவாப்பிடமிருந்துப் பெற்றனர்.
- ஜாகிர் அமைப்பிற்குட்பட்ட இந்தக் கிராமங்களின் செயல்பாடு குறித்தத் தகவல்கள், பனை ஓலைகளில் எழுதப்பட்ட தமிழ்க் கல்வெட்டுகளில் 'கணக்குப்பிள்ளைகள்' என்று அழைக்கப்படும் பாரம்பரிய கணக்குப் பராமரிப்பாளர்களால் குறிக்கப்பட்டுள்ளன.
- குன்றத்தூரில் சோழர் காலம் முதல் முகலாயர்கள் காலம் வரையிலான சுமார் 55 கல்வெட்டுகள் கண்டறியப்பட்டுள்ளன, இது இந்த கிராமத்தின் பல நூற்றாண்டு கால வரலாற்றை எடுத்துரைக்கின்றன.
- செங்கல்பட்டு ஜாகிர் பகுதி முழுவதிலும் மேற்கொள்ளப்பட்ட உணவு தானியங்களின் வருடாந்திர உற்பத்தி தனிநபருக்கு ஒரு டன் என்ற அளவில் இருந்தது.
- இது இன்றைய இந்தியாவில் மேற்கொள்ளப்படும் சராசரி அளவினை விட சுமார் ஐந்து மடங்கு அதிகம் ஆகும்.
- இங்கு விளைபொருட்களின் சில குறிப்பிட்ட பங்குகள் இப்பகுதியில் நிறைந்திருக்கும் நீர்நிலைகளைப் பராமரிப்பதற்கும், அறிஞர்கள், ஆசிரியர்கள், இசைக் கலைஞர்கள் மற்றும் நடனக் கலைஞர்களின் வாழ்வாதாரத்திற்காகவும் ஒதுக்கப்பட்டது.

## தமிழ்நாடு வேலைவாய்ப்பு வரைவுக் கொள்கை 2023

- இது தற்போதைய தொழிலாளர் சந்தையில் உள்ள பல நெருக்கடியான பிரச்சினைகளை நிவர்த்தி செய்கிறது.
- இவற்றில் நன்கு கல்வி பயின்ற இளைஞர்களிடையே பெருமளவில் நிலவும் மிகவும் அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்பின்மை விகிதம் மற்றும் கல்வி, திறன்கள், குறிக்கோள்கள் மற்றும் வேலை வாய்ப்புகளுக்கு இடையே உள்ள குறிப்பிடத்தக்கப் பொருத்தமின்மை ஆகியவை அடங்கும்.
- மேலும், பொருத்தமான தீர்வுகளை உருவாக்குவதற்கான பல்வேறு நடவடிக்கைகளை இந்தக் கொள்கை குறிப்பிட்டுக் காட்டுகிறது.
- சராசரி வருமான அளவை உயர்த்தச் செய்வதற்கும் பொருளாதாரத்தின் வேகமான வளர்ச்சிக்கு ஆதரவளிப்பதற்கும் என ஆக்கப்பூர்வ மிக்க வேலைவாய்ப்புகள் மற்றும் உள்ளார்ந்த வளர்ச்சிக்கான 10 ஆண்டு கால உத்தி முக்கியமானதாகும்.




## தமிழ்நாடு மாநில நீர் வளக் கொள்கை வரைவு



- இது நீர் மேலாண்மையில் இந்த மாநிலத்தில் உள்ள குறிப்பிட்டப் பல்வேறு சவால்களை எதிர்கொள்வதில் நன்கு கவனம் செலுத்தும் வகையில் பல் துறை அணுகுமுறையுடன் உருவாக்கப்பட்டுள்ளது.
- இது தூய்மையான குடிநீருக்கானச் சமமான அணுகலை உறுதி செய்வதற்கும், நீர் வளங்களைப் பாதுகாத்து மேம்படுத்துவதற்கும், திறம் மிக்க மற்றும் உற்பத்தித் திறன் சார்ந்த நீர் பயன்பாட்டை ஊக்குவிப்பதற்குமான பல்வேறு உத்திகளைக் குறிப்பிட்டுக் காட்டுகிறது.
- தமிழ்நாடு நீர்வள ஆணையம், நீர் வளம் சார் கொள்கை ஆராய்ச்சி மையம் மற்றும் ஒருங்கிணைந்த தமிழ்நாடு நீர் வள தகவல் அமைப்பு ஆகியவற்றை நிறுவவும் இந்தக் கொள்கை பரிந்துரைக்கிறது.

## பழவேற்காடு சரணாலயத்திற்குட்படாத ஏரி பகுதிகள்

- பழவேற்காடு பறவைகள் சரணாலய எல்லைக்கு வெளியே உள்ள ஏரி பகுதிகளை 2017 ஆம் ஆண்டு சதுப்பு நிலங்கள் (பாதுகாப்பு மற்றும் மேலாண்மை) விதிகளின் கீழ் கொண்டு வர வேண்டும் என தமிழ்நாடு மாநில ஈரநில ஆணையம் (TNSWA) கூறி உள்ளது.
- சதுப்பு நிலங்களை, சதுப்பு நிலங்கள் சாராதப் பயன்பாட்டிற்கு ஏற்றவாறு மாற்றி அமைப்பதைத் தடுக்க இது உதவும்.
- தற்போது, பழவேற்காடு பறவைகள் சரணாலயம் ஆனது 10 கிலோமீட்டர் அளவில் சுற்றுச்சூழல் தாங்குதிறன் மண்டலத்தினைக் கொண்டுள்ளது.
- பழவேற்காடு ஏரி உட்பட 2011 ஆம் ஆண்டின் தேசியச் சதுப்பு நில இருப்பு மதிப்பீட்டில் பட்டியலிடப்பட்டுள்ள அனைத்து ஈரநிலங்களும் 4(2) வது விதியின் கீழ் பாதுகாக்கப்பட வேண்டும்.
- ஒரு சதுப்பு நிலம் ஆனது அதிகாரப் பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளதா இல்லையா என்பதைப் பொருட்படுத்தாமல் இந்தப் பாதுகாப்பு என்பது கட்டாயமாக வழங்கப்பட வேண்டும்.
- சதுப்பு நிலங்களை ஆக்கிரமிப்பு மற்றும் தொழிற்சாலைகளை நிறுவுதல் அல்லது அவற்றின் விரிவாக்கம் போன்ற சதுப்பு நிலங்கள் சாராதப் பயன்பாட்டிற்காக மாற்றி அமைப்பதை இந்த விதி தடை செய்கிறது.
- திடக் கழிவுகள், கட்டுமானக் கழிவுகள், மிகவும் அபாயகரமானப் பொருட்கள் மற்றும் சுத்திகரிக்கப் படாத கழிவுகளை சதுப்பு நிலங்களில் கொட்டுவதையும் இது தடை செய்கிறது.



## திருவள்ளுவர் சிலையின் 25 ஆம் ஆண்டு நிறைவு விழா

- கன்னியாகுமரியின் திரிவேணி சங்கமத்தில் உள்ள திருவள்ளுவர் சிலையின் வெள்ளி விழாவானது டிசம்பர் 31 மற்றும் ஜனவரி 01 ஆகிய தேதிகளில் நடைபெறுகிறது.
- கன்னியாகுமரியில் உள்ள இந்த சிலையானது 'பேரறிவுச் சிலை' என்று அழைக்கப் படும் என முதல்வர் அறிவித்துள்ளார்.
- இந்த சிலையானது, 2000 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதியன்று அப்போதைய தமிழக முதல்வர் மு.கருணாநிதி அவர்களால் மக்களின் பார்வைக்காக அர்ப்பணிக்கப்பட்டது.
- இந்த சிலை மற்றும் பீடத்தின் மொத்த உயரம் 133 அடி (41 மீட்டர்) ஆகும்.
- இது திருக்குறளின் 133 அத்தியாயங்களைக் குறிக்கிறது.
- 95 அடி (29 மீட்டர்) உயரத்திலான திருவள்ளுவரின் சிற்பம் ஆனது 38 அடி உயரம் கொண்ட (12 மீட்டர்) பீடத்தில் அமைக்கப்பட்டுள்ளது.
- இந்தப் பீடம் ஆனது திருக்குறள் உரையின் மூன்று பால்களில் முதல் பாலான அறத்துப் பாலின் 38 அத்தியாயங்களைக் குறிக்கிறது.
- இச்சிலையானது இரண்டாவது மற்றும் மூன்றாவது பால்களின்- முறையே பொருள் மற்றும் அன்பு /காமம் - அத்தியாயங்களைக் குறிக்கிறது.
- இந்த விழாவில் விவேகானந்தர் பாறை மற்றும் திருவள்ளுவர் சிலையை இணைக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள கண்ணாடி பாலத்தையும் தமிழக முதல்வர் திறந்து வைத்தார்.
- இது கடலின் மீது கட்டப்பட்ட இந்தியாவின் முதலாவது கண்ணாடிப் பாலமாகும்.




## சோழர் காலத்து தமிழ் கல்வெட்டு – பெங்களூரு

- கல்லில் பொறிக்கப்பட்ட சோழர் காலத்து தமிழ் கல்வெட்டினை நகலெடுப்பதற்காக கல்வெட்டியல் பிரிவு ஆனது நடவடிக்கை எடுத்து வருகிறது.
- இது பெங்களூரு ஊரக மாவட்டத்தில் உள்ள கம்மசந்திரா என்ற கிராமத்தில் உள்ள சோமேஸ்வரர் கோயிலுக்கு அருகில் கண்டறியப்பட்டுள்ளது.
- தமிழ் மொழியில் உள்ள இந்தக் கல்வெட்டு ஆனது, 11 ஆம் நூற்றாண்டு சோழர் காலத்தைச் சேர்ந்தது.

- பூஜைகள் நடத்துவதற்காக சோமேஸ்வரர் கோவிலுக்கு 12 கண்டகம் (நில அளவீடு) நிலமானது காணிக்கையாக வழங்கப்பட்டதாக இதன் மூலம் தெரிகிறது.



# தேசியச் செய்திகள்

## அடிப்படை கால்நடை வளர்ப்புப் புள்ளிவிவரங்கள் 2024

- இது 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் 2024 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் வரையில் இருந்த காலக் கட்டத்தில் நடத்தப்பட்ட ஒருங்கிணைந்த மாதிரி ஆய்வின் முடிவுகளை அடிப்படையாகக் கொண்டது.
- 2023-24 ஆம் ஆண்டில் இந்திய நாட்டின் மொத்தப் பால் உற்பத்தியானது சுமார் 239.30 மில்லியன் டன்களாக மதிப்பிடப்பட்டுள்ளது.
- கடந்த 10 ஆண்டுகளில் இதில் 5.62% வளர்ச்சி பதிவாகியுள்ளது என்பதோடு இது 2014-15 ஆம் ஆண்டில் 146.3 மில்லியன் டன்னாக இருந்தது.
- மேலும், 2023-24 ஆம் ஆண்டில் பதிவான பால் உற்பத்தி ஆனது 2022-23 ஆம் ஆண்டின் மதிப்பீட்டை விட 3.78% அதிகரித்துள்ளது.
- 2023-24 ஆம் ஆண்டில் பால் உற்பத்தியில் முன்னணியில் உள்ள ஐந்து மாநிலங்கள் - மொத்தப் பால் உற்பத்தியில் 16.21% பங்குடன் உத்தரப் பிரதேசம் முதலிடத்திலும், அதைத் தொடர்ந்து இராஜஸ்தான் (14.51%), மத்தியப் பிரதேசம் (8.91%), குஜராத் (7.65%), மற்றும் மகாராஷ்டிரா (6.71%) ஆகியவை இடம் பெற்றுள்ளன.
- 2023-24 ஆம் ஆண்டில் நாட்டின் மொத்த முட்டை உற்பத்தியானது, 142.77 பில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளது.
- 2014-15 ஆம் ஆண்டில் பதிவான 78.48 பில்லியன் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் கடந்த 10 ஆண்டுகளில் 6.8% வளர்ச்சி பதிவாகியுள்ளது.

- மேலும், 2022-23 ஆம் ஆண்டை விட 2023-24 ஆம் ஆண்டில் ஆண்டுதோறும் சுமார் 3.18% உற்பத்தி அதிகரித்துள்ளது.
- மொத்த முட்டை உற்பத்தியில் சுமார் 17.85% பங்குடன் ஆந்திரப் பிரதேசம் முதல் இடத்தில் உள்ள நிலையில் அதைத் தொடர்ந்து தமிழ்நாடு (15.64%), தெலுங்கானா (12.88%), மேற்கு வங்காளம் (11.37%) மற்றும் கர்நாடகா (6.63%) ஆகியவை இடம் பெற்று உள்ளன.
- 2023-24 ஆம் ஆண்டில் நாட்டின் மொத்த இறைச்சி உற்பத்தியானது, 10.25 மில்லியன் டன்களாக மதிப்பிடப்பட்டுள்ளது.
- 2014-15 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட 6.69 மில்லியன் டன்கள் என்ற அளவினை விட கடந்த 10 ஆண்டுகளில் இறைச்சி உற்பத்தியில் 4.85% வளர்ச்சி பதிவாகியுள்ளது.
- மேலும், 2022-23 ஆம் ஆண்டை விட 2023-24 ஆம் ஆண்டில் இதன் உற்பத்தி சுமார் 4.95% அதிகரித்துள்ளது.
- இறைச்சி உற்பத்தியில் முக்கிய பங்களிப்பாளராக மேற்கு வங்காளம் 12.62% பங்குடன் முதலிடத்திலும், அதைத் தொடர்ந்து உத்தரப் பிரதேசம் (12.29%), மகாராஷ்டிரா (11.28 %), தெலுங்கானா (10.85%) மற்றும் ஆந்திரப் பிரதேசம் (10.41%) ஆகியவை இடம் பெற்று உள்ளன.
- 2023-24 ஆம் ஆண்டில் நாட்டின் மொத்தக் கம்பளி உற்பத்தியானது, 33.69 மில்லியன் கிலோவாக மதிப்பிடப் பட்டுள்ளது என்பதோடு இதில் கடந்த ஆண்டை விட சுமார் 0.22% என்ற அளவிற்கு சிறிதளவு வளர்ச்சி மட்டுமே பதிவாகியுள்ளது.
- இது 2019-20 ஆம் ஆண்டில் 36.76 மில்லியன் கிலோவாகவும், முந்தைய ஆண்டில் 33.61 மில்லியன் கிலோவாகவும் இருந்தது.
- 47.53% பங்குகளுடன் இராஜஸ்தான் முதலிடத்தில் உள்ளது, அதனைத் தொடர்ந்து ஜம்மு & காஷ்மீர் (23.06%), குஜராத் (6.18%), மகாராஷ்டிரா (4.75%) மற்றும் இமாச்சலப் பிரதேசம் (4.22%) ஆகியவை இடம் பெற்றுள்ளன.
- உலக அளவில் பால் உற்பத்தியில் இந்தியா முன்னணியில் உள்ள அதே சமயம் முட்டை உற்பத்தியில் 2வது இடத்தில் உள்ளது.

| Items | 2022-23 | 2023-24 | Y-0-Y |
|---|---|---|---|
| Milk Production (million tonnes) | 230.58 | 239.30 | 3.78% |
| Meat Production (million tonnes) | 9.77 | 10.25 | 4.95% |
| Egg Production (billion nos) | 138.38 | 142.77 | 3.17% |
| Wool Production (million kg) | 33.61 | 33.69 | 0.22% |
| Per Capita Milk Gm/Per day | 459 | 471 | 2.61% |
| Per Capita Egg (numbers per annum) | 101 | 103 | 0.98% |

## Teacher செயலி

- கல்வியின் தரத்தை உயர்த்தும் ஒரு நடவடிக்கையாக, மத்திய அரசானது Teacher என்ற செயலியினைப் புது டெல்லியில் அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்த எண்ணிமத் தளமானது, தொடர்ச்சியான தொழில்முறை வளர்ச்சியை நன்கு ஊக்குவிப்பதற்காக 21 ஆம் நூற்றாண்டின் வகுப்பறைகள் பற்றிய சில தேவையானத் திறன்களை ஆசிரியர்களுக்கு வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது படிப்புத் திட்டங்கள், ஒளிப்படக் காட்சிகள், எண்ணிம ஒலி வடிவ ஒலிபரப்புகள், இணையம் சார்ந்த கருத்தரங்கங்கள், வினாடி வினாக்கள் மற்றும் பலவற்றை நன்கு உள்ளடக்கிய 260 மணிநேர உயர்தர உள்ளடக்கத்தை வழங்குகிறது.
- இது கற்பித்தல் நடைமுறைகளை மேம்படுத்துதல் மற்றும் மாணவர் ஈடுபாட்டை நன்கு அதிகரித்தல் ஆகியவற்றை ஒரு நோக்கமாகக் கொண்டது.

## தேசிய நிலச்சரிவு இடர் குறைப்புத் திட்டம்




- மத்திய அரசானது 15 மாநிலங்களில் மேற்கொள்ளப்பட உள்ள தேசிய நிலச்சரிவு இடர் குறைப்புத் திட்டத்திற்குத் தேவையான மொத்தம் 1000 கோடி ரூபாய் ஒதுக்கீட்டிற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்தக் குழுவானது, உத்தரகாண்ட் மாநிலத்திற்கு சுமார் 139 கோடி ரூபாய், இமாச்சலப் பிரதேசத்திற்கு 139 கோடி ரூபாய், எட்டு வடகிழக்கு மாநிலங்களுக்கு 378 கோடி ரூபாய், மகாராஷ்டிராவிற்கு 100 கோடி ரூபாய், கர்நாடகா மாநிலத்திற்கு 72 கோடி ரூபாய், கேரளா மாநிலத்திற்கு 72 கோடி ரூபாய், தமிழக மாநிலத்திற்கு 50 கோடி ரூபாய், மேற்கு வங்காள மாநிலத்திற்கு 50 கோடி ரூபாய் என்று நிதி ஒதுக்கீட்டிற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- மேலும், பல்வேறு மாநிலங்களுக்கான பேரிடர் தணிப்பு மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்களுக்கு 1115.67 கோடி ரூபாய்க்கு ஒப்புதல் அளித்தது.

## முகப்புரை குறித்து உச்ச நீதிமன்றம்

- அரசியலமைப்பு சட்ட ஆவணத்தின் முகப்புரையில் 'சமதர்மம்' மற்றும் 'மதச்சார்பு அற்ற தன்மை' போன்ற சொற்கள் சேர்க்கப்பட்டதன் செல்லுபடித் தன்மையை உச்ச நீதிமன்றம் உறுதி செய்துள்ளது.
- இந்தச் சொற்கள் ஆனது பாராளுமன்றத்தின் 1976 ஆம் ஆண்டு அரசியலமைப்பு (நாற்பத்தி-இரண்டாவது திருத்தம்) சட்டத்தின் (42வது திருத்தம்) மூலம் அவசரநிலை பிரகடன காலத்தில் முகப்புரையில் சேர்க்கப்பட்டன.

- இந்த 42வது திருத்தம் ஆனது, பெரும்பாலும் 'குறு அரசியலமைப்பு' என்று குறிப்பிடப் படுகிறது.
- ஏராளமான மாற்றங்கள் அறிமுகப்படுத்தப்பட்டதால், இந்தத் திருத்தம் ஆனது மத்திய அரசின் அதிகாரங்களை பெரிதும் விரிவுபடுத்தியது.
- 2020 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில், டாக்டர் பல்ராம் சிங் என்ற உச்ச நீதிமன்ற வழக்கறிஞர், அரசியலமைப்புச் சட்டத்தின் முகப்புரையில் 'சமதர்மம்' மற்றும் 'மதச் சார்பற்றது' போன்ற சொற்களைச் சேர்ப்பதை எதிர்த்து மனு தாக்கல் செய்தார்.




## தேசிய இயற்கை வேளாண்மைத் திட்டம்



- தேசிய இயற்கை வேளாண்மைத் திட்டத்தினை (NMNF) ஒரு முழுமையான மத்திய அரசின் நிதியுதவி பெறும் திட்டமாகத் தொடங்குவதற்கு மத்திய அமைச்சரவை தனது ஒப்புதலை அளித்துள்ளது.
- 15வது நிதி ஆணையத்தின் காலம் வரையில் (2025-26), இந்தத் திட்டத்தின் மொத்தச் செலவினம் ஆனது 2481 கோடி ரூபாய் (ஒன்றிய அரசின் பங்கு - 1584 கோடி ரூபாய்; மாநில அரசின் பங்கு - 897 கோடி ரூபாய்) ஆகும்.
- அனைவருக்கும் பாதுகாப்பான மற்றும் மிகவும் சத்தான உணவை வழங்குவதற்கான இயற்கை வேளாண்மை நடைமுறைகளை மேம்படுத்துவதை NMNF ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- சாகுபடிக்கான உள்ளீட்டுச் செலவைப் பெருமளவு குறைப்பதற்கும், இடுபொருட்களை வாங்குவதற்கு வெளிப்புற மூலங்களைச் சார்ந்திருப்பதனை நன்கு குறைப்பதற்கும் விவசாயிகளுக்கு ஆதரவளிக்கும் வகையில் இந்தத் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

## E-Daakhil இணைய தளம்

- E-Daakhil இணைய தளத்தினை நாடு முழுவதும் செயல்படுத்துவதன் மூலம் இந்தியா ஒரு பெரிய மைல்கல்லை எட்டியுள்ளது.
- இந்த இயங்கலை வழி நுகர்வோர் குறை தீர்ப்புத் தளம் ஆனது, தற்போது அனைத்து மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் செயல்பாட்டிற்கு வந்துள்ளது.
- இது 2019 ஆம் ஆண்டின் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அறிமுகப்படுத்தப் பட்டு 2020 ஆம் ஆண்டு செப்டம்பர் 07 ஆம் தேதியன்று தொடங்கப்பட்டது.
- E-Daakhil என்பது நுகர்வோருக்கு இயங்கலை வழியில் பல்வேறு புகார்களைப் பதிவு செய்வதற்காக என்று எவ்வித இடையூறும் இல்லாத, காகிதமில்லாத செயல்முறையை வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ள ஒரு புதுமையான தளம் ஆகும்.
- 2024 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திற்குள், 1,98,725 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 38,453 ஏற்கனவே தீர்க்கப் பட்டுள்ளதுடன், E-Daakhil இணைய தளத்தில் வெற்றிகரமாக 2,81,024 பயனர்கள் பதிவு செய்துள்ளனர்.



## வாக்காளர் பட்டியலில் ஜாரவா பழங்குடியினர்

- இந்தியாவின் தேர்தல் செயல்முறை வரலாற்றில் முதன்முறையாக, ஜாரவா பழங்குடி இனத்தைச் சேர்ந்த 19 உறுப்பினர்கள் வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
- ஜாரவாக்கள் மத்திய அந்தமான் மற்றும் தெற்கு அந்தமான் தீவுகளின் மேற்குக் கடற் கரையில் வசிப்பவர்கள் ஆவர்.
- இந்தப் பழங்குடியினருடனான முதல் நட்பார்ந்தத் தொடர்பு ஆனது 1974 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- ஜாரவாக்கள் வேட்டையாடுதல் மற்றும் உணவு சேகரிப்பதைத் தொழிலாக கொண்ட நாடோடிப் பழங்குடியினராக உள்ளனர்.
- அவர்கள் வில் மற்றும் அம்புகளை கருவிகளாகக் கொண்டு காட்டுப் பன்றிகள் மற்றும் உடும்புகளை வேட்டையாடுகிறார்கள்.
- இவர்கள், ஓங்கேஸ் மற்றும் அந்தமானியர்கள் போல் வேட்டையாட என்று நாய்களைப் பயன்படுத்துவதில்லை.
- 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, ஜாரவாக்களின் மக்கள் தொகை 380 ஆகும்.

## 'பால் விவாஹ் முக்த் பாரத்' பிரச்சாரம்

- மத்திய அரசானது, "பால் விவாஹ் முக்த் பாரத்" என்ற தேசிய அளவிலான ஒரு முக்கிய பிரச்சாரத்தினை துவக்கியுள்ளது.
- குழந்தைத் திருமணத்திற்கு எதிரான இந்தப் பிரச்சாரம் ஆனது மேற்கு வங்கம், பீகார், ஜார்க்கண்ட், இராஜஸ்தான், திரிபுரா, அசாம் மற்றும் ஆந்திரப் பிரதேசம் ஆகிய ஏழு மாநிலங்களில் கவனம் செலுத்தும்.
- இதற்காக குழந்தைத் திருமணம் அற்ற பாரதம் எனும் இணைய தளமானது தொடங்கப் பட்டுள்ளது.
- இந்த இயங்கலை வழி தளமானது குழந்தை திருமணச் சம்பவங்கள் குறித்து தகவல் அளிக்கவும், புகார்களைப் பதிவு செய்தல் மற்றும் நாடு முழுவதும் உள்ள குழந்தை திருமண தடுப்பு அதிகாரிகள் (CMPO) பற்றிய பல தகவல்களை அணுகுவதற்கும் குடி மக்களுக்கு உதவுகிறது.
- குடிமக்களுக்கு நன்கு அதிகாரம் அளிப்பதிலும், 2006 ஆம் ஆண்டு குழந்தை திருமணத் தடைச் சட்டத்தினை அமல்படுத்துவதிலும் இந்த இணைய தளம் ஒரு குறிப்பிடத்தக்க படி நிலையாகும்.
- 2029 ஆம் ஆண்டிற்குள் குழந்தைத் திருமணங்களின் எண்ணிக்கையை சுமார் 5 சதவீதத்திற்கும் குறைவாகக் குறைப்பதே இதன் நோக்கமாகும்.
- 2006 ஆம் ஆண்டில் 47.4% ஆக இருந்த குழந்தை திருமண விகிதம் ஆனது 2019-21 ஆம் ஆண்டில் 23.3% ஆக குறைந்தது.




## 2024 ஆம் ஆண்டில் இந்திய இரயில்வே நிர்வாகத்தின் நிலை




- இந்திய இரயில்வே நிர்வாகமானது, அதன் மொத்த அகலப்பாதை வலையமைப்பில் தோராயமாக 97 சதவீத மின்மயமாக்கலை நிறைவு செய்துள்ளது.
- 2014-15 ஆம் ஆண்டு முதல் அகலப்பாதை வலையமைப்பில் சுமார் 45,200 கிலோ மீட்டர்கள் அளவிலான வழித்தடங்கள் மின்மயமாக்கப்பட்டுள்ளன.
- இந்த மின்மயமாக்கல் நடவடிக்கையின் வேகம், 2004-14 ஆம் ஆண்டில் ஒரு நாளைக்கு தோராயமாக 1.42 கிலோ மீட்டராக இருந்த நிலையில் இது 2023-24 ஆம் ஆண்டில் ஒரு நாளைக்கு சுமார் 19.7 கிலோ மீட்டராக இருந்தது.
- மிகச் சமீபத்தில் ஹைட்ரஜன் எரிபொருளில் இயங்கும் இந்தியாவின் முதல் இரயிலை இந்திய இரயில்வே அறிமுகப்படுத்தியதோடு விரைவில் ஹரியானாவின் ஜிந்த் மற்றும் சோனிபட் ஆகிய இரு இரயில் நிலையங்களுக்கு இடையே இந்த இரயிலின் சோதனை ஓட்டம் நடத்தப் படும்.

## கடல்பரப்பு கனிமத் தொகுதிகளின் முதல் ஏலம்

- இந்தியாவின் கடல்பரப்புப் பகுதிகளில் உள்ள கனிமத் தொகுதிகளின் முதல் ஏலத்தை சுரங்க அமைச்சகம் தொடங்கியது.

- இந்த முன்னெடுப்பானது வளங்கள் மேம்பாட்டிற்காக இந்திய நாட்டின் பிராந்திய நீர் நிலைகள், கண்டத் திட்டு, பிரத்தியேகப் பொருளாதார மண்டலம் (EEZ) மற்றும் பிற கடல்சார் மண்டலங்களை ஏலத்திற்குத் திறந்து வைத்துள்ளது.
- இந்த ஏலத்தின் முதலாவது தவணையானது அரபிக் கடல் மற்றும் அந்தமான் கடலில் இருந்து உத்தி சார் ரீதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட 13 கனிமத் தொகுதிகள் இடம் பெறும்.
- சுமார் 2 மில்லியன் சதுர கிலோ மீட்டர் பரப்பளவைக் கொண்ட இந்தியாவின் EEZ ஆனது, கோபால்ட், நிக்கல், அருமண் தனிமங்கள் (REE) மற்றும் பல் கனிம முடிச்சுகள் போன்ற முக்கிய கனிமப் பொருட்கள் உட்பட, தோண்டி எடுக்கப்படாத பல கனிம இருப்புக்களைக் கொண்டிருப்பதாக நம்பப்படுகிறது.

| Mineral(s) | Number of Blocks | Location |
|---|---|---|
| Construction sand | 3 | Off the coast of Kerala, Arabian Sea |
| Lime-mud | 3 | Off the coast of Gujarat, Arabian Sea |
| Polymetallic nodules and crusts (containing Cobalt, Nickel, etc.) | 7 | Off Great Nicobar Islands, Andaman Sea |

## OTP எண்களுக்கான TRAI ஆணையத்தின் வழிகாட்டுதல்கள்




- இந்தியத் தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையத்தின் (TRAI) நன்கு கண்டறியும் வழிகாட்டுதல்கள் 2024 ஆம் ஆண்டு டிசம்பர் 01 ஆம் தேதி முதல் நடைமுறைக்கு வந்து உள்ளது.

- மோசடி, தேவையற்றத் தகவல்கள் மற்றும் இணையவெளி ஏமாற்று நடவடிக்கைகள் ஆகியவற்றைக் கட்டுப்படுத்தும் வகையில் வணிக ரீதியான குறுஞ்செய்திகள் மற்றும் ஒற்றை நேரப் பயன்பாட்டுக் கடவு எண்களின் உருவாக்க மூலத்தினை மிக நன்கு கண்காணிப்பதற்கு இந்தப் புதிய கண்காணிப்பு விதிகள் கட்டாயப்படுத்துகின்றன.
- இது இயங்கலை வழியான மோசடிகளைக் குறைக்கக் கூடிய வலுவான மற்றும் ஒரு பாதுகாப்பானச் சூழல் அமைப்பினை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## K-4 எறிகணை

- K-4 எறிகணையானது, ஆந்திரப் பிரதேச மாநிலத்தின் விசாகப் பட்டினத்தில் ஐஎன்எஸ் அரிகாத் என்ற நீர்மூழ்கிக் கப்பலில் இருந்து பரிசோதிக்கப் பட்டது.
- நீர்மூழ்கிக் கப்பலில் இருந்து ஏவப்படும் வகையிலான ஒரு உந்துவிசை எறிகணையின் (SLBM) சோதனையானது நீர்மூழ்கிக் கப்பலில் மேற்கொள்ளப்பட்டது இதுவே முதல் முறையாகும்.
- இந்த எறிகணைச் சோதனையின் மூலம், நிலம், வான் மற்றும் கடலுக்கு அடியில் இருந்து அணு சக்தி சார்ந்த எறிகணையை ஏவக்கூடிய குறிப்பிட்ட சில நாடுகளின் ஒரு பகுதியாக இந்தியாவும் மாறியுள்ளது.




## கனிம ஏலக் கட்டமைப்பு - தெலுங்கானா

- இரண்டு சுண்ணாம்புப் பாறை இருப்பு தொகுதிகளை வெற்றிகரமாக ஏலம் எடுத்ததன் மூலம் கனிம ஏலக் கட்டமைப்பில் இணைந்த 14வது மாநிலமாக தெலுங்கானா மாறி உள்ளது.
- சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை) (MMDR) திருத்தச் சட்டம், 2015 ஆனது இந்தக் கட்டமைப்பு குறித்து முதன் முதலில் வரையறுத்த எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு இந்த ஏலங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- சுரங்க ஏலக் கட்டமைப்பில் இணைந்த மற்ற மாநிலங்களான தமிழ்நாடு மற்றும் அருணாச்சலப் பிரதேசம் ஆகிய இதரப் பகுதிகளில் முக்கியமான கனிமங்களுக்கான ஏலங்களை மத்திய அரசு நடத்தியது.
- மிகவும் முக்கியமான மற்றும் பெருமளவிலான கனிமங்கள் உட்பட, 13 மாநிலங்களில் மொத்தம் 81 கனிமத் தொகுதிகள் ஏலம் விடப்பட்டுள்ளன.




## யுவ சங்கம் முன்னெடுப்பின் ஐந்தாம் கட்டம்



- பீகார் மற்றும் ஆந்திரப் பிரதேச மாநிலங்களில் இருந்து தொடங்கிய ஐந்தாம் கட்ட யுவ சங்கம் முன்னெடுப்பின் கீழான ஒரு குழுவின் பயணம், முறையே கர்நாடகா மற்றும் உத்தரப் பிரதேசத்தினை நோக்கித் தொடங்கியுள்ளது.
- யுவ சங்கம் என்பது பல்வேறு மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் உள்ள இளையோர்களிடையே மக்களுக்கு இடையிலான தொடர்புகளை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட இந்திய அரசின் முதன்மையான முயற்சியாகும்.
- இந்த திட்டம் ஆனது, பயன்மிகுத் தொடர்புகள், கலாச்சார ஒருங்கிணைப்பு மற்றும் அறிவுப் பகிர்வு ஆகியவற்றை எளிதாக்குவதன் மூலம் வேற்றுமையில் ஒற்றுமையை ஊக்குவிக்கிறது.
- யுவ சங்கச் சுற்றுப்பயணங்களின் போது, பின்வரும் ஐந்து மாபெரும் பகுதிகளின் கீழ் 5Ps என்ற பர்யாதன் (சுற்றுலா), பாரம்பரா (மரபுகள்), பிரகதி (மேம்பாடு), பரஸ்பர் சம்பர்க் (மக்களுக்கிடையிலான தொடர்பு), மற்றும் ப்ரோடியோகிகி (தொழில்நுட்பம்) ஆகிய பல பரிமாணங்கள் குறித்து ஆய்வு செய்யப்படும்.

## இந்தியாவில் பொது அடிப்படை எழுத்தறிவு மதிப்பீடு

Statement 1: Percentage of persons able to read and write short simple statements in their everyday life with understanding

all-India

| Age group (years) | Male | Female | Person |
|---|---|---|---|
| 15 – 24 | 97.9 | 96.0 | 97.0 |
| 15 – 29 | 97.5 | 94.6 | 96.1 |
| 15 years and above | 88.3 | 74.8 | 81.6 |

- தேசிய மாதிரிக் கணக்கெடுப்பின் (NSS) 79வது சுற்றான "மிகவும் விரிவான வருடாந்திர மாதிரிக் கணக்கெடுப்பு, 2022–23" என்பது 2022 ஆம் ஆண்டு ஜூலை மற்றும் 2023 ஆம் ஆண்டு ஜூன் மாதங்களுக்கு இடையில் நடத்தப்பட்டது.
- இந்தியாவில் சுமார் 95.9% தனிநபர்கள் அடிப்படைக் கல்வியறிவு மற்றும் எண்ணறிவுத் திறன்களைக் கொண்டுள்ளனர்.
- 95.3% கிராமப்புற நபர்களுக்கு அடிப்படைக் கல்வியறிவு மற்றும் எண்ணறிவுத் திறன் உள்ளது என்ற நிலையில் நகர்ப்புறங்களில் இது 97.4% ஆக உள்ளது.
- கிராமப்புற ஆண்களில் 97.4% மற்றும் கிராமப்புறப் பெண்களில் 93.4% பேர் இந்த திறன்களைக் கொண்டுள்ளனர்.
- நகர்ப்புறங்களில், 98% ஆண்களும், 96.7% பெண்களும் இந்த திறன்களை கொண்டு உள்ளனர்.
- இதில் மிசோரம் (100%), கோவா (99.9%), மற்றும் சிக்கிம் (99.9%) ஆகியவை கல்வியறிவு விகிதத்தில் முன்னணியில் உள்ளன.
- பீகார் (91.9%) மற்றும் உத்தரப் பிரதேசம் (92.3%) ஆகியவை இந்தத் தர வரிசையில் பின் தங்கி உள்ளன.

- இதில் "பொது" என்ற ஒரு சொல் ஆனது, பொதுவாக முழு அல்லது கிட்டத்தட்ட ஒரு முழுமையான அளவிலான என்பதை (100 சதவீதத்திற்கு அருகில்) குறிக்கிறது.

## Sabal-20 தளவாடப் பயன்பாட்டிற்கான ஆளில்லா விமானம்

- இந்திய இராணுவம் ஆனது, கிழக்குப் படைப் பிரிவில் பயன்படுத்துவதற்காக EndureAir நிறுவனத்திடமிருந்து வாங்கப்பட்ட Sabal-20 எனப்படும் தளவாடப் பயன்பாட்டிற்கான ஆளில்லா விமானங்களைப் பெற்றுள்ளது.
- Sabal-20 என்பது பாய்வு வீச்சினைத் தகவமைக்கும் தொழில்நுட்பத்தின் அடிப்படையில் ஆன ஒரு மின்சார ஆளில்லா ஹெலிகாப்டர் ஆகும் என்பதோடு இது 20 கிலோ எடை உள்ளப் பொருட்களைச் சுமந்து செல்லும் திறன் கொண்டது.
- இது மிகவும் நீண்ட தூரத்திற்கான விநியோக நடவடிக்கைகள், அதிக உயரத்திலான நடவடிக்கைகள் மற்றும் துல்லியமான தளவாட வழங்கீடு போன்ற பல பணிகளுக்கு உதவும்.

## RESET திட்டம் 2024




- மத்திய அரசானது 2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில், ஓய்வு பெற்ற விளையாட்டு வீரர்களுக்கு அதிகாரமளித்தல் பயிற்சி (RESET) திட்டத்தினைத் தொடங்கியது.
- ஓய்வு பெற்ற விளையாட்டு வீரர்களுக்கு அவர்களின் கல்வி மேம்பாட்டிற்கு ஏற்றவாறு வடிவமைக்கப்பட்ட கல்வியை வழங்கச் செய்வதன் மூலம் அவர்களின் தொழில்முறை மீதான வளர்ச்சியை எளிதாக்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது பணி அனுபவ/ உள்ளிருப்புப் பயிற்சியினையும் வழங்குவதோடு, பொருத்தமான தொழில்முறை விருப்பத் தேர்விற்கு நன்கு ஏற்றவாறு மாறுவதற்கு தேவையான அறிவு மற்றும் திறன்களை அவர்களுக்கு வழங்குகிறது.
- RESET திட்டம் ஆனது, விளையாட்டுத் துறையில் தற்போது அதிகம் நிலவி வரும் மனித வள இடைவெளியை நிவர்த்தி செய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## உலகளாவிய ஈடுபாடு திட்டம்

- கலாச்சார அமைச்சகம் ஆனது, "உலகளாவிய ஈடுபாடு திட்டத்தினை" செயல்படுத்தி வருகிறது.

- இந்தியாவின் மிக வளமான கலாச்சாரப் பாரம்பரியத்தினை மேம்படுத்துவதையும், உலகளாவிய அரங்கில் இந்தியாவின் மதிப்பினை ஒருங்கிணைக்கப்பட்ட முறையில் மேம்படுத்துவதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இத்திட்டத்தின் கீழ், மக்கள் தொடர்பு மற்றும் இருதரப்பு கலாச்சாரத் தொடர்புகளை மேம்படுத்துவதற்காக வேண்டி வெளிநாடுகளில் "இந்தியத் திருவிழா - Festival of India (FoI)" ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- 2013-14 முதல் 2023-24 ஆம் ஆண்டு வரையில் பல்வேறு நாடுகளில் மொத்தம் 62 FoI நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன.

## கியூப்சாட் தரநிலை




- இந்தியத் தரநிலைகள் வாரியம் (BIS) ஆனது, கியூப்சாட் எனப்படுகின்ற ஒரு சிறிய ரக செயற்கைக்கோள்களுக்கான உலகளாவியத் தரநிலையை ஏற்றுக் கொண்டுள்ளது.
- ஸ்டான்போர்டு பல்கலைக்கழகத்தின் OPAL ஆய்வுத் திட்டத்திற்காக முதன்முதலில் உருவாக்கப்பட்ட கியூப்சாட் தரநிலையானது சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது.
- அவை சீரான அளவீடுகள், குறைந்த வாயு வெளியேற்ற கட்டமைப்புகள், செயல்பாட்டு நிறுத்த விசைக் கருவிகள் மற்றும் தீவிரச் சூழ்நிலைகளுக்கானச் சோதனை (அதிர்வு, வெப்பம், அதிர்ச்சி) ஆகியவற்றைக் கட்டாயமாக்குகின்றன.
- இந்தியச் செயற்கைக்கோள் தொடர்பு சந்தையானது, 2022 ஆம் ஆண்டில் 1.6 பில்லியன் டாலர் மதிப்புடையதாக இருந்தது.
- இது 2023 முதல் 2030 ஆம் ஆண்டு வரையில் 11.75% என்ற கூட்டு வருடாந்திர வளர்ச்சி விகிதத்தில் (CAGR) வளர்ச்சியடையும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- இந்தியாவின் விண்வெளிப் பொருளாதாரம் 8 பில்லியன் டாலராக உள்ளது என்ற ஒரு நிலையில் இது உலக விண்வெளிப் பொருளாதாரத்தில் சுமார் 2 முதல் 3% பங்கினை அளிக்கிறது.
- 2040 ஆம் ஆண்டில் இது 100 பில்லியன் டாலர்களை எட்டும் என அரசு எதிர்பார்க்கிறது.

## வங்கிச் சட்டங்கள் (திருத்தம்) மசோதா, 2024




- மக்களவையானது 2024 ஆம் ஆண்டு வங்கிச் சட்டங்கள் (திருத்தம்) மசோதாவினை நிறைவேற்றியுள்ளது.
- வங்கிக் கணக்கு வைத்திருப்பவர்கள் தங்கள் கணக்குகளில் நான்கு வாரிசுதாரர்கள் வரை வைத்திருக்க இந்த மசோதா அனுமதிக்கிறது.
- நிறுவனங்களின் இயக்குனர் பதவிகளுக்கான "பலன் சார் வட்டியை" மறுவரையறை செய்வது தொடர்பான மாற்றங்களையும் இது முன்மொழிவதோடு, இது தற்போதுள்ள 5 லட்சம் ரூபாய் என்ற வரம்பினை 2 கோடி ரூபாயாக அதிகரிக்க உள்ளது.
- கூட்டுறவு வங்கிகளில் உள்ள இயக்குநர்களின் (தலைவர் மற்றும் முழு நேர இயக்குநர் நீங்கலாக) பதவிக் காலத்தை எட்டு ஆண்டுகளில் இருந்து 10 ஆண்டுகளாக அதிகரிக்க இந்த மசோதா முன்மொழிகிறது.
- மத்தியக் கூட்டுறவு வங்கியின் இயக்குனர், மாநிலக் கூட்டுறவு வங்கியின் வாரியத்தில் பணியாற்ற இந்த மசோதா அனுமதிக்கும்.
- சட்டப்பூர்வத் தணிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தைத் தீர்மானிப்பதில் வங்கிகளுக்கு அதிகச் சுதந்திரத்தை வழங்கவும் இந்த மசோதா முயல்கிறது.
- இது ஒழுங்குமுறை இணக்கத்திற்காக வங்கிகளுக்கான அறிக்கையிடல் தேதிகளை இரண்டாவது மற்றும் நான்காவது வெள்ளிக் கிழமைகளுக்குப் பதிலாக ஒவ்வொரு மாதமும் 15 மற்றும் அம்மாதத்தின் கடைசி நாளன்று நிர்ணயிக்க உள்ளது.
- இந்த மசோதாவானது பின்வரும் ஐந்து சட்டங்களை திருத்துவதற்காக முன்மொழியப் பட்டு உள்ளது. அவை
  - இந்திய ரிசர்வ் வங்கிச் சட்டம், 1934,
  - வங்கி ஒழுங்குமுறைச் சட்டம், 1949 (அல்லது BR சட்டம்),

- பாரத ஸ்டேட் வங்கி சட்டம், 1955,
- வங்கி நிறுவனங்கள் (பங்கீடுகளைக் கையகப்படுத்துதல் மற்றும் பரிமாற்றுதல்) சட்டம், 1970, மற்றும்
- வங்கி நிறுவனங்கள் (பங்கீடுகளைக் கையகப்படுத்துதல் மற்றும் பரிமாற்றுதல்) சட்டம், 1980.

## தேசிய அடைவுத்திறன் கணக்கெடுப்பு 2024

- 2024 ஆம் ஆண்டிற்கான தேசிய அடைவுத்திறன் கணக்கெடுப்பு (NAS) என்பது பள்ளி மாணவர்களின் கற்றல் தொடர்பான அடைவுகள் பற்றியப் பல்வேறு தகவல்களைப் பெறச் செய்வதற்கான ஒரு பெரிய அளவிலான மதிப்பீடாகும்.
- பாரபட்ச அணுகுமுறைகளைத் தடுப்பதற்காகப் பள்ளிகள் மற்றும் மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக என்று இந்தக் கணக்கெடுப்பு ஆனது சில சார்பற்ற மாதிரிகளை மேற்கொண்டது.
- 3 ஆம் வகுப்பு மாணவர்கள், மொழி, கணிதம் மற்றும் சுற்றுச்சூழல் அறிவியல் என தலா 15 மதிப்பெண்கள் என்ற மதிப்புகளுடன், இரண்டாம் வகுப்புத் தரநிலை வரையில் வடிவமைக்கப்பட்ட சுமார் 45 பல் தெரிவு கேள்விகளுக்கு (MCQs) 90 நிமிடங்களில் பதில் அளிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- 2024 ஆம் ஆண்டு NAS கணக்கெடுப்பு ஆனது 26 மொழிகளில் நடத்தப்பட உள்ளது.
- தமிழகத்தில் 3, 6, 9 ஆகிய வகுப்புகளின் 5,055 பிரிவினர் தேர்வு எழுத உள்ளனர்.

## SheSTEM 2024



- இந்த வருடாந்திர நிகழ்வானது, அடல் புத்தாக்கத் திட்டம் (AIM) மற்றும் சுவீடன் நாட்டுத் தூதரகத்தில் உள்ள அறிவியல் மற்றும் புத்தாக்க அலுவலகம் ஆகியவற்றால் ஏற்பாடு செய்யப்பட்டது.
- இது அடுத்த தலைமுறையைப் பெருமளவில் ஊக்குவிப்பதோடு, அறிவியல், தொழில் நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம் (STEM) ஆகியவற்றில் ஒரு நல்ல தொழில்முறை வாழ்க்கையைத் தொடர இளையோர்களை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- இந்த ஆண்டிற்கான சவால், ஆற்றல் சேமிப்பு மற்றும் நிலைத் தன்மை மீது முக்கியக் கவனம் செலுத்துவதுடன், மிக முக்கியமான உலகளாவியச் சவால்களில் சிலவற்றை நேரடியாக எதிர்கொள்கிறது.
- மின்கலத் தொழில்நுட்பம் மற்றும் ஆற்றல் சேமிப்பு (BEST) அமைப்புகளில் கவனம் செலுத்தும் புதுமையான கருத்தாக்கங்களைச் சமர்ப்பிக்க நாடு முழுவதும் 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு இது அழைப்பு விடுக்கிறது.

## கொதிகலன்கள் மசோதா 2024

- 1923 ஆம் ஆண்டின் பழமையான கொதிகலன்கள் சட்டத்தை மாற்றியமைப்பதை ஒரு நோக்கமாகக் கொண்டு இயற்றப் பட்ட 2024 ஆம் ஆண்டு கொதிகலன்கள் மசோதா என்பதை மாநிலங்களவை நிறைவேற்றியுள்ளது.
- இது ஏழு குற்றங்களை குற்றவியல் தன்மையற்றதாக்குவதையும் வணிகம் செய்வதை எளிதாக்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இதில் உயிர் மற்றும் உடைமை இழப்புகளை ஏற்படுத்தக் கூடிய நான்கு மிக முக்கியக் குற்றங்களுக்கான குற்றவியல் தண்டனைகள் தக்க வைக்கப்பட்டுள்ளன.
- கொதிகலன்கள் உள்ள பல பகுதிகளில் பணிபுரியும் நபர்களின் பாதுகாப்பை மிகவும் உறுதிப் படுத்தவும் இந்த மசோதா வழிவகை செய்கிறது.
- இந்தப் புதியச் சட்டம் ஆனது ஒழுங்குமுறைகளை நவீனமயமாக்குவதையும் சமகாலப் பாதுகாப்புத் தரங்களுடன் அவற்றை ஒருங்கிணைப்பதையும் நோக்கமாகக் கொண்டு உள்ளது.



## பெண் தொழிலாளர் வளப் பங்கேற்பு 2017-2023

- ❖ தேசிய அளவில் 2017-2018 மற்றும் 2022-2023 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் கிராமப் புறப் பெண் தொழிலாளர் வளப் பங்கேற்பு விகிதம் ஆனது 24.6 சதவீதத்திலிருந்து 41.5% ஆக அதிகரித்துள்ளது.
- ❖ இது 5 ஆண்டுகளில் பதிவான 69% என்ற ஒட்டு மொத்த வளர்ச்சியைக் குறிக்கிறது.
- ❖ ஜார்க்கண்ட், பீகார் மற்றும் நாகாலாந்து போன்ற மாநிலங்கள் மிகவும் அபரிமிதமான வளர்ச்சியைக் கண்டுள்ளன.
- ❖ தேசிய அளவில் 2017-2018 மற்றும் 2022-2023 ஆகிய ஆண்டுகளுக்கு இடையே நகர்ப்புற பெண் தொழிலாளர் வளப் பங்கேற்பு விகிதம் ஆனது 20.4 சதவீதத்திலிருந்து 25.4% ஆக அதிகரித்துள்ளது.
- ❖ குஜராத் மாநிலமானது 63% என்ற குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் கண்டுள்ள அதே நேரத்தில் தமிழ்நாடு நகர்ப்புறப் பெண்களின் LFPR மீதான விகிதத்தில் ஓரளவு உயர்வே பதிவாகியுள்ளது.
- ❖ குறிப்பாக ஜார்க்கண்ட், அருணாச்சலப் பிரதேசம், நாகாலாந்து மற்றும் இராஜஸ்தான் போன்ற மாநிலங்களில் திருமணமான பெண்களிடையே, பெண்களின் LFPR மீதான விகிதத்தில் குறிப்பிடத்தக்க உயர்வு பதிவாகியுள்ளதாக இந்த அறிக்கை கூறுகிறது.




## எண்ணெய் வயல் (ஒழுங்குமுறை மற்றும் மேம்பாடு) திருத்த மசோதா, 2024

- ❖ மாநிலங்களவையானது, எண்ணெய் வயல் (ஒழுங்குமுறை மற்றும் மேம்பாடு) திருத்த மசோதாவை நிறைவேற்றியுள்ளது.
- ❖ இது பெட்ரோலியச் செயல்பாடுகளை சுரங்க நடவடிக்கைகளில் இருந்து பிரிப்பதை நோக்கமாகக் கொண்டது.
- ❖ இது "கனிம எண்ணெய்கள்" என்ற சொல்லின் நோக்க எல்லையினை விரிவுபடுத்தச் செய்வதோடு பிற விதிகளுள் "பெட்ரோலியக் குத்தகை" என்ற ஒரு கருத்தை அறிமுகப் படுத்துகிறது.
- ❖ இந்தியா சுமார் 13 பில்லியன் டன் எண்ணெய்க்கு சமமான இன்னும் கண்டறியப்படாத ஆற்றலைக் கொண்டிருப்பதாக நம்பப்படுகிறது.

- 1948 ஆம் ஆண்டு எண்ணெய் வயல்களின் (ஒழுங்குமுறை மற்றும் அதன் மேம்பாடு) சட்டத்தில், பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு ஆகிய இரண்டு மட்டுமே கனிம எண்ணெய்கள் என வரையறுக்கப்பட்டுள்ளன.
- இந்த மசோதாவானது, நிலக்கரிப் படிம மீத்தேன், கச்சா எண்ணெய், களிப்பாறை வளிமம் (ஷேல் கேஸ்), நிலக்கீல் எண்ணெய், குறைவான ஊடுருவல் தன்மை கொண்ட வாயு, குறைவான ஊடுருவல் தன்மை கொண்ட எண்ணெய் மற்றும் வாயு ஹைட்ரேட் ஆகியவற்றை உள்ளடக்கிய வகையில் இந்த ஒரு வரையறையை விரிவுபடுத்துகிறது, ஆனால் பெட்ரோலியத்தின் செயல்பாட்டில் உருவாகும் நிலக்கரி, லிக்னைட் மற்றும் ஹீலியம் இதில் உள்ளடக்கப்படவில்லை.
- பின்னர், இந்த மசோதாவானது முன்னர் பயன்படுத்தப்பட்ட சுரங்கக் குத்தகை என்ற சொல்லுக்குப் பதிலாக பெட்ரோலியக் குத்தகை என்ற ஒரு சொல்லினை இதில் மாற்றி அமைப்பதோடு இது நிறுவனங்கள் வளங்கள் குறித்து ஆய்வு செய்வதற்கும், அதன் வாய்ப்புகளைத் தேடச் செய்தல் (எண்ணெய் மற்றும் எரிவாயு வயல்களைத் தேடுதல்), உற்பத்திச் செய்தல், வணிகமாக்குதல் மற்றும் கனிம எண்ணெய்களை அகற்றுதல் ஆகியவற்றினை அனுமதிக்கிறது.




## செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான படுக்கை வசதி ஆய்வு

- இந்திய இரயில்வே நிர்வாகமானது, படுக்கைத் துணிகளை ஆய்வு செய்து தரநிலைப் படுத்துவதற்கு செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான அமைப்பை செயல்படுத்தி உள்ளது.
- இந்தச் செயற்கை நுண்ணறிவில் இயங்கும் ஒரு நூலிழை ஆய்வு மற்றும் தரவரிசைப் படுத்தும் உதவி அமைப்பானது (LISA) புனே இரயில்வே பிரிவால் உருவாக்கப்பட்டது.
- இது இரயில்களில் பயன்படுத்தப்படும் படுக்கை விரிப்புகளை 100% அளவு தர ஆய்வு செய்வதை உறுதி செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.




## இரயில்வே திருத்த மசோதா 2024




- தற்போதைய இந்த மசோதா, 1905 ஆம் ஆண்டு இந்திய இரயில்வே வாரியச் சட்டத்தின் முன்மொழிவுகளை 1989 ஆம் ஆண்டு இரயில்வே சட்டத்தில் இணைப்பதன் மூலம் சட்ட ரீதியிலான கட்டமைப்பை எளிதாக்க முன்மொழிகிறது.
- தொடக்கத்தில் இருந்து அத்தகைய அனுமதியின்றிச் செயல்பட்டு வரும் இரயில்வே வாரியத்திற்கு சட்டப்பூர்வ ஆதரவை வழங்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மண்டலங்களின் நிதி மற்றும் செயல்பாட்டு ரீதியிலான முடிவுகளை மேற்கொள்ளும் அதிகாரங்களை பரவலாக்குவது, வரவு செலவுத் திட்டங்கள், உள்கட்டமைப்பு பணிகள் மற்றும் ஆட்சேர்ப்பு ஆகியவற்றை மேலாண்மை செய்வதற்கு அவற்றிற்கு அதிகாரம் அளிப்பதை இந்த மசோதா முன்மொழிகிறது.

- இது 2014 ஆம் ஆண்டு ஸ்ரீதரன் குழு உட்பட பல்வேறு குழுக்களால் ஆதரிக்கப்படுகிறது.
- அதிவிரைவு இரயில் செயல்பாடுகள் மற்றும் உள்கட்டமைப்பு மேம்படுத்தல்களை துரிதப்படுத்துவதற்கு என்று அரசாங்கத்தை அனுமதிக்கும் 24Aவது பிரிவினை இந்த மசோதா அறிமுகப்படுத்துகிறது.
- இந்திய இரயில்வேயினுடைய கட்டணங்கள், பாதுகாப்பு மற்றும் தனியார் துறைப் பங்கேற்பு உள்ளிட்ட பல்வேறு அம்சங்களை மேற்பார்வையிடுவதற்கு இது ஒரு மிகவும் சுதந்திரமானக் கட்டுப்பாட்டு அமைப்பினை நிறுவ உள்ளது.

## பாரதிய வாயுயான் விதேயக் 2024

- விமானப் போக்குவரத்துத் துறையில் வணிகம் செய்வதை எளிதாக்கும் பல்வேறு நடவடிக்கைகளை மேலும் மேம்படுத்துவதற்காக என்று 90 ஆண்டுகள் பழமையான விமானச் சட்டத்திற்குப் பதிலாக பாராளுமன்றம் ஒரு புது மசோதாவை நிறைவேற்றி உள்ளது.
- மிகை பணிநீக்கங்களை அகற்றுவதற்காக 21 முறை திருத்தப்பட்ட 1934 ஆம் ஆண்டு விமானச் சட்டத்தினை மாற்றியமைக்கவும் இந்த மசோதா முயல்கிறது.
- சர்வதேசத் தரநிலைகளுடன் ஒன்றிய வகையிலான பாதுகாப்பு, ஒழுங்குமுறை மேற் பார்வை மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு ஆகியவற்றை மேம்படுத்துவதில் இந்தப் புது மசோதா கவனம் செலுத்துகிறது.
- இந்த மசோதா விமானத் தயாரிப்பில் தன்னிறைவை ஊக்குவிப்பதோடு, முதலீட்டை ஊக்குவிக்கிறது மற்றும் பொது விமானப் போக்குவரத்து அதிகாரிகளுக்கு வலுவான நிர்வாகக் கட்டமைப்புகளை நிறுவுகிறது.
- இதுவரையில் தொலைத்தொடர்புத் துறையால் நடத்தப்பட்ட உரிமம் வழங்கும் செயல் முறையானது தற்போது மத்திய பொது விமானப் போக்குவரத்து இயக்குநரகத்தினால் நிர்வகிக்கப் படும்.
- விமானப் பணியாளர்கள் அனைவரும் தங்களின் அனைத்து தரச் சான்றிதழ்களையும் ஒரு அலுவலகத்திடம் இருந்து பெற முடியும் என்பதால் இது ஒற்றைச் சாளர அனுமதி வழங்கீட்டுச் செயல்முறையை உறுதி செய்யும்.



## BBBP திட்டத்தின் கீழான முன்னேற்றங்கள்

- பேடி பச்சாவோ பேடி பதாவோ (BBBP) திட்டம் ஆனது முழுமையாக மத்திய அரசிடம் இருந்து நிதியுதவி பெறும் மத்திய அரசின் நிதியுதவியினைப் பெறும் திட்டமாகும்.
- இது ஒரு பாலின-சார்புடைய குறிப்பிட்டப் பாலினத்திற்கு மட்டும் நன்மைப் பயக்கும் நடைமுறைகளைத் தடுத்தல், பெண் குழந்தைகள் உயிர் வாழ்வதை உறுதி செய்தல் மற்றும் அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்தல் மற்றும் பெண் குழந்தைகளின் கல்வியை மேம்படுத்துதல் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.
- தேசிய அளவில் பிறப்பின் போது பதிவான பாலின விகிதம் (SRB) ஆனது 2014-15 ஆம் ஆண்டில் 918 ஆக இருந்த நிலையில், 2023-24 ஆம் ஆண்டில் இது 930 ஆக மேம்படுத்தப் பட்டுள்ளது (தற்காலிக தரவு).
- ஒடிசா மாநிலத்தில் SRB ஆனது 2014-15 ஆம் ஆண்டில் 948 ஆக இருந்த நிலையில் இது 2023-24 ஆம் ஆண்டில் சிறிது சரிந்து 926 ஆக உள்ளது.
- ஒடிசா மாநிலத்தில் 2014-15 ஆம் ஆண்டில் சுமார் 75.03 சதவீதமாக இருந்த பெண்களின் மொத்த இடைநிலைப் பள்ளிச் சேர்க்கை விகிதம் ஆனது 2021-22 ஆம் ஆண்டில் 80.60 சதவீதமாக அதிகரித்துள்ளது.




## ஆத்ம நிர்பர் தூய்மை/நோயில்லாத் தாவரத் திட்டம்

- இந்தியா மற்றும் ஆசிய மேம்பாட்டு வங்கி (ADB) ஆகியவை இணைந்து 98 மில்லியன் டாலர் மதிப்பிலான கடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.
- இது தோட்டக்கலைப் பயிர் விவசாயிகளுக்குச் சான்றளிக்கப்பட்ட நோய் இல்லாத நடவு (தாவரங்களை) பொருட்களை அணுகுவதற்கான வாய்ப்பினை மேம்படுத்தச் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இந்தத் திட்டம் ஆனது தாவரங்களின் ஆரோக்கிய மேலாண்மையை மேம்படுத்தும் இந்திய அரசாங்கத்தின் ஆத்மநிர்பர் நோயிலா தாவரத் திட்டத்திற்கு (CPP) நிதி ஆதரவு என்பதனை ளிக்கிறது.
- CPP என்பது ஒருங்கிணைந்த தோட்டக்கலை மேம்பாட்டுத் (MIDH) திட்டத்தின் ஒரு பகுதி ஆகும்.
- ADB வங்கியின் 50% நிதியுதவியுடன் 2024 முதல் 2030 ஆம் ஆண்டு வரை இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும்.
- வேளாண் நிலத்தில் மொத்தம் 18% பகுதிகளில் தோட்டக்கலைப் பயிர்கள் பயிரிடப் படுகிறது என்பதோடு அது வேளாண் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் மீது மொத்த மதிப்பில் 33% பங்கினைக் கொண்டுள்ளது.




## காப்பீட்டுத் திருத்த மசோதா 2024

- இது காப்பீட்டுச் சட்டம் 1938, ஆயுள் காப்பீட்டுக் கழகச் சட்டம், 1956 மற்றும் காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையச் சட்டம், 1999 ஆகியவற்றைத் திருத்தி அமைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தப் புதிய காப்பீட்டுத் திருத்த மசோதாவானது, காப்பீட்டுத் துறையில் 100 சதவீத அந்நிய நேரடி முதலீட்டை முன்மொழிகிறது.
- இந்தியக் காப்பீடு வழங்கீட்டு நிறுவனங்களில் அந்நிய நேரடி முதலீட்டிற்கான வரம்பு ஆனது 74 சதவீதத்தில் இருந்து 100 சதவீதமாக உயர்த்தப்படும்.
- வெளிநாட்டு மறு காப்பீட்டாளர்களுக்குச் சொந்தமான நிகர நிதியின் (சொத்து மற்றும் கடன்களுக்கு இடையே உள்ள வேறுபாடு) தேவையினையும் சுமார் 5,000 கோடி ரூபாயில் இருந்து 1,000 கோடி ரூபாயாகக் குறைப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.
- தற்போது, இந்தியாவில் 25 ஆயுள் காப்பீட்டு நிறுவனங்கள் மற்றும் 34 ஆயுள் காப்பீடு சாராத அல்லது பொதுக் காப்பீட்டு நிறுவனங்கள் உள்ளன.




## 'அன்ன சக்ரா' மற்றும் SCAN இணைய தளம்

- மத்திய அரசானது, "அன்ன சக்ரா" மற்றும் SCAN (தேசிய உணவுப் பாதுகாப்பு சட்டத்தின் - NFSA கீழான மானியக் கோரிக்கை விண்ணப்பம்) இணைய தளத்தினை அறிமுகப் படுத்தி யுள்ளது.
- இவை இந்தியாவின் பொது விநியோக முறையை (PDS) மிகவும் நவீனமயமாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளன.
- அன்ன சக்ரா இணையதளம் என்பது இந்தியாவில் PDS முறையின் விநியோகச் சங்கிலியை மேம்படுத்துவதற்கான ஒரு முன்னோடி மிக்க செயற்கருவியாகும்.
- உணவு தானியங்களின் போக்குவரத்திற்கான உகந்த வழிகளை இது அடையாளம் காட்டும்.
- SCAN இணைய தளம் ஆனது, 2013 ஆம் ஆண்டு தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் (NFSA) கீழ் மாநிலங்களுக்கான மானியக் கோரிக்கை செயல்முறையை மிக நன்கு நெறிப்படுத்தும்.

## எண்ணிம வேளாண்மை திட்டம் 2024 – புதிய மைல்கல்

- எண்ணிம வேளாண்மை திட்டத்தின் கீழ் மிகவும் குறிப்பிடத்தக்க மைல்கல்லை எட்டிய இந்தியாவின் முதல் மாநிலமாக குஜராத் மாறியுள்ளது.
- இம்மாநில அரசானது, இலக்கு நிர்ணயிக்கப்பட்ட 25 சதவீத விவசாயிகளுக்கு 'உழவர் அடையாள அட்டைகளை' உருவாக்கியுள்ளது.
- அந்த மாநிலத்தின் நிலப் பதிவு அமைப்புடன் செயல்பாட்டு ரீதியாக இணைக்கப்பட்ட மற்றும் ஆதார் அடிப்படையிலான உழவர் அடையாள அட்டையானது, நில உரிமை விவரங்களில் குறிப்பிட்ட மாற்றங்களுடன் சில புதுப்பிப்புகளை உறுதி செய்கிறது.

- பிரதான மந்திரி கிசான் திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட 9 சதவீத விவசாயிகளுக்கு மத்தியப் பிரதேசம் உழவர் அடையாள அட்டைகளை உருவாக்கியுள்ள ஒரு நிலையில் அதைத் தொடர்ந்து மகாராஷ்டிரா மாநிலம் அங்கு 2 சதவீத விவசாயிகளுக்கு உழவர் அடையாள அட்டைகளை வழங்கியுள்ளது.
- உத்தரப் பிரதேசம், அசாம், சத்தீஸ்கர், ஒடிசா மற்றும் இராஜஸ்தான் உள்ளிட்ட பிற மாநிலங்களும் இந்த முறையை செயல்படுத்தத் தொடங்கியுள்ளன.




### மூலதன முதலீட்டிற்காக மாநிலங்களுக்குச் சிறப்பு நிதி உதவி



- மத்திய அரசானது தனது மூலதன முதலீட்டிற்கானச் சிறப்பு நிதி உதவி திட்டத்தின் கீழ் மாநிலங்களுக்கு 50,571.42 கோடி ரூபாய் நிதியை வழங்கியுள்ளது.
- இது நடப்பு நிதியாண்டின் முதலாவது எட்டு மாதங்களில் பல்வேறு நல மேம்பாட்டுத் திட்டங்களுக்கு வழங்கப்படும் நிதியுதவியை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- 28 மாநிலங்களில் அருணாச்சலப் பிரதேசம், ஹரியானா, கேரளா, பஞ்சாப் மற்றும் தெலுங்கானா ஆகியவை தவிர்த்து மற்ற 23 மாநிலங்கள், மத்திய அரசின் வட்டியில்லா நிதி உதவியைப் பெற்றுள்ளன.
- இந்தத் திட்டம் ஆனது மூலதனச் செலவினங்களை அதிகரிப்பதற்காக வேண்டி மாநில அரசுகளுக்கு 50 ஆண்டு கால வட்டியில்லாக் கடன்களை வழங்குகிறது.

## உலகின் மிகப்பெரிய தானிய சேமிப்பு திட்டம்

- கூட்டுறவுத் துறையில் உலகின் மிகவும் பெரியதான தானியச் சேமிப்புத் திட்டத்தின் சோதனைக் கட்டத்தின் கீழ், இந்தியா முழுவதும் 11 மாநிலங்களில் உள்ள முதன்மை வேளாண்மைக் கடன் சங்கங்களில் (PACS) வெற்றிகரமாகச் சேமிப்புக் கிடங்குகள் கட்டமைக்கப் பட்டுள்ளன.
- இதில் மகாராஷ்டிரா, உத்தரப் பிரதேசம், தமிழ்நாடு, கர்நாடகா, குஜராத், மத்தியப் பிரதேசம், உத்தரகாண்ட், அசாம், தெலுங்கானா, திரிபுரா மற்றும் இராஜஸ்தான் ஆகியவை அடங்கும்.
- இது 9,750 மெட்ரிக் டன் என்ற மொத்தச் சேமிப்புத் திறனை எட்டியுள்ளது.
- தற்போது அரசாங்கமானது, நாடு முழுவதும் கூடுதலாக சுமார் 500க்கும் மேற்பட்ட PACS சங்கங்களுக்கு இத்திட்டத்தினை விரிவுபடுத்தியுள்ளது.



## பீமா சகி யோஜனா திட்டம்




- ❖ பெண்களுக்கு பெரும் அதிகாரம் அளிப்பதற்காகவும் மேலும் அவர்களின் நிதி சார் உள்ளடக்கத்திற்காகவும் மத்திய அரசு இந்தத் திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- ❖ இது இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் (LIC) ஒரு முன்னெடுப்பாகும்.
- ❖ 'பீமா சகி யோஜனா' மூலம், 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற 18 முதல் 70 வயதிற்குட்பட்ட பெண்களுக்கு அதிகாரம் அளிக்கப்படும்.
- ❖ இந்தத் திட்டத்தின் கீழ், பெண்களுக்கு நிதி அறிவு மற்றும் காப்பீட்டு விழிப்புணர்வை வழங்கவதற்காக முதல் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு சிறப்புப் பயிற்சி மற்றும் உதவித் தொகை வழங்கப்படும்.
- ❖ இந்தப் பயிற்சிக்குப் பிறகு, பெண்கள் LIC முகவர்களாகவும், பட்டதாரிக் காப்பீட்டுச் சகிகளாகவும் (முகவர்களாகவும்) பணியாற்றலாம்.
- ❖ LIC நிறுவனத்தில் மேம்பாட்டு அதிகாரியாகப் பணி புரியும் ஒரு வாய்ப்பும் கிடைக்கப் பெறும்.

## வணிகக் கப்பல் போக்குவரத்து மசோதா, 2024

- ❖ 2024 ஆம் ஆண்டு வணிகக் கப்பல் போக்குவரத்து மசோதாவானது, 1958 ஆம் ஆண்டு வணிகக் கப்பல் போக்குவரத்து சட்டத்தினை ரத்து செய்ய முனைகிறது.
- ❖ இந்த மசோதாவானது, நாட்டில் உள்ள வணிகக் கப்பல்களுக்கான பல உரிமைகள் தொடர்பான விதிமுறைகளை மறுவரையறை செய்து எளிதாக்குகிறது.

- தற்போது வரையில், இந்தியக் குடிமக்கள் அல்லது நிறுவனங்கள் மட்டுமே இந்தியக் கொடியினை ஏந்தியக் கப்பல்களை இயக்குவதற்குப் பதிவு செய்ய முடியும்.
- இது இந்தியக் கொடியிடப்பட்ட கப்பல்களை இயக்குவதை எளிதாக்குகிறது. மேலும் கடல்களில் ஏற்படும் உயிரிழப்புகளைக் கையாளும் பல்வேறு விதிமுறைகளை மிக நன்கு ஒழுங்குபடுத்துகிறது.
- இந்தியக் கொடியினைக் கொண்ட கப்பல்களின் உரிமை மற்றும் சரக்கு ஏற்றும் டன் அளவினை அதிகரிப்பதற்கான சில தகுதி அளவுருக்களை விரிவுபடுத்தச் செய்வதற்கு இதில் முன்மொழியப் பட்டுள்ளது.
- இந்தியாவில் மறுசுழற்சி செய்ய விரும்பும் கப்பல்களைத் தற்காலிகமாகப் பதிவு செய்வதற்கும் இந்த மசோதா வழிவகை செய்கிறது.
- இது சில உரிமைக் கோரல்களுக்கான வரம்பு நிதியை உருவாக்குவதோடு, மின்னணுப் பதிவு மற்றும் எண்ணிமப் பதிவுகளுடன் கூடிய நிர்வாகச் செயல்முறைகளை நெறிப் படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.




## இந்தியாவில் கடத்தல் அறிக்கை 2023/24




- வருவாய் புலனாய்வு இயக்குநரகம் (DRI) ஆனது, சமீபத்தில் இந்தியாவில் கடத்தல் 2024 என்ற தலைப்பிலான அறிக்கையினை வெளியிட்டது.

- 2023-24 ஆம் ஆண்டில் வான்வெளி வழியான கொக்கைன் கடத்தல் தொடர்பாக சுமார் 47 வழக்குகளை இந்த முகமை பதிவு செய்துள்ள நிலையில் இதற்கு முந்தையதொரு ஆண்டில் 21 வழக்குகள் பதிவாகியுள்ளன.
- 2023-24 ஆம் ஆண்டில் சுமார் 1,319 கிலோ தங்கம் கைப்பற்றப்பட்டது, அதற்கு முந்தைய ஆண்டில் 600 கிலோ தங்கம் கைப்பற்றப்பட்டது.
- 2022-2023 ஆம் ஆண்டில் 481 கோடி ரூபாய் மதிப்பிலான FTA முறைகேடு வழக்குகள் பதிவாகியுள்ளது என்பதோடு இதனுடன் ஒப்பிடும் போது 2023-24 ஆம் ஆண்டில் 1,427 கோடி ரூபாய் மதிப்பிலான வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.
- ஆப்கானிஸ்தான், ஈரான் மற்றும் பாகிஸ்தானை உள்ளடக்கிய மரண பிறைநிலவுப் பகுதி எனப்படுகின்ற இந்தப் பகுதியானது, இந்தியாவிற்குள் ஹெராயின் கடத்தலின் முதன்மை ஆதாரமாக உள்ளது.
- மியான்மர், லாவோஸ் மற்றும் தாய்லாந்தை உள்ளடக்கிய மரண முக்கோணம் எனப் படும் இந்தப் பகுதியானது செயற்கை மருந்துகள் மற்றும் ஹெராயின் ஆகியவற்றின் கடத்தலுக்கான முதன்மை ஆதாரமாக உள்ளது.

## அம்ரித் ஞான் கோஷ் இணைய தளம்

- மத்திய அரசானது, இந்திய ஆட்சிப் பணி பயிற்சி நிறுவனங்களின் மாநாட்டில், 'அம்ரித் ஞான் கோஷ்' இணைய தளம் மற்றும் 'பயிற்று ஆசிரியர் மேம்பாட்டு இணைய தளம்' ஆகியவற்றை அறிமுகப்படுத்தியுள்ளது.
- அம்ரித் ஞான் கோஷ் இணைய தளமானது, இந்தியாவை மையமாகக் கொண்ட சில நிகழ்வாய்வுகளுடன் பகிரப்பட்ட தகவல் வங்கியை வழங்குகிறது.
- பயிற்று ஆசிரிய மேம்பாட்டு இணைய தளமானது, அரசு ஊழியர்களுக்குத் தகவல் வழங்குதலை மேம்படுத்துவதற்காகப் பயிற்சியாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிக்கிறது.

## மொத்தக் கருவுறுதல் விகிதம் 2.0

- ஐந்தாவது தேசியக் குடும்ப சுகாதார ஆய்வறிக்கையின் (2019–21) படி, இந்தியாவானது 2.0 என்ற மொத்த கருவுறுதல் விகிதத்தினை (TFR) எட்டியுள்ளது.
- இது தேசிய மக்கள் தொகைக் கொள்கை 2000 மற்றும் 2.1 என்ற TFR விகிதத்தினை இலக்காக கொண்ட தேசிய சுகாதார கொள்கை 2017 ஆகியவற்றின் கீழ் நிர்ணயிக்கப் பட்ட இலக்குகளை அடைந்துள்ளது.
- மொத்தக் கருவுறுதல் விகிதம் என்பது ஒரு பெண் தன் வாழ்நாளில் பெற்றெடுக்கும் சராசரி குழந்தைகளின் எண்ணிக்கையாகும்.
- இது ஒரு பெண்ணுக்கு எத்தனை குழந்தைகள் என்ற அடிப்படையில் மதிப்பிடப் படுகிறது.
- மொத்த கருவுறுதல் விகிதம் ஆனது, 1950 ஆம் ஆண்டுகளில் 6 அல்லது அதற்கும் மிக அதிகமாக இருந்தது.




## இந்தியத் திறன்கள் அறிக்கை 2025




- ❖ 2025 ஆம் ஆண்டில், இந்தியப் பட்டதாரிகளில் சுமார் 55 சதவீதம் பேர் உலகளவில் வேலைவாய்ப்பைப் பெறுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிற நிலையில் இது 2024 ஆம் ஆண்டில் 51.2 சதவீதமாக இருந்தது.
- ❖ மகாராஷ்டிரா, கர்நாடகா மற்றும் டெல்லி ஆகிய மாநிலங்கள் வேலைவாய்ப்பிற்குரிய திறமையாளர்கள் நிறைந்த முக்கிய மையங்களாக உருவாகி வருகின்றன.

- புனே, பெங்களூரு மற்றும் மும்பை போன்ற நகரங்கள் திறமையான பணியாளர்களை உருவாக்குவதில் முன்னணியில் உள்ளன.
- 2024 ஆம் ஆண்டில் 51.8 சதவீதமாக இருந்த ஆண்களுக்கான வேலைவாய்ப்பு விகிதம் ஆனது, 2025 ஆம் ஆண்டில் 53.5 சதவீதமாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- இதற்கிடையில், 50.9 சதவீதமாக இருந்த பெண்களுக்கான வேலைவாய்ப்பு விகிதம் ஆனது 47.5 சதவீதமாகக் குறையும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- வேலைவாய்ப்பில் மகாராஷ்டிரா முன்னணியில் உள்ளது, அதைத் தொடர்ந்து டெல்லி, கர்நாடகா, ஆந்திரப் பிரதேசம் மற்றும் கேரளா ஆகியவை இடம் பெற்றுள்ளன.
- தமிழ்நாடு, மகாராஷ்டிரா, உத்தரப் பிரதேசம் மற்றும் கேரளா ஆகிய மாநிலங்கள் இந்தியாவில் வேலை வாய்ப்புக்கு முன்னுரிமை அளிக்கும் மாநிலங்களாகும்.

## உயர் கல்வியில் முன் கற்றல்

- பல்கலைக்கழக மானியக் குழுவானது (UGC) முன் கற்றல் (RPL) அங்கீகாரத்திற்கான வரைவு வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது.
- இது முன்னதாக கற்கப் பட்டத் தகவல், திறன்கள் மற்றும் திறமைகள் ஆகியவற்றினை நன்கு மதிப்பிட்டு அங்கீகரிப்பதன் மூலம் முறைசாரா, முறைப்படி அமையாத மற்றும் முறையான கல்விக்கு இடையே உள்ள இடைவெளியைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தக் கட்டமைப்பானது தனிநபர்கள் தங்கள் திறன்களை நன்கு முறைப்படுத்தவும், அதற்கான மதிப்புகளைப் பெறவும், முறையான கல்வி முறையில் அவர்கள் மிக நன்கு ஒருங்கிணையவும் வழி வகுக்கிறது.
- இதன் மூலம், மாணவர் பட்டப்படிப்புத் திட்டத்திற்குத் தேவையான மதிப்புகளில் 30 சதவீதம் வரை பெற முடியும்.
- 2026 ஆம் ஆண்டிற்குள் பல்கலைக்கழக சேர்க்கை மற்றும் வேலை வாய்ப்புகளுக்கு RPL முறையை செயல்படுத்துவதனை UGC நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது பல்வேறு கல்விப் பின்னணிகள் மற்றும் கற்றல் அனுபவங்களைக் கொண்ட தனி நபர்களுக்கு அவர்களின் நிரூபிக்கப்பட்ட திறன்களின் அடிப்படையில் உயர்கல்வியை அணுகுவதற்குப் பல்வேறு மற்றும் தகவமைப்பு மிக்க வழிகளை உருவாக்குகிறது.



Figure 1: Illustration of a Concept Map for Recognition of Prior Learning

## மருத்துவப் பயன்பாட்டு வெப்பமானிகளுக்கான புதிய விதிகள்




- ❖ 2011 ஆம் ஆண்டு சட்ட அளவியல் (பொது) விதிகளின் கீழ் OIML பரிந்துரைகளின்படி நுகர்வோர் விவகாரத் துறை இந்தத் திருத்தத்தினை முன்மொழிந்துள்ளது.
- ❖ இந்த விதிகள் ஆனது, மருத்துவ மின் வெப்பமானிகளின் துல்லியம் மற்றும் நம்பகத் தன்மையை தரநிலைப்படுத்துகிறது.
- ❖ இந்தச் சாதனங்கள் பரிந்துரைக்கப்பட்டத் தரங்களுக்கு நன்கு இணங்கும் வகையில் இருப்பதை உறுதி செய்வதற்காக அவற்றைச் சரிபார்த்தல் மற்றும் முத்திரையிடுதல் தொடர்பான விதிகள் கட்டாயமாக்கப்பட்டுள்ளன.
- ❖ முன்மொழியப்பட்ட இந்த விதிகள் ஆனது, நோயறிதல் மற்றும் சிகிச்சை முடிவுகள் ஆகியவை நம்பகமான தரவுகளின் அடிப்படையில் இருப்பதை உறுதி செய்வதற்காக அவற்றின் அளவீடுகளில் ஒரு நம்பகத் தன்மையினை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

## 8 புதிய சீர்மிகு நகரங்கள்



- சீர்மிகு நகரம் திட்டத்தின் விரிவாக்கமாக 8 புதிய நகரங்களை மேம்படுத்துவதற்காக 8,000 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் மத்திய அரசானது ஒரு புதிய திட்டத்தினை அறிமுகப் படுத்தியுள்ளது.
- இந்த நிதியின் மூலம் ஒரு மாநிலத்தின் ஒரு நகரம் மட்டுமே புதிய சீர்மிகு நகரமாக மாற்றப் படும்.
- தமிழ்நாட்டின் திருமழிசையும் இந்தப் பட்டியலில் இடம் பெற்றுள்ளது.

## நுகர்வோர் நம்பிக்கைக் குறித்த கருத்துக்கணிப்பு 2024

- இந்திய ரிசர்வ் வங்கி (RBI) ஆனது, அதன் இரண்டு மாதங்களுக்கு ஒருமுறையில் மேற் கொள்ளப் படும் நுகர்வோர் நம்பிக்கைக் குறித்த கணக்கெடுப்பின் (CCS) கீழ் 2024 ஆம் ஆண்டின் நவம்பர் மாத சுற்று முடிவுகளை வெளியிட்டுள்ளது.
- இந்திய நுகர்வோர் மத்தியில் அவர்களின் பொதுப் பொருளாதார நிலை, வேலை வாய்ப்புச் சூழ்நிலை, அவர்களின் வருமானம் மற்றும் செலவினங்கள் பற்றிய பெரும் நம்பிக்கை மிகவும் பலவீனமடைந்துள்ளது.
- வீட்டுச் செலவுகள் தவிர கணக்கெடுப்பிற்கான அனைத்து அளவுருக்களிலும் மிகவும் பலவீனமான நம்பிக்கை உணர்வுகள் காரணமாக தற்போதைய காலகட்டத்திற்கான அவர்களின் நம்பிக்கை ஓரளவு குறைந்துள்ளது.
- சமீபத்தியக் கணக்கெடுப்பில் எதிர்கால எதிர்பார்ப்பு குறியீடு (FEI) ஆனது 0.5 புள்ளிகள் அதிகரித்து 121.9 ஆக உயர்ந்தது.




## வேளாண் துறைக்கான கொள்கை சார் முன்னெடுப்புகள்

- உற்பத்தியை நன்கு மேம்படுத்துதல், விவசாயிகளின் வருமானத்தை மேம்படுத்துதல் மற்றும் நிலையான நடைமுறைகளை ஊக்குவிப்பதன் மூலம் வேளாண் துறையை மாற்றியமைப்பதை நோக்கமாகக் கொண்ட பல முக்கிய முன்னெடுப்புகளை மத்திய அரசானது அறிமுகப்படுத்தியுள்ளது.
- நோயற்ற நடவுப் பொருட்களை வழங்கச் செய்வதன் மூலம் தோட்டக்கலை உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்காக என்று தூய்மையான தாவரத் திட்டத்திற்கு (CPP) ஒப்புதல் அளிக்கப் பட்டுள்ளது.

- எண்ணிம வேளாண்மை திட்டம் ஆனது, எண்ணிமத் தீர்வுகள் மூலம் வேளாண்மையில் புரட்சியை ஏற்படுத்துவதற்காக நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.
- வேளாண் உள்கட்டமைப்பு நிதி (AIF) வழங்கீட்டின் விரிவாக்கம் ஆனது சமூக வேளாண் சொத்துக்கள், ஒருங்கிணைந்தச் செயலாக்க அலகுகள் மற்றும் PM-KUSUM-A ஆகிய திட்டங்களுடன் ஒருங்கிணைத்தல் ஆகியவற்றினை உள்ளடக்குவதற்காக ஒப்புதல் அளிக்கப்பட்டது.
- தேசிய சமையல் பயன்பாட்டு எண்ணெய்கள் திட்டம் - எண்ணெய் வித்துக்கள் (NMEO-Oilseeds) ஆனது இறக்குமதியைச் சார்ந்திருப்பதைக் குறைக்கும் நோக்கில் உள்நாட்டு எண்ணெய் வித்து உற்பத்தியை அதிகரிப்பதற்காகத் தொடங்கப்பட்டது.
- தேசிய இயற்கை வேளாண்மை திட்டம் (NMNF) ஆனது, ஒரு நிலையான மாற்றாக இயற்கை வேளாண்மை முறைகளை ஊக்குவிப்பதற்காக வேண்டி அறிமுகப்படுத்தப் பட்டதோடு இது சுற்றுச்சூழலுக்கு உகந்த வேளாண்மையினை நோக்கியக் குறிப்பிடத் தக்க மாற்றத்தைக் குறிக்கிறது.




## நெடுஞ்சாலைகளுக்கான செயல்திறன் மதிப்பீட்டு அமைப்பு

- இந்திய தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையம் (NHAI) ஆனது, நெடுஞ்சாலைகளின் செயல்பாடு மற்றும் அதன் பராமரிப்பில் ஈடுபட்டுள்ள ஒப்பந்ததார நிறுவனங்களை மதிப்பிடுவதற்கான ஒரு நெறிமுறையை அறிமுகப்படுத்தியுள்ளது.
- 100க்கு 60க்கும் குறைவான மதிப்பெண்கள் பெற்ற ஒப்பந்ததார நிறுவனங்கள் ஆனது, "செயல்திறன் குறைவாக கொண்டவை" என்று அறிவிக்கப்படும், இதன் மூலம் அவை புதியத் திட்டங்களுக்கான ஒப்புதலைப் பெறுவதற்கான வாய்ப்புகள் இனி குறைக்கப் படுகிறது.
- இதன் மதிப்பெண்கள் மற்றும் மதிப்பீடுகள் பின்வரும் ஐந்து முக்கிய அளவுருக்களின் நோக்கம் சார் மதிப்பீட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது : கடினத்தன்மை,

குழிகள், பள்ளத்தின் ஆழம், மேற்பரப்பு விரிசல், அவற்றைச் சரி செய்வதற்கான ஒட்டு வேலை மற்றும் சாலைகளின் மேற்பரப்பு தேய்மானம்.

- NHAI ஆனது இந்தச் சூழ்நிலைமையை மதிப்பிடுவதற்காக என தேசிய நெடுஞ்சாலை வலையமைப்பில் ஒளிப்படக் கருவிகள் மற்றும் உணர்விகள் பொருத்தப்பட்ட வலை அமைப்பு மதிப்பீட்டு வாகனங்களையும் (NSVs) நிலைநிறுத்த உள்ளது.

## வோரோனேஜ் ரேடார்

- இந்தியாவின் வான் வெளிப் பாதுகாப்பு உள்கட்டமைப்பை வலுப்படுத்துவதற்காக 4 பில்லியன் டாலர் மதிப்பிலான பாதுகாப்பு ஒப்பந்தம் மேற்கொள்வது குறித்து இந்தியா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகள் முக்கிய விவாதங்களில் (முடிவு நிலையினை எட்டிய) ஈடுபட்டுள்ளன.
- இந்த ஒப்பந்தம் ஆனது அதிநவீன வோரோனேஜ் ரேடார் அமைப்பை வாங்குவதில் கவனம் செலுத்துகிறது.
- இது ஒரு பரந்தப் பிராந்தியத்தில் வான்வழி அச்சுறுத்தல்களைக் கண்டறிந்து அதனை எதிர்கொள்வதற்கான இந்தியாவின் திறனை மேம்படுத்தும்.
- இது 8,000 கிலோமீட்டருக்கும் அதிகமானச் செங்குத்து செயல்பாட்டு வரம்பையும், 6,000 கிலோமீட்டருக்கு மேலான கிடைமட்டச் செயல்பாட்டு வரம்பையும் கொண்டுள்ளது.
- உந்து விசை எறிகணைகள், ரேடாருக்குப் புலப்படாத வகையிலான விமானங்கள், போர் விமானங்கள் மற்றும் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகள் (ICBMs) உள்ளிட்ட பல அச்சுறுத்தல்களை இந்த ரேடார் கண்டறிந்து கண்காணிக்க முடியும்.
- ரஷ்யாவின் கூற்றுகளின்படி, இந்த அமைப்பு ஆனது 500க்கும் மேற்பட்ட பொருட்களை ஒரே நேரத்தில் கண்காணிக்க முடியும் மற்றும் விண்வெளியில் பூமிக்கு மிக அருகில் நெருங்கும் பொருட்களைக் கூட கண்காணிக்க முடியும்.
- இந்த ரேடார் அமைப்பில் குறைந்தபட்சம் 60% ஆனது உள்நாட்டிலேயே தயாரிக்கப் படுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவது குறித்த ஒப்பந்தங்களும் இந்த ஒரு ஒப்பந்தத்தில் அடங்கும்.



## பேரிடர் மேலாண்மை திருத்த மசோதா, 2024

- தற்போதுள்ள 2005 ஆம் ஆண்டு பேரிடர் மேலாண்மைச் சட்டம் என்ற சட்டத்தினைத் திருத்தியமைப்பதற்காக 2024 ஆம் ஆண்டு பேரிடர் மேலாண்மை (திருத்தம்) என்ற மசோதாவினை மக்களவை நிறைவேற்றியுள்ளது.
- இதன் முக்கிய முன்மொழிவுகள்
  - தேசிய மற்றும் மாநில அளவில் பேரிடர் தரவுத் தளங்களை உருவாக்குதல்
  - மாநில தலைநகர் மற்றும் மாநகராட்சிக் கழகங்கள் கொண்ட மிகவும் பெரிய நகரங்களுக்கான நகர்ப்புற பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் கட்டமைப்பு, மற்றும்
  - மாநில அரசுகளில் மாநிலப் பேரிடர் மீட்புப் படையினை உருவாக்குதல்.
- இந்த மசோதா தேசிய நெருக்கடி மேலாண்மைக் குழு (NCMC) மற்றும் உயர்மட்டக் குழு (HLC) போன்ற தற்போதைய அமைப்புகளுக்கு ஒரு சட்டப்பூர்வ அந்தஸ்தினை வழங்கச் செய்கிறது.




## தேசியக் கலாச்சார வரைபடமாக்கல் திட்டம் 2024

- கலாச்சார அமைச்சகம் ஆனது, தேசியக் கலாச்சார வரைபடமாக்கல் திட்டத்தினைத் தொடங்கியுள்ளது.
- இந்தியாவின் கலாச்சாரப் பாரம்பரியம் மற்றும் கிராமப்புறப் பொருளாதாரங்களை மீளுருவாக்கம் செய்து அதைப் புத்துயிர் பெறச் செய்வதற்கான அதன் ஒரு ஆக்கப் பூர்வமான திறன் ஆகியவற்றினை அடையாளம் கண்டு ஆவணப்படுத்துவதனை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது 6.5 லட்சம் கிராமங்களின் கலாச்சார அம்சங்களை வரைபடமாக்கி (பதிவு செய்து), கலைஞர்கள் மற்றும் கலை நடைமுறைகளின் தேசிய பதிவேட்டை உருவாக்குகிறது.
- இதன் மாவட்ட வாரியான விவரங்கள் ஆனது, மேரா காவ்ன் மேரி தரோஹர் (MGMD) இணையதளத்தில் கிடைக்கப் பெறும்.

- தற்போது சுமார் 4.5 லட்சம் கிராமங்களின் தரவுகள் ஆனது MGMD இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.




## சர்வதேச மற்றும் உள்நாட்டு SMS குறித்த வரையறைகள்




- இந்தியத் தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம் (TRAI) ஆனது, சர்வதேசத் தகவல் தொடர்பின் வரையறை குறித்த பரிந்துரைகளை வெளியிட்டுள்ளது.
- "சர்வதேசத் தகவல் தொடர்பு" என்பது ஒரு நாட்டில் தோன்றி மற்றொரு நாட்டில் (இந்தியா உட்பட) பெறப் படும் தகவலைக் குறிக்கிறது.
- 'சர்வதேச SMS குறுஞ்செய்தி' என்பது SMS வசதி மூலம் வழங்கப்படும் சர்வதேச தகவல் அனுப்பும் முறையைக் குறிக்கிறது.
- ஒரு நபருக்கு ஒரு செயலியிலிருந்து அனுப்பப்படும் எந்தவொரு (A2P) SMS செய்தியும் சர்வதேச குறுந்தகவலாகக் கருதப்படும்.
- ஆனால் அதனை இந்தியாவிற்கு வெளியே அமைந்துள்ள எந்தவொரு மின்னணுச் சாதனம், கணினி அமைப்பு அல்லது கணினிப் பயன்பாடு ஆகியவற்றின் பயன்பாடு அல்லது தலையீடு இல்லாமல் உருவாக்கவோ, அனுப்பவோ அல்லது பெறவோ கூடாது.
- 'உள்நாட்டுத் தகவல்' என்பது இந்தியாவிற்குள் தோன்றி மற்றும் அனுப்பப்படும் ஒரு தகவலைக் குறிக்கிறது.
- உள்நாட்டு SMS என்பது ஒரு குறுஞ்செய்தி வசதி மூலம் அனுப்பப் படும் உள்நாட்டுத் தகவலைக் குறிக்கிறது.

## இந்தியாவிலுள்ள பெண்களுக்குச் சொந்தமான MSME நிறுவனங்கள் 2024

| Number of Women Owned MSMEs | | |
|---|---|---|
| Financial Year | 2020-21 (From 01.07.2020 to 31.03.2021) | Cumulative (till 30.11.2024 ) |
| All India | 4,87,287 | 2,20,73,675 |
| Gujarat | 37,146 | 9,12,052 |
| Rajasthan | 29,371 | 8,15,207 |

- 2024 ஆம் ஆண்டு நவம்பர் 30 ஆம் தேதி வரை, பெண்களுக்குச் சொந்தமான மொத்தம் 2,20,73,675 குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்துறை நிறுவனங்கள் (MSME) உத்யம் பதிவு இணைய தளம் (URP) மற்றும் உத்யம் உதவி வழங்கீட்டு இணைய தளம் (UAP) ஆகிய இணைய தளங்கள் பதிவு செய்துள்ளன.
- குஜராத் மாநிலத்தில், பெண்களுக்குச் சொந்தமான 9,12,052 MSME நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ள அதே சமயம் இராஜஸ்தானில் 8,15,207 நிறுவனங்கள் பதிவு செய்யப் பட்டு ளளன.
- குஜராத் மாநிலத்தின் வல்சாத் மாவட்டத்தில் சுமார் 11,942 பதிவுகள் பதிவாகியுள்ள நிலையில் இது அங்குள்ள மொத்த MSME நிறுவனங்களில் 18.24 சதவிகிதம் ஆகும்.
- இராஜஸ்தானின் டோங்க் மற்றும் சவாய் மாதோபூர் மாவட்டங்களில் மொத்தம் 7,803 பதிவுகள் பதிவாகியுள்ள நிலையில் இது அங்குள்ள மொத்த MSME எண்ணிக்கையில் 13 சதவிகிதம் ஆகும்.
- தமிழ்நாட்டில் பெண்களுக்குச் சொந்தமான 1,926,040 MSME நிறுவனங்கள் உள்ள ஒரு நிலையில் இது மொத்தப் பதிவுகளில் 43% ஆகும்.
- இந்தப் பட்டியலில் 62% பெண்களுக்குச் சொந்தமான MSME நிறுவனங்களுடன் மேற்கு வங்காளம் முதலிடத்தில் உள்ளது.

## முதல் பசுமை எஃகு உற்பத்தி வகைபிரித்தல்



- எஃகுத் தொழில் துறையினை கார்பன் நீக்கம் செய்வதனை நோக்கமாகக் கொண்ட உலகின் முதல் பசுமை எஃகு உற்பத்தி வகைப் பிரிப்பு முறையை இந்தியா அறிமுகப் படுத்தியுள்ளது.
- 2070 ஆம் ஆண்டிற்குள் இந்திய நாட்டின் நிகர சுழிய உமிழ்வு இலக்குகளை ஆதரிக்கும் வகையில், பசுமை எஃகு உற்பத்தி தரங்களை வகைப் பிரித்தல் வரையறுக்கிறது.
- இந்த வகைபிரித்தல் ஆனது, உமிழ்வினுடைய தீவிரத்தின் அடிப்படையில் பசுமை எஃகு உற்பத்தியினை வகைப்படுத்துவதற்கு என்று ஒரு நட்சத்திர-மதிப்பீட்டு முறையை அறிமுகப் படுத்துகிறது.
- ஐந்து நட்சத்திரப் பசுமை எஃகு என்ற ஒரு தரம் வழங்கப்படுவதற்கு, உற்பத்தி நிறைவு செய்யப் பட்ட ஒரு டன் எஃகுக்கு (tCO2/tfs) 1.6 டன்களுக்குக் குறைவான $CO_2$ உமிழ்வு ஆக இருக்க வேண்டும்.
- சுமார் 2.2 $tCO_2$/tfsக்கும் குறைவான உமிழ்வைக் கொண்ட பசுமை முறையிலான எஃகு உற்பத்தியானது இந்தச் சான்றிதழினைப் பெறுவதற்குத் தகுதி பெறும்.

## இந்தியாவில் பெண் தொழிலாளர் வளத்தின் பங்கேற்பு 2017-2023

**Female Labor Force Metrics (2017-18 vs. 2023-24)**

| Metric | 2017-18 | 2023-24 |
|---|---|---|
| Work Participation Rate (WPR) (%) | 22% | 40.3% |
| Labor Force Participation Rate (LFPR) (%) | 23.3% | 41.7% |
| Unemployment Rate (%) | 5.6% | 3.2% |

- பெண் தொழிலாளர்களின் பங்கேற்பு விகிதம் (LFPR) ஆனது 2017-18 முதல் 2022-23 ஆம் ஆண்டு வரை இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் அதிகரித்துள்ளது.
- பீகார், பஞ்சாப் மற்றும் ஹரியானா ஆகிய சில மாநிலங்களில் பெண் தொழிலாளர் வளத்தின் பங்கேற்பு ஆனது தொடர்ந்து மிகக் குறைந்த அளவிலேயே பதிவாகியுள்ளன.
- 2017-18 ஆம் ஆண்டில் 24.6 சதவீதமாக இருந்த கிராமப்புறப் பெண்களின் LFPR ஆனது 2022-23 ஆம் ஆண்டு வரை 41.5 சதவீதமாக (~69 சதவீத வளர்ச்சி) உயர்ந்துள்ளது.
- 20.4 சதவீதமாக இருந்த நகர்ப்புற LFPR ஆனது 25.4 சதவீதமாக உயர்ந்துள்ளது.

## இந்தியாவின் நீர்வள மதிப்பீடு 2024

- மத்திய நீர் வள ஆணையம் (CWC) ஆனது, 'இந்தியாவின் நீர் வளங்களின் மதிப்பீடு 2024' என்ற தலைப்பிலான தனது ஆய்வறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- இந்தியாவின் சராசரி வருடாந்திர நீர் இருப்பு ஆனது, 1985 மற்றும் 2023 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில், 2,115.95 பில்லியன் கன மீட்டர் (BCM) என மதிப்பிடப்பட்டு உள்ளது.
- பிரம்மபுத்திரா (592.32 BCM), கங்கை (581.75 BCM), மற்றும் கோதாவரி (129.17 BCM) ஆகியவை இந்தியாவில் உள்ள அதிக நீர் இருப்பைக் கொண்ட முதல் மூன்று நதிப் படுகைகள் ஆகும்.

- சபர்மதி (9.87 BCM), பெண்ணாறு (10.42 BCM), மற்றும் மாஹி (13.03 BCM) ஆகியவை நீர் இருப்பின் அடிப்படையில் கடைசி இடத்தில் உள்ள மூன்று நதிகள் ஆகும்.
- 2024 ஆம் ஆண்டிற்கான சராசரி வருடாந்திர தனிநபர் நீர் இருப்பு 1,513 கன மீட்டர் ஆகும்.




## இந்தியாவின் அணு சக்தி உற்பத்தித் திறன்




- 2014 ஆம் ஆண்டில் 4,780 மெகாவாட்டாக இருந்த இந்தியாவின் அணுசக்தி உற்பத்தி திறன் ஆனது கடந்த 10 ஆண்டுகளில் இரு மடங்காக உயர்ந்து 2024 ஆம் ஆண்டில் 8,180 மெகாவாட்டாக அதிகரித்துள்ளது.

- அணுசக்தி உற்பத்தித் திறன் ஆனது, 2031-32 ஆம் ஆண்டில் மூன்று மடங்காக உயர்ந்து 22,480 மெகாவாட்டாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- இந்தியாவின் மின் விநியோகக் கட்டமைப்பின் மீதான் திருத்தம் ஆனது, அணுமின் நிலையங்களில் இருந்து அது அமைந்துள்ள மாநிலங்களுக்கான மின்சாரப் பங்கினை 50 சதவீதமாக உயர்த்தியுள்ளது.
- இதில் 35 சதவீதம் ஆனது அண்டை மாநிலங்களுக்கும், 15 சதவீதம் ஆனது தேசிய மின் கட்டமைப்பிற்கும் வழங்கப்படும்.

## 129வது அரசியலமைப்பு திருத்த மசோதா

- மக்களவை மற்றும் மாநில சட்டசபைகளுக்கு ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவதை அனுமதிக்கும் இரண்டு மசோதாக்கள் மக்களவையில் ஒன்றிய சட்டத்துறை அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால் என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.
- இது பின்வரும் சரத்துகளை உட்சேர்க்க/திருத்த முயல்கிறது
  - 82A என்ற புதிய சரத்து சேர்ப்பு- மக்களவை (லோக்சபா) மற்றும் அனைத்து மாநில சட்டப் பேரவைகளுக்கும் ஒரே நேரத்தில் தேர்தல்.
  - 83வது சரத்தில் திருத்தம் - பாராளுமன்ற அவைகளின் செயல்பாட்டுக் காலம்,
  - 172வது சரத்தில் திருத்தம்- மாநிலச் சட்டமன்றங்களின் செயல்பாட்டுக் காலம் மற்றும்
  - 327வது சரத்தில் திருத்தம் - சட்டமன்றங்களுக்கான தேர்தல்கள் தொடர்பான விதிமுறைகளை மேற்கொள்வதற்கான பாராளுமன்றத்தின் அதிகாரம்.
- ஒரு அரசியலமைப்பு திருத்த மசோதாவினை அறிமுகப் படுத்த அங்கு ஒரு சாதாரணப் பெரும்பான்மை இருந்தால் போதும், ஆனால் அந்த அவையில் அது நிறைவேற்றப் பட அதற்குச் சிறப்புப் பெரும்பான்மை தேவைப்படும்.
- ஒரு கணக்கின் படி மக்களவையில் அன்றைய தினம் இருந்த 461 வாக்குகளில் மூன்றில் இரண்டு பங்கிலான பெரும்பான்மை (307) என்பது அதற்குத் தேவையாக இருந்தது.
- இந்த மசோதாவினை மக்களவையில் அறிமுகப் படுத்துவதற்கென 263 உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்த நிலையில் 198 உறுப்பினர்கள் எதிர்த்து வாக்களித்தனர்.
- புதிய பாராளுமன்றத்தில் மின்னணு வாக்குப் பதிவு முறை அறிமுகப் படுத்தப் படுவது இதுவே முதல் முறையாகும்.



## தேசியப் புலனாய்வு முகமையின் அதிகாரங்கள் குறித்து உச்ச நீதிமன்றம்

- தேசியப் புலனாய்வு முகமை சட்டத்தின் (NIA) அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்களை விசாரிப்பதற்கு அல்லது அத்தகைய "பட்டியலிடப்பட்டக் குற்றங்களை" செய்ததாக குற்றம் சாட்டப்படுபவர்கள் குறித்து விசாரிப்பதில் தேசியப் புலனாய்வு முகமையின் அதிகாரங்கள் கட்டுப்படுத்தப்படவில்லை என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பு அளித்துள்ளது.
- 2008 ஆம் ஆண்டு NIA சட்டம் ஆனது, NIA விசாரிக்கக் கூடிய பல்வேறு பட்டியலிடப்பட்ட குற்றங்களின் வகைகளைக் குறிப்பிடுகிறது.
- அவ்வாறு பட்டியலிடப்பட்ட குற்றங்களில் கீழ்க்காணும் சட்டத்தின் கீழான சில குற்றங்களும் அடங்கும்
    - வெடி பொருள்கள் சட்டம், 1908
    - அணு சக்தி சட்டம், 1962,
    - விமானக் கடத்தல் தடுப்புச் சட்டம், 1982,
    - SAARC உடன்படிக்கை (தீவிரவாதத்தினை ஒடுக்குதல்) சட்டம், 1993 மற்றும்
    - சட்டவிரோத நடவடிக்கைகள் (தடுப்பு) சட்டம், 1967 போன்றவை.




## இந்தியாவின் முதல் பூச்சிக்கொல்லி எதிர்ப்புத் தன்மை கொண்ட கவச உடை

- இந்தியாவின் முதல் வகையான பூச்சிக்கொல்லி எதிர்ப்புத் தன்மை கொண்ட "கிசான் கவாச்" எனப்படும் கவச உடையானது சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- பூச்சிக்கொல்லி மருந்தின் தீங்கு விளைவிக்கும் விளைவுகளிலிருந்து விவசாயிகளைப் பாதுகாக்கும் வகையில் இது வடிவமைக்கப்பட்டுள்ளது.

- இந்தக் கவச உடையானது, சுவாசக் கோளாறுகள், பார்வை இழப்பு மற்றும் தீவிரப் பாதிப்புகளில் மரணம் உள்ளிட்ட கடுமையான உடல்நலப் பிரச்சினைகளுக்கு வழி வகுக்கின்ற பூச்சிக்கொல்லி மூலம் தூண்டப்பட்ட நச்சேற்றத்திற்கு எதிரானப் பெரும் பாதுகாப்பை வழங்குகிறது.




## புதிய கடன் உத்தரவாதத் திட்டம் (CGS) 2024

- மத்திய அரசானது, ஒரு மிகவும் அவசரமான சூழலில் சொத்துக்களை விற்கும் சிறு விவசாயிகளுக்கு உதவும் வகையில் கடன் உத்தரவாதத் திட்டத்தினை (CGS) அறிமுகப் படுத்தியுள்ளது.
- விவசாயிகளுக்கு உதவுவதற்காக இந்தத் திட்டத்தின் மூலம் 1000 கோடி ரூபாய் நிதி வழங்கப் படுகிறது.
- இது மிகக் குறிப்பாக சிறிய மற்றும் விளிம்பு நிலை விவசாயிகள், மின்னணுக் கிடங்கு ரசீதுகளைப் பயன்படுத்தி அறுவடைக்குப் பிந்தைய கடன்களை அணுகச் செய்வதற்கு உதவும்.
- புதுப்பிக்கப்பட்ட கடன் உத்தரவாதத் திட்டத்தின் கீழ், வங்கிகள் கிடங்கு ரசீதுகளுக்கு (e-NWR) வேளாண் கடன்களை வழங்கும்.
- விவசாயிகள் தங்கள் விளைபொருட்களைச் சமர்ப்பித்து, கிடங்கு மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை ஆணையத்தில் (WDRA) பதிவு செய்யப்பட்ட தானியக் களஞ்சியங்களால் வழங்கப்பட்ட இணைய வழி கிடங்கு ரசீதுகளைப் பெறுவதற்கான ஒரு வாய்ப்பைப் பெறுவர்.
- வங்கிகளுக்குத் தேவையான கடன்களை வழங்குவதற்கு என இது ஒரு பிணையமாகச் செயல்படும்.

- விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை விலை உயரும் போது விற்க இயலும்.
- சுமார் 21 லட்சம் கோடி ரூபாய்கள் மதிப்பிலான மொத்தமுள்ள வேளாண் கடனில், அறுவடைக்குப் பிந்தையப் பயன்பாட்டிற்காகப் பெறப்பட்ட கடன் ஆனது தற்போது 40,000 கோடி ரூபாயாக உள்ளது.




## 5 நாடுகளில் AYUSH மருத்துவ முறையின் இருக்கைகள்

- ஆயுஷ் அமைச்சகம் ஆனது வங்காளதேசம், ஆஸ்திரேலியா, மொரீஷியஸ், லாத்வியா மற்றும் மலேசியா ஆகிய நாடுகளில் செயல்பாட்டு நிலையில் உள்ள கல்வி சார் AYUSH இருக்கைகளை நிறுவியுள்ளது.
- வெளிநாட்டு நிறுவனங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த முன்னெடுப்பானது, சர்வ தேச அளவில் ஆயுஷ் மருத்துவ முறைகளை மிக மேம்படுத்துவதற்கான இந்தியாவின் மாபெரும் முயற்சிகளின் ஒரு பகுதியாகும்.
- வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் ஆயுஷ் இருக்கைகளை நிறுவுவது சர்வதேச ஒத்துழைப்பு, ஆராய்ச்சி ஆகியவற்றினை உருவாக்குவதற்கும், ஆயுஷ் மருத்துவ முறையின் நன்மைகளை மேம்படுத்துவதற்குமான ஒரு முக்கிய உத்தியாகும்.
- இந்த இருக்கையானது பொதுவாக ஆயுஷ் மருத்துவ முறை பற்றிய கல்வி பரிமாற்றம், ஆராய்ச்சி மற்றும் பொது விழிப்புணர்வை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு உள்ளதோடு இது அது நிறுவப்படும் நாட்டில் அதன் அங்கீகாரம் மற்றும் ஏற்பிற்குப் பங்களிக்கிறது.

- பாரம்பரிய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி துறையில் வெளிநாடுகளுடனான ஒத்துழைப்புக்காக என 24 நாடுகளுக்கு இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் இந்தியா கையெழுத்திட்டுள்ளது.
- வெளிநாடுகளில் ஆயுஷ் மருத்துவ முறை பற்றிய கல்வியியல் இருக்கைகளை அமைப்பதற்காக சர்வதேச நிறுவனங்களுடன் சுமார் 15 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளது.




## யுவ சஹாகர் திட்டம்

- "யுவ சஹாகர் – கூட்டுறவு நிறுவன ஆதரவு மற்றும் புத்தாக்கத் திட்டம்" என்ற திட்டம் ஆனது தேசியக் கூட்டுறவு மேம்பாட்டுக் கழகத்தினால் (NCDC) தற்போது செயல் படுத்தப் படுகிறது.
- இது புதிய மற்றும்/அல்லது புதுமையான கருத்தாக்கங்கள் கொண்டு புதிதாக உருவாக்கப்பட்ட கூட்டுறவு சங்கங்களை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- குறைந்தபட்சம் சுமார் 3 மாதங்களுக்கு என்று செயல்பாட்டில் உள்ள இளம் தொழில் முனைவோர்களின் கூட்டுறவுச் சங்கங்களை இத்திட்டம் ஊக்குவிக்கிறது.
- இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் கடன் நீண்ட கால அவகாசம் கொண்ட கடனாகவும் (5 ஆண்டுகள் வரை) ஊக்கத்தொகையாகவும் வழங்கப்படுகிறது.
- NCDC ஆனது பல திட்ட நடவடிக்கைகளுக்காக தவணை/காலநிறைவுக் கடனுக்கான அதற்கேற்ற வட்டி விகிதத்தில் 2% வட்டி மானியத்தை வழங்குகிறது.



## ஹென்டர்சன் கோட்பாடு குறித்து உச்ச நீதிமன்றம்

- **The pre-requisites which are necessary for Res Judicata are:**

  1) There must be a final judgment;

  2) The judgment must be on the merits;

  3) The claims must be the same in the first and second suits;

  4) The parties in the second action must be the same as those in the first, or have been represented by a party to the prior action.

- சமீபத்திய வழக்கில், உச்ச நீதிமன்றம் ஆனது ஹென்டர்சன் கோட்பாட்டை விளக்கி உள்ளது.
- இது உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் (CPC) 11வது பிரிவின் விளக்கத்தின் IVவது விளக்கத்தில் குறிப்பிடப்பட்ட மிகவும் ஆக்கப்பூர்வமான Res-judicata என்ற இந்தியக் கோட்பாட்டின் காரணமாக தோன்றியதாகும்.
- இது 1843 ஆம் ஆண்டில் நடைபெற்ற சேன்சரி நீதிமன்றம் மற்றும் ஹென்டர்சன் vs ஹென்டர்சன் இடையிலான வழக்கில் முன்மொழியப்பட்டது.
- ஒரே விவகாரத்திலிருந்து எழும் அனைத்துப் பிரச்சினைகளும் ஒரே வழக்கில் தீர்க்கப் பட வேண்டும் என்று நீதிமன்றம் குறிப்பிட்டது.
- இது மீண்டும் மீண்டும் உருவாகின்ற மற்றும் அலைக்கழிக்கும் சட்ட சவால்களைத் தடுக்கும்.
- தகுதி வாய்ந்த அதிகார வரம்பு கொண்ட நீதிமன்றத்தினால் ஒரு விவகாரம் குறித்து தீர்ப்பளிக்கப்பட்டால், இவ்வழக்குதாரர்கள் முந்தைய வழக்காடல் நடவடிக்கைகளில் எழுப்பப் பட்ட சில பிரச்சினைகளை மீண்டும் வழக்காடுவதற்கு அலட்சியம் அல்லது கவனக் குறைவு என எதையும் பொருட்படுத்தாமல் தடைசெய்யப்படும் என்று உச்ச நீதிமன்றம் குறிப்பிட்டது.
- Res Judicata என்பது "ஏற்கனவே முடிவு செய்யப்பட்ட ஒரு விவகாரம்" என்று பொருள் படுகிறது.
- இது கீழ்க்காணும் சூழல்களில் பொருந்தும்:
  - முன்னர் முடிவு செய்யப்பட்ட ஒரு விவகாரத்துடன் நேரடியாகவோ குறிப்பிட்ட வகையிலோ பிரச்சினையாக இருந்தால்,
  - வழக்கு தாரர்கள் ஒரே மாதிரியாகவோ அல்லது அதே கருத்துருவின் கீழ் உரிமை கோருவதாகவோ இருந்தால்,
  - முந்தைய ஒரு முடிவினை மேற்கொண்ட நீதிமன்றம் அந்த வழக்கை விசாரிக்க தகுதியானதாக இருந்தால் இது பொருந்தும்.

## பாராளுமன்ற கூட்டுக் குழு 2024 - ஒரே நாடு ஒரே தேர்தல்

- மக்களவை மற்றும் சட்டசபைகளுக்கு தேர்தல்களை ஒரே நேரத்தில் நடத்துவதற்கான அரசியலமைப்பு திருத்த வரைவு மசோதாக்களை பாராளுமன்றக் கூட்டுக் குழுவின் மதிப்பாய்விற்கு (JPC) பரிந்துரைப்பதற்கான ஒரு தீர்மானத்தினை மக்களவை ஏற்றுக் கொண்டுள்ளது.

- இந்த JPC குழுவானது, மக்களவையில் இருந்து 27 மற்றும் மாநிலங்களவையில் இருந்து 12 உறுப்பினர்களுடன் என மொத்தம் 39 உறுப்பினர்களைக் கொண்டிருக்கும்.
- இது பாஜக பாராளுமன்ற உறுப்பினரான PP சௌத்ரியால் தலைமை தாங்கப் படும்.
- ஒரு விவகாரம் அல்லது மசோதாவின் மீதான விரிவான ஆய்வு போன்ற ஒரு சிறப்பு நோக்கத்திற்காக பாராளுமன்றத்தினால் ஒரு கூட்டுப் பாராளுமன்றக் குழு அமைக்கப் படுகிறது.
- பெயருக்கு ஏற்றாற்போல், இது இரு அவைகளின் உறுப்பினர்களையும், ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களையும் கொண்டுள்ளது.
- அதன் பதவிக்காலம் முடிவடைந்ததும் அல்லது அதன் பணி முடிந்ததும் அது உடனே கலைக்கப் படுகிறது.
- ஆனாலும் அரசாங்கம் இக்குழுவின் பரிந்துரைகளுக்குக் கட்டுப்பட்டதல்ல.
- இக்குழு வழங்கிய மதிப்பீடுகளின் அடிப்படையில் அரசாங்கமானது மேற்கொண்டு பரிசீலனைகளைத் தொடங்கலாம், ஆனால் அவ்வாறு செய்ய இந்தக் குழு அரசினைக் கட்டாயப்படுத்த முடியாது.




## மேற்கூரை சூரிய மின்னாற்றல் உற்பத்தி அமைப்பு நிறுவல்கள்

- பிரதான் மந்திரி சூர்யா கர் முஃப்த் பிஜிலி யோஜனா என்ற திட்டத்தின் கீழ், குஜராத், மகாராஷ்டிரா, மற்றும் உத்தரப் பிரதேசம் ஆகியவை மிக அதிக எண்ணிக்கையிலான மேற்கூரை சூரிய மின்னாற்றல் உற்பத்தி அமைப்பின் நிறுவல்களைக் கொண்ட முதல் மூன்று மாநிலங்களாக உருவெடுத்துள்ளன.
- இத்திட்டத்தின் கீழ், இந்த நிறுவல்கள் ஆனது 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் 10 லட்சம் எண்ணிக்கையினைத் தாண்டும் எனவும், அக்டோபர் மாதத்திற்குள் 20 லட்சம் என்ற எண்ணிக்கையில் இருமடங்காக உயரும் எனவும், 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் 40 லட்சம் எண்ணிக்கையினை எட்டும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.
- இன்றுவரை நிறுவப்பட்டுள்ள மொத்த நிறுவல்களில் சுமார் 88 சதவீதமானது ஆறு மாநிலங்களில் நிறுவப்பட்டுள்ளன.

- 55,000க்கும் மேற்பட்ட நிறுவல்களுடன் கேரளா நான்காவது இடத்திலும், 21,000க்கும் மேற்பட்ட நிறுவல்களுடன் தமிழ்நாடு ஐந்தாவது இடத்திலும், அதனைத் தொடர்ந்து 20,000க்கும் அதிகமான நிறுவல்களுடன் இராஜஸ்தானும் இதில் இடம் பெற்றுள்ளது.
- இந்தத் திட்டம் 1,000 பில்லியன் அலகு மின்சாரத்தை உற்பத்தி செய்யவும், கார்பன் டை ஆக்சைடு உமிழ்வை 720 மில்லியன் டன்கள் குறைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.




## பட்டியலிடப்பட்ட சாதியினருக்கு எதிரான வன்கொடுமைகள்




- பட்டியலிடப்பட்ட சாதியினருக்கு எதிரான வன்கொடுமை வழக்குகளைத் திறம்படத் தீர்ப்பதற்குத் தேவையான பல வழிமுறைகளை பல மாநிலங்கள் நிறுவத் தவறியது குறித்து பாராளுமன்றக் குழு கவலை தெரிவித்துள்ளது.

- உரிமையியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் 1955, மற்றும் பட்டியலிடப்பட்டச் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டம், 1989 ஆகியவற்றின் கீழ் தேவையான செயல்முறைகளை செயல்படுத்துவதிலும் அவற்றை பலப்படுத்துவதிலும் பெரிய இடைவெளிகள் உள்ளன.
- மத்தியப் பிரதேசம், இராஜஸ்தான், பீகார் மற்றும் ஒடிசா போன்ற மாநிலங்கள் இதற்கான நிதிப் பயன்பாட்டில் தொடர்ந்து பின்தங்கியதாகவும், விதிமுறைகளின் செயல்படுத்தல் இலக்குகளை அடைவதில் எந்தவித உதவியும் இன்றி தனித்து விடப் பட்டன.

## பாதுகாக்கப்பட்டப் பகுதி நிலை 2024




- வெளிநாட்டினரின் நடமாட்டத்தைக் கண்காணிப்பதற்காக மணிப்பூர், நாகாலாந்து மற்றும் மிசோரம் ஆகிய சில மாநிலங்களில் பாதுகாக்கப்பட்ட பகுதி முறையை (PAR) மத்திய உள்துறை அமைச்சகம் மீண்டும் அமல்படுத்தியுள்ளது.
- இம்மூன்று வடகிழக்கு மாநிலங்களுக்குச் செல்லும் வெளிநாட்டினர் அரசாங்கத்திடம் முன் அனுமதி மற்றும் சிறப்பு அனுமதி பெற வேண்டும்.
- அவர்கள் 1958 ஆம் ஆண்டு வெளிநாட்டினர் (பாதுகாக்கப்பட்ட பகுதிகள்) ஆணையின் படி அவசியமான பாதுகாக்கப்பட்ட பகுதி அனுமதிகளை (PAP) பெற வேண்டும்.
- 14 ஆண்டுகால இடைவெளிக்குப் பிறகு இந்த முறையானது திரும்பக் கொண்டு வரப் பட்டு உள்ளது.
- மியான்மரின் எல்லையில் உள்ள இம்மூன்று மாநிலங்களில் 2010 ஆம் ஆண்டில் PAR முதலில் ஓராண்டிற்கு தளர்த்தப்பட்டது, பின்னர் இந்த உத்தரவின் செல்லுபடி காலம் ஐந்து ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்டது.

- 2022 ஆம் ஆண்டு டிசம்பர் 16 ஆம் தேதியன்று பிறப்பிக்கப்பட்ட சமீபத்திய PAR உத்தரவு ஆனது, 2027 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை செல்லுபடியாகும்.

## e-Shram இணைய தளத்தில் பதிவு

- கடந்த மூன்று ஆண்டுகளில் சுமார் 30 கோடிக்கும் அதிகமான தொழிலாளர்கள் e-Shram இணைய தளத்தில் பதிவு செய்துள்ளனர்.
- 2014-15 ஆம் ஆண்டில் சுமார் 15.84 கோடி பேர் பதிவு செய்திருந்தனர், ஆனால் 2023-24 ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 29 கோடியாக உயர்ந்துள்ளது.
- e-Shram இணைய தளம் ஆனது, அமைப்புசாராத தொழிலாளர்களுக்கு ஆதரவளிக்கச் செய்வதற்காகவும் அதிகாரமளிப்பதற்காகவும் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகத்தினால் 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 26 ஆம் தேதியன்று தொடங்கப்பட்டது.
- 2024 ஆம் ஆண்டு டிசம்பர் 19 ஆம் தேதிக்குள், e-Shram இணைய தளத்தில் 30,48,02,313 பதிவுகள் பதிவாகியுள்ளன.
- எனவே, அமைப்புசாராத தொழிலாளர்களின் உலகின் மிகப்பெரிய தரவுதளமாக இது உருவெடுத்துள்ளது.




## இந்தியக் காடுகளின் நிலை குறித்த அறிக்கை 2023

- இந்திய வனக் கணக்கெடுப்பு அமைப்பினால் மேற்கொள்ளப்படும், இரண்டாண்டிற்கு ஒரு முறை மேற்கொள்ளப்படும் மதிப்பீடு ஆன 18வது இந்தியக் காடுகளின் நிலை குறித்த ஒரு அறிக்கையானது (ISFR) ஓராண்டிற்கும் மேலான தாமதத்திற்குப் பிறகு வெளியிடப்பட்டுள்ளது.
- சமீபத்திய அறிக்கையின்படி, 24.62 சதவீதத்தில் இருந்த இந்தியாவின் மொத்தக் காடு மற்றும் மரங்களின் பரப்பளவு ஆனது 2023 ஆம் ஆண்டில் 25.17 சதவீதமாக அதிகரித்து உள்ளது.
- முதன்முறையாக வேளாண் காடு வளர்ப்பின் கீழ் வளர்க்கப்படும் மரங்களும் இதில் கணக்கில் எடுக்கப்பட்டுள்ளன.
- 2023 ஆம் ஆண்டு ISFR அறிக்கையில் பதிவான காடுகளின் பரப்பளவு மற்றும் மரங்களின் பரப்பளவு 25.17 சதவீதமாக இருந்தது.

- ❖ மொத்தக் காடுகளின் பரப்பளவு 7,15,342.61 சதுர கிலோமீட்டர் ஆகும் என்ற நிலையில் இது நாட்டின் புவியியல் பரப்பளவில் 21.76 சதவீதமாகும்.
- ❖ இந்த இரண்டையும் கணக்கில் கொண்டு கூறுகையில், மொத்தக் காடுகள் மற்றும் மரங்களின் பரப்பளவு 8,27,356.95 சதுர கிலோ மீட்டர் ஆகும்.
- ❖ நாட்டின் புவியியல் பரப்பில் 3.41 சதவீதம் மரங்கள் உள்ளன.
- ❖ காடு மற்றும் மரங்களின் பரப்பில் அதிகபட்ச அதிகரிப்புப் பதிவாகியுள்ள முதல் நான்கு மாநிலங்கள் சத்தீஸ்கர் (684 ச. கிமீ), உத்தரப் பிரதேசம் (559 ச. கிமீ), ஒடிசா (559 ச. கிமீ) மற்றும் இராஜஸ்தான் (394 ச. கிமீ) ஆகியவையாகும்.
- ❖ காடுகளின் பரப்பில் அதிகபட்ச அதிகரிப்பு பதிவாகியுள்ள முதல் மூன்று மாநிலங்கள் மிசோரம் (242 ச. கிமீ), குஜராத் (180 ச. கிமீ) மற்றும் ஒடிசா (152 ச. கிமீ) ஆகியவையாகும்.
- ❖ பரப்பளவு வாரியாக மிகப்பெரிய காடு மற்றும் மரங்களின் பரவல் கொண்ட முதல் மூன்று மாநிலங்கள் மத்தியப் பிரதேசம் (85,724 ச. கிமீ), அருணாச்சலப் பிரதேசம் (67,083 ச. கிமீ) மற்றும் மகாராஷ்டிரா (65,383 ச. கிமீ) ஆகியவையாகும்.
- ❖ மொத்தப் புவியியல் பரப்பளவில் காடுகளின் பரவல் சதவீதத்தின் அடிப்படையில், லட்சத்தீவு (91.33 சதவீதம்) அதிகப் பரவலைக் கொண்டுள்ள நிலையில் அதைத் தொடர்ந்து மிசோரம் (85.34 சதவீதம்) மற்றும் அந்தமான் & நிக்கோபார் தீவு (81.62 சதவீதம்) ஆகியவை இடம் பெற்றுள்ளன.
- ❖ இந்தியாவின் மொத்த சதுப்புநிலப் பரப்பு 4,992 சதுர கிலோ மீட்டர் ஆகும்.







## குளிர்காலக் கூட்டத்தொடர் 2024

- ❖ பாராளுமன்றத்தின் இரு அவைகளின் குளிர்காலக் கூட்டத் தொடரும் தேதி எதுவும் அறிவிக்கப் படாமல் ஒத்தி வைத்ததுடன் முடிவடைந்துள்ளது.
- ❖ இந்தக் கூட்டத் தொடரில் அரசியலமைப்புச் சட்டத்தின் 75வது ஆண்டு நிறைவு விழா அனுசரிப்பு, மாநிலங்களவைத் தலைவருக்கு எதிராக எதிர்க்கட்சிகள் கொண்டு வந்த நம்பிக்கையில்லா தீர்மானம் மீதான விவாதம் ஆகியவை இடம் பெற்றன.

- "ஒரு தேசம் ஒரு தேர்தல்" திட்டத்தினை நடைமுறைக்கு கொண்டு வருவதற்காக மேற் கொள்ளப் படும் அரசியலமைப்பு (129) திருத்த மசோதா, 2024 மற்றும் ஒன்றியப் பிரதேசங்கள் சட்டங்கள் (திருத்தம்) மசோதா, 2024 போன்ற விவாதத்திற்குரிய மசோதாக்களை அரசாங்கம் அறிமுகப்படுத்தியது.
- மக்களவையில் வெறும் நான்கு மசோதாக்களும், மாநிலங்களவையில் வெறும் மூன்று மசோதாக்களும் மட்டுமே நிறைவேற்றப்பட்டன.
- இதில் மக்களவையின் செயல்பாட்டுத் திறன் 54.5% ஆகவும், மாநிலங்களவையின் செயல்பாட்டுத் திறன் 40% ஆகவும் இருந்தது.
- பட்டியலிடப்பட்ட 16 மசோதாக்களில், பாரதிய வாயுயான் விதேயக், 2024 என்ற ஒரே ஒரு மசோதா மட்டுமே இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்டது.
- மக்களவையின் முதல் ஆறு மாதங்களில் ஒரே ஒரு மசோதா மட்டுமே நிறைவேற்றப்ப ட்டது.
- கடந்த ஆறு மக்களவைகளுடன் ஒப்பிடுகையில் இது மிகக் குறைந்த செயல்திறன் கொண்டதாகும்.
- மாநிலங்களவையில், மொத்தம் 19 நாட்களில் 15 நாட்கள் அளவிலான கேள்வி நேரம் செயல்படுத்தப்படவில்லை.
- மக்களவையில், 20 நாட்களுள் 12 நாட்களில் 10 நிமிடங்களுக்கு மேல் கேள்வி நேரம் செயல்படுத்தப்படவில்லை.
- மக்களவையில் தனிநபர் மசோதா குறித்த விவாதங்கள் எதுவும் மேற்கொள்ளப் படவில்லை மற்றும் மாநிலங்களவையில் ஒரு தீர்மானம் மட்டுமே விவாதிக்கப்பட்டது.




## குடியரசு தின அணிவகுப்பு 2025

- அடுத்த ஆண்டு ஜனவரி 26 ஆம் தேதியன்று நடைபெற உள்ள குடியரசு தின அணிவகுப்பிற்காக 15 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களின் அணிவகுப்பு காட்சி வாகனங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.
- டெல்லி மாநில அரசின் அணிவகுப்பு காட்சி வாகனத்திற்கான முன்மொழிவு ஆனது, நான்காவது ஆண்டாக நிபுணர் குழுவால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

- மிசோரம் மற்றும் சிக்கிம் ஆகிய மாநிலங்கள் அதற்கான முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்கவில்லை அதே நேரத்தில் அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகள் மற்றும் லட்சத்தீவுகள் அணிவகுப்பு காட்சி வாகனங்களுக்கான தேர்வில் பங்கேற்கவில்லை.
- 2024, 2025 மற்றும் 2026 ஆம் ஆண்டுகளில் மூன்று ஆண்டு ஒப்பந்தம் கையொப்பமிடப் பட்ட நிலையில் இதன் படி ஒவ்வொரு மாநிலமும் ஒன்றியப் பிரதேசமும் இந்த மூன்று ஆண்டுகளில் ஒரு முறையாவது தனது காட்சி வாகனங்களை காட்சிப் படுத்துவதற்கு வாய்ப்பினைப் பெறும்.
- இருபது ஆண்டுகளில் டெல்லி ஏழு முறை அணிவகுப்பு காட்சி வாகனங்களை காட்சிப் படுத்தியதோடு குஜராத் மற்றும் உத்தரப்பிரதேசம் ஆகியவை அவற்றின் அணிவகுப்பு காட்சி வாகனங்களைக் காட்சிப் படுத்துவதற்கு மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.



## 1961 ஆம் ஆண்டு தேர்தல் நடத்தை விதிகளில் திருத்தம்

- மத்திய அரசானது, தேர்தல் ஆவணங்களின் ஒரு பிரிவினை பொதுமக்கள் அணுகுவதன் மீது கட்டுப்பாட்டினை விதிக்கும் வகையில் தேர்தல் நடத்தை விதிகளை திருத்தியமைத்துள்ளது.
- இந்தியத் தேர்தல் ஆணையத்தின் ஒரு முக்கியப் பரிந்துரையைத் தொடர்ந்து சட்டத் துறை அமைச்சகம் வெளியிட்ட ஒரு அறிவிப்பின் மூலம் இது நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டு உள்ளது.
- முன்னதாக, 1961 ஆம் ஆண்டு தேர்தல் நடத்தை விதிகளின் 93(2)(a) விதியில், "தேர்தல் தொடர்பான மற்ற அனைத்து ஆவணங்களும் பொது மக்களின் ஒரு மதிப்பாய்விற்கு உட்படுத்தப் படும்" என்று கூறப்பட்டது.
- இந்தத் திருத்தத்திற்குப் பிறகு, தற்போது அது, "இந்த விதிகளில் குறிப்பிடப் பட்டுள்ள படி தேர்தல் தொடர்பான அனைத்து ஆவணங்களும் பொது மக்களின் பெரும் மதிப்பு ஆய்விற்கு உட்படுத்தப்படும்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.
- ஹரியானா மாநிலச் சட்டமன்றத் தேர்தல் தொடர்பான அனைத்து ஆவணங்களையும் பகிருமாறு இந்தியத் தேர்தல் ஆணையத்திற்கு பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர் நீதிமன்றம் சமீபத்தில் வழங்கிய வழிகாட்டுதலைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது.

- ❖ 1961 ஆம் ஆண்டு தேர்தல் நடத்தை விதிகள் என்பவை 1951 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் கீழ் வரும்.



New changes

The Centre has amended Conduct of Election Rules to restrict public access to a section of poll documents

- The Election Commission says the rule mentions election papers and does not specifically refer to electronic records. In order to remove this ambiguity, the rule has been amended to safeguard misuse of CCTV footage from inside the polling stations
- The move comes after a recent direction to the EC by the Punjab and Haryana High Court to share all documents related to Haryana Assembly Elections, including CCTV footage

## கிராமப்புற வீடுகளுக்கு குடிநீர் குழாய் இணைப்பு வசதி

- ❖ மத்திய அரசானது, முழுமையாக ஒரு குடிநீர் குழாய் இணைப்பு வசதியினைப் பெறாத கிராமப்புற வீடுகளைக் கொண்டுள்ள மாநிலங்களில் அந்த வசதிகளை ஏற்படுத்தச் செய்வதற்காக அந்தந்த மாநில அரசுகளுடன் இணைந்து மிகத் தீவிரமாக செயல்பட்டு வருகிறது.
- ❖ சுமார் 79% (15,37,22,950) கிராமப்புறக் குடும்பங்களுக்கு இதுவரையில் குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.
- ❖ 19 கோடிக்கும் அதிகமான கிராமப்புறக் குடும்பங்கள் இந்த வசதி வழங்கீட்டிற்காக அடையாளம் காணப்பட்டுள்ளன.



- மாநிலங்களில், மேற்கு வங்காளம் 53.9% என்ற குறைவான குடிநீர் குழாய் இணைப்பு வசதியினைக் கொண்டுள்ளது.
- அதைத் தொடர்ந்து கேரளா 54.13%, ஜார்க்கண்ட் 54.62% மற்றும் இராஜஸ்தான் 54.95% இடம் பெற்றுள்ளன.
- ஜல் ஜீவன் இயக்கத்தின் கீழ், பதினொரு மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்கள் முழுமையான 100 சதவீத குடிநீர் குழாய் இணைப்பினைப் பெற்றுள்ளன.

## உள்நாட்டுப் புலம்பெயர்ந்தோரின் எண்ணிக்கை 2011 – 2023

| STATES TO | % of Total Passengers 2023 | % of Total Passengers 2012 | Statewise In-migrants [Census 2011] | % of Total In-Migrants [Census 2011] |
|---|---|---|---|---|
| UTTAR PRADESH | 12.65 | 13.16 | 56452083 | 12.39 |
| MAHARASHTRA | 10.74 | 12.34 | 57376776 | 12.59 |
| WEST BENGAL | 7.33 | 5.00 | 33448472 | 7.34 |
| RAJASTHAN | 7.19 | 6.17 | 22071482 | 4.84 |
| MADHYA PRADESH | 6.75 | 6.89 | 24736119 | 5.43 |
| BIHAR | 6.54 | 6.47 | 27244369 | 5.98 |
| KARNATAKA | 6.36 | 5.84 | 26463170 | 5.81 |
| TAMIL NADU | 6.08 | 5.89 | 31274107 | 6.86 |
| ANDHRA PRADESH | 5.73 | 6.64 | 38360644 | 8.43 |
| DELHI | 5.16 | 5.38 | 7224514 | 1.59 |
| GUJARAT | 5.10 | 6.00 | 26898286 | 5.90 |
| TELANGANA | 3.60 | 3.79 | | 0.00 |

- 2011 மற்றும் 2023 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் உள்நாட்டுப் புலம்பெயர்ந்தோரின் எண்ணிக்கை சுமார் 12% குறைந்து 40.20 கோடியாக உள்ளது.
- இம்மதிப்பீட்டின்படி, 2023 ஆம் ஆண்டு நிலவரப்படி உள்நாட்டில் புலம்பெயர்ந்தோரின் மொத்த எண்ணிக்கை 40,20,90,396 ஆக உள்ளது.
- 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி (45,57,87,621) கணக்கிடப்பட்ட புலம்பெயர்ந்தோரின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் இது சுமார் 11.78% குறைவு ஆகும்.
- 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி மொத்த மக்கள் தொகையில் சுமார் 37.64% ஆக இருந்த புலம்பெயர்வு விகிதம் ஆனது 28.88% ஆகக் குறைந்துள்ளதாக மதிப்பிடப் பட்டுள்ளது.
- புலம் பெயர்தலுக்கான மூல மையங்களைக் கொண்ட மாவட்டங்கள் டெல்லி, மும்பை, சென்னை, பெங்களூர், கொல்கத்தா போன்ற முக்கிய நகர்ப்புற அமைப்புகளில் உள்ளன.
- 2011 ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி, உத்தரப் பிரதேசம், மகாராஷ்டிரா, ஆந்திரப் பிரதேசம், பீகார் மற்றும் மேற்கு வங்காளம் போன்ற ஐந்து மாநிலங்கள் ஆனது மொத்த வெளியேற்ற புலம்பெயர்வோரின் எண்ணிக்கையில் 48% பங்கினை கொண்டுள்ளன.
- இதே போல், மகாராஷ்டிரா, உத்தரப் பிரதேசம், ஆந்திரப் பிரதேசம், மேற்கு வங்காளம் மற்றும் தமிழ்நாடு போன்ற ஐந்து மாநிலங்கள் மொத்த உள்வரும் புலம்பெயர்வோரின் எண்ணிக்கையில் சுமார் 48% பங்கினைக் கொண்டுள்ளன.
- 1991 முதல் 2001 ஆம் ஆண்டு வரையிலான காலக் கட்டத்தில், புலம்பெயர்ந்தோரின் எண்ணிக்கையின் கூட்டு வருடாந்திர வளர்ச்சி விகிதம் 2.7% ஆக இருந்தது.
- இது 2001 முதல் 2011 ஆம் ஆண்டு வரையிலான காலக் கட்டத்தில் 3.7% ஆக அதிகரித்து உள்ளது.

## வேளாண்மை குறித்த பாராளுமன்ற நிலைக் குழு 2024




- குறைந்தபட்ச ஆதரவு விலையில் சட்டப்பூர்வ உத்தரவாதத்தை நடைமுறைப் படுத்தச் செய்வதற்குப் பாராளுமன்றக் குழு பரிந்துரைத்துள்ளது.
- பஞ்சாப் மாநிலத்தின் முன்னாள் முதல்வர் சரண்ஜித் சிங் சன்னி தலைமையில் இந்தக் குழு அமைக்கப்பட்டுள்ளது.
- விவசாயிகள் கறவை மாடுகள் வகை சாரா கால்நடைகளை வளர்ப்பதற்கு மானியம் வழங்க இது பரிந்துரைத்துள்ளது.
- கால்நடைகளுக்கு காப்பீடு செய்வதற்கான நிதி ஒதுக்கீட்டை அதிகரிக்குமாறு மத்திய அரசை இக்குழு கேட்டுக் கொண்டது.
- ஏற்கனவே 193.46 மில்லியன் கால்நடைகள் மற்றும் 109.85 மில்லியன் எருமை மாடுகள் என்ற அளவிலான தெருக்களில் ஆதரவற்று விடப்பட்ட கால்நடைகளின் மிகப்பெரும் எண்ணிக்கையானது மேலும் அதிகரிப்பதைத் தடுக்க வேண்டும் என்றும் இக்குழு கூறி உள்ளது.
- பயிர் எச்சம் அல்லது தாளடிகளை எரிப்பதைத் தடுப்பதற்காக விவசாயிகள் அவற்றை முறையாக நிர்வகிப்பதற்கும் அகற்றுவதற்கும் இழப்பீடு வழங்க வேண்டும் என்று குழு பரிந்துரைத்துள்ளது.
- PM-KISAN சம்மான் நிதி திட்டத்தின் கீழ் வழங்கப்படும் பண உதவியை ஆண்டிற்கு 6,000 ரூபாயில் இருந்து 12,000 ரூபாயாக அதிகரிக்க குழு முன்மொழிந்துள்ளது.
- விவசாயிகளின் துயரம் மற்றும் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாமல் தற்கொலை செய்து கொள்வதைத் தடுக்க விவசாயிகள் மற்றும் வேளாண் தொழிலாளர்களின் கடன்களைத் தள்ளுபடி செய்யும் திட்டத்தை அறிமுகப்படுத்துமாறு இது கோரியுள்ளது.
- 2 ஏக்கர் வரை நிலம் வைத்திருக்கும் சிறு விவசாயிகளுக்குக் கட்டாயப் பொதுப் பயிர்க் காப்பீட்டை அறிமுகப்படுத்தவும் இக்குழு பரிந்துரைத்துள்ளது.

## கட்டாயத் தேர்ச்சிக் கொள்கை

- மத்திய அரசானது, தன்னால் நிர்வகிக்கப்படும் பள்ளிகளில் கட்டாயத் தேர்ச்சிக் கொள்கையினை ரத்து செய்துள்ளது.
- இதில் கேந்திரிய வித்யாலயாக்கள் மற்றும் ஜவஹர் நவோதயா வித்யாலயாக்கள் அடங்கும்.

- ❖ இது ஆண்டு இறுதித் தேர்வில் தேர்ச்சி பெறாத 5 மற்றும் 8 ஆம் வகுப்பில் பயிலும் மாணவர்களை அதே வகுப்பில் நிறுத்தி வைக்க வழிவகுக்கிறது.
- ❖ 2009 ஆம் ஆண்டு கல்வி உரிமைச் சட்டமானது 2019 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டது என்ற நிலையில் இது 5 மற்றும் 8 ஆம் வகுப்புகளில் உள்ள குழந்தைகளுக்கானக் கட்டாயத் தேர்ச்சி முறை குறித்து "பொருத்தமான அரசாங்கம்" முடிவு செய்ய வழி வகுக்கும் என்ற ஒரு விதியைச் சேர்த்தது.
- ❖ பள்ளிக் கல்வி என்பது மாநிலப் பட்டியலில் அடங்கும் என்பதால், மாநில அரசுகள் இது தொடர்பாக முடிவெடுக்கலாம்.
- ❖ ஏற்கனவே 16 மாநிலங்கள் மற்றும் டெல்லி உட்பட 2 ஒன்றியப் பிரதேசங்கள் இந்த இரண்டு வகுப்பினருக்கும் கட்டாயத் தேர்ச்சிக் கொள்கையினை ரத்து செய்துள்ளன.




## பாதுகாப்பு தொடர்பான பாராளுமன்ற நிலைக்குழு 2024

- ❖ 2017-22 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் நடைபெற்ற இந்திய விமானப் படை (IAF) சம்பந்தப்பட்ட 34 விமான விபத்துகளில், 19 விபத்துகள் ஆனது மனிதப் பிழை (விமானி) காரணமாக ஏற்பட்டது.
- ❖ நாட்டின் முதல் பாதுகாப்புப் படைத் தலைவர் (CDS) ஜெனரல் பிபின் ராவத் உயிரிழந்த Mi-17 ஹெலிகாப்டர் விபத்தும் இதில் அடங்கும்.
- ❖ அந்த அமைச்சகத்தின் அறிக்கையானது 10,000 பறக்கும் மணி நேரத்திற்கு எத்தனை விபத்துகள் என்ற விகிதத்தில் நிலையான சரிவு பதிவாகியுள்ளதாகக் குறிப்பிட்டது என்ற நிலையில் இது 0.93 (2000-2005) என்ற விகிதத்திலிருந்து 0.27 (2017-2022) ஆகக் குறைந்தது.

- மேம்படுத்தப்பட்ட பாதுகாப்பு நெறிமுறைகளைப் பிரதிபலிக்கும் வகையில், 2020–2024 ஆம் ஆண்டிற்கான தற்போதைய விகிதம் 0.20 ஆக உள்ளது.




## TRAI ஆணையத்தின் புதிய தொலைத்தொடர்பு விதிமுறைகள் 2024

- இந்தியத் தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம் (TRAI) ஆனது, சமீபத்தில் 2024 ஆம் ஆண்டு தொலைத்தொடர்பு நுகர்வோர் பாதுகாப்பு (பன்னிரண்டாவது திருத்தம்) விதிமுறைகளை வெளியிட்டுள்ளது.
- குறுஞ்செய்தி (SMS) மற்றும் தொலைபேசி அழைப்புப் பலன்களை மட்டுமே கொண்டு கட்டணத் திட்டங்களை வழங்குமாறு சேவை வழங்கீட்டு நிறுவனங்களுக்கு இதில் வலியுறுத்தப்பட்டுள்ளது.
- இந்த நடவடிக்கையானது சுமார் 150 மில்லியன் 2G பயனர்களுக்கும் இரண்டு SIM அட்டைகளை வைத்திருப்பவர்களுக்கும் உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- இது பயனர்கள் தாங்கள் பயன்படுத்த விரும்பும் சேவைகளுக்கு மட்டுமே பணம் செலுத்த வழி வகுக்கிறது.
- TRAI நிறுவனமானது வாடிக்கையாளர்கள் பயன்பெறும் வகையில் சிறப்புக் கட்டணத் திட்டங்களின் (STV) செல்லுபடிக் காலத்தினை 90 நாட்களில் இருந்து 365 நாட்களாக அதிகரிக்குமாறும் தொலைத்தொடர்பு நிறுவனங்களுக்கு வலியுறுத்தியுள்ளது.

## புதிய நுகர்வோர் பாதுகாப்புச் செயலிகள்

- நுகர்வோர் பாதுகாப்பினை மேம்படுத்துவதற்கும், நீதிக்கான எண்ணிம அணுகலை மேம்படுத்துவதற்காகவும் வேண்டி புதுப்பிக்கப்பட்ட ஜாக்ரிதி செயலியை அரசாங்கம் அறிமுகப் படுத்தி யுள்ளது.
- இந்தச் செயலியானது, மிகப் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட 'ஜாகோ கிரஹக் ஜாகோ செயலி' மற்றும் 'ஜாக்ரிதி முகப்பு பக்கம்' ஆகியவற்றுடன் சேர்த்து அறிமுகப் படுத்தப் பட்டுள்ளது.

- இணைய வழி வணிக தளங்களில் நெறிமுறை சாராத கருத்துத் திணிப்புகளை அடையாளம் கண்டு நிவர்த்தி செய்வதற்கான செயற்கருவிகளுடன் நுகர்வோரை சித்தப்படுத்துவது, நியாயமான நடைமுறைகள் மற்றும் நுகர்வோர் உரிமைகள் பாதுகாப்பை உறுதி செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- கூடுதலாக, செயற்கை நுண்ணறிவு மூலம் இயக்கப்படும் NCH 2.0 நுட்பத்தினைக் கொண்ட புதுப்பிக்கப்பட்ட தேசிய நுகர்வோர் உதவி எண் தளமும் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.
- இயற்கை முறை உணவு சோதனை ஆய்வகம் மற்றும் குறைந்த மின்னழுத்த மின் விசை தொகுப்புச் சோதனை வசதி ஆகியவை முறையே கௌகாத்தி மற்றும் மும்பையில் உள்ள தேசியப் பரிசோதனை மன்றத்தில் தொடங்கப்பட்டுள்ளன.

## இந்தியாவில் பெருகி வரும் மின்னணுக் கழிவுகள்

- கடந்த ஐந்தாண்டுகளில் இந்தியாவில் மின்னணுக் கழிவுகளின் (மின்-கழிவு) உற்பத்தி அதிகரித்துள்ளதோடு 2019-20 ஆம் ஆண்டில் 1.01 மில்லியன் மெட்ரிக் டன்னாக (MT) இருந்த இது 2023-24 ஆம் ஆண்டில் 1.751 மில்லியன் மெட்ரிக் டன்னாக உயர்ந்துள்ளது.
- தேசிய அளவிலான புள்ளி விவரங்கள், 2019-20 ஆம் ஆண்டில் இருந்து மின்னணுக் கழிவு உற்பத்தி 72.54 சதவீதம் அதிகரித்துள்ளது என்று கூறுகின்றன.
- 2019-20 ஆம் ஆண்டில் 22 சதவீதமாக இருந்த மின்னணுக் கழிவுகளின் விகிதம் ஆனது 2023-24 ஆம் ஆண்டில் 43 சதவீதமாக உயர்ந்துள்ளது.
- இந்த அதிகரிப்பு பதிவான போதிலும், 990,000 மெட்ரிக் டன்களுக்குச் சமமான சுமார் 57 சதவீத மின்னணுக் கழிவுகள் நாட்டில் செயல்முறைக்கு உட்படுத்தாமல் உள்ளன.




### ஏக்லவ்யா பள்ளிகளில் PVTG உள் ஒதுக்கீடு

- மத்திய அரசானது, 2019 ஆம் ஆண்டில், ஏக்லவ்யா மாதிரி உறைவிடப் பள்ளிகளின் (EMRS) சேர்க்கையில், எளிதில் பாதிக்கப்படக்கூடிய பழங்குடியினக் குழுவினர்களுக்கு (PVTG) 5% உள் ஒதுக்கீட்டினை அறிமுகப்படுத்தியது.
- PVTG சமூகங்களைச் சேர்ந்த அனைத்து EMRS பள்ளி மாணவர்களில் வெறும் 3.4% பேர் மட்டுமே உள்ள பள்ளிகள் இந்த ஒதுக்கீட்டைப் பூர்த்தி செய்ய சிரமப்படுகின்றன என்று

சமீபத்தியத் தரவு காட்டுகிறது.

- இந்த ஆண்டு அக்டோபர் மாதம் வரையில் அனைத்துச் செயல்பாட்டில் உள்ள 407 EMRSகளைச் சேர்ந்த 1,30,101 மாணவர்களில் 4,480 பேர் PVTG சமூகத்தைச் சேர்ந்தவர்கள்.
- மத்தியப் பிரதேசம், சத்தீஸ்கர், ஒடிசா, குஜராத் ஆகிய மாநிலங்கள் 5% PVTG மாணவர் இட ஒதுக்கீட்டைப் பூர்த்தி செய்யப் போராடுகின்றன.
- மத்தியப் பிரதேச மாநிலத்தில், PVTG மாணவர்கள் மொத்த மாணவர்களில் சுமார் 3.8% ஆகவும், சத்தீஸ்கரில் 2.74% பேர் PVTG மாணவர்களாகவும் உள்ளனர்.
- குஜராத்தில், மொத்தமுள்ள 10,688 மாணவர்களில் வெறும் 21 மாணவர்களே இந்த PVTG சமூகத்தைச் சேர்ந்தவர்கள்.
- தமிழ்நாட்டின் EMRS பள்ளிகளில், மொத்த மாணவர்களில் 8.36% பேர் PVTG குழுவினைச் சேர்ந்தவர்கள் ஆவர்; ஜார்க்கண்ட் மாநிலத்தில், இந்த சதவீதம் 7.48% ஆகவும் மற்றும் ஆந்திரப் பிரதேசத்தில் இது 12.91% ஆகவும் உள்ளது.
- சமீபத்திய மதிப்பீட்டின்படி, மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரா, ஆந்திரப் பிரதேசம், ஜார்க்கண்ட் மற்றும் தமிழ்நாடு ஆகியவை மிகவும் அதிக எண்ணிக்கையிலான PVTG குழுக்களைக் கொண்ட மாநிலங்களாகும்.




### CCTNS ஒருங்கிணைப்பு

- CCTNS தொடங்கப்பட்டு சுமார் 15 ஆண்டுகளுக்குப் பிறகு, நாட்டில் உள்ள சுமார் 17,130 அனைத்து காவல் நிலையங்களும் குற்றம் மற்றும் குற்றவியல் கண்காணிப்பு வலையமைப்பு மற்றும் அமைப்புகளில் (CCTNS) இணைக்கப்பட்டுள்ளன.
- CCTNS என்பது முதல் தகவல் அறிக்கைகள் (FIRs), குற்றப் பத்திரிகைகள் மற்றும் விசாரணை அறிக்கைகளைத் தாக்கல் செய்வதற்கான ஒரு மையப்படுத்தப்பட்ட இயங்கலைத் தளமாகும்.
- நாடு முழுவதும் உள்ள சட்ட அமலாக்க அதிகாரிகளால் இந்த இயங்கலைத் தரவுத் தளத்தை அணுக முடியும்.
- இது 2,000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் 2009 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.




### இந்தியாவில் சாலை விபத்துகள் 2018-2022

- 2018-2022 ஆம் காலகட்டத்தில் இந்தியா முழுவதும் 7.77 லட்சத்திற்கும் அதிகமான உயிர் இழப்புகள் பதிவாகியுள்ளன.
- கடந்த ஐந்து ஆண்டுகளில் உத்தரப் பிரதேசம், மகாராஷ்டிரா மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் அதிக சாலை விபத்துக்கள் பதிவாகியுள்ளன.




- 2022 ஆம் ஆண்டில் நாட்டில் சாலை விபத்துகளால் ஏற்பட்ட மொத்த உயிரிழப்புகளின் எண்ணிக்கை 1,68,491 ஆக இருந்தது.
- இது 2021 ஆம் ஆண்டில் பதிவான 1,53,972 என்ற எண்ணிக்கையிலிருந்து குறிப்பிடத் தக்க அளவில் அதிகரித்துள்ளது.
- 2022 ஆம் ஆண்டில் மட்டும் 22,595 உயிரிழப்புகளுடன் உத்தரப் பிரதேசம் ஆனது, அதிக சாலை விபத்துகள் பதிவான மாநிலமாக உள்ளது.
- அதனைத் தொடர்ந்து 2022 ஆம் ஆண்டில் 17,884 உயிரிழப்புகளுடன் தமிழ்நாடு மாநிலமும், 15,224 உயிரிழப்புகளுடன் அடுத்த இடத்தில் மகாராஷ்டிராவும் இடம் பெற்றுள்ளன.
- 2020 ஆம் ஆண்டு முதல் 36,700 கோடி ரூபாய் மதிப்பிலான 23 கோடிக்கும் அதிகமான மின்னணு அபராத ரசீதுகள் வழங்கப்பட்டுள்ளன.

## SMILE திட்டம் - ADB கடன்




- இந்திய அரசும், ஆசிய மேம்பாட்டு வங்கியும் இணைந்து (டிசம்பர் 20) 350 மில்லியன் டாலர் மதிப்பிலான கொள்கை அடிப்படையிலான கடன் ஒப்பந்தத்தில் கையெழுத்து இட்டுள்ளன.
- இது பல்நோக்கு மற்றும் ஒருங்கிணைந்த தளவாட சூழல் அமைப்புத் (SMILE) திட்டத்தை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- SMILE திட்டம் என்பது முதன்மையான கொள்கை அடிப்படையிலான முன்னெடுப்பு ஆகும் என்பதோடு இது தளவாடச் சீர்திருத்தங்களுக்கான விரிவான அணுகுமுறையை மேற்கொள்கிறது.
- இரண்டு துணைத் திட்டங்களுடன், இது இந்தியாவின் உற்பத்தித் துறையின் போட்டித் தன்மையை மேம்படுத்துவதற்காகவும், விநியோகச் சங்கிலிகளின் தன்னிறைவுத் தன்மையினை வலுப்படுத்துவதற்காகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

## கடலடி கம்பிவடப் பிணையம்



- இந்திய ஆசிய அதி விரைவு (IAX) மற்றும் இந்திய ஐரோப்பிய அதிவிரைவு (IEX), ஆகிய இரண்டும் இந்தியாவினை இரு கண்டங்களுக்கான மிகவும் கூடுதல் இணைய இணைப்புகளுடன் கூடிய ஒன்றாக மாற்ற உள்ளன.
- சீனா மொபைல் நிறுவனத்தின் உத்திசார் முதலீட்டுடன் ரிலையன்ஸ் ஜியோ நிறுவனத்திற்குச் சொந்தமான இரண்டு கம்பிவட அமைப்புகளும், ஒட்டுமொத்தமாக 15,000 கிலோமீட்டர் நீளம் கொண்டவை.
- IAX ஆனது ஆசியாவில் சிங்கப்பூர், தாய்லாந்து மற்றும் மலேசியாவுடன் சென்னை மற்றும் மும்பை ஆகிய நகரங்களை இணைப்பதோடு, மேலும் IEX அவற்றைப் பிரான்சு, கிரீஸ், சவுதி அரேபியா, எகிப்து மற்றும் டிஜிபௌட்டி ஆகியவற்றுடன் இணைக்கிறது.
- இது இந்தியாவில், முக்கியமாக மும்பை மற்றும் சென்னையில் டஜன் கணக்கான கம்பி வடங்களை நிறுவுகிறது.

## கென்-பெட்வா நதி இணைப்பு திட்டம் 2024

- இந்தியாவின் முதன்முதல் நதி நீர் இணைப்புத் திட்டமான கென்-பெட்வா நதிகளை இணைக்கும் திட்டத்திற்கு மத்தியப் பிரதேசத்தின் கஜுராஹோவில் பிரதமர் அடிக்கல் நாட்டினார்.
- KBLP திட்டம் ஆனது யமுனை நதியின் இரு துணை நதிகளான கென் நதியில் இருந்து பெட்வா நதிக்கு நீரை மாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது உத்தரப் பிரதேசம் மற்றும் மத்தியப் பிரதேசத்தின் சில பகுதிகளில் பரவி காணப் படும் பந்தேல்கண்ட் பகுதியின் நீர்ப் பிரச்சினைகளைத் தீர்ப்பதை நோக்கமாகக் கொண்டது.
- கென்-பெட்வா நதிகளை இணைக்கும் இந்தத் திட்டம் ஆனது, மத்தியப் பிரதேசத்தின் குறைந்தது 10 மாவட்டங்கள் மற்றும் உத்தரப்பிரதேசத்தின் பல்வேறு மாவட்டங்களின் குடிநீர் மற்றும் பாசன நீர்த் தேவைகளை நிவர்த்தி செய்யும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.




- இந்தத் திட்டம் ஆனது 100 மெகாவாட்டிற்கு மேல் நீர் மின்னாற்றல் மற்றும் 27 மெகா வாட் திறன் கொண்ட சூரிய மின்னாற்றலை உற்பத்தி செய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

- மத்தியப் பிரதேசத்தின் ஓம்காரேஷ்வரில் அமைக்கப்பட்டுள்ள அம்மாநிலத்தின் முதல் சூரிய சக்தி ஆலையான மிதக்கும் சூரிய மின்னாற்றல் உற்பத்தி ஆலையினையும் அவர் தொடங்கி வைத்தார்.

## INS நீலகிரி மற்றும் சூரத்

- மஷகான் கப்பல் கட்டும் நிறுவனம் ஆனது, உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட, நவீன முதன்மை போர்க்கப்பல்களான 'நீலகிரி' மற்றும் 'சூரத்' ஆகியவற்றை இந்தியக் கடற்படைக்கு வழங்கியுள்ளது.
- 'நீலகிரி' 17A திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட இது போன்ற முதல் வகையான (FoC) கப்பல் ஆகும்.
- 'சூரத்' என்ற கப்பலானது 15B திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட நான்காவது கப்பலாகும் என்பதோடு மேலும், பல்வேறு பணிகள் மற்றும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் திறன் கொண்ட ஒரு சக்தி வாய்ந்த கப்பலாகும்.
- இது மீயொலி நிலம் விட்டு நிலம் பாயும் 'பிரம்மோஸ்' ஏவுகணைகள் மற்றும் 'பராக்-8' நடுத்தர தாக்குதல் வரம்பு கொண்ட நிலம் விட்டு வான் பாயும் எறிகணைகள் போன்ற ஆயுதங்களைக் கொண்டுள்ளது.

## 'விக்சித் பஞ்சாயத்து கர்மயோகி' முன்னெடுப்பு

- மத்திய அரசானது, நல்லாட்சி தினத்தன்று இந்த முன்னெடுப்பினைத் தொடங்கி, முன்னாள் பிரதமர் வாஜ்பாய் அவர்களின் 100வது பிறந்தநாளை நினைவு கூருகிறது.
- மேம்படுத்தப்பட்ட நிர்வாகச் செயற்கருவிகள் மற்றும் அறிவு மூலம் பஞ்சாயத்து ராஜ் அமைப்புகளை வலுப்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த முன்னெடுப்பானது, 'பிரஷாசன் காவ்ன் கி ஒளர்' பிரச்சாரத்தின் ஒரு பகுதி ஆகும்.
- இது தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மற்றும் அதிகாரிகளுக்கு மிகவும் பயனுள்ள நிர்வாகத்தினை மேற்கொள்வதற்கு அதிகாரம் அளிக்கும்.
- ஒரு நிலையான மாற்றத்தை உருவாக்குவதற்காக வேண்டி இது அடிமட்ட அளவிலான சீர்திருத்தங்களில் கவனம் செலுத்தப்படுகிறது.



## ஒருங்கிணைக்கப்படாத துறைசார் நிறுவனங்களின் வருடாந்திர கணக்கெடுப்பு




- புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் (MoSPI) ஆனது, ஒருங்கிணைக்கப் படாத துறை சார் நிறுவனங்களின் (ASUSE) கணக்கெடுப்பினை அடுத்த ஆண்டு ஜனவரி மாதத்தில் தொடங்க உள்ளது.
- கடைசியாக 2023 ஆம் ஆண்டு அக்டோபர் மற்றும் 2024 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஆகிய காலக்கட்டத்திற்கு இடையில் இந்தக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டது.
- அடுத்தக் கணக்கெடுப்பு ஆனது, மாவட்ட வாரியான சில தரவுகளைச் சேகரிப்பதற்கு முயற்சிக்கும், மேலும் ஒருங்கிணைக்கப்படாத நிறுவனங்கள் மாவட்டங்களில் உள்ள உள்ளூர் பொருளாதாரங்களை எவ்வாறு தூண்டுவிக்கின்றன என்பதைப் பற்றிய சில விவரங்களை வழங்க உதவும்.
- கூடுதலாக, தேசிய மற்றும் மாநில அளவில் தற்போது கிடைக்கப் பெறும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் புள்ளி விவரங்கள் ஆனது மாவட்ட அளவிலும் கிடைக்கப் பெறும் வகையில் வழி வகை செய்யப்படும்.
- 1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டம் அல்லது 2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படாத வேளாண்மை சாராத நிறுவனங்களே ஒருங்கிணைக்கப் படாத நிறுவனங்கள் ஆகும்.
- முந்தையக் கணக்கெடுப்பில் 498,024 நிறுவனங்களின் தரவுகள் பதிவு செய்யப்பட்டது, அதில் 273,085 நிறுவனங்கள் கிராமப்புறங்களிலிலும், 224,939 நிறுவனங்கள் நகர்ப் புறங்களிலிலும் இருந்தன.
- இந்த வாரம் வெளியிடப்பட்ட இந்தக் கணக்கெடுப்பின் முடிவுகள், முந்தைய ஆண்டில் 65.1 மில்லியனாக இருந்த ஒருங்கிணைக்கப்படாத நிறுவனங்களின் எண்ணிக்கை ஆனது 12.8% அதிகரித்து 2023-24 ஆம் ஆண்டில் சுமார் 73.4 மில்லியனாக இருப்பதாகக் குறிப்பிடுகிறது.
- சேவைத் துறை மட்டுமே சுமார் 30.4 மில்லியன் நிறுவனங்களில் மிகப்பெரிய பங்கைக் கொண்டுள்ளது.
- அதைத் தொடர்ந்து வர்த்தகத் துறை 22.8 மில்லியன் பங்கினையும், உற்பத்தித் துறை 20.1 மில்லியன் பங்கினையும் கொண்டுள்ளன.

## குழந்தைகளின் உயிர் பிழைப்பு மற்றும் ஆரோக்கியக் குறியீடு



- இந்திய ஆராய்ச்சியாளர்கள் குழு, தேசிய குடும்ப நலக் கணக்கெடுப்பின் தரவைப் பயன்படுத்தி இந்திய மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களுக்கான குழந்தைகளின் உயிர் பிழைப்பு மற்றும் ஆரோக்கியக் குறியீட்டினை (CSHI) உருவாக்கி உள்ளது.
- ஒருங்கிணைந்த CSHI ஆனது கடந்த கால அடிப்படையிலும் மற்றும் எதிர்காலத்தின் அடிப்படையிலும் இந்தியா மற்றும் அதன் பல்வேறு மாநிலங்களின் செயல்பாடுகளை மதிப்பீடு செய்வதற்கான ஒரு தளத்தை வழங்குகிறது.
- குழந்தைகளின் உயிர் பிழைப்பு மற்றும் ஆரோக்கியத்தைக் குறிக்கும் 11 முக்கிய குறிகாட்டிகளில்:
    - மக்கள்தொகை மற்றும் குடும்பத் தகவல் விவரங்கள் குறித்த 3 குறிகாட்டிகள்,
    - பச்சிளம் குழந்தை/குழந்தை உயிரிழப்பு விகிதங்கள், பேறுகாலத் தாய்மார்கள் பராமரிப்பு, மகப்பேறு காலப் பராமரிப்பு, குழந்தைகளுக்கான தடுப்பூசி மற்றும் குழந்தைகள் மத்தியில் நிலவும் இரத்த சோகை பாதிப்பு ஆகிய ஒவ்வொன்றினை பற்றிய தலா 1 குறிகாட்டி மற்றும்
    - குழந்தைகளுக்கு உணவளிக்கும் பல செயல்முறைகள் மற்றும் குழந்தைகளின் ஊட்டச் சத்து நிலை ஆகியவை குறித்த 3 குறிகாட்டிகள் ஆகியவை அடங்கும்.
- ஒப்பீடுகளை மேற்கொள்வதற்காக ஒவ்வொரு குறிகாட்டிகளுக்கும் சமமான மதிப்பீடு ஒதுக்கப்பட்டது.
- அவற்றின் மதிப்பீட்டின் படி, சுமார் 0.49 ஆக இருந்த இந்தியாவின் CSHI மதிப்பு ஆனது 4 ஆண்டுகளில் 0.52 ஆக அதிகரித்துள்ளதோடு, இது இந்தியாவினைச் சிறந்த ஒரு செயல் திறன் கொண்ட வகைக்கு மேம்படுத்துகிறது.
- ஆனால் தற்போதையப் போக்கு தொடர்ந்தால், இந்தியா தனது CSHI மதிப்பை 0.75 ஆக உயர்த்தி முன்னணி இடத்தை அடைய சுமார் 30 ஆண்டுகள் ஆகும்.
- 35 பிராந்தியங்களில், லட்சத்தீவு, புதுச்சேரி, கேரளா மற்றும் அந்தமான் & நிக்கோபார் தீவுகள் ஆகிய 5 பிராந்தியங்கள் மிகவும் சிறந்தச் செயல்திறன் கொண்டவை என வகைப் படுத்தப் பட்டுள்ளன.
- இதில் 25 பிராந்தியங்கள் நல்ல முறையிலான செயல் திறன் கொண்டவையாகவும், 5 பிராந்தியங்கள் குறைவான செயல்திறன் கொண்டவையாகவும் தரவரிசைப்படுத்தப் பட்டுள்ளன.

## இந்தியாவின் கைபேசி சந்தாதாரர்கள்

| Particulars | Wireless | Wireline | Total |
|---|---|---|---|
| **Broadband Subscribers** (Million) | 896.81 | 44.66 | 941.47 |
| **Urban Telephone Subscribers** (Million) | 625.56 | 34.86 | 660.42 |
| Net Addition in October, 2024 (Million) | -2.56 | 0.83 | -1.73 |
| Monthly Growth Rate | -0.41% | 2.44% | -0.26% |
| **Rural Telephone Subscribers** (Million) | 524.86 | 2.93 | 527.79 |
| **Total Telephone Subscribers** (Million) | 1150.42 | 37.79 | 1188.20 |

- இந்தியாவின் மொத்த கைபேசி சந்தாக்களின் எண்ணிக்கை தற்போது சுமார் 115.12 கோடியாக உள்ளது (அக்டோபர் 31 ஆம் தேதி வரை).
- நாட்டில் உள்ள 6,44,131 கிராமங்களுள், 6,23,622 கிராமங்களில் தற்போது கைபேசியின் பயன்பாடு பரவலாக உள்ளது.
- கிராமப்புற இந்தியாவில் கைபேசி சேவை வழங்கீட்டின் பரவல் ஆனது சுமார் 97 சதவீதத்தை எட்டியுள்ளதோடு, குறைந்தது சுமார் 6,14,564 கிராமங்களில் 4G சேவை இணைப்புகள் உள்ளன.
- நாட்டில் உள்ள 783 மாவட்டங்களுள் 779 மாவட்டங்களில் (அக்டோபர் 31 ஆம் தேதி நிலவரப்படி) 5G இணைய சேவைகள் தற்போது கிடைக்கப் பெறுகின்றன.

## 45வது PRAGATI கூட்டம்

Launched in 2015 PRAGATI (Pro-Active Governance and Timely Implementation) is a digital platform for project monitoring.

Aimed at tackling delays in high-value infrastructure projects across India.

- ஆளுகை மற்றும் திட்ட அமலாக்கத்தினை மேம்படுத்துவதற்குத் தொழில்நுட்பத்தைப் செயல்படுத்துகின்ற 45வது PRAGATI கூட்டத்திற்குப் பிரதமர் தலைமை தாங்கினார்.
- ஆறு மெட்ரோ நகரங்களில் மேற்கொள்ளப்படும் சில முன்னெடுப்புகள் மற்றும் சாலை இணைப்பு மற்றும் அனல் மின்சாரம் ஆகியவற்றிற்கு தலா ஒரு திட்டம் என மொத்தம் எட்டு திட்டங்கள் குறித்து இந்தக் கூட்டத்தில் கவனம் செலுத்தப்பட்டது.

- PRAGATI என்பது முனைப்பு மிக்க ஆளுகை மற்றும் சரியான நேரத்திலான அமலாக்கம் என்பதைக் குறிக்கிறது.
- பொறுப்புக் கூறல் மற்றும் செயல்திறனை உறுதி செய்வதற்காக என்று மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு இடையேயான ஒத்துழைப்பை இந்த தளம் ஊக்குவிக்கிறது.

## SVAMITVA திட்டத்தின் கீழ் சொத்து அட்டைகள்

- தற்போது SVAMITVA திட்டத்தின் கீழ் கடன் பெறுவதற்காக 1.37 லட்சம் கோடி ரூபாய் மதிப்புள்ள கிராமப்புற குடியிருப்புச் சொத்துக்களை கடன் மூலம் பணமாக்க இயலும்.
- இந்த முன்னெடுப்பானது, ஆளில்லா விமானத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, கிராமப் புறங்களில் உள்ள சொத்துக்களை மதிப்பாய்வு செய்தல்/கணக்கெடுத்தல் மற்றும் எல்லை நிர்ணயம் செய்வதற்காக உருவாக்கப்பட்டதாகும்.
- இது கிராமங்களின் பொருளாதார ஆற்றலை வெளிக் கொணர்ந்து, அங்கு உள்ள நிதி உள்ளடக்கத்தினை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- SVAMITVA (கிராமங்களின் ஆய்வு மற்றும் மேம்படுத்தப்பட்டத் தொழில்நுட்பத்தினைக் கொண்டு கிராமங்களை வரைபடமாக்கல்) என்ற திட்டம் ஆனது 2020 ஆம் ஆண்டில் பஞ்சாயத்து ராஜ் துறை அமைச்சகத்தால் தொடங்கப்பட்டது.
- இதுவரையில், சுமார் 317,000 கிராமங்கள், அதாவது 344,000 கிராமங்கள் என்ற மொத்த இலக்கில் 92% கிராமங்கள் கணக்கெடுக்கப் பட்டு, 136,000 கிராமங்களில் மக்கள் தங்கள் சொத்து அட்டைகளைப் பெற்றுள்ளனர்.
- தமிழ்நாடு, பீகார் மற்றும் ஒடிசா ஆகிய மாநிலங்கள், தம் சொந்தத் திட்டங்கள் மூலம் கிராமப் புற நிலப் பதிவேடுகளைப் புதுப்பித்துள்ள நிலையில், இந்தத் திட்டத்திலிருந்து விலகின.



## சுபோஷித் கிராமப் பஞ்சாயத்து அபியான்




- இந்தத் திட்டமானது கிராமப்புறங்களில் ஊட்டச் சத்து ஆதாரங்கள் மற்றும் அதன் ஒட்டு மொத்த நலனை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துகிறது.
- இது ஊட்டச்சத்து தொடர்பான உள்கட்டமைப்பை வலுப்படுத்துவதையும், ஊட்டச்சத்து குறைபாட்டைச் சமாளிக்க என சமூகங்களை மிகவும் தீவிரமாக ஈடுபடுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மேலும், இது மிகச் சிறந்த ஊட்டச்சத்து மற்றும் ஒட்டு மொத்த ஆரோக்கியத்தை உறுதி செய்யும் நடைமுறைகளை கிராமங்கள் பின்பற்ற ஊக்குவிக்கிறது.

## மத்ஸ்ய சேவா கேந்திரங்கள் மற்றும் சாகர் மித்ராக்கள்




- மத்ஸ்ய சேவா கேந்திராக்கள் மற்றும் சாகர் மித்ராக்கள் ஆகியன உற்பத்தித் திறன் மற்றும் நிலைத் தன்மையை மேம்படுத்துவதற்கான முக்கிய ஆதரவு, பயிற்சி மற்றும் தகவல்களை வழங்குவதன் மூலம் மீனவர்களுக்கு உதவுகின்றன.

- 2013-14 ஆம் ஆண்டில் இருந்து இந்தியாவின் தேசிய மீன் உற்பத்தி 83% அதிகரித்து, 2022-23 ஆம் ஆண்டில் 175 லட்சம் டன் என்ற அதிகபட்ச அளவினை எட்டியுள்ளது.
- இதில் 75% ஆனது உள்நாட்டு மீன்வளத்திலிருந்து உற்பத்தியாகிறது.
- உலக அளவில் மீன் மற்றும் மீன் வளர்ப்பு உற்பத்தியில் இந்தியா இரண்டாவது பெரிய நாடாக உள்ளது.
- 'மத்ஸ்ய சேவா கேந்திராக்கள்' (MSK), நன்கு பயிற்சி பெற்ற மீன்வளர்ப்பு நிபுணர்களால் பலவிதமான பல்துறை சேவைகளை வழங்குவதற்கான ஒரு ஒற்றைத் தீர்வாகக் கருதப் படுகிறது.
- பெண்கள் மற்றும் மிகவும் நலிவடைந்த பிரிவினர்கள் இத்தகைய மையங்களை அமைப்பதற்கான உதவியில் அரசின் பங்கு 60% ஆக உள்ளது.
- கடலோர மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் உள்ள "சாகர் மித்ராக்கள்" அரசாங்கத்திற்கும் கடலில் மீன்பிடிக்கும் மீனவர்களுக்கும் இடையே ஒரு முக்கிய இடைமுகமாகப் பங்காற்றுகிறது.
- அவை தினசரி கடல் மீன்பிடித்தல், விலை ஏற்ற இறக்கங்கள் மற்றும் மீன் இறக்கு மையங்கள்/துறைமுகங்களில் தேவையானச் சந்தைப்படுத்துதல் தேவைகள் பற்றிய தகவல் மற்றும் தரவுகளை தொகுத்து வழங்குகின்றன.
- அவை உள்ளூர் விதிமுறைகள், வானிலை முன்னறிவிப்புகள், இயற்கைச் சீற்றங்கள், சுகாதாரமான முறையில் மீன்களைக் கையாளுதல், மற்றும் கடலில் சாத்தியமான மீன்பிடி மண்டலங்கள் பற்றியத் தகவல்களை மீனவர்களுக்குப் பரப்புகின்றன.

## அஞ்சல் அலுவலக விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள், 2024

- அஞ்சல் அலுவலகச் சட்டம், 2023 என்ற சட்டத்தின் கீழ் புதிய துணைச் சட்டங்களாக அஞ்சல் அலுவலக விதிகள், 2024 மற்றும் அஞ்சல் அலுவலக விதிமுறைகள், 2024 ஆகியவை உருவாக்கப்பட்டுள்ளன.
- 2024 ஆம் ஆண்டு அஞ்சலக விதிகள் ஆனது அஞ்சலக/தபால் நிலையங்களால் வழங்கப் படும் சேவைகளுக்கு உதவும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- 2024 ஆம் ஆண்டு தபால் அலுவலக ஒழுங்குமுறை விதிகள் ஆனது, நாடு முழுவதும் உள்ள அஞ்சல் அலுவலகங்கள் வழங்கும் ஆக்கப் பூர்வச் சேவைகள் மற்றும் இதர சேவைகளின் விவரங்கள் மற்றும் செயல்பாட்டு அம்சங்களை உள்ளடக்கியது.
- பல்வேறு சமூக நலத் திட்டங்களை வழங்குவதற்காக என்று, பண அஞ்சல் மூலம் பணம் அனுப்புவதற்கான வரம்பு ஆனது 5,000 ரூபாயிலிருந்து 10,000 ரூபாய் ஆக உயர்த்தப் பட்டுள்ளது.
- முந்தைய இந்திய அஞ்சல் அலுவலகச் சட்டம், 1898 மற்றும் இந்திய அஞ்சல் அலுவலக விதிகள், 1933 ஆகியவற்றின் விதிகளின் படியே தற்போதுள்ள அஞ்சல் பதிவு வழங்கப் படுகிறது.

## 2024 ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தல் குறித்த அறிக்கை

- இந்தியத் தேர்தல் ஆணையம் ஆனது 2024 ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தல் குறித்த ஒரு விரிவான புள்ளி விவர அறிக்கையினை வெளியிட்டுள்ளது.

- 2019 ஆம் ஆண்டில் 91,19,50,734 ஆக இருந்த மக்களவைக்குத் தேர்தலுக்காகப் பதிவு செய்யப் பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கையானது 2024 ஆம் ஆண்டில் 97,97,51,847 வாக்காளர்கள் ஆக உயர்ந்தது.
- 2019 ஆம் ஆண்டை விட 2024 ஆம் ஆண்டில் மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை 7.43% அதிகரித்துள்ளது.
- பதிவு செய்யப்பட்ட 97.97 கோடி வாக்காளர்களில், 47.63 கோடி பேர் பெண்கள் ஆவர் என்ற நிலையில் 2019 ஆம் ஆண்டில் மொத்த வாக்காளர்களில் 48.09% (43.85 கோடி) ஆக இருந்த பெண் வாக்காளர்களின் எண்ணிக்கையானது தற்போது 48.62% ஆக உள்ளது.
- பெண் வாக்காளர்களில் அதிக சதவீதப் பங்குடன் புதுச்சேரி முன்னிலையில் உள்ளது (53.03%), அதைத் தொடர்ந்து கேரளா (51.56%) இடம் பெற்றுள்ளது.
- 2019 ஆம் ஆண்டில் 1,000 ஆண்களுக்கு சுமார் 926 ஆக இருந்த பெண்-ஆண் வாக்காளர் விகிதம் ஆனது தற்போது 946 என்ற அளவினை எட்டியுள்ளது.
- 2024 ஆம் ஆண்டில் 64.64 கோடி வாக்குகள் பதிவானது. 2019 ஆம் ஆண்டில் 61.4 கோடி வாக்குகள் பதிவாகியுள்ளன.
- இவற்றில் 64.21 கோடி EVM வாக்குகள் (32.93 கோடி ஆண், 31.27 கோடி பெண், 13,058 மூன்றாம் பாலினத்தவர்) மற்றும் 42.81 லட்சம் தபால் வாக்குகள் ஆகும்.
- அசாம் மாநிலத்தில் உள்ள துப்ரி எநனுமிடத்தில் மிக அதிகபட்சமாக 92.3% வாக்குகள் பதிவாகியுள்ளன அதே சமயம் ஜம்மு & காஷ்மீரில் உள்ள ஸ்ரீநகரில் மிகக் குறைவாக 38.7% வாக்குகள் பதிவாகியுள்ளன.
- 2024 ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலில் 10,52,664 வாக்குச் சாவடிகள் இடம் பெற்று இருந்த நிலையில் இது 2019 ஆம் ஆண்டில் 10,37,848 ஆக இருந்தது.
- உத்தரப் பிரதேச மாநிலத்தில் மிகவும் அதிகபட்சமாக 1,62,069 வாக்குச் சாவடிகளும், லட்சத் தீவில் குறைந்தபட்சமாக 55 வாக்குச் சாவடிகளும் அமைக்கப் பட்டன.
- 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடச் செய்யும் போது பீகார் மாநிலத்தில் 4,739 கூடுதல் நிலையங்களுடன் வாக்குச் சாவடிகளின் எண்ணிக்கையில் மிக அதிக அதிகரிப்பு பதிவானது, அதைத் தொடர்ந்து 1,731 சாவடி அதிகரிப்புகளுடன் மேற்கு வங்காளம் இடம் பெற்றுள்ளது.
- 2024 ஆம் ஆண்டில் ஐந்து தென் மாநிலங்களில் அதிக எண்ணிக்கையிலான வெளிநாடு வாழ் வாக்காளர்கள் வாக்கு பதிவு செய்துள்ளனர் - கேரளா (89,839), ஆந்திரப் பிரதேசம் (7,927), தெலுங்கானா (3,470), தமிழ்நாடு (3,432) மற்றும் கர்நாடகா (3,148).
- 2019 ஆம் ஆண்டில், 99,844 பேர் வெளிநாட்டு வாக்காளர்களாக வாக்குகளைப் பதிவு செய்தனர்.
- கர்நாடகா, உத்தரப்பிரதேசம் மற்றும் தமிழ்நாடு போன்ற பல பெரிய மாநிலங்களில் வெளிநாட்டு வாக்காளர்களின் வாக்களிப்பு சுழிய அளவில் இருந்தது.
- மகாராஷ்டிராவில் அதிக பெண் வேட்பாளர்கள் (111) தேர்தலில் பங்கேற்றனர், அதைத் தொடர்ந்து உத்தரப் பிரதேசம் (80) மற்றும் தமிழ்நாடு (77) ஆகியவை அடுத்தடுத்த இடங்களில் உள்ளன.
- எனினும், 152 தொகுதிகளில் பெண் வேட்பாளர்கள் பங்கேற்கவில்லை.
- தமிழ்நாடு மாநிலத்தில் அதிக எண்ணிக்கையிலான மூன்றாம் பாலின வாக்காளர்கள் (8,467) பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

- ❖ இத்தேர்தலில் போட்டியிட்ட 3,921 பேர் சுயேட்சை வேட்பாளர்களில் ஏழு இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றனர்

Key highlights from the statistical reports on 2024 LS polls:

Registered electors in LS polls: 911,950,734 (2019); 979,751,847 (2024)

| | 2019 | 2024 |
|---|---|---|
| Votes polled (million) | 614 | 646.4 |
| Voter turnout (%) | 67.40 | 65.66 |
| Votes via postal ballots (million) | 2.80 | 4.2 |
| NOTA (%) | 1.06 | 0.99 |
| Registered overseas electors | 99,844 | 119,000 |
| Nominations filed | 11,692 | 12,459 |
| Contesting candidates | 8,054 | 8,360 |
| Registered persons with disabilities electors | 6,167,482 | 9,028,696 |
| Registered transgender electors | 39,075 | 48,272 |
| Transgender voters (%) | 14.64 | 27.09 |

TAKING STOCK

| | 2019 | 2024 |
|---|---|---|
| Turnout of woman electors (%) | 67.18 | 65.78 |
| Turnout of male electors (%) | 67.02 | 65.55 |
| No. of woman electors per 1,000 male electors | 926 | 946 (All-time high) |
| Woman electors (%) | 48.09 | 48.62 |
| No. of woman candidates contesting | 726 | 800 |

- **Maharashtra had the highest number of woman contesting candidates with 111 in the fray**, followed by 80 in Uttar Pradesh (UP) and 77 in Tamil Nadu (In 2019, UP has the most women candidates at 106)
- **But 152 of 543, or 28 per cent, seats had no woman candidates**

## மெய்நிகர் கற்றல் வகுப்பறை முன்னெடுப்பின் தாக்கம்

- ❖ சீர் மிகு நகரங்கள் திட்டத்தின் (SCM) கீழ் மெய்நிகர் கற்றல் வகுப்பறைகள் அறிமுகம் ஆனது 2015-16 முதல் 2023-24 ஆம் ஆண்டு வரை சுமார் 19 நகரங்களில் ஒட்டு மொத்த மாணாக்கர் சேர்க்கையில் 22% அதிகரிப்பிற்கு வழிவகுத்தது.
- ❖ 71 நகரங்களில் உள்ள 2,398 அரசுப் பள்ளிகளில் 9,433 மெய்நிகர் கற்றல் வகுப்பறைகள் உருவாக்கப்பட்டுள்ளன.
- ❖ கர்நாடகாவில் அதிக எண்ணிக்கையிலான மெய்நிகர் கற்றல் வகுப்பறைத் திட்டங்கள் (80) அமல்படுத்தப்பட்டுள்ளன.
- ❖ அதைத் தொடர்ந்து இராஜஸ்தான் (53) உள்ளதோடு தமிழகத்தில் 23 மற்றும் டெல்லி 12 திட்டங்கள் அமல்படுத்தப்பட்டுள்ளன.
- ❖ மேற்கு வங்காளம் ஆனது, இரண்டு அமலாக்கங்களுடன், பட்டியலின் கடைசி இடத்தில் உள்ளது.
- ❖ 2024 ஆம் ஆண்டு நவம்பர் மாத நிலவரப்படி, SCM திட்டத்தின் கீழ் 91% திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.
- ❖ SCM திட்டத்தின் கீழ் 2022 ஆம் ஆண்டில், 'SAAR' (நடவடிக்கை மற்றும் ஆராய்ச்சியை நோக்கிய சீர் மிகு நகரங்கள் மற்றும் கல்வித் துறை) என்ற ஒரு தளமானது அறிமுகப் படுத்தப் பட்டது.



## பொதுக் கணக்குக் குழு அறிக்கை 2024




- மூத்த காங்கிரஸ் தலைவர் K.C.வேணுகோபால், தலைமையிலான பொதுக் கணக்குக் குழு (PAC) ஆனது சமீபத்தில் நடந்து முடிந்த குளிர்காலக் கூட்டத் தொடரில் அதன் அறிக்கையை தாக்கல் செய்துள்ளது.
- 'Excesses over voted grants and charged appropriations - வாக்களிக்கப்பட்ட மானியங்கள் மற்றும் வழங்கப்பட்ட ஒதுக்கீடுகளுக்குப் பிறகு மிஞ்சிய நிதிகள் (2021-22)' என்ற தலைப்பில் இந்த அறிக்கையானது வெளியிடப்பட்டுள்ளது.
- நிதி, பாதுகாப்பு, இரயில்வே மற்றும் இரசாயன மற்றும் உரத்துறை அமைச்சகங்கள் ஆனது 2021-22 ஆம் ஆண்டிற்குப் பாராளுமன்றம் அனுமதித்த நிதி ஒதுக்கீடுகளை விட அதிகமாக 1,291.14 கோடி ரூபாய் செலவிட்டுள்ளது என்று தெரியவந்துள்ளது.
- 2021-22 ஆம் நிதியாண்டில், மொத்தம் 1,291.14 கோடி ரூபாய் நிதி அமைச்சகத்தினால் (742.56 கோடி ரூபாய்) செலவிடப்பட்டுள்ளது.
- அதைத் தொடர்ந்து இரசாயனம் மற்றும் உரங்கள் அமைச்சகம் ஆனது (493.38 கோடி ரூபாய்), இரயில்வே அமைச்சகம் (55.16 கோடி ரூபாய்), பாதுகாப்பு அமைச்சகம் (3.17 கோடி ரூபாய்) செலவிட்டுள்ளன.
- சம்பந்தப்பட்ட அமைச்சகங்கள் மற்றும் துறைகள் ஏற்கனவே கணிசமான துணை (கூடுதல்) மானியங்களைப் பெற்றுள்ளன.
- 0.67% முதல் 10.41% வரையிலான அதிக செலவின வீதத்தில் மிகையான செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டன.

## மரங்கள் குறித்தக் கணக்கெடுப்பு குறித்து உச்சநீதிமன்றம்




- இந்திய வனக் கணக்கெடுப்பு (FSI) அமைப்பினைப் பணியமர்த்தி தேசிய தலைநகரில் மர ஆணையமானது மரக் கணக்கெடுப்பினை மேற்கொள்ள வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் முன்மொழிந்துள்ளது.
- மேலும், மரங்களை வெட்டுவதற்கு என்று மர ஆணையத்தின் அலுவலர்கள் கண்மூடித் தனமான அனுமதியை வழங்க அனுமதிக்கக் கூடாது என்றும் கூறப்பட்டுள்ளது.
- 1994 ஆம் ஆண்டு மரங்கள் சட்டத்தின் கீழ் தேசியத் தலைநகரில் 50 அல்லது அதற்கு மேற்பட்ட மரங்களை வெட்டுவதற்கு என்று அதிகாரியால் வழங்கப்படும் ஒவ்வொரு அனுமதியும், முதலில் மத்திய அரசினால் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு குழுவினால் (CEC) சரி பார்க்கப்பட்டு அனுமதிக்கப்பட வேண்டும்.
- CEC இறுதியாக அனுமதி வழங்கும் வரை எந்த மரமும் வெட்டப்படக் கூடாது.
- இங்கு மரங்களை வெட்டுவதற்கான அனுமதியை நிராகரிப்பதற்கு அல்லது மாற்றி அமைப்பதற்கு CEC குழுவிற்கு அதிகாரம் உள்ளது.
- ஓர் அதிகாரி 60 நாட்களுக்கு மேல் தனது முடிவைத் தாமதப்படுத்தினால், சம்பந்தப் பட்ட விண்ணப்பதாரர் மரங்களை வெட்டுவதற்கு அனுமதிக்கப்பட்டதாகக் கருதலாம்.

## புதிய இடைமறிப்பு விதிகள் 2024

- மத்திய அரசானது 2024 ஆம் ஆண்டு தொலைத்தொடர்பு (குறுஞ்செய்திகளை சட்டப் பூர்வமாக இடைமறிப்பு செய்வதற்கான சில நடைமுறைகள் மற்றும் பாதுகாப்புகள்) விதிகளை அறிவித்துள்ளது.
- இது சில நிபந்தனைகளின் கீழ், தொலைபேசி செய்திகளை இடைமறித்து அவற்றைக் கண்காணிப்பதற்கு சில அமலாக்க மற்றும் பாதுகாப்பு நிறுவனங்களுக்கு அதிகாரம் அளிக்கிறது.
- இந்த விதிகள் ஆனது 1951 ஆம் ஆண்டு இந்தியத் தந்தி விதிகளின் 419A விதியினை மாற்றியமைத்துள்ளன.

- ❖ மத்திய அரசின் இணைச் செயலாளர் பதவி தரத்திற்குக் குறையாத பதவியில் உள்ள ஓர் அதிகாரி, 'தவிர்க்க முடியாத சில சூழ்நிலைகளில்' (அத்தகையச் சூழ்நிலைகளை வரையறுக்காமல்) அத்தகைய இடைமறிப்பினை மேற்கொள்வதற்கான உத்தரவைப் பிறப்பிக்கலாம்.
- ❖ 2023 ஆம் ஆண்டு மத்திய அரசு தொலைத் தொடர்புச் சட்டத்தின் 20(2) என்ற பிரிவின் கீழ், குறிப்பிடப் பட்டுள்ள காரணங்களுக்காக என்று அச்செய்திகளை இடைமறித்துக் கங்காணிப்பதற்காக வேண்டி எந்தவொருச் சட்ட அமலாக்க அல்லது பாதுகாப்பு நிறுவனத்திற்கும் அங்கீகாரம் அளிக்கலாம்.
- ❖ தற்போது, 'அவசரகால வழக்குகளில்' மட்டுமே அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களுக்கு செய்தி இடைமறிப்பு சார்ந்த நிபந்தனைகள் தளர்த்தப்பட்டுள்ளன.




## இந்தியாவில் எரிவாயு மற்றும் இரசாயன கசிவு விபத்துக்கள்

- ❖ இந்தியாவில், கடந்த பத்தாண்டுகளில் எரிவாயு மற்றும் இரசாயன கசிவு மீதான கடும் விபத்துக்களின் எண்ணிக்கை இரு மடங்கினை விட மிக அதிகமாக உயர்ந்து 30 ஆக அதிகரித்துள்ளது.
- ❖ இந்த 30 விபத்துகளில், குஜராத்தில் 2023 ஆம் ஆண்டில் 24 விபத்துகள் பதிவாகியுள்ளன.
- ❖ அதனைத் தொடர்ந்து வெறும் மூன்று விபத்துகளுடன் உத்தரப் பிரதேசம் மாநிலம் இடம் பெற்றுள்ள நிலையில் தொடர்ந்து அசாம் (2) மற்றும் கோவா (1) ஆகியவை இடம் பெற்றுள்ளன என்பதோடு, இதன் கடும் விளைவாக 25 உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன மற்றும் 32 பேர் காயம் அடைந்துள்ளனர்.
- ❖ நாடு முழுவதும் 13 விபத்துகளே பதிவான 2013 ஆம் ஆண்டினை விட இது குறிப்பிடத் தக்க அதிகரிப்பைக் காட்டுவதோடு, இதன் விளைவாக 11 உயிரிழப்புகள் பதிவாகி உள்ளது மற்றும் ஒருவர் காயம் அடைந்துள்ளனர்.
- ❖ பஞ்சாப், தமிழ்நாடு, தெலுங்கானா மற்றும் உத்தரப் பிரதேசம் மற்றும் தெலுங்கானா ஆகிய மாநிலங்களில் ஆறு விபத்துகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.




**“S.A.F.E Accommodation” அறிக்கை**




- நிதி ஆயோக் அமைப்பானது “S.A.F.E. Accommodation- Worker Housing for manufacturing growth - உற்பத்தித் துறையின் வளர்ச்சிக்காக என்று தொழிலாளர்களின் குடியிருப்பு” என்ற தலைப்பிலான அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- இந்தியாவின் உற்பத்தித் துறையை மிகவும் நன்கு மேம்படுத்துவதில் தொழில்துறை தொழிலாளர்களுக்கான பாதுகாப்பான, மலிவு விலையிலான, நெகிழ் திறன் மிக்க மற்றும் மிகத் திறம் மிக்க (S.A.F.E.) தங்குமிடங்களின் முக்கியப் பங்கை இந்த அறிக்கை ஆராய்கிறது.

- இது முக்கியச் சவால்களை அடையாளம் காட்டி, நடவடிக்கை எடுக்கும் வகையிலான தீர்வுகளை வழங்கி, நாடு முழுவதும் இத்தகையத் தங்குமிட வசதிகளை அதிகரிக்கத் தேவையான முக்கிய நடவடிக்கைகளை எடுத்துக் காட்டுகிறது.

## 2023-24 ஆம் ஆண்டில் இந்தியாவின் நிலக்கரி உற்பத்தி

- 2023-24 ஆம் ஆண்டில் இந்தியாவில் இதுவரை இல்லாத அளவிற்கு நிலக்கரி உற்பத்திப் பதிவாகியுள்ளது.
- 2023-24 ஆம் ஆண்டில் அகில இந்திய நிலக்கரி உற்பத்தியானது 997.826 மில்லியன் டன் (mT) ஆக உள்ளது.
- 2022-23 ஆம் ஆண்டில் 893.191 மெட்ரிக் டன்னாக இருந்த நிலக்கரி உற்பத்தி தற்போது சுமார் 11.71% அதிகரித்துள்ளது.
- நடப்பு ஆண்டான 2024 ஆம் ஆண்டில் (ஜனவரி 2024 முதல் டிசம்பர் 15, 2024 வரை), இந்தியாவில் சுமார் 988.32 mT (தற்காலிக மதிப்பீடு) நிலக்கரியை உற்பத்தி செய்து உள்ளது.
- கடந்த ஆண்டின் இதே காலக் கட்டத்தில் சுமார் 7.66% வளர்ச்சியுடன் சுமார் 918.02 mT (தற்காலிக மதிப்பீடு) நிலக்கரி உற்பத்தி பதிவானது.



## இந்தியாவில் இணைய முடக்கம் 2024



**No connectivity:** The most shutdowns happened in 2020 after the abrogation of special status of J&K under Article 370.

- 2024 ஆம் ஆண்டில், இந்தியாவில் கடந்த எட்டு ஆண்டுகளில் மிகவும் குறைந்த அளவு எண்ணிக்கையிலான கைபேசி இணைய முடக்க நிகழ்வுகள் நிகழ்ந்துள்ளன.
- கடந்த ஆண்டு 96 இணைய முடக்கம் பதிவான நிலையில் இந்த ஆண்டு இது வரையில் 60 இணைய முடக்கங்கள் மட்டும் பதிவாகியுள்ளன.
- அரசியலமைப்பின் 370வது சரத்து ரத்து செய்யப்பட்டதைத் தொடர்ந்து, 2020 ஆம் ஆண்டில் அதிக இணைய முடக்கங்கள் – அதாவது 132 என்ற அளவில் பதிவாகின.
- அன்று அரசாங்கம் ஆனது, 2017 ஆம் ஆண்டில் சட்டத்தினைத் திருத்தியமைத்து, 2017 ஆம் ஆண்டு தொலைத்தொடர்பு சேவைகள் தற்காலிக நிறுத்த (பொது அவசரநிலை அல்லது பொதுப் பாதுகாப்பு) விதிகளை பிரகடனப்படுத்தியது.
- மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்கள் ஆனது, இந்தியத் தந்திச் சட்டத்தின்படி, "பொது அவசரநிலை" அல்லது "பொதுப் பாதுகாப்பு" நலன் கருதி மட்டுமே இணைய முடக்கத்தை விதிக்க முடியும்.

## இந்தியாவின் முதல் பல்நோக்கு செயற்கை நுண்ணறிவு முன்னெடுப்பு

- BharatGen என்பது இந்தியக் குடிமக்களுக்கு எனப் பெரும் ஆக்கப்பூர்வமிக்க செயற்கை நுண்ணறிவினை பல்வேறு இந்திய மொழிகளில் கிடைக்கச் செய்வதற்கான ஒரு முன்னெடுப்பாகும்.
- இந்தியாவின் பன்முக மொழிகள் மற்றும் கலாச்சாரங்களுக்கு ஏற்றவாறு மேம்பட்ட செயற்கை நுண்ணறிவு மாதிரிகளை உருவாக்குவதை இது நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- BharatGen ஆனது, செயற்கை நுண்ணறிவில் போதுமான அணுகல் வசதிகள் இல்லாத மொழிகளில் கவனம் செலுத்தி, பல முதன்மைத் தரவுகளைச் சேகரிப்பதற்காக பாரத் டேட்டா சாகர் முன்னெடுப்பினைத் தொடங்கியுள்ளது.




## புதிய SAMARTH மையங்கள்

- கனரகத் தொழில்துறை அமைச்சகம் (MHI) ஆனது, நான்கு சீரொழுங்கு மிக்க மேம்பட்ட உற்பத்தி மற்றும் விரைவான பரிணாம மையம் (SAMARTH) எனப்படும் மையங்களை நிறுவியுள்ளது.
- இது இந்திய மூலதனப் பொருட்கள் துறையில் போட்டித் தன்மையை மிகவும் நன்கு மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- அந்த 4 மையங்களாவன:
  - தொழில் துறைக்கான மையம் 4.0 (C4i4) ஆய்வகம், புனே;
  - சீர்மிகு உற்பத்திக்கான IITD-AIA அறக்கட்டளை, IIT- டெல்லி;
  - I-4.0 இந்தியா மையம், இந்திய அறிவியல் கல்விக் கழகம், பெங்களூரு; மற்றும்
  - சீர்மிகு உற்பத்தி செயல் விளக்க & மேம்பாட்டு அலகு, மத்திய உற்பத்தித் தொழில் நுட்பக் கல்வி நிறுவனம், பெங்களூரு.



## 'ஜல்வஹக்' திட்டம்




- மத்திய துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் அமைச்சகம் ஆனது, உள்நாட்டு நீர்வழிகள் மற்றும் சரக்குப் போக்குவரத்தை நன்கு மேம்படுத்துவதற்காக 'ஜல்வஹக்' திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இது உள்நாட்டு நீர்வழிகளின் வர்த்தகத் திறனை வெளிக் கொணர்வது, தளவாடச் செலவினங்களை நன்கு குறைப்பது மற்றும் சாலை மற்றும் இரயில் போக்குவரத்து வலையமைப்புகளில் உள்ள நெரிசலைக் குறைப்பது ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- தேசிய நீர்வழிகள் (NW) 1 (கங்கை), 2 (பிரம்மபுத்திரா) மற்றும் 16 (பராக்) ஆகியவற்றில் மேற்கொள்ளப்படும் நீண்ட தூர அளவிலான சரக்குப் போக்குவரத்துகளுக்கு ஊக்கத் தொகைகளை இது வழங்குகிறது.
- இந்தத் திட்டத்தின் கீழ், நீர்வழிகள் வழியாக சுமார் 300 கிலோ மீட்டருக்கு மேலான தொலைவுகளுக்கு சரக்குகளை ஏற்றிச் செல்லும் சரக்கு உரிமையாளர்கள் அதற்கான போக்குவரத்துச் செலவில் 35 சதவீதம் வரை திரும்பப் பெறுவார்கள்.

## கழிவு மேலாண்மை பற்றிய அறிக்கை

- கழிவுகளிலிருந்து மதிப்புமிக்கப் பொருட்களை உருவாக்குதல்: இந்தியாவின் நகர்ப்புற நீர் நெருக்கடியை கழிவு நீர் மறுபயன்பாட்டின் மூலம் மேலாண்மை செய்தல் என்ற அறிக்கையானது அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் மையம் (CSE) மற்றும் தேசிய கங்கை தூய்மை திட்டம் (NMCG) ஆகியவற்றினால் கூட்டாக வெளியிடப்பட்டுள்ளது.
- இந்தியாவில் தற்போது தினசரி உற்பத்தியாகும் 72,000 மில்லியன் லிட்டர் கழிவுநீரில் 28 சதவீதம் மட்டுமே சுத்திகரிக்கப்படுகிறது.
- நகரங்களில் மக்கள் பயன்படுத்தும் தண்ணீரில் குறைந்தது சுமார் 20 சதவீதத்தினை மறுசுழற்சி செய்ய வேண்டும் என்று ஜல் சக்தி அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது.
- சுத்திகரிக்கப்படாத கழிவு நீர் அளவுகளின் அடிப்படையில் உத்தரப் பிரதேச மாநிலம் முதலிடத்தில் உள்ளது, அதைத் தொடர்ந்து மகாராஷ்டிரா, கர்நாடகா, இராஜஸ்தான், தமிழ்நாடு, டெல்லி மற்றும் ஹரியானா ஆகியவை இடம் பெற்றுள்ளன.

- இருப்பினும், பல மாநிலங்கள் முற்போக்கான கொள்கைகளை அமல்படுத்தியுள்ளன.
- தமிழ்நாடானது தொழில்துறை மற்றும் நகர்ப்புற பசுமையாக்கல் நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை அளித்துள்ளது.
- நாக்பூர், பெங்களூரு மற்றும் சென்னை போன்ற நகரங்கள் கழிவுநீரை மறுசுழற்சி செய்து பயன்படுத்துவதற்கான வெற்றிகரமான உதாரணங்களாக உள்ளன.
- நாக்பூர் அரசானது, மின் உற்பத்தி நிலையங்களுக்கு சுத்திகரிக்கப்பட்டக் கழிவுநீரை வழங்கி, அவற்றில் நன்னீர் பயன்பாட்டினைக் குறைத்துள்ளது.

# சர்வதேசச் செய்திகள்

## கெலேபு - விழிப்புணர்வு மிக்க நகரம்

- பூடான் நாட்டின் கெலேபு என்ற நகரில் உருவாக்கப்பட்டு வரும் 2,500 சதுர கிலோமீட்டர் பரப்பிலான "சுழிய அளவு கார்பன் உமிழ்வு" வெளியிடும் ஒரு நகரத்திற்கு இந்தியா ஆதரவளித்து வருகிறது.
- இது ஒரு சிறப்பு நிர்வாகப் பகுதி (SAR) ஆகும்.
- இது அதன் சொந்த அரசாங்கத்தைக் கொண்டிருக்கும் என்பதோடு மேலும், அதன் சொந்தச் சட்டத்தை உருவாக்கச் செய்வதற்கான சுதந்திரம் மற்றும் சுதந்திரமான நீதித்துறை ஆகியவற்றைக் கொண்டிருக்கும்.
- இது ஒரு தேசியப் பூங்கா மற்றும் ஒரு வனவிலங்குச் சரணாலயம் என இரண்டு பாதுகாக்கப் பட்ட பகுதிகளைக் கொண்டிருக்கும்.
- 'விழிப்புணர்வு மிக்க நகரம்' என்ற இந்தத் திட்டம் ஆனது பூடான் மன்னர் ஜிக்மே கேசர் நாம்கேல் வாங்சக் அவர்களால் கருத்தாக்கம் செய்யப்பட்டது.

## புவி அச்சின் சாய்வில் மாற்றங்கள்

- புவியானது வெறும் 17 ஆண்டுகளில் 31.5 அங்குலம் கிழக்கு நோக்கி சாய்ந்துள்ளது.
- நிலத்தடி நீரின் நிலை மாற்றம் ஆனது, சுழற்சி துருவங்களின் சாய்வில் மிகப்பெரியத் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.
- இது சுமார் 0.24 அங்குல கடல் மட்ட உயர்விற்குப் பங்களித்தது மற்றும் பூமியின் நிறை பரவலை மாற்றியது.
- 1993 மற்றும் 2010 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில், உலகளவில் சுமார் 2,150 ஜிகாடன் நிலத்தடி நீர் எடுக்கப்பட்டு இடம் மாற்றப்பட்டதாக அறிவியலாளர்கள் மதிப்பிடச் செய்கின்றனர்.
- புவியின் சாய்வு என்பது புவிக் கிரகத்தின் சுழற்சி அச்சுக்கும் அதன் சுற்றுப்பாதை அச்சுக்கும் இடையே உள்ள ஒரு கோணம் ஆகும்.




## டாமரிஸ்க் நடவடிக்கை




- இது பனிப் போர் காலத்திய ஒரு நடவடிக்கை ஆகும்.
- இந்த டாமரிஸ்க் நடவடிக்கையானது, அமெரிக்கா, ஐக்கியப் பேரரசு, மற்றும் பிரான்சு ஆகிய நாடுகளைச் சேர்ந்த முகமைகளை உள்ளடக்கியது.
- இதானால் கிழக்கு ஜெர்மனியில் நிலை நிறுத்தப்பட்டிருந்த சோவியத் நாடுகளின் படைப் பிரிவுகள் விட்டுச் சென்ற குப்பைகளிலிருந்து பல சான்றுகள் கிடைத்தன.
- அப்புறப்படுத்தப்பட்ட இந்தப் பொருட்களில் உணவுக் கழிவுகள், கடிதங்கள், இராணுவ ஆவணங்கள் மற்றும் பயன்படுத்தப்பட்ட கழிப்பறை காகிதங்களும் அடங்கும்.
- உளவு முகமைகள் ஆனது, இந்தக் குப்பைக் குவியல்களுக்கு இடையே முக்கியமான சில தகவல்களைக் கண்டறிந்தன.

- ❖ சில சூழல்களில், அந்த முகமைகள் மருத்துவமனை கழிவுத் தொட்டிகளில் இருந்து சில பொருட்களை மீட்டெடுத்தனர், அதில் கிடைத்த மனித உறுப்புகள் குறித்த விவரங்கள், குறிப்பாக ஆப்கானிஸ்தானில் போரில் பயன்படுத்தப்பட்ட தெறி குண்டுகள் மற்றும் சோவியத் வீரர்களுக்கு ஏற்பட்ட காயங்கள் பற்றிய தகவல்களை வழங்கியது.
- ❖ 1948 ஆம் ஆண்டில், அமெரிக்க விமானி கெயில் ஹால்வோர்சன் பெர்லின் வான்வழி பொருள் விநியோக நடவடிக்கையின் போது, குழந்தைகளுக்காகப் பெர்லினில் இருந்து மிட்டாய்களை இறக்கியதையடுத்து, "தி கேண்டி பாம்பர்" என்ற புனைப் பெயரைப் பெற்றார்.

## இஸ்ரேல் மற்றும் லெபனான் அமைதி ஒப்பந்தம்

- ❖ லெபனானுடன் போர் நிறுத்தத்திற்கு இஸ்ரேல் ஒப்புக் கொண்டுள்ளது.
- ❖ ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையின் 1701 தீர்மானத்தின் முக்கியத்துவத்தினை இஸ்ரேல் மற்றும் லெபனான் ஆகிய நாடுகள் அங்கீகரித்துள்ளன.
- ❖ இஸ்ரேல் நாடும் லெபனான் நாட்டில் உள்ள மற்றும் ஈரான் ஆதரவு பெற்ற போராளிக் குழுவான ஹிஸ்புல்லா குழுவும் பல மாதங்களாகப் போரில் ஈடுபட்டு வருகின்றன.
- ❖ ஹிஸ்புல்லா தனது நட்பு சார் அமைப்பாக கருதும் மற்றொரு ஈரான் ஆதரவு பெற்ற போராளிக் குழுவான ஹமாஸை ஆதரித்து வருகிறது.
- ❖ 2023 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல், தீவிரவாதிகள் இஸ்ரேல்-காசா எல்லையில் அத்துமீறி நுழைந்து பல இஸ்ரேலியர்களை பணயக் கைதிகளாகப் சிறை பிடித்ததில் இருந்து இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் அமைப்பிற்கு இடையில் போரானது நடைபெற்று வருகிறது.




## எண்ணிமப் பசுமை நடவடிக்கை பற்றிய பிரகடனம்

- ❖ எண்ணிமப் பசுமை நடவடிக்கையானது CoP28 மாநாட்டில் (துபாய், 2023) சர்வதேசத் தொலைத் தொடர்பு ஒன்றியத்தினால் (ITU) தொடங்கப்பட்டது.

- ❖ பசுமை எண்ணிம நடவடிக்கைக்கான COP29 பிரகடனம் ஆனது, தகவல் தொடர்பு தொழில்நுட்பத் துறையில் பருவநிலைக்கு வேண்டிய நேர்மறையான தாக்கத்தினை ஏற்படுத்துகின்ற எண்ணிமமயமாக்கல் மற்றும் உமிழ்வு குறைப்பு நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ இது பருவநிலை நடவடிக்கை மற்றும் தகவமைப்பு மிக்க எண்ணிம உள்கட்டமைப்பை உருவாக்குவதையும் ஆதரிக்கிறது.
- ❖ இது பருவநிலையில் எண்ணிமமயமாக்கலின் தாக்கத்தினை அளவிடுவதற்காக என்று அளவுருக்கள் மற்றும் குறிகாட்டிகளை நிறுவும்.




## சர்வதேச நோய்க்கிருமி கண்காணிப்பு வலையமைப்பின் மானியங்கள்

- ❖ நோய்க்கிருமி மரபணு கண்காணிப்பை மேம்படுத்துவதற்காக என்று உலக சுகாதார அமைப்பானது பத்து திட்டங்களை அறிவித்துள்ளது.
- ❖ நோய்க்கிருமி மரபணுக் கண்காணிப்புத் திறன்களை மேம்படுத்துவதற்காக மேலே குறிப்பிட்ட திட்டங்கள் ஒவ்வொன்றும் சுமார் 2 மில்லியன் டாலர் நிதியைப் பெறும்.
- ❖ இந்த நிதியுதவி முன்னெடுப்பானது, சர்வதேச நோய்க்கிருமிக் கண்காணிப்பு வலை அமைப்பினால் (IPSN) நிறுவப்பட்டது.
- ❖ மரபணு நோய்க்கிருமிப் பகுப்பாய்வில் தனது திறன்களை மேம்படுத்தச் செய்வதில் குறைவான மற்றும் நடுத்தர வருவாய் உள்ள பகுதிகளில் உள்ள பங்குதாரர்களுக்கு உதவுவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

## உலகளாவியக் கோரல் 2025

- ❖ ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான உயர் ஆணையமானது (UNHCR) 2025 ஆம் ஆண்டிற்கான 10 பில்லியன் டாலர் மதிப்பிலான ஒரு நிதிக் கோரல் அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- ❖ உலகெங்கிலும் உள்ள மில்லியன் கணக்கான அகதிகள், புலம்பெயர்ந்தவர்கள் மற்றும் நாடற்ற மக்களுக்கு அவசியமானத் தேவைகளைப் பூர்த்தி செய்வதையும், நிலையான தீர்வுகளைச் செயல்படுத்துவதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ 2023 ஆம் ஆண்டிற்கான அறிக்கையின்படி, உலகளவில் சுமார் 117.3 மில்லியன் மக்கள் வலுக்கட்டாயமாக புலம்பெயர்ந்துள்ளனர் என்பதோடு அவர்களில் சுமார் 40% பேர் குழந்தைகள் ஆவர்.




## உக்ரைனில் துயரகர இடம் சார் சுற்றுலா




- சமீபத்திய ஆண்டுகளில், உலகளாவியச் சுற்றுலாத் துறையானது துயரகர இடம் சார் சுற்றுலா / இருள் சுற்றுலாவின் எழுச்சியைக் கண்டுள்ளது.
- இது வரலாற்று ரீதியான துயரமான அல்லது மோதல்கள் நடைபெற்ற இடங்களைப் பார்வையிடுவதில் கவனம் செலுத்தும் ஒரு முக்கிய பயணத் துறையாகும்.
- தற்போது, உக்ரைன் இந்த வகையான சுற்றுலாவின் முக்கியத் தளமாக மாறியுள்ளது.
- இந்தச் சுற்றுப்பயணங்கள் ஆனது, 2022 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் படுகொலைகள் நடந்ததாகக் கூறப்படும் கியேவ் மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகளுக்கான சுற்றுலாப் பயணங்களின் மீது கவனம் செலுத்துகின்றன.

- குல்தாரா கிராமம் - ஜெய்சல்மர் (ராஜஸ்தான்), செல்லுலார் சிறை - போர்ட் பிளேயர் (அந்தமான் நிக்கோபார் தீவு), ரூப்குந்த் ஏரி - உத்தரகாண்ட் மற்றும் டுமாஸ் பீச் - சூரத் (குஜராத்) ஆகியவை இந்தியாவில் உள்ள சில துயரகர இடம் சார் சுற்றுலாத் தலங்கள் ஆகும்.

## காஸ்காயிஸ் பிரகடனம்




- போர்ச்சுகலில் நடைபெற்ற நாகரிகங்களுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் கூட்டணி மீதான 10வது உலகளாவிய மன்றமானது காஸ்காயிஸ் பிரகடனத்தினை ஏற்றுள்ளது.
- இது பல்வேறு நடவடிக்கைகளைக் குறிப்பிட்டுக் காட்டச் செய்வதோடு, சிதைந்து வரும் நம்பிக்கை மற்றும் அதிகரித்து வரும் யூத எதிர்ப்பு, தேசியவாதம் மற்றும் இயங்கலை வழி வெறுப்புப் பேச்சுகள் போன்ற தற்போது நிலவி வரும் பிரச்சினைகளுக்கான சில தீர்வுகளில் கவனம் செலுத்துகிறது.
- இது பல்வேறு கலாச்சார மற்றும் மதங்களுக்கு இடையேயான பேச்சுவார்த்தையினை முன்னெடுப்பதற்காக வேண்டி ஒரு செயற்கருவியாக செயற்கை நுண்ணறிவினைப் பயன்படுத்துவதற்கான சாத்தியக் கூறினை ஆதரிக்கிறது.
- பேச்சுவார்த்தையினை மேம்படுத்துவதற்கான ஒரு செயற்கருவியாக "விளையாட்டுத் துறை சார் உத்தியின்" பங்களிப்பை அது குறிப்பிட்டது.
- பேச்சுவார்த்தை மேற்கொள்ளுதல், நடுவண் நடவடிக்கை மற்றும் அமைதி உருவாக்க நடவடிக்கைகளில் பெண்களின் பங்கை ஆதரித்து நன்கு வலுப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் அது வலியுறுத்தியது.

## இத்தாலியின் வாடகைத் தாய் சட்டம்

- இத்தாலிய நாட்டின் மேலவை ஆனது, சமீபத்தில் வாடகைத் தாய் (பதிலித் தாய்) முறையினை ஒரு "உலகளாவியக் குற்றமாக" அறிவிக்கும் ஒரு சட்டத்தை நிறைவேற்றி உள்ளது.

- இத்தாலியில் ஏற்கனவே வாடகைத் தாய் முறையானது 2004 ஆம் ஆண்டு முதல் சட்ட விரோதமானதாக உள்ளது.
- இந்தப் புதிய சட்டத்தின் கீழ், இத்தாலியர்கள் இந்த நடைமுறை சட்டப்பூர்வமாக உள்ள வெளிநாட்டிலும் கூட வாடகைத் தாய் முறையை அணுகுவது குற்றமாக அறிவிக்கப் படும்.
- இது வாடகைத் தாய் முறையை இனப்படுகொலை மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்களுக்கு இணையாக வைக்கிறது.
- கிரீஸ் நாட்டில் வணிகம் சாராத வாடகைத் தாய் முறை 2002 ஆம் ஆண்டு முதல் சட்டப் பூர்வமாக உள்ளது.
- பிரான்சு மற்றும் ஜெர்மனி உள்ளிட்ட பிற நாடுகளும் வாடகைத் தாய் முறையைத் தடை செய்கின்றன.


Understanding Surrogacy and its Regulation

SURROGACY

- Having another woman bear a child for a couple (or single woman or man) to raise.
- The surrogate offers to carry a baby through pregnancy and then return the baby to the intended parent(s) once it is born.
- Surrogacy is an option to fulfil the desire to have a child of a couple for whom it is physically or medically impossible or undesirable to carry a baby to term on their own.
- There are two types of surrogacy – traditional surrogacy and gestational surrogacy.
- In Traditional Surrogacy, a surrogate mother is artificially inseminated, either by the intended father or an anonymous donor. The surrogate mother provides the egg and is thus genetically related to the child.
- In Gestational Surrogacy, an embryo is created using an egg and sperm produced by the intended couple and is transferred into the surrogate's uterus. The surrogate has no genetic link to the child. Her eggs cannot be used to conceive the child.
- Surrogacy can be altruistic or commercial. In altruistic surrogacy, the surrogate is not paid for her services, except for medical expenses and insurance. In commercial surrogacy, the surrogate is paid over and above these expenses.
- The Surrogacy (Regulation) Bill seeks to ban commercial surrogacy but protect the altruistic surrogate through enhanced, prescribed payments (for medical expenses, food and care, longer duration insurance).

INDICATIONS FOR SURROGACY

- Opting for surrogacy is often a choice made when women are unable to carry children on their own.
- This can be for a number of reasons, including an abnormal uterus or a complete absence of a uterus either congenitally or post-hysterectomy.
- Women may have a hysterectomy due to complications in childbirth, medical diseases such as cervical cancer or endometrial cancer, or heart and renal conditions, etc.

WHAT DO OTHER COUNTRIES DO?

- Russia, Georgia, Ukraine, Columbia, Iran, and some states of the US allow commercial surrogacy.
- France, Finland, Italy, Japan, Spain, Sweden, Switzerland, Hungary, Ireland, etc. have banned all forms of surrogacy.
- India seeks a middle path between these extremes, by banning commercial surrogacy (including for foreigners) while allowing and regulating altruistic surrogacy for all persons of Indian origin.
- Australia, Canada, Israel, Netherlands, New Zealand, South Africa, UK, Vietnam, Thailand, Cambodia, Nepal, Mexico have similar surrogacy practices as India seeks to establish.

## உதவியுடன் கூடிய மரணம் குறித்த ஐக்கியப் பேரரசின் சட்டம்

- ஐக்கியப் பேரரசானது, சமீபத்தில் தீராத நோயினால் / நோயின் கடையிறுதி நிலையில் அவதிப்படும் நபர்கள் (வாழ்க்கை முடிவு) மசோதாவினை நிறைவேற்றியுள்ளது.
- நோயின் கடையிறுதி நிலையில் அவதிப்படும் நோயாளிகள் (கொடிய நோய்களில் இருந்து மீண்டு வருவார்கள் என்ற நம்பிக்கை இல்லாதவர்கள்) தங்கள் வாழ்க்கையை முடித்துக் கொள்வதற்கு உதவி கோருவதற்கு இந்த மசோதா அனுமதிக்கிறது.
- உதவியுடன் கூடிய ஒரு மரணம் என்பது ஒரு நோயாளி ஒரு மருத்துவரின் உதவியுடன் தனது வாழ்க்கையை முடித்துக் கொள்ளும் ஒரு செயல்முறையாகும்.
- கருணைக் கொலை என்பது மிகவும் தீவிரமாக நோய்வாய்ப்பட்ட ஒரு நோயாளியின் வாழ்க்கையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு என்று அதிகபட்சமான மருத்துவரின் ஈடுபாட்டை உள்ளடக்கியது.

- 18 வயதுக்கு மேற்பட்ட தீவிர நோய்வாய்ப்பட்ட மற்றும் அத்தகைய முடிவை எடுக்கும் மன திறன் கொண்ட ஒரு நபர் மட்டுமே உதவியுடன் கூடிய மரணத்தைக் கோர முடியும் என்று இந்த மசோதா கூறுகிறது.




**RS 28 சார்மட் – ரஷ்யா**




- ரஷ்யாவானது சாத்தான் 2 என்றும் அழைக்கப்படுகின்ற தனது RS-28 சார்மட் எனப் படும் கண்டம் விட்டு கண்டம் பாயும் எறிகணையைப் பயன்படுத்த திட்டமிட்டுள்ளது.

- RS-28 சார்மட் என்பது அடுத்தத் தலைமுறைத் தொழில்நுட்பத்திலான கண்டம் விட்டு கண்டம் பாயும் எறிகணையாகும் (ICBM).
- நேட்டோ நாடுகளால் பொதுவாக "சாத்தான்" என குறிப்பிடப்படும் சோவியத் காலத்து R-36 ICBM எறிகணைகளுக்கு மாற்றாக இது வடிவமைக்கப்பட்டுள்ளது.
- 15 அணு ஆயுதங்களை சுமந்து செல்லக் கூடிய இந்தச் சார்மட் எறிகணையானது மிக தன்னிச்சையாக இலக்குகளை நிர்ணயிக்கக் கூடிய மறு நுழைவு கணைகளாக (MIRV) வடிவமைக்கப்ப ட்டுள்ளது.
- இது பல இலக்குகளை ஒரே நேரத்தில் தாக்கும் திறன் கொண்டது.
- இந்த எறிகணை ஆனது சுமார் 6,200 முதல் 11,180 மைல்கள் வரை செல்லக்கூடியதோடு, இது அமெரிக்கா அல்லது ஐரோப்பா முழுவதும் உள்ள பகுதிகளை நன்கு குறி வைக்க உதவுகிறது.

## தென் கொரியாவில் அவசரநிலை




- தென் கொரிய அதிபர் யூன் சுக் யோல் ராணுவச் சட்டப் பிரகடனத்தினை அறிவித்தார்.
- அவர் வட கொரியாவில் இருந்து வரும் "அச்சுறுத்தல்களை" குறிப்பிட்டுக் காட்டி தென் கொரியாவின் பிரதான எதிர்க்கட்சியை கடுமையாக சாடினார்.
- 1980 ஆம் ஆண்டிற்குப் பிறகு இந்தக் கிழக்கு ஆசிய நாட்டில் அவசரநிலை அறிவிக்கப் பட்டது இது முதன்முறையாகும்.
- இருப்பினும், அவர் ராணுவச் சட்டத்தை அறிவித்த ஆறு மணி நேரத்திற்குள் அதனைத் திரும்பப் பெற்றார்.
- தென் கொரிய நாட்டின் சட்டத்தின் படி, அந்த நாட்டின் தேசியச் சட்டமன்றத்தில் மிகப் பெரும்பான்மையானவர்கள் இராணுவச் சட்டத்தை ரத்து செய்வதற்கு வாக்களிக்கக் கோரினால், அரசாங்கம் அந்த உத்தரவினை நீக்க வேண்டும்.

## புசான் உச்சி மாநாடு 2024

- தென் கொரியாவின் புசான் நகரில் நடைபெற்ற அரசுகளுக்கிடையேயான ஒரு பேச்சு வார்த்தைக் குழுவின் (INC) 5வது பேச்சுவார்த்தையில் நெகிழி மாசுபாட்டை நன்கு எதிர் கொள்ளும் நோக்கில் ஒரு புதிய ஒப்பந்தத்தினை இறுதி செய்வதற்காக சுமார் 175 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் ஒன்று கூடினர்.

- ஆனால் சவூதி அரேபியா, ரஷ்யா மற்றும் ஈரான் தலைமையிலான புதைபடிவ-எரிபொருள்களை உற்பத்தி செய்யும் நாடுகளின் குழுவானது, அதற்கான உற்பத்திக் குறைப்புகளைச் சேர்க்கும் அனைத்து நடவடிக்கையினையும் எதிர்த்தன.
- தென் கொரியக் குடியரசின் புசான் என்ற நகரில் நடைபெறும் INC-5 நிகழச்சியினை ஒத்தி வைக்கவும் பின்னர் வேறொரு தேதியில் மீண்டும் ஒரு கூட்டத்தைக் கூட்டவும் அந்த நாடுகள் ஒப்புக் கொண்டன.
- INC-5 ஆனது, ஒரு புதிய ஒப்பந்தத்தை உலக நாடுகளுக்கு வழங்குவதற்கான அதன் நோக்கத்தை எட்டவில்லை.




## அலெப்போ நகர நெருக்கடி 2024




- சிரியாவில் கிளர்ச்சிப் படைகள் ஆனது நாட்டின் இரண்டாவது பெரிய நகரமான அலெப்போவின் "பெரும்பான்மையான" பகுதிகளின் கட்டுப்பாட்டைக் கைப்பற்றி உள்ளன.
- ஓர் இஸ்லாமிய ஆதிக்க கிளர்ச்சிக் கூட்டணியானது, ஈரானிய மற்றும் ரஷ்ய ஆதரவு அரசாங்கத்தின் படைகள் மீது அதன் தாக்குதலைத் தொடங்கியது.
- 2016 ஆம் ஆண்டிற்குப் பிறகு முதல் முறையாக அலெப்போவின் சில பகுதிகளில் முதல் முறையாக ரஷ்யா வான்வழித் தாக்குதல்களை நடத்தியது.

## இரத்தக் கசிவு கண் நோய்




- 'இரத்தக் கசிவு கண்' வைரஸ் எனப்படும் மார்பர்க் வைரஸ் ஆனது, ருவாண்டாவில் 15 பேரின் உயிரைப் பலி வாங்கியுள்ளது.
- 'இரத்தக் கசிவு கண்' என்ற புனைப்பெயர் ஆனது அதன் அறிகுறிகளிலிருந்து பெறப் பட்டுள்ளது என்பதோடு இதன் தீவிரப் பாதிப்பு நிலைகளில் கண்கள், மூக்கு அல்லது வாயிலிருந்து இரத்தப் போக்கு ஏற்படலாம்.
- இது இபோலா வைரஸுடன் நெருங்கிய தொடர்புடைய ஃபிலோவைரஸ் குடும்பத்தைச் சேர்ந்த மிகவும் தொற்று மிக்க நோய்க்கிருமியாகும்.
- இது 24% முதல் 88% வரையிலான அதிக உயிரிழப்பு விகிதத்துடன் கூடிய கடுமையான இரத்தக்கசிவு காய்ச்சலை ஏற்படுத்தச் செய்கின்ற மார்பர்க் வைரஸ் நோயை (MVD) ஏற்படுத்துகிறது.
- இந்த வைரஸ் பாதிக்கப்பட்ட நபர்களின் உடல் திரவங்கள், அசுத்தமான மேற்பரப்பு அல்லது படுக்கை மற்றும் ஆடை போன்ற சில பொருட்களுடன் நேரடியாகத் தொடர்பு கொள்வதன் மூலம் பரவுகிறது.

## UNCCD COP 16

- சவூதி அரேபியா நாட்டின் ரியாத் நகரில், பாலைவனமாக்குதலை எதிர்த்துப் போராடச் செய்வதற்கான ஐக்கிய நாடுகள் சபையின் உடன்படிக்கையின் (UNCCD) 16வது பங்கு தாரர் மாநாடானது (CoP16) நடைபெற்று வருகிறது.
- இந்நிகழ்வின் கருத்துரு, “Our Land. Our Future” என்பதாகும்.
- இந்த நிகழ்வின் போது, இந்தியாவானது IUCN அமைப்பின் காட்சி விளக்க அரங்கில் இலட்சியமிகு ஆரவல்லி பசுமை அரண் திட்டத்தினைக் காட்சிப்படுத்தியது.
- வடமேற்கு இந்தியாவில் உள்ள நான்கு மாநிலங்களில் 1.15 மில்லியன் ஹெக்டேர் வளம் அழிந்த நிலப்பரப்பை மீட்டெடுப்பதை இந்த முன்னெடுப்பு நோக்கமாகக் கொண்டு உள்ளது.

- 1994 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட UNCCD ஆனது சட்டப்பூர்வப் பிணைப்பு கொண்ட ஒரே சர்வதேச ஒப்பந்தமாகும்.
- UNCCD ஆனது உயிரியல் பன்முகத் தன்மை மீதான உடன்படிக்கை (CBD) மற்றும் UFCCC ஆகிய இரண்டு ரியோ உடன்படிக்கைகளுடன் இணைந்து செயல்படுகிறது.

## ICJ மன்றத்தில் பருவநிலை மாற்றம் தொடர்பான வழக்கு - வனவாட்டு




- பசுமை இல்ல வாயுவை வெளியிடும் நாடுகள் பருவநிலை மாற்றத்தை ஏற்படுத்தச் செய்வதன் மூலம் சட்ட விரோதமாகச் செயல்படுகின்றது என்பதைக் கண்டறிவதற்கு சர்வதேச நீதிமன்றத்திற்கு வனுவாட்டு அழைப்பு விடுத்துள்ளது.
- பருவநிலை மாற்றம் தொடர்பான நாடுகளின் கடமைகள் ஆனது 2015 ஆம் ஆண்டு பாரீஸ் உடன்படிக்கை போன்ற பருவநிலை ஒப்பந்தங்களுக்கு அப்பால் வேறு எந்த விதிகளையும் கொண்டிருக்கவில்லை என்று ஆஸ்திரேலியா வாதிட்டது.
- சுமார் 100 நாடுகள் - அமெரிக்கா மற்றும் சீனா உட்பட - சர்வதேச நீதிமன்றத்தில் இரண்டு வாரங்களுக்கும் மேலான தீவிர விசாரணையில் தங்களது கருத்துக்களைத் தெரிவிக்க உள்ளன.
- வனுவாட்டு தீவு ஆனது கடல் மட்டம் உயர்வதால் கடுமையான அச்சுறுத்தலை எதிர் கொண்டு வரும் ஒரு சிறிய பசிபிக் தீவு நாடாகும்.
- சர்வதேச நீதிமன்றத்தில் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்கும் முதல் நாடு வனுவாட்டு ஆகும்.

## அண்டார்டிகாவில் சீனாவின் வளிமண்டல கண்காணிப்பு நிலையம்

- அண்டார்டிகாவில் அமைக்கப்பட்டுள்ள சீனாவின் முதல் வளிமண்டல கண்காணிப்பு நிலையம் ஆனது சமீபத்தில் செயல்படத் தொடங்கியது.
- கிழக்கு அண்டார்டிகாவில் லார்ஸ்மேன் மலையில் இந்த நிலையம் அமைந்துள்ளது.
- பிப்ரவரி மாதத்தில், அண்டார்டிகாவில் சீனா தனது ராஸ் கடல் அறிவியல் ஆராய்ச்சி நிலையத்தைத் தொடங்கியது.

- அண்டார்டிகாவில் 1985 மற்றும் 2014 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் கட்டமைக்கப் பட்ட மற்ற ஐந்து ஆராய்ச்சி நிலையங்களையும் இது கொண்டுள்ளது.




## அரிய கனிமங்களின் ஏற்றுமதிக்குத் தடை



- அமெரிக்க நாட்டிற்கு கேலியம், ஜெர்மானியம் மற்றும் ஆன்டிமோனி ஆகிய மூன்று முக்கிய அரிய கனிமங்களின் ஏற்றுமதியை சீனா தடை செய்துள்ளது.
- அவை பெரும்பாலும் கணினிகள், பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் புதுப்பிக்கத் தக்க ஆற்றல் தொழில்நுட்பத்தில் பயன்படுத்தப் படுகின்றன.
- உலகின் 60% ஜெர்மானியத்தையும் 80% கேலியத்தையும் சீனா உற்பத்தி செய்கிறது.
- சமீபத்தில் அமெரிக்காவானது சில வகையான சில்லுகள் மற்றும் இயந்திரங்களின் வர்த்தகத்தினைத் தடை செய்ததோடு மேலும், 100க்கும் மேற்பட்ட சீன நிறுவனங்களை தடை செய்யப்பட்ட வர்த்தகப் பட்டியலில் சேர்த்தது.

## கடலடிக் கம்பிவடங்களின் தாங்குந் திறன் தொடர்பான சர்வதேச ஆலோசனைக் குழு

- சர்வதேச கம்பிவடங்கள் பாதுகாப்புக் குழு (ICPC) ஆனது, கடலடிக் கம்பிவடங்களின் தாங்குந் திறன் தொடர்பான சர்வதேச ஆலோசனைக் குழுவை உருவாக்கியுள்ளது.
- பழமையான உள்கட்டமைப்பு, அதிகரித்து வரும் சுற்றுச்சூழல் சார்ந்த அச்சுறுத்தல்கள் மற்றும் உலகளாவிய கம்பி வட நிறுவல் அதிகரிப்பு ஆகியவற்றால் ஏற்படும் பல்வேறு சவால்களை எதிர்கொள்வதனை இந்த அமைப்பு நோக்கமாக உள்ளதுகொண்டுள்ளது.
- 40 உறுப்பினர்களைக் கொண்ட இந்த ஆலோசனைக் குழுவில் அமைச்சர்கள், ஒழுங்கு முறைத் தலைவர்கள் மற்றும் உலகம் முழுவதிலும் உள்ள பல்வேறு தொலைத்தொடர்பு நிபுணர்கள் இடம் பெற்றுள்ளனர்.
- மும்பை, சென்னை, கொச்சி, தூத்துக்குடி மற்றும் திருவனந்தபுரத்தில் அமைந்துள்ள 14 தரையிணைப்புக் கட்டுப்பாட்டு நிலையங்களில் சுமார் 17 சர்வதேச கடலடிக் கம்பி வடங்களை இந்தியா கொண்டுள்ளது.



## Business4land முன்னெடுப்பு

- சவூதி அரேபியாவின் ரியாத் நகரில் Business4land மன்றம் நடைபெற்றது.

- UNCCD அமைப்பின் Business4land- பிசினஸ்4லேண்ட் (B4L) முன்னெடுப்பானது, தனியார் துறை நிறுவனங்கள் நிலச் சீரழிவு குறித்த அபாயங்களை மதிப்பிடச் செய்வதற்கும், அதற்கான தணிப்பு நடவடிக்கைகள் குறித்து அறிக்கை வழங்குவதற்குமான ஒரு வழி காட்டுதலை வெளியிடுகிறது.
- B4L முன்னெடுப்பின் நடவடிக்கை மேற்கொள்வதற்கான அழைப்பு ஆனது, Business4land (B4L) முன்னெடுப்பின் முக்கியப் பிரிவுகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவற்றில் பங்களிக்குமாறு நிறுவனங்களை ஊக்குவிக்கிறது.
- 44 டிரில்லியன் டாலர் அல்லது உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பங்கு வகிக்கும் பகுதிகள் ஆனது, இயற்கையினால் ஏற்படும் இழப்பின் ஆபத்தில் உள்ளது.




## சிரியாவில் அசாத் ஆட்சியின் முடிவு




- சிரியாவில் கிளர்ச்சியாளர்கள் தலைநகர் டமாஸ்கஸின் கட்டுப்பாட்டைக் கைப்பற்றி, அதிபர் பஷர் அல்-அசாத்தின் பல்லாண்டு பல தசாப்த கால ஆட்சி முடிவுக்கு வந்ததாக அறிவித்தனர்.

- அவரது ஆட்சியின் கீழ், சிரியா ஈரானின் ஒரு முக்கியக் கூட்டாளியாக மாறியதால் அது இஸ்ரேலுக்கும் அமெரிக்காவிற்கும் விரோதமான நாடாகவே திகழ்ந்தது.
- அசாத்தின் பதவி நீக்கம் அவரது 24 ஆண்டுகாலத் திடமான ஆட்சியையும் 54 ஆண்டு கால அசாத் குடும்ப ஆட்சியையும் முடிவுக்குக் கொண்டு வந்தது.
- சிரியப் போரில் சுமார் அரை மில்லியன் மக்கள் உயிரிழந்த நிலையில், போருக்கு முன்னதாக சுமார் 23 மில்லியனாக இருந்த அந்நாட்டின் மக்கள் தொகையில் பாதி பேர் இடம் பெயர்ந்துள்ளனர்.

## 20வது மனாமா பேச்சுவார்த்தை

- இது பஹ்ரைன் பேரரசில் 2004 ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் நடத்தப் படுகிறது.
- இந்த பேச்சுவார்த்தை ஆனது மத்தியக் கிழக்கு நாடுகளின் பாதுகாப்பு கட்டமைப்பின் மைய அங்கமாகும்.
- இது புவிசார் அரசியல், பாதுகாப்புப் போக்குகள் மற்றும் மோதல் தீர்வு பற்றிய சில கொள்கை விவாதங்களை எளிதாக்குகிறது.
- இந்த ஆண்டிற்கான இந்த நிகழ்வின் கருத்துரு, "Middle East Leadership in Shaping Regional Prosperity and Security" என்பதாகும்.

## உலகின் முதல் தேசிய ஒலிச் சூழல்

- தேசிய ஒலிச் சூழலினைத் தொடங்க உள்ள உலகின் முதல் நாடாக ஃபின்லாந்து மாறி உள்ளது.
- இந்த ஒலிச் சூழல் ஆனது, அதன் மக்கள் மற்றும் அவர்களின் குணாதிசயங்களை உள்ளடக்கிய 15 பாடல் தொகுப்புகளைக் கொண்டுள்ளது.
- ஒலிச் சூழல் ஆனது பின்லாந்து நாட்டின் கலாச்சாரம் பற்றியதொரு விழிப்புணர்வை அதிகரிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளதோடு கணக்கெடுப்பின்படி நாட்டின் மதிப்பு குறித்த மிகக் குறைவாக மதிப்பிடப்பட்ட நன்கு அறியப்பட்ட அம்சமாகும்.

## ஷெஞ்சன் பிராந்தியம் - பல்கேரியா மற்றும் ருமேனியா

- அடுத்த ஆண்டின் தொடக்கத்தில் இருந்து எல்லையற்ற ஷெஞ்சன் மண்டலத்தின் முழு உறுப்பினர்களாக மாறுவதற்கு பல்கேரியா மற்றும் ருமேனியா ஆகிய நாடுகளுக்கு ஐரோப்பிய ஒன்றியம் அனுமதி வழங்கியுள்ளது.
- பல்கேரியா மற்றும் ருமேனியா ஆகிய இரண்டு நாடுகளும் 2007 ஆம் ஆண்டு முதல் ஐரோப்பிய ஒன்றியத்தில் உறுப்பினர்களாக உள்ளன.
- ஆனால், சட்ட விரோத குடியேற்றம் அதிகமாகும் என்ற அச்சத்தில், இந்த மண்டலத்தை விரிவுபடுத்துவதற்கு ஆஸ்திரியா எதிர்ப்பு தெரிவித்தது.
- 1985 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட இந்த ஷெஞ்சன் மண்டலமானது தற்போது 29 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.
- இது ஐரோப்பிய ஒன்றியத்தின் மொத்த 27 உறுப்பினர் நாடுகளுள் 25 நாடுகளையும், சுவிட்சர்லாந்து, நார்வே, ஐஸ்லாந்து மற்றும் லிச்செஸ்டைன் ஆகியவற்றையும் உறுப்பினராகக் கொண்டுள்ளது.

- ❖ உள்நாட்டு எல்லைக் கட்டுப்பாடுகள் இல்லாத உலகின் மிகப்பெரிய பகுதியான இதில் சுமார் 400 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் இந்த மண்டலத்திற்குள் சுதந்திரமாகப் பயணிக்க முடியும்.




## 2030 ஆம் ஆண்டில் ஆர்க்டிக் பிரதேசத்தின் முதல் பனி இல்லாத நாள்

- ❖ ஆர்க்டிக் பகுதிகளில் காணப்படும் நீரில், 2030 ஆம் ஆண்டிற்குள் ஒரு மில்லியன் சதுர கிலோமீட்டருக்கும் குறைவான கடல் பனிப்பரவல் இருக்கும்.
- ❖ எனவே, ஆர்க்டிக் பெருங்கடலின் முதல் பனி இல்லாத நாள் ஆனது 2030 ஆம் ஆண்டிற்கு முன்னதாகவே நிகழலாம்.
- ❖ கடந்த 40 ஆண்டுகளில், ஒவ்வொரு தசாப்தத்திலும் கடல் பனியின் அளவு சுமார் 12.6% குறைந்து வருகிறது.
- ❖ இந்த வீழ்ச்சியின் வேகமானது, குறைந்தபட்சம் கடந்த 1,500 ஆண்டுகளில் எந்தவொரு காலத்திலும் நிகழ்ந்த வீழ்ச்சிக்கு இணையானதாக இல்லை.



## 'ஜெய் பங்களா' முழக்கம்

- "ஜாய்/ஜெய் பங்களா" என்ற முழக்கத்தினை நாட்டின் தேசிய முழக்கமாக அறிவித்த உயர் நீதிமன்றத் தீர்ப்பை வங்காளதேச உச்ச நீதிமன்றம் நிறுத்தி வைத்துள்ளது.
- இந்த முழக்கம் ஆனது வங்காளதேசம் உருவான போது பங்க பந்து ஷேக் முஜிபுர் ரஹ்மான் என்பவரால் பிரபலப் படுத்தப்பட்டது.
- வங்களாதேச நாட்டு வங்கியானது, ஹசீனாவை நாட்டை விட்டு வெளியேறத் தூண்டிய மாணவர்கள் தலைமையிலான போராட்டங்களைக் குறிக்கின்ற ஜூலை எழுச்சியின் நிகழ்வுகளைச் சித்தரிக்கும் வகையில் புதிய பணத் தாள்களை அச்சடித்து வருகிறது.
- இந்தப் புதியப் பணத் தாள்களில் ஷேக் முஜிபுர் ரஹ்மானின் படம் இடம் பெறாதது குறிப்பிடத் தக்கது.



'Joy Bangla', Popularised by Sheikh Mujibur Rahman, is no Longer the National Slogan of Bangladesh

## மனித உரிமைகளில் ஐக்கிய அரபு அமீரகத்தின் மைல்கற்கள்

- மனித உரிமைகளுக்கான ஒன்றிய சங்கம் (UAHR) ஆனது, ஐக்கிய அரபு அமீரகம் மனித உரிமைகளில் கண்டுள்ள அதன் முன்னேற்றத்திற்காக அதனைப் பாராட்டியுள்ளது.
- இது 2024 ஆம் ஆண்டிற்கானப் பாலினச் சமத்துவமின்மை குறியீட்டில் உலக அளவில் ஏழாவது இடத்தையும், பிராந்திய அளவில் முதல் இடத்தையும் பெற்றுள்ளது.
- தொழிலாளர்-நிறுவன மோதல்கள் இல்லாத நாடுகள் குறியீட்டிலும் இந்த நாடானது உலகிலேயே முன்னணியில் உள்ளது.
- ஐக்கிய அரபு அமீரகத்தில், கல்வி மற்றும் வீட்டுவசதி ஆகியவை அரசியலமைப்பு உரிமைகள் ஆக உள்ளன; அனைவருக்கும் சுகாதாரப் பாதுகாப்பு வழங்கப்படுகிறது; மற்றும் மிகவும் எளிதில் பாதிக்கப்படக்கூடிய நிலையில் உள்ள குடிமக்கள் மற்றும் குடியிருப்பாளர்களை ஆதரிக்கும் விதமாக ஒரு சமூக நல அமைப்பு அமைக்கப் பட்டு உள்ளது.
- அந்நாட்டின் சட்டமானது, பாகுபாட்டிலிருந்து மக்களைப் பாதுகாத்து, வாழ்வதற்கான உரிமை, பாதுகாப்பு, நம்பிக்கை சுதந்திரம் மற்றும் மத நடைமுறைகளுக்குப் பெரும் உத்தரவாதம் அளிக்கிறது.

- குழந்தைகள், பெண்கள், முதியோர், மாற்றுத் திறனாளிகள் (மிக உறுதியானவர்கள்) மற்றும் பிற எளிதில் பாதிக்கப்படக்கூடிய குழுக்களின் உரிமைகள் மீதும் அந்நாட்டின் அரசியலமைப்பு சிறப்பு கவனம் செலுத்துகிறது.




## அமெரிக்காவின் பிறப்புரிமை சார் குடியுரிமை

- அமெரிக்க அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள டொனால்ட் டிரம்ப், அமெரிக்காவில் பிறப்புரிமை சார் குடியுரிமையை நிறுத்தத் திட்டமிட்டுள்ளதாகக் கூறியுள்ளார்.
- பிறப்புரிமை சார் குடியுரிமைக்கு, அமெரிக்க அரசியலமைப்பின் 14வது திருத்தத்தின் கீழ் உத்தரவாதம் அளிக்கப்படுகிறது.
- பிறப்புரிமை சார் குடியுரிமை என்பதற்கு அமெரிக்க நாட்டின் எல்லைக்குள் பிறந்த எவரும் தானாகவே அமெரிக்காவின் குடியுரிமை பெறுகிறார்கள் என்று பொருளாகும்.
- சுற்றுலாப் பயணிகளின் குழந்தைகள், குறுகிய கால நுழைவு இசைவுச் சீட்டு மூலம் அமெரிக்கக் கல்லூரிகளில் படிக்கும் மாணவர்கள் மற்றும் ஆவணமற்றக் குடியேற்ற வாசிகளின் குழந்தைகள் இதில் அடங்குவர்.
- அரசியலமைப்பில் ஏதேனும் மாற்றங்களைச் செயல்படுத்துவதற்கு, நிர்வாகத்திற்கு காங்கிரஸின் இரு அவைகளிலும் – பேரவை மற்றும் பிரதிநிதிகள் சபையில் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவு தேவை.
- கூடுதலாக, இது அனைத்து மாகாணச் சட்டமன்றங்களில் நான்கில் மூன்றில் ஒரு பங்கு பெரும்பான்மையினால் அங்கீகரிக்கப்பட வேண்டும்.
- 2019 ஆம் ஆண்டில், புலம்பெயர்வு கொள்கை நிறுவனம் ஆனது 2019 ஆம் ஆண்டில் 18 வயதிற்குட்பட்ட 5.5 மில்லியன் குழந்தைகள் அந்நாட்டில் குறைந்தபட்சம் அவர்தம் பெற்றோரில் ஒருவராவது சட்டவிரோதமான முறையில் வாழ்ந்ததாக மதிப்பிட்டுள்ளது என்பதோடு இது அமெரிக்க குழந்தை மக்கள் தொகையில் 7% ஆகும்.




**சிடோ புயல்**




- ❖ ஏறக்குறைய ஒரு நூற்றாண்டில் மிக சக்திவாய்ந்த புயல் ஆன சிடோ புயல் ஆனது, மாயோட் எனப்படும் பிரான்சு நாட்டின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள இந்தியப் பெருங் கடல் பகுதியில் அமைந்த தீவுக்கூட்டப் பகுதியினைத் தாக்கியுள்ளது.
- ❖ பிரான்சு நாடானது, 1843 ஆம் ஆண்டில் மாயோட் பகுதியில் தனது குடியேற்றத்தினை மேற்கொண்டதோடு மேலும், 1904 ஆம் ஆண்டில் கொமரோஸ் உட்பட முழு தீவுக் கூட்டத்தையும் தனது பிராந்தியத்தில் இணைத்தது.

- 1974 ஆம் ஆண்டு வாக்கெடுப்பில், 95% பேர் பிரிவினைக்கு ஆதரவாக வாக்களித்தனர், ஆனால் 63% பேர் மாயோட் பகுதியின் மக்கள் பிரெஞ்சு நாட்டுக் காரர்களாக வசிக்க ஆதரவாக வாக்களித்தனர்.
- கிராண்டே கொமோர், அஞ்சோவான் மற்றும் மொஹேலி ஆகியப் பகுதிகள் 1975 ஆம் ஆண்டில் தனது சுதந்திரத்தினை அறிவித்தன.
- மாயோட் இன்றும் பிரான்சு அரசின் கட்டுப்பாட்டின் கீழ் ஆளப்படுகிறது.

## இந்தியச் சுற்றுலாப் பயணிகளுக்கு நுழைவு இசைவு இல்லாத பயண வசதி




- 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள், இந்தியச் சுற்றுலாப் பயணிகள் நுழைவு இசைவுச் சீட்டு இன்றி ரஷ்யாவிற்குச் சுற்றுப் பயணம் மேற்கொள்ள முடியும்.
- நுழைவு இசைவுச் சீட்டு விதிகளை எளிதாக்குவதற்கான இருதரப்பு ஒப்பந்தம் குறித்து இரு நாடுகளும் பேச்சுவார்த்தை மேற்கொண்டுள்ளன என்ற நிலைமையில் இந்த ஒரு ஒப்பந்தமானது நுழைவு இசைவுச் சீட்டு இல்லாத வகை சுற்றுலாப் பரிமாற்றங்களை அறிமுகப் படுத்துவதை ஒரு நோக்கமாகக் கொண்டது.
- 2023 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் மாதத்தில், பொதுவாக நான்கு நாட்களுக்குள் எனச் செயல் படுத்தப் படுகின்ற ரஷ்யாவிற்கான இணைய வழி நுழைவு இசைவுச் சீட்டுகளைப் பெறுவதற்கு இந்தியப் பயணிகள் தகுதி பெற்றனர்.
- 2023 ஆம் ஆண்டில், இது சுமார் 9,500 இந்தியக் குடிமக்களுக்கு வழங்கப்பட்டதுடன் இணைய வழி நுழைவு இசைவுச் சீட்டுகளுக்கான அனுமதியினைப் பெறும் முதல் ஐந்து நாடுகளில் இந்தியாவும் ஒன்றாக இருந்தது என்பதோடு இந்தியா மொத்தத்தில் 6% பங்கினைக் கொண்டிருந்தது.
- 2023 ஆம் ஆண்டில், சுமார் 60,000க்கும் மேற்பட்ட இந்தியர்கள் மாஸ்கோவிற்கு பயணம் மேற்கொண்டனர் என்ற நிலையில் இது 2022 ஆம் ஆண்டில் பதிவானதை விட சுமார் 26% அதிகமாகும்.
- 2024 ஆம் ஆண்டின் முற்பகுதியில், முதல் காலாண்டில் மட்டும் கிட்டத்தட்ட சுமார் 1,700 இணைய வழி நுழைவு இசைவுச் சீட்டுகள் வழங்கப்பட்டு, வணிக சுற்றுலாவுக்கான CIS சாராத நாடுகளில் இந்தியா மூன்றாவது இடத்தைப் பிடித்தது.

- தற்போது, சீனா மற்றும் ஈரான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த குடிமக்கள் இந்த நுழைவு இசைவுச் சீட்டு இல்லாத சுற்றுலாப் பரிமாற்றத் திட்டத்தின் ஒரு பகுதியாக நுழைவு இசைவுச் சீட்டு இல்லாமல் தனது நாட்டினுள் நுழைய ரஷ்யா அனுமதிக்கிறது.
- இந்தியக் கடவுச் சீட்டு வைத்திருப்பவர்கள் தற்போது சுமார் 62 நாடுகளுக்கு நுழைவு இசைவுச் சீட்டு இல்லாமல் பயணம் செய்யும் வாய்ப்பினைப் பெற்றுள்ளனர்.

## காசாவில் போர்நிறுத்தம் செய்வதற்கான UNGA தீர்மானம்




- காசாவில் உடனடியாக போர் நிறுத்தம் செய்யக் கோரும் தீர்மானங்களுக்கு ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்தத் தீர்மானமானது இந்தியா உட்பட 158 நாடுகளின் ஆதரவு வாக்குகளுடன் ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளது என்ற நிலையில் இந்தத் தீர்மானத்திற்கு வாக்களிப்பதிலிருந்து 13 நாடுகள் விலகிக் கொண்டதோடு ஒன்பது நாடுகள் இதற்கு எதிராக வாக்களித்தன.
- ஐக்கிய நாடுகள் சபையின் பாலஸ்தீனிய அகதிகளுக்கான அமைப்பின் (UNRWA) பணிக்கு இது ஆதரவு தெரிவித்துள்ளது.
- கடந்த டிசம்பர் மாதத்தில் இந்தத் தீர்மானம் மீது வாக்களிப்பதில் இருந்து விலகிய ஜெர்மனி மற்றும் இத்தாலி ஆகியன முதல்முறையாக காசா போர் நிறுத்தத்திற்கு ஆதரவாக வாக்களித்துள்ளன.

## பிடனின் மன்னிப்பு அதிகாரப் பயன்பாடு – அமெரிக்கா

- கொரோனா வைரஸ் பெருந்தொற்று காலத்தின் போது சிறையில் இருந்து விடுவிக்கப் பட்டு வீட்டுக் காவலில் வைக்கப்பட்ட சுமார் 1,500 பேரின் தண்டனைத் தன்மையினை அதிபர் ஜோ பிடன் மாற்றி அறிவித்துள்ளார்.
- வன்முறை சாராதக் குற்றங்களுக்காக தண்டிக்கப்பட்ட 39 அமெரிக்கர்களுக்கும் அவர் மன்னிப்பு வழங்கியுள்ளார்.
- இது நவீன கால வரலாற்றில் ஒற்றை நாளில் மேற்கொள்ளப்பட்ட ஒரு மிகப்பெரிய கருணை அடிப்படையிலான செயலாகும்.

- 2017 ஆம் ஆண்டில் பதவி விலகுவதற்கு சற்று முன்னதாக பராக் ஒபாமா 330 பேருக்கு மன்னிப்பு வழங்கிய நிகழ்வானது, ஒற்றை நாளில் மேற்கொள்ளப்பட்ட இரண்டாவது பெரிய மன்னிப்புச் செயலாக கூறப்படுகிறது.




## புதிய உடல் பருமன் சிகிச்சை விருப்பத் தேர்வுகள்

- உடல் பருமனுக்கான சிகிச்சையாக செமாகுளுடைட் மற்றும் டிர்ஸ்படைடு போன்ற GLP-1 ஏற்பி அகோனிஸ்டு வகை இரசாயனங்களை உலக சுகாதார அமைப்பானது அங்கீகரித்துள்ளது.
- அவை பசியின்மை மற்றும் ரத்த சர்க்கரையை ஒழுங்குபடுத்தும் ஹார்மோன்களைப் பிரதிபலிக்கின்றன.




- ஆரோக்கியமான உணவும் உடற்பயிற்சியும் மிக முக்கியமானதாக இருந்தாலும், உடல் பருமன் பாதிப்பினை அவற்றினால் மட்டுமே தீர்க்க முடியாது என்று WHO வலியுறுத்தச் செய்கிறது.
- 2022 ஆம் ஆண்டில், உலகெங்கிலும் உள்ள எட்டு பேரில் ஒருவர் பருமனாக வகைப் படுத்தப் பட்டுள்ளார் என்பதோடு இது மொத்தம் 890 மில்லியன் இளம் பருவத்தினர் மற்றும் 160 மில்லியன் இளைஞர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

- இந்தியாவில் 2022 ஆம் ஆண்டில் 44 மில்லியன் பெண்களும் 26 மில்லியன் ஆண்களும் உடல் பருமனால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## mRNA புற்றுநோய் தடுப்பூசி – ரஷ்யா




- ரஷ்ய நாடானது, புற்றுநோய்க்கு எதிராக mRNA தடுப்பூசியை உருவாக்கியுள்ளது.
- இந்த தடுப்பூசியானது 2025 ஆம் ஆண்டின் துவக்கத்தில் அறிமுகப்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- இந்தத் தடுப்பூசிகள் புற்றுநோய் செல்களை அடையாளம் கண்டு தாக்குவதற்காக, நோயெதிர்ப்பு மண்டலத்தை நன்கு தூண்டுவிப்பதன் மூலம் புற்றுநோயை எதிர்த்துப் போராட உதவுகின்றன.
- mRNA வகையான தடுப்பூசிகள் தூது ஆர்என்ஏவின் ஒரு பகுதியை உடலினுள் அறிமுகப் படுத்துவதன் மூலம் செயல்படுகின்றன என்பதோடு இது ஒரு குறிப்பிட்ட புரதத்தை உற்பத்தி செய்ய செல்களைத் தூண்டுகிறது.
- ரஷ்யாவில் புற்றுநோய் பாதிப்பு விகிதம் படிப்படியாக அதிகரித்து வருவதோடு, 2022 ஆம் ஆண்டில் 635,000 புதிய புற்றுநோய்ப் பாதிப்புகள் பதிவாகியுள்ளன.
- பெருங்குடல், மார்பகம் மற்றும் நுரையீரல் புற்றுநோய்கள் அந்த நாட்டில் மிகவும் பெரும்பான்மையாக பதிவாகும் புற்றுநோய்ப் பாதிப்புகளாகும்.

## அமெரிக்காவின் தேசியப் பறவை

- 240 ஆண்டுகளுக்கும் மேலாக அமெரிக்காவின் சக்தி மற்றும் வலிமையின் சின்னமாக விளங்கும் வெண்தலைக் கழுகு ஆனது, தற்போது அந்த நாட்டின் ஒரு அதிகாரப்பூர்வ தேசியப் பறவையாக மாறியுள்ளது.
- வெண்தலைக் கழுகு ஆனது பல ஆண்டுகளாக அமெரிக்காவின் ஒரு தேசிய சின்னமாக உள்ளதோடு இது 1782 ஆம் ஆண்டு முதல் அமெரிக்க ஆவணங்களிலும் அமெரிக்காவின் அரசு முத்திரையிலும் பயன்படுத்தப்படுகிறது.
- வெண்தலைக் கழுகு ஆனது வட அமெரிக்காவினைத் தாயகமாகக் கொண்டது.
- அமெரிக்காவின் அரசு முத்திரை என்பது ஒப்பந்தங்கள் மற்றும் ஆணையங்கள் போன்ற அதிகாரப்பூர்வ ஆவணங்களில் பயன்படுத்தப்படும் ஒரு தேசிய சின்னம் ஆகும்.

- 1782 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட இதன் இறுதி வடிவமைப்பு ஆனது ஒரு வெண் தலைக் கழுகு, ஆலிவ் மரத்தின் ஒரு கிளை, அம்புகள், ஒரு கொடி போன்ற கேடயம், E Pluribus Unum (இது "பலவற்றுள், ஒன்று" என பொருள்படுகிறது) என்ற சொற்றொடர் மற்றும் விண்மீன் திரள் ஆகியவற்றை உள்ளடக்கியது.
- இந்த வெண்தலைக் கழுகு ஆனது 1940 ஆம் ஆண்டின் தேசியச் சின்னச் சட்டத்தின் கீழ் பாதுகாக்கப் படுவதோடு இந்த உயிரினத்தின் விற்பனை அல்லது வேட்டையாடலை இது சட்ட விரோதமாக்கியது.




## பேவா பேச்சுவார்த்தை தொடர்

- நேபாளம் மற்றும் சீன நாட்டு அரசாங்கங்கள் இணைந்து "பேவா பேச்சுவார்த்தை" தொடரினைத் தொடங்கியுள்ளன.
- சாகர்மாதா என்ற பேச்சுவார்த்தைத் தொடரைத் தொடங்குவதற்காக K.P.சர்மா ஒலி அரசாங்கம் மேற்கொண்ட முந்தைய முயற்சியைத் தொடர்ந்து இது மேற்கொள்ளப் பட்டுள்ளது.
- பிராந்திய செழிப்பு மற்றும் அமைதியை ஊக்குவிக்கும் கொள்கைகளை மிக நன்கு ஊக்குவிப்பதை இந்த பேச்சுவார்த்தை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- கூட்டு விவாதங்கள் மூலம் தெற்காசியப் பொருளாதார ஒருங்கிணைப்பை மிக நன்கு ஊக்குவிப்பதற்கான நேபாளத்தின் உறுதிப்பாட்டை இது குறிக்கிறது.

## தென் கொரியா – மிக அதிக வயதான சமூகம்

- தென் கொரியா தற்போது அதிகாரப்பூர்வமாக "மிக அதிக வயது கொண்ட சமூகம்" என்ற சமூகத்தின் வகைக்குள் நுழைந்துள்ளது.
- அதன் மக்கள்தொகையில் ஐந்தில் ஒரு பங்கு மக்கள் சுமார் 65 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயது வகுப்பினைச் சேர்ந்தவர்களாக உள்ளனர்.
- அந்த நாட்டில் உள்ள 10.24 மில்லியன் மக்கள் தற்போது 65 அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடையவர்கள் ஆவர்.
- இது தென் கொரியாவின் மொத்த மக்கள் தொகையான 51 மில்லியனில் சுமார் 20 சதவீதத்தைக் குறிக்கிறது.
- பெண்களின் எண்ணிக்கையில் 22 சதவீதம் பேர் இந்த வயதிற்குட்பட்டவர்கள் ஆவர்.
- ஆண்களின் எண்ணிக்கையில் சுமார் 18 சதவிகிதம் பேர் இந்த வயதிற்குட்பட்டவர்கள் ஆவர்.

- 2008 ஆம் ஆண்டில், இந்த வயது வகுப்பில் 4.94 மில்லியன் நபர்கள் இருந்தனர், மேலும், நாட்டின் மக்கள் தொகையில் 10 சதவிகிதம் ஆக இருந்தனர்.
- 2019 ஆம் ஆண்டில் 15 சதவீதத்தைத் தாண்டியதோடு, இந்த ஆண்டு ஜனவரி மாதத்தில் இது 19.05 சதவீதத்தை எட்டியது.




## டெனாலி பிளவுப் பெயர்ச்சிப் பகுதி

- டெனாலி பிளவுப் பெயர்ச்சிப் பகுதி என்பது மேற்கு வட அமெரிக்காவில் உள்ள ஒரு கிடைமட்டமான வலது புற பக்கவாட்டு நகர்வு கொண்ட பிளவுப் பெயர்ச்சிப் பகுதி ஆகும்.
- கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியாவிலிருந்து அமெரிக்காவின் மத்திய அலாஸ்கா பகுதி வரை இது நீண்டுள்ளது.
- இது பசிபிக் தட்டுக்கும் வட அமெரிக்கத் தட்டுக்கும் இடையே உள்ள எல்லையைக் குறிக்கிறது என்ற நிலையில் பசிபிக் தட்டு ஆனது வட அமெரிக்கத் தட்டின் கீழே அமிழ்ந்து வருகிறது.
- இந்த கீழ் அமிழ்தல் நிகழ்வானது, மிக குறிப்பிடத்தக்க புவியியல் அழுத்தம் மற்றும் சிதைவை ஏற்படுத்துகிறது.
- டெனாலி பிளவுப் பகுதியில் உள்ள இந்த மூன்று புவியியல் தளங்களும், ஒரு காலத்தில் மில்லியன் கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு இரண்டு நிலப்பகுதிகளை மிக நன்கு ஒன்றிணைத்த ஓர் அம்சத்தின் ஒரு பகுதியாக இருந்தன.
- கிளியர்வாட்டர் மலைகள், குளுவான் ஏரி மற்றும் கடற்கரை மலைகள் 300 மைல் தொலைவிலான கிடைமட்ட இயக்கத்தினால் இணைக்கப்பட்டுள்ளன.




## ருவாண்டா - மார்பர்க் வைரஸ் பாதிப்பின் முடிவு




- ருவாண்டா அதன் முதலாவது மார்பர்க் வைரஸ் தொற்றினை (MVD) வெற்றிகரமாக கையாண்டுள்ளது.
- இந்தத் தொற்றின் போது மொத்தம் 66 உறுதிப்படுத்தப்பட்ட பாதிப்புகள் மற்றும் 15 உயிரிழப்புகள் பதிவு செய்யப்பட்டன.
- MVD ஆனது முன்னதாக மார்பர்க் இரத்தக்கசிவு காய்ச்சல் என்று அழைக்கப்பட்டது.
- இது மனிதர்களுக்கு ஏற்படும் கடுமையான மற்றும் பெரும்பாலும் மரணத்தினை ஏற்படுத்தக் கூடிய ஒரு நோயாகும் என்பதோடு இந்த நோயின் சராசரி உயிரிழப்பு விகிதம் சுமார் 50 சதவீதம் ஆகும்.
- இந்தக் கொடிய வைரஸ் ஆனது, ஆரம்பத்தில் பழம் உண்ணும் வௌவால்களிலிருந்து மனிதர்களுக்குப் பரவுகிறது மற்றும் பாதிக்கப்பட்ட நபர்களின் உடல் திரவங்கள் மற்றும் தொற்றுள்ள மேற்பரப்புகள் மற்றும் பொருட்களுடன் நேரடியாகத் தொடர்பு கொள்வதன் மூலம் மனிதர்களிடையே பரவுகிறது.
- 1967 ஆம் ஆண்டில் முதன்முதலில் மார்பர்க் என்னும் ஜெர்மனிய நகரத்தினைச் சேர்ந்த அறிவியலாளர்கள் இந்த நோயால் பாதிக்கப்பட்டதாகக் கண்டறியப்பட்டதையடுத்து இந்த நோய்க்கு இப்பெயரிடப் பட்டது.

## பிரம்மபுத்திரா மீது மாபெரும் அணை - சீனா

- திபெத் வழியே பாயும் பிரம்மபுத்திரா ஆற்றில் 137 பில்லியன் டாலர் செலவில் உலகின் மிகப்பெரிய அணையினைக் கட்டுவதற்கு சீனா ஒப்புதல் அளித்துள்ளது.
- இது புவியின் மிகப்பெரிய உள்கட்டமைப்புத் திட்டமாகக் கூறப்படுகிறது.
- இந்த நீர்மின் நிலையம் ஆனது, பிரம்மபுத்திரா நதியின் திபெத்திய பெயரான யார்லுங் சாங்போ ஆற்றின் நீர் போக்கின் கீழ் மட்டப் பகுதியில் அமைக்கப் படுவதற்கு என திட்டமிடப் பட்டுள்ளது.
- 2015 ஆம் ஆண்டில் திபெத்தில் 1.5 பில்லியன் டாலர் செலவில் அமைக்கப்பட்ட ஜாம் நீர்மின் நிலையத்தினை சீனா ஏற்கனவே செயல்படுத்தியுள்ளது.
- பிரம்மபுத்திரா நதியானது, திபெத்தியப் பீடபூமியின் குறுக்கே பாய்கிறது என்ற ஒரு நிலையில் பூமியின் மிக ஆழமான பள்ளத்தாக்கை உருவாக்குகின்ற இந்த நதியானது இந்தியாவை அடைவதற்கு முன்னதாக 25,154 அடி வரையிலான ஆழ வித்தியாசத்தைக் கொண்டுள்ளது.




## நிலத்தினால் சூழப்பட்ட நாடுகளுக்கான 10 ஆண்டு கால செயல் திட்டம்

- நிலத்தினால் சூழப்பட்ட வளர்ந்து வரும் நாடுகள் (LLDC) எதிர்கொள்ளும் பல்வேறு மிகப் பெரும் தனித்துவமானச் சவால்களை எதிர்கொள்வதற்காக 10 ஆண்டு காலச் செயல் திட்டத்தினை ஐக்கிய நாடுகள் பொது சபை (UNGA) ஏற்றுக் கொண்டுள்ளது.
- இந்தத் தீர்மானம் ஆனது, நிலத்தினால் சூழப்பட்ட வளர்ந்து வரும் நாடுகளுக்கான 2024-2034 ஆகிய காலக் கட்டம் வரையிலான பத்தாண்டு காலச் செயல்திட்டம் என்ற தலைப்பில் முன் வைக்கப்பட்டது.
- வியன்னா செயல் திட்டம் (2014-2024) & அல்மாட்டி செயல் திட்டம் (2003) ஆகியவற்றின் அடிப்படையில் இது கட்டமைக்கப்பட்டுள்ளது.
- 2034 ஆம் ஆண்டிற்குள் அனைத்துத் துறைகளிலும் தொழிலாளர் உற்பத்தித்திறன் மற்றும் வேலை வாய்ப்புகளை 50% உயர்த்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பேரிடர் இடர் குறைப்பு 2015- 2030 காலக் கட்டத்திற்கான செண்டாய் கட்டமைப்பை முழுமையாகச் செயல்படுத்துவதன் மூலம் LLDC நாடுகளில் பேரழிவு அபாயத்தைக் குறைப்பதிலும் இது கவனம் செலுத்துகிறது.

- நிலத்தினால் சூழப்பட்ட நாடுகள் என்பவை கடலுக்கான நேரடி அணுகல் இல்லாத நாடுகள் ஆகும்.
- சுமார் 570 மில்லியன் மக்கள்தொகை கொண்ட, 32 நிலத்தினால் சூழப்பட்ட வளர்ந்து வரும் நாடுகள் உள்ளன.




## ஐக்கிய நாடுகள் சபையின் இணையவெளிக் குற்ற உடன்படிக்கை 2024




- இணையவெளிக் குற்றங்களுக்கு எதிரான சர்வதேச ஒத்துழைப்பை வலுப்படுத்துவது மற்றும் எண்ணிமம் சார்ந்த அச்சுறுத்தல்களிலிருந்து சமூகங்களைப் பாதுகாப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த உடன்படிக்கையானது, வியட்நாமில் உள்ள ஹனோய் நகரில் நடைபெறவுள்ள 2025 ஆம் ஆண்டு இணையவெளிக் குற்றங்களுக்கு எதிரான ஒரு மாநாட்டில் அதன் கையொப்பத்திற்காக முன் வைக்கப்படும்.

- இணையவெளிக் குற்றங்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் முதல் சட்டப் பூர்வச் செயற்கருவி இதுவாகும் என்பதோடு மேலும், 40 நாடுகள் ஒப்புதல் அளித்த 90 நாட்களுக்குப் பிறகு இது நடைமுறைக்கு வரும்.
- 'சர்வதேச ஒத்துழைப்பை வளர்ப்பதன்' மூலம் இணைய வெளிக் குற்றங்களிலிருந்து சமூகத்தைப் பாதுகாப்பதற்கான உலகளாவிய குற்றவியல் நீதிக் கொள்கையை இது நிறுவுகிறது.

## AUSSOM திட்டம் - சோமாலியா




- சோமாலியாவில் ஆப்பிரிக்க ஒன்றிய ஆதரவு மற்றும் நிலைப்படுத்தல் திட்டத்தினை (AUSSOM) நிறுவுவதற்கான வரைவுத் தீர்மானத்தினை ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபை ஏற்றுக் கொண்டுள்ளது.
- AUSSOM ஆனது சோமாலியாவில் ஆப்பிரிக்க ஒன்றிய நிலை மாற்றத் திட்டத்திற்குப் (ATMIS) பதிலாக மேற்கொள்ளப் பட உள்ளது.
- இது 2025 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் தேதி வரையில் AUSSOM திட்டத்திற்காக 1,040 காவலர்கள் உட்பட 12,626 சீருடைப் பணியாளர்களை நியமிக்க ஆப்பிரிக்க ஒன்றிய (AU) உறுப்பினர்களுக்கு அங்கீகாரம் அளிக்கிறது.
- AUSSOM என்ற இந்தத் திட்டமானது அல்-ஷபாபுக்கு எதிரான அதன் போராட்டத்தில் சோமாலியாவிற்கு ஆதரவளிக்கும் என்பதோடு, சோமாலியாவின் நிலைப்படுத்தும் முயற்சிகளை வலுப்படுத்தி, மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கு உதவும்.
- சோமாலிய கூட்டாட்சி குடியரசு மற்றும் எத்தியோப்பியா கூட்டாட்சி ஜனநாயகக் குடியரசு ஆகியவற்றுக்கு இடையேயான சமீபத்திய அங்காரா எனும் பிரகடனம் ஆனது ஒவ்வொரு நாட்டின் இறையாண்மை, ஒற்றுமை, சுதந்திரம் மற்றும் அதன் பிராந்திய ஒருமைப்பாடு ஆகியவற்றை மீண்டும் உறுதிப்படுத்துகிறது.

## கருங்கடல் எண்ணெய் கசிவு நிகழ்வு 2024

- கருங்கடலில் எண்ணெய் கசிவு ஏற்பட்டதைத் தொடர்ந்து ரஷ்யாவானது மிக அவசர நிலையை அறிவித்துள்ளது.
- சுமார் 4,000 டன்களுக்கும் அதிகமான எரிபொருளை ஏற்றிச் சென்ற ரஷ்ய எண்ணெய் கப்பலான வோல்கோனெப்ட் 212 ஆனது கிரிமியா கடற்கரையில் உடைந்தது.
- இதனால் குறைந்தபட்சமாக 3,700 டன் கனரக எண்ணெய் கடலில் கசிந்தது.
- இந்தச் சம்பவமானது சுமார் 55 கிலோமீட்டர் (34 மைல்) தொலைவிலான கடற்கரையை மாசுபடுத்தியுள்ளது.




## காதிமாய் மஹோத்சவம்

- இது ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை கொண்டாடப் படுகிறது; இந்த ஆண்டிற்கான விழாவானது நேபாளத்தின் பாரா மாவட்டத்தில் உள்ள காதிமாய் கோவிலில் நடத்தப் பட உள்ளது.
- விலங்குகளை பலியிடுவதற்கெனப் புகழ்பெற்ற இந்தத் திருவிழாவானது, மிகப்பெரிய மற்றும் மிகவும் சர்ச்சைக்குரிய விலங்குகள் பலி கொடுக்கும் விழாக்களில் ஒன்றாகும்.
- நேபாளம், இந்தியா மற்றும் அதற்கு அப்பால் உள்ள சில நாடுகளில் இருந்தும் ஆயிரக் கணக்கான பக்தர்கள் வருகை தரும் இந்தத் திருவிழாவானது உலகின் மிகப்பெரிய விலங்குகளை பலி கொடுக்கும் திருவிழாக்களில் ஒன்றாக உள்ளது.
- பலியிடும் விலங்குகளில் நீர் எருமை, பன்றிகள், ஆடுகள் மற்றும் பறவைகள் ஆகியன அடங்கும்.




## 076 ரக நீர்-நிலப் பயன்பாடு சார் தாக்குதல் கப்பல் – சீனா

- சீனாவானது சிச்சுவான் எனப்படும் அடுத்த தலைமுறை நுட்பம் சார்ந்த அதன் முதல் வகையிலான 076 ரக நீர்-நில பயன்பாடு சார் தாக்குதல் கப்பலை அறிமுகப் படுத்தி உயுள்ளது.
- 076 என்ற வகை கப்பலானது உலகின் மிகப்பெரிய நீர்-நிலப் பயன்பாடு சார் தாக்குதல் கப்பல்களில் ஒன்றாக இடம் பெற்றுள்ளது.
- சிச்சுவான் ஆனது, மின்காந்த ஏவுதல் தொழில்நுட்பத்தைக் கொண்டுள்ள உலகின் முதல் நீர்-நிலப் பயன்பாடு சார் தாக்குதல் கப்பல் ஆகும்.
- இது ஹெலிகாப்டர்கள் மற்றும் J-15 போன்ற போர் விமானங்களை சுமந்து செல்ல உதவுகிறது.



# பொருளாதாரச் செய்திகள்

## திடீர் இலாப வரி ரத்து

- உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற கச்சா எண்ணெய் மற்றும் ஜெட் விமான எரி பொருள் (ATF), டீசல் மற்றும் பெட்ரோல் ஆகியவற்றின் ஏற்றுமதி மீதான 30 மாத திடீர் இலாப வரியை அரசாங்கம் ரத்து செய்துள்ளது.
- இந்தியாவானது முதன்முதலில் 2022 ஆம் ஆண்டு ஜூலை 01 ஆம் தேதியன்று எரிசக்தி நிறுவனங்களின் வழக்கத்தினை விட அதிக இலாபத்திற்கு வரி விதிக்கும் நாடுகளில் ஒன்றாக இணைந்தது.
- உள்நாட்டில் கச்சா எண்ணெய் உற்பத்தியில் ஒரு டன்னுக்கு 23,250 ரூபாய் என்ற (ஒரு பீப்பாய்க்கு 40 டாலர்) திடீர் இலாப வரி விதிக்கப்பட்டது.
- முந்தைய இரண்டு வாரங்களில் இருக்கும் சராசரி எண்ணெய் விலைகளின் மீதான அடிப்படையில் பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை வரி விகிதங்கள் மறுமதிப்பாய்வு செய்யப்பட்டன.
- அரசாங்கமானது, இந்த வரியை அமல்படுத்திய முதல் ஆண்டில் சுமார் 25,000 கோடி ரூபாயும், 2023-24 ஆம் ஆண்டில் சுமார் 13,000 கோடி ரூபாயும், இந்த ஆண்டு 6,000 கோடி ரூபாயும் வரி வசூலாகப் பெற்றுள்ளது.




## GDP அடிப்படை ஆண்டு மாற்றம்

- 2011-12 ஆண்டிற்குப் பதிலாக 2022-23 ஆம் ஆண்டை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (GDP) தொகுப்பிற்கான அடிப்படை ஆண்டாக மாற்றுவதற்கு அரசாங்கம் முடிவு செய்து உள்ளது.
- இதற்காக பிஸ்வநாத் கோல்டர் என்பவரின் தலைமையில் சுமார் 26 பேர் கொண்ட ஒரு ஆலோசனைக் குழு அமைக்கப் பட்டதோடு இந்தக் குழுவானது 2026 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இந்த நடவடிக்கையினை நிறைவு செய்யும் என்று நன்கு எதிர்பார்க்கப் படுகிறது.

- 2011-12 ஆம் ஆண்டு அறிக்கைத் தொடரின் அடிப்படையிலான மொத்த உள்நாட்டு உற்பத்தித் தரவு ஆனது 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் வெளியிடப்பட்டது.
- தேசிய வருமானத்தின் முதல் அதிகாரப்பூர்வ மதிப்பீடுகளானது, மத்தியப் புள்ளியியல் அமைப்பினால் (CSO) 1948-49 ஆண்டினை அடிப்படை ஆண்டாகக் கொண்டு அடிப்படை ஆண்டு விலையில் தயாரிக்கப்பட்டன.
- நிலையான/ அடிப்படை ஆண்டு (1948-49) விலைகளிலான இந்த மதிப்பீடுகள் ஆனது, நடப்பாண்டு விலைகளின் தொடர்புடைய மதிப்பீடுகள் மற்றும் அரசு அதிகாரிகளின் கணக்குகள் 1956 ஆம் ஆண்டில் 'தேசிய வருமான மதிப்பீடுகள்' என்ற அறிக்கையில் வெளியிடப் பட்டன.



**Starting Point**

Key changes in previous revision

| Parameter | Now | Then |
|---|---|---|
| **GDP** | | |
| Base year | 2011-12 | 2004-05 |
| MCA21 database with firms covered | 500,000 | 2,500 |
| SNA 2008 global norms followed | | |
| **IIP** | | |
| Base year | 2011-12 | 2004-05 |
| Manufacturing* | 77.63 | 75.53 |
| Electricity* | 7.99 | 10.31 |
| Weight for mining raised a tad | | |
| **CPI** | | |
| Base year | 2012 | 2010 |
| F&B* | 45.86 | 47.58 |
| Fuel and light* | 6.84 | 9.49 |

*Weight in %

## முதல் வர்த்தக கண்காணிப்பு அறிக்கை

- நிதி ஆயோக் அமைப்பானது, 2025 ஆம் ஆண்டு முதலாம் காலாண்டிற்கான வர்த்தகக் கண்காணிப்பு காலாண்டு அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இது 2024 ஆம் ஆண்டு ஏப்ரல்-ஜூன் மாதங்களில் நாட்டின் வர்த்தக மாற்றங்கள் பற்றிய விரிவான கண்ணோட்டமாகும்.
- 2024 ஆம் ஆண்டின் முதல் பாதியில் இந்தியாவின் மொத்த வர்த்தகச் செயல்பாட்டுத் திறன் ஆண்டிற்கு (YoY) 5.45% வளர்ச்சியுடன் 576 பில்லியன் டாலரை எட்டியது.
- இதன் மூலம் ஏற்றுமதியானது சுமார் 231 பில்லியன் டாலராக இருந்த நிலையில், இது 5.41% என்ற மிதமான ஏற்றுமதி அதிகரிப்பைப் பிரதிபலிப்பதோடு இறக்குமதியானது 345 பில்லியன் டாலராக உயர்ந்தது.
- இதன் ஒரு விளைவாக 9.7 பில்லியன் டாலர் மதிப்பில் நடப்புக் கணக்குப் பற்றாக்குறை அதிகரித்தது.

- ❖ சேவைகள் ஏற்றுமதியானது ஆண்டிற்கு 10.09% அளவிற்கு அதிகரித்து 89 பில்லியன் டாலரை எட்டியது.
- ❖ உலகளாவியச் சந்தைகளில், தகவல் தொழில்நுட்பச் சேவைகள் மற்றும் பிற வணிகத் தீர்வுகள் முறையே 10.2% மற்றும் 7.16% பங்குகளைக் கொண்டுள்ளன.
- ❖ இந்தியாவின் ஏற்றுமதியில் முறையே 21% மற்றும் 18.6% என்ற அளவுப் பங்குடன் வட அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவை இந்தியப் பொருட்களுக்கான முக்கியச் சந்தைகளாக தொடர்ந்து திகழ்கின்றன.




## புதிய UPI லைட் வரம்பு 2024




- ❖ UPI லைட் மூலம் மேற்கொள்ளப்படும் நேரடி எண்ணிமப் பண வழங்கீடுகளுக்கான பரிவர்த்தனை வரம்பை இந்திய ரிசர்வ் வங்கி உயர்த்தியுள்ளது.
- ❖ UPI லைட் தளத்தில் ஒரு பரிவர்த்தனைக்கான உச்ச வரம்பு 500 ரூபாயில் இருந்து 1,000 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

- UPI லைட்டின் மொத்தப் பணக்கோப்பு (வாலெட்) வரம்பு 2,000 ரூபாயில் இருந்து 5,000 ரூபாயாக ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.
- UPI123Pay தளத்தில் நிர்ணயிக்கப்பட்ட ஒரு பரிவர்த்தனைக்கான வரம்பு 5,000 ரூபாயில் இருந்து 10,000 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது.
- UPI லைட் பயனர்களுக்கு இணைய இணைப்பின் தேவையில்லாமல் ஒரு குறைவான மதிப்புள்ள பொருள் வாங்குதல்களை மேற்கொள்ள உதவுகிறது.

## இந்திய ரிசர்வ் வங்கியின் உலகளாவிய தங்கம் கொள்முதல் 2024



Reserve Bank of India purchases 27 tonnes of gold in October

- அக்டோபர் மாதத்தில் சர்வதேச மத்திய வங்கிகள் வாங்கிய தங்கத்தில் சுமார் 48% தங்கத்தினை இந்திய ரிசர்வ் வங்கி வாங்கியுள்ளது.
- இது அதன் இருப்புகளில் மேலும் சுமார் 27 டன்களைச் சேர்த்துள்ளதோடு இதன் மூலம் மொத்த தங்க இருப்பின் அளவு 882 டன்னாக உயர்ந்துள்ளது.
- அக்டோபர் மாதத்தில் அனைத்து மத்திய வங்கிகளின் தங்க கொள்முதல் மொத்தமாக 60 டன் ஆகும்.
- ஜனவரி மற்றும் செப்டம்பர் மாதங்களுக்கு இடையில், மத்திய வங்கி சுமார் 24 டன் தங்கத்தினை வாங்கியுள்ள நிலையில் இதனால் மொத்த தங்க இருப்பு 854.73 டன்னாக உயர்ந்தது.
- தங்கத்தினை மிக அதிகளவில் வாங்கிய இரண்டாவது மத்திய வங்கி இந்திய ரிசர்வ் வங்கியாகும்.

## MuleHunter.AI

- ரிசர்வ் வங்கி புத்தாக்க மையம் (RBIH) ஆனது, MuleHunter.AI செயற்கை நுண்ணறிவின் பயன்பாட்டை ஊக்குவிப்பதன் மூலம் நிதி மோசடியை எதிர்ப்பதில் மிக முன்னேற்றம் அடைந்து வருகிறது.
- இது ஒரு மேம்பட்ட செயற்கை நுண்ணறிவு செயற்கருவியாகும்.
- பணமோசடி நடவடிக்கைகளுக்கு பெருமளவில் அடிக்கடி பயன்படுத்தப்படும் போலிக் கணக்குகளைக் கண்டறிந்து அது குறித்து அறிக்கையிடுவதில் இந்தத் தொழில்நுட்பம் நிபுணத்துவம் பெற்றது.

- 'போலிக் கணக்குகள்' என்பது குற்றவாளிகள் சட்டவிரோத நிதியைப் புழங்குவதற்குப் பயன்படுத்தும் வேறு நபர்களின் வங்கிக் கணக்குகள் ஆகும்.




## ஒரு நாள் அளவிலான கடன் பெறுவதற்கான ரூபாய் வீதம்

- இந்திய ரிசர்வ் வங்கியானது, மிக பாதுகாப்பான பணச் சந்தைகளின் அடிப்படையில், பாதுகாப்பான ஒருநாள் நிறைவு காலம் கொண்ட நிதிகளை வாங்குவதற்கான/ கடன் பெறுவதற்கான ரூபாய் விகிதத்தை (SORR) அறிமுகப்படுத்துவதாக அறிவித்துள்ளது.
- நம் நாட்டில் ரூபாய் வட்டி விகித அளவுருக்களை மதிப்பாய்வு செய்வதற்காக இந்திய ரிசர்வ் வங்கி MIBOR அளவுருக்கள் குழுவை அமைத்துள்ளது.
- SORR என்பது மிக பாதுகாப்பான பணச் சந்தைகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு அளவுருவாகும்.
- இது சந்தை ரெப்போ மற்றும் இடைநிலை ரெப்போ ஒப்பந்தம் அல்லது TREP ஆகிய பிரிவுகளில் மிக பாதுகாப்பானப் பணச் சந்தை பரிவர்த்தனைகளின் அடிப்படையில் அமையும்.
- SORR ஆனது வெறும் இடைநிலை தரகு அமைப்புகளுக்கு விதிக்கப்படும் ஒரு கட்டண விகிதத்தைக் காட்டிலும் ஒரு நாள் / குறுகிய நிறைவு காலம் கொண்ட சந்தை நிதி விகிதத்தினைச் சார்ந்ததாக இருக்கும்.



## இந்திய மாநிலங்கள் பற்றிய புள்ளிவிவரங்களின் கையேடு 2023-24




- இந்திய ரிசர்வ் வங்கியானது, 2023-24 ஆம் ஆண்டிற்கான இந்திய மாநிலங்கள் குறித்த புள்ளி விவரக் கையேட்டின் சமீபத்திய அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- இது மக்கள்தொகை, சுகாதாரம் மற்றும் பொருளாதாரக் குறிகாட்டிகள் பற்றிய பல முக்கியத் தகவல்களை உள்ளடக்கியது.
- இந்தத் தரவு ஆனது, 1951 முதல் 2024 ஆம் ஆண்டு வரையிலான காலக் கட்டங்களில் சேகரிக்கப் பட்டுள்ளதோடு இது பகுப்பாய்விற்கான பதிவுகளை வழங்குகிறது.
- சுமார் 35.24 லட்சம் கோடி ரூபாய் மாநில உள்நாட்டு உற்பத்தியுடன் மகாராஷ்டிரா முதலிடத்தில் உள்ளது.
- இதர மற்றப் பங்களிப்பாளர்களில் தமிழ்நாடு, கர்நாடகா, உத்தரப் பிரதேசம், மேற்கு வங்காளம் மற்றும் இராஜஸ்தான் ஆகியவை அடங்கும்.
- கேரளாவில் அதிக கிராமப்புற ஊதியம் வழங்கப்படுகிற ஒரு நிலையில் இது தேசியச் சராசரியை விட இரண்டு மடங்கு அதிகமாகும்.
- கேரளாவில் ஓர் ஆண் கட்டுமானத் தொழிலாளி ஒரு நாளைக்கு சுமார் 894 ஊதியம் பெறுகிறார்.
- ஆனால் மத்தியப் பிரதேசத்தில் ஒரு நாளைக்கு சுமார் 292 ரூபாய் என்ற மிகக் குறைந்த ஊதியம் வழங்கப் படுகிறது.
- கேரளாவின் கட்டுமானப் பணிகளுக்கான கூலி மத்தியப் பிரதேசத்தை விட மூன்று மடங்கு அதிகமாகும்.

## விவசாயிகளுக்குப் பிணையமில்லாத கடன் வரம்பு

- இந்திய ரிசர்வ் வங்கியானது, இந்திய நாடு முழுவதும் உள்ள வங்கிகளுக்கு கடன் வாங்குபவருக்கு 2 லட்சம் வரையிலான வேளாண் மற்றும் அதனுடன் தொடர்புடைய கடன்களுக்கான பிணைய மற்றும் அதன் வரம்பு தேவைகளை தள்ளுபடி செய்யுமாறு அறிவுறுத்தியுள்ளது.
- கடன் வாங்குபவர்களுக்கு தற்போது நிர்ணயிக்கப்பட்டுள்ள 1.6 லட்சம் ரூபாய் என்ற கடன் வரம்பு ஆனது, 2 லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது என்ற நிலையில் இது 2025 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதி முதல் அமலுக்கு வருகிறது.

- இந்தப் பெரும் நடவடிக்கையானது சிறு மற்றும் குறு நில உரிமையாளர்களாக உள்ள 86% விவசாயிகளுக்கு குறிப்பிடத்தக்க வகையில் பயனளிக்கும்.




## 2024-25 ஆம் ஆண்டில் நேரடி வரி வசூல் அதிகரிப்பு

- இந்தியாவின் நிகர நேரடி வரி வசூல் பெருநிறுவனம் சாராத வரிகளின் அதிகப் பங்குகளுடன் 16.5% அதிகரித்து, டிசம்பர் 17 ஆம் தேதிக்குள் சுமார் 15.82 லட்சம் கோடி ரூபாயைத் தாண்டியது.
- நிகர பெருநிறுவன வரி வரவுகள் வெறும் 8.6% அதிகரித்து 7.43 லட்சம் கோடி ரூபாயாக இருந்தது.
- பெரு நிறுவனம் சாராத வரிகளின் நிகர வசூல் ஆனது சுமார் மூன்று மடங்கு அதிகரித்து 22.5% ஆக உயர்ந்து 7.97 லட்சம் கோடி ரூபாயாக உள்ளது.
- மொத்த வரி வரவுகள் இந்த ஆண்டில் இதுவரை 20.3% அதிகரித்து 19.21 லட்சம் கோடி ரூபாயைத் தாண்டியுள்ளதோடு பெருநிறுவன வரிகள் 16.9% மற்றும் பெருநிறுவனம் சாராத வரவுகள் 22% அதிகரித்துள்ளன.
- பத்திரப் பரிவர்த்தனை வரியிலிருந்து (STT) பெறப்பட்ட வரவுகள் 85.5% அதிகரித்து அது சுமார் 40,100 கோடி ரூபாயாக இருந்தது.



| TAX BREAKUP (Figures* in ₹crore) | Gross collection | Refunds | Net collection |
|---|---|---|---|
| Corporation tax | 9,24,693 | 1,82,086 | 7,42,607 |
| Non-corporation tax | 9,53,871 | 1,56,792 | 7,97,080 |
| Securities transaction tax | 40,114 | - | 40,114 |
| Others | 2,829 | 46 | 2,784 |
| **Total** | **19,21,508** | **3,38,924** | **15,82,584** |
| Y-o-Y growth in % | 20.32 | 42.49 | 16.45 |

*as on Dec 17

## பொதுத்துறை வங்கிகளின் இலாபம்




- 2024-25 ஆம் ஆண்டில் பாரத் ஸ்டேட் வங்கி உட்பட பொதுத்துறை வங்கிகள் (PSB) 2023-24 ஆம் ஆண்டில் இதுவரை இல்லாத வகையில் 1.46 லட்சம் கோடி ரூபாய் என்ற மொத்த நிகர இலாபத்தினை உருவாக்கியுள்ளன.
- PSB வங்கிகள், கடந்த மூன்று ஆண்டுகளில் 61,964 கோடி ரூபாய் ஈவுத்தொகையினை வழங்கி பங்குதாரர்களின் மதிப்பையும் உயர்த்தியுள்ளன.
- 2018 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் 14.58 சதவீதம் என்ற அளவில் உச்ச நிலையில் இருந்த மொத்த வாராக் கடன்கள் (GNPA) ஆனது 2024 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் 3.12 சதவீதமாகக் கணிசமாகக் குறைந்துள்ளது.
- தற்போதைய வேகத்தில், PSB வங்கிகள் சுமார் 1.46 லட்சம் கோடி ரூபாய் என்ற கடந்த ஆண்டின் இலாப இலக்கினைத் தாண்டும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

## இந்தியாவின் மாற்றுச் சொத்துகள் சந்தை




- இந்தியாவின் மாற்றுச் சொத்துகள் சந்தையானது 2034 ஆம் ஆண்டில் ஐந்து மடங்கு அதிகரித்து 2 டிரில்லியன் டாலராக உயரும்.

- இது பங்குகள், பத்திரங்கள் மற்றும் பணம் போன்ற வழக்கமான முதலீடுகளை சாராத முதலீட்டு விருப்பத் தேர்வுகளைக் குறிக்கிறது.
- இந்தச் சந்தையானது, சந்தை நிர்வாகத்தின் கீழ் (AUM) சுமார் 400 பில்லியன் டாலர் மதிப்பிலான சொத்துக்களைக் கொண்டுள்ளது.
- உலகளவில், 2005 மற்றும் 2020 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் மொத்த உலகளாவிய AUM நிர்வாகத்தில் மாற்றுச் சொத்துக்களின் பங்குகள் சுமார் 10 சதவீதத்திலிருந்து 20 சதவீதமாக இரட்டிப்பாகியுள்ளன.

## இந்திய மருத்துவத் தொழில்நுட்பத் தொழில் துறை 2024

- இந்தியத் தொழில் துறைக் கூட்டமைப்பின் (CII) 21வது சுகாதார உச்சி மாநாடு ஆனது, “2047 ஆம் ஆண்டில் வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான – அதாவது விக்சித் பாரத் 2047 - சுகாதாரப் பாதுகாப்பை மாற்றியமைத்தல்” என்ற கருத்துருவின் கீழ் நடைபெற்றது.
- இந்திய மருத்துவச் சாதனங்கள் துறையின் மதிப்பானது சுமார் 14 பில்லியன் டாலர்கள் என மதிப்பிடப்பட்டுள்ளதோடு 2030 ஆம் ஆண்டிற்குள் அது 30 பில்லியன் டாலர்களாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- ஜப்பான், சீனா மற்றும் தென் கொரியாவுக்கு அடுத்தபடியாக ஆசியாவில் நான்காவது பெரிய மருத்துவச் சாதன உற்பத்தி சந்தையாக இந்தியா உள்ளது.
- மேலும், உலகின் முன்னணி 20 உலகளாவிய மருத்துவச் சாதனச் சந்தைகளில் இந்திய நாடும் ஒன்றாக உள்ளது.
- உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்காக உத்தரப் பிரதேசம், தமிழ்நாடு, மத்தியப் பிரதேசம் மற்றும் இமாச்சலப் பிரதேசம் ஆகிய மாநிலங்களுக்கு தலா 100 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டுடன் மருத்துவச் சாதனப் பூங்காக்களை உருவாக்குவதற்கான ஒரு திட்டம் ஆனது 400 கோடி ரூபாய் செலவில் தொடங்கப்பட்டுள்ளது.




## உலகளாவியப் பணப் பரிமாற்றம் 2024

- இந்தியா தனது புலம்பெயர்ந்த இந்தியர்களிடமிருந்து அதிகபட்சமாக 129 பில்லியன் டாலர் மதிப்பிலான பண வரவுகளைப் பெற்ற நாடு என்ற அளவில் முதலிடத்தைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது.

- இந்தியாவின் பண வரவு மட்டும் கிட்டத்தட்ட பாகிஸ்தான் (சுமார் 67 பில்லியன் டாலர்) மற்றும் வங்காளதேசம் (68 பில்லியன் டாலர்) ஆகிய நாடுகளின் வருடாந்திர வரவு செலவு (பட்ஜெட்) தொகைகளை விட கூடுதல் தொகையாகும்.
- மிகவும் அதிக பண வரவு கொண்ட நாடுகளின் பட்டியலில் இரண்டாவது இடத்தைப் பிடித்த மெக்ஸிகோவை விட இது கிட்டத்தட்ட இருமடங்காகும்.
- சுமார் 68 பில்லியன் டாலர்களுடன் மெக்சிகோ இரண்டாவது இடத்தைப் பிடித்து உள்ள நிலையில் 48 பில்லியன் டாலர்களுடன் சீனா மூன்றாவது இடத்தையும், 40 பில்லியன் டாலர்களுடன் பிலிப்பைன்ஸ் நான்காவது இடத்தையும், 33 பில்லியன் டாலர்களுடன் பாகிஸ்தான் ஐந்தாவது இடத்தையும் இதில் பிடித்தன.
- 2020 ஆம் ஆண்டினைத் தவிர, கடந்த ஐந்து ஆண்டுகளில் இந்தியா ஒவ்வோர் ஆண்டும் 100 பில்லியன் டாலருக்கும் அதிகமாக பண வரவினைப் பெறுகிறது.
- கடந்த 10 ஆண்டுகளில், இந்தியாவின் ஒட்டு மொத்தப் பண வரவு 57 சதவீதம் வளர்ச்சி அடைந்துள்ளது.
- மொத்தத்தில், 2014 மற்றும் 2024 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில், இந்தியா பண வரவு மூலமாக மட்டும் சுமார் 1 டிரில்லியன் டாலர்களை (982 பில்லியன் டாலர்) பெற்றுள்ளது.




## 55வது சரக்கு மற்றும் சேவை வரி சபைக் கூட்டம்

- 55வது சரக்கு மற்றும் சேவை வரி சபை கூட்டம் ஆனது மத்திய நிதித் துறை அமைச்சர் தலைமையில் இராஜஸ்தானின் ஜெய்சல்மர் நகரில் நடைபெற்றது.
- செறிவூட்டப்பட்ட அரிசிகள் (FRK) மீதான GST விகிதத்தை 5% ஆகக் குறைக்க இச்சபை பரிந்துரை செய்துள்ளது.
- மரபணு சிகிச்சையில் GST வரிக்கு முழு விலக்கு அளிப்பதாகவும் அறிவித்துள்ளது.
- சரக்குகள் அல்லது சேவைகள் ஆக வகைப்படுத்தப்படவில்லை என்பதால் செலவுச் சீட்டுக்கள் (Vouchers) அடிப்படையிலான பரிவர்த்தனைகளுக்கு GST விதிக்கப்படாது என்று சபை தெளிவுபடுத்தியுள்ளது.

- கடன் வழங்கீட்டு விதிமுறைகளுக்கு இணங்காததற்காக வங்கிகள் மற்றும் வங்கி அல்லாத நிதி நிறுவனங்கள் (NBFC) விதிக்கும் அபராதக் கட்டணங்களுக்கு GST விதிக்கப்படாது.
- இது முன்னதாக 25% ஆக இருந்த அபராதம் தொடர்பான மேல்முறையீடுகளுக்குத் தேவையான கட்டண முன் வைப்புத் தொகையை 10% ஆகக் குறைக்க முன்மொழிந்து உள்ளது.
- அரசுத் திட்டங்களின் கீழ் இலவச விநியோகத்திற்காகப் பயன்படுத்தப்படும் உணவு இடுபொருட்கள் மீதான 5% GST சலுகை விகிதம் தொடரும் என அறிவித்துள்ளது.
- அனைத்து பழைய மற்றும் பயன்படுத்தப்பட்ட வாகனங்களின் விற்பனை மீதான GST விகிதம் 12 சாதவீதத்திலிருந்து 18% ஆக உயர்த்தப் பட்டுள்ளது.
- சோளப்பொரி (பாப்கார்ன்) ஜிஎஸ்டியின் கீழ் உப்புத்தன்மை கொண்டதாக வகைப் படுத்தப் பட்டுள்ளதால் அதன் மீதான வரி 5% ஆகும்.
- ஆனால், முன்கூட்டியே அடைக்கப்பட்டு விற்கப்படும் போது அதற்கான, வரி 12% ஆக அதிகரிக்கிறது.
- இனிப்பூட்டப்பட்ட சோளப்பொரியானது சர்க்கரைசார் மிட்டாய் வகைக்குள் அடங்கும் என்பதோடு இது பொதுவாக 18% ஜிஎஸ்டி விகிதத்தை ஈர்க்கிறது.




## சிறப்பு முதலீட்டு நிதி

- சிறப்பு முதலீட்டு நிதி (SIF) எனப்படுகின்ற ஒரு புதிய சொத்து/முதலீட்டுப் பிரிவினை SEBI அறிமுகப் படுத்தியுள்ளது.
- இது ஆபத்தான முதலீடுகளை மேற்கொள்ளத் தயாராக இருக்கும் நன்கு தகவலறிந்த முதலீட்டாளர்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

- SIF பரஸ்பர நிதிகள் (MF) மற்றும் தொகுப்பு முதலீடு மேலாண்மைச் சேவைகள் (PMS) இடையே உள்ள இடைவெளியைக் குறைக்கிறது.
- இதில் அங்கீகாரம் பெற்ற முதலீட்டாளர்களுக்கு குறைந்த வரம்புகளுடன் குறைந்த பட்ச முதலீடு ஆக 10 லட்சம் நிர்ணயிக்கப்படுகிறது.




## இந்தியாவின் இணைய சங்கேதப் பண முதலீடு




- இந்தியாவின் இணைய சங்கேதப் பண ஏற்பில் டெல்லியின் தேசியத் தலைநகரப் பிராந்தியமானது தொடர்ந்து தனது முன்னிலையினை நிலை நிறுத்தியுள்ளது.
- அதைத் தொடர்ந்து பெங்களூரு மற்றும் மும்பை ஆகியவை இடம் பெற்றுள்ளன.
- இந்தியாவின் மொத்த இணைய சங்கேதப் பண முதலீடுகளில் 36 சதவீதத்திற்கும் அதிகமானவை டெல்லி (20.1%), பெங்களூரு (9.6%) மற்றும் மும்பை (6.5%) ஆகிய மூன்று முக்கியப் பெருநகரங்களில் குவிந்துள்ளன.
- இந்தியாவின் இணைய சங்கேதப் பண முதலீடுகளில் 3.5% பங்களிப்பைக் கொண்டு புனே நான்காவது இடத்தில் உள்ளது.
- மொத்த இணைய சங்கேதப் பண முதலீட்டு மதிப்பில் சுமார் 3.3% பங்குடன் ஜெய்ப்பூர் ஐந்தாவது இடத்தைப் பிடித்துள்ளது.

## குடும்பச் செலவினம் குறித்த கணக்கெடுப்பு 2023-2024

- மத்தியப் புள்ளி விவரங்கள் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகமானது (MoSPI), 2022-23 மற்றும் 2023-24 ஆம் ஆண்டுகளில் வீட்டு/குடும்பச் செலவினங்கள் குறித்து இரண்டு தொடர்ச்சியான கணக்கெடுப்புகளை மேற்கொண்டது.
- 2023-24 ஆம் ஆண்டில், இந்தியாவின் கிராமப்புற மக்களில் அடிமட்டத்தில் உள்ள 5% மக்களுக்கான சராசரி மாதாந்திர தனிநபர் நுகர்வுச் செலவினம் (MPCE) 1,677 ரூபாய் ஆகும்.
- நகர்ப்புறங்களில் அதே பிரிவினருக்கு இந்தச் செலவினம் 2,376 ரூபாய் என்ற அளவில் அதிகமாக உள்ளது.
- மறுபுறம், இந்தியாவின் கிராமப்புற மக்கள் தொகையில் மேல் மட்டத்தில் உள்ள 5% பேர் சராசரியாக சுமார் 10,137 ரூபாய் செலவழிக்கிறார்கள் என்ற ஒரு நிலையில் இது நகர்ப்புறங்களின் அதே பிரிவினரில் 20,310 ரூபாயாக உள்ளது.
- 2022-23 ஆம் ஆண்டில் இருந்ததை விட 22% அதிகரிப்புடன், இந்தியாவின் கிராமப்புற மக்கள்தொகையில் அடிமட்டத்தில் உள்ள சுமார் 5% மக்களின் MPCE செலவினத்தில் மிகப்பெரிய அதிகரிப்பு பதிவாகியுள்ளது.
- நகர்ப்புறங்களில் உள்ள அதே குழுவினரில், இந்த வளர்ச்சி சற்று குறைவாக 19% ஆக இருந்தது.
- நாடு முழுவதும் உள்ள குடும்பங்கள் உணவு சாராதப் பொருட்களுக்கு அதிக செலவு செய்கின்றனர்.
- இந்தச் செலவுகள் கிராமப்புறங்களில் சராசரி மாதாந்திர தனிநபர் நுகர்வுச் செலவில் (MPCE) 53% ஆகவும் மற்றும் நகர்ப்புறங்களில் 60% ஆகவும் உள்ளது.
- 2023-24 ஆம் ஆண்டில் இந்த உணவு சாராதச் செலவினங்களைத் தூண்டும் முக்கியப் பிரிவுகள்:
    - போக்குவரத்து,
    - உடை, படுக்கை மற்றும் காலணி,
    - பொழுதுபோக்கு மற்றும் இதரப் பொருட்கள், மற்றும்
    - நீடித்துப் பயன்படுத்தப்படும் பொருட்கள்.
- நகர்ப்புறங்களில், உணவு சாராதச் செலவினங்களில் சுமார் 7% பங்குடன் வாடகையும் குறிப்பிடத்தக்கப் பங்கு வகிக்கிறது.



## இந்தியாவில் வங்கிகளின் போக்கு மற்றும் முன்னேற்றம் பற்றிய அறிக்கை 2023

- 2023-24 ஆம் ஆண்டில் வங்கிகளின் இலாபம் என்பது தொடர்ந்து ஆறாவது ஆண்டாக மேம்பட்டுள்ளது.
- அவற்றின் மொத்த வாராக் கடன்கள் அல்லது NPAகள் ஆனது, 13 ஆண்டுகளில் இல்லாத அளவு 2.7 சதவீதமாகக் குறைந்துள்ளது.
- வங்கிகளின் இலாபம் 2023-24 ஆம் ஆண்டில் தொடர்ந்து ஆறாவது ஆண்டாக உயர்ந்து உள்ளது, மேலும்,2024-25 ஆம் அரையாண்டில் தொடர்ந்து உயர்ந்தது.
- அவற்றின் சொத்து மீதான வருமானம் (RoA) சுமார் 1.4 சதவீதமாகவும், பங்கு மீதான வருமானம் (RoE) 14.6 சதவீதமாகவும் அதிகரித்தது.
- மொத்த வாராக் கடன்கள் (NPA) விகிதம் ஆனது, 13 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு 2024 ஆம் ஆண்டு மார்ச் மாத இறுதியில் 2.7 சதவீதமாகவும், செப்டம்பர் மாத இறுதியில் 2.5 சதவீதமாகவும் குறைந்துள்ளது.
- 2024 ஆம் ஆண்டு மார்ச் மாத இறுதியில், இந்தியாவின் வணிக வங்கித் துறையில் 12 பொதுத் துறை வங்கிகள் (PSB), 21 தனியார் துறை வங்கிகள் (PVB), 45 வெளிநாட்டு வங்கிகள் (FBs), 12 சிறு நிதி வங்கிகள் (SFB), ஆறு பொது வங்கிகள் (PB), 43 பிராந்திய ஊரக வங்கிகள் (RRB) மற்றும் இரண்டு உள்ளூர் பகுதி வங்கிகள் (LAB) உள்ளன.
- இந்த 141 வணிக வங்கிகளில், 137 வங்கிகள் பட்டியலிடப்பட்ட வங்கிகளாகவும், நான்கு பட்டியலிடப்படாத வங்கிகளாகவும் வகைப்படுத்தப்பட்டுள்ளன.
- NBFC வங்கிகளின் GNPA விகிதம் ஆனது 2024 ஆம் ஆண்டு செப்டம்பர் மாத இறுதியில் 3.4 சதவீதமாகக் குறைந்தது.



## கண்காணித்தல் மற்றும் அடையாளம் காணல் செயல்முறை

- சரக்கு மற்றும் சேவை வரிச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கண்காணித்தல் மற்றும் அடையாளம் காணல் செயல்முறையில் சேர்க்கப்பட்டுள்ள முதல் தயாரிப்புகளில் சிகரெட்டும் ஒன்றாக இருக்கும் என்று எதிர்பார்க்கப் படுவதோடு, பான் மசாலா பொருட்களும் இதில் உட்சேர்க்கப்படுவதற்கான பரிசீலனையில் உள்ளது.
- இது ஏற்கனவே ஐரோப்பிய ஒன்றியம் (EU), ஐக்கியப் பேரரசு மற்றும் துருக்கி போன்ற பிராந்தியங்களில் பயன்பாட்டில் உள்ளது.
- இதற்கு அதன் உற்பத்தியாளர்கள், இறக்குமதியாளர்கள் மற்றும் விநியோகச் சங்கிலி நிறுவனங்கள் போன்றவை பதிவு செய்து, தனித்துவ அடையாள அட்டைகளைப் பெற வேண்டும்.
- உற்பத்தி அல்லது இறக்குமதி முதல் சில்லறை விற்பனை வரையிலான ஒவ்வொரு கட்டத்திலும் பொருட்கள் முறையாக சோதனை செய்யப்பட்டு மின்னணு முறையில் கண்காணிக்கப் படுகின்றன.
- இந்தியாவில், இந்தச் செயல்முறையானது தனித்துவ அடையாளக் குறியிடலை (UIM) பயன்படுத்துகிறது.
- விநியோகச் சங்கிலி முழுவதும் இந்தப் பொருட்களைக் கண்டறிவதற்காக வேண்டி, தயாரிப்புகள் அல்லது பொதிகளில் இந்த UIM பொருத்தப்பட்டுள்ளது.




## ரிசர்வ் வங்கியின் மாநில நிதி: 2024-25 நிதிநிலை ஒதுக்கீடு குறித்த ஆய்வு

- இந்திய ரிசர்வ் வங்கி (RBI) ஆனது, "மாநில நிதி: 2024-25 நிதிநிலை ஒதுக்கீடு குறித்த ஆய்வு" என்ற அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- மாநில அரசுகள் ஆனது, அவற்றின் ஒருங்கிணைந்த மொத்த நிதிப் பற்றாக்குறையை (GFD) மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) 3 சதவீதத்திற்குள் வைத்துள்ளன.
- அவற்றின் வருவாய் பற்றாக்குறையானது 2022-23 மற்றும் 2023-24 ஆம் ஆண்டுகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.2% ஆக உள்ளது.
- 2024-25 ஆம் ஆண்டில், மாநில அரசுகளின் GFD ஆனது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3.2% ஆக பதிவாகியுள்ளது.

- 2021-22 ஆம் ஆண்டில் GDP மதிப்பில் 2.4% ஆக இருந்த அவற்றின் மூலதனச் செலவினம் ஆனது 2023-24 ஆம் ஆண்டில் 2.8% ஆக உள்ளது, இது 2024-25 ஆம் ஆண்டில் 3.1% ஆக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.
- 2021 ஆம் ஆண்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 31.0% ஆக இருந்த மாநிலங்களின் மொத்த நிலுவைக் கடன்கள் ஆனது, 2024 ஆம் ஆண்டில் 28.5% ஆகக் குறைந்துள்ளது, ஆனால் பெருந்தொற்றிற்கு முந்தைய அளவை விட இது அதிகமாக உள்ளது.
- 2020-21 ஆம் ஆண்டில், அனைத்து மாநிலங்களின் ஒருங்கிணைந்த நிதிப்பற்றாக்குறை ஆனது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.1 சதவீதமாக இருந்தது மற்றும் அவற்றின் கடன்-GDP விகிதம் 31 சதவீதமாக உயர்ந்துள்ளது.

Table 1: Revenue Receipts of All State Combined relative to GSDP

| Year | Own Tax Revenue | Own Tax Revenue without SGST | Own Non-Tax Revenue | Tax Devolution | Grants-in-Aid | Revenue Receipts |
|---|---|---|---|---|---|---|
| 2019-20 | 6.4 (45.8) | 3.8 (27.7) | 1.4 (9.8) | 3.4 (24.4) | 2.8 (20.0) | 13.9 (100.0) |
| 2020-21 | 6.1 (45.3) | 3.8 (28.0) | 0.9 (6.8) | 3.1 (23.0) | 3.4 (24.9) | 13.5 (100.0) |
| 2021-22 | 6.2 (45.6) | 3.7 (27.0) | 1.0 (7.6) | 3.9 (28.4) | 2.5 (18.2) | 13.7 (100.0) |
| 2022-23 RE | 6.7 (46.3) | 3.8 (26.5) | 1.0 (7.2) | 3.6 (25.3) | 3.0 (21.2) | 14.4 (100.0) |
| 2023-24 BE | 7.0 (49.5) | 4.0 (28.1) | 1.2 (8.3) | 3.5 (24.7) | 2.5 (17.7) | 14.1 (100.0) |

Note: Figures in parentheses are percentage shares of total revenue receipts
Source: State Finances: A Study of Budgets 2023-24, RBI

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## விண்வெளியில் இந்தியாவின் முதல் செயற்கை நுண்ணறிவு ஆய்வகம்

- துருவ செயற்கைக்கோள் ஏவுதல் வாகனத்தில் (PSLV) உயர் இலட்சிய இலக்கு கொண்ட ப்ரோபா-3 கலத்தினை விண்வெளியில் ஏவுவதற்கு இஸ்ரோ தயாராகி வருகிறது.
- ஐதராபாத்தில் உள்ள விண்வெளித் தொழில்நுட்ப நிறுவனமான TakeMe2Space ஆனது, விண்வெளியில் இந்தியாவின் முதலாவது செயற்கை நுண்ணறிவு ஆய்வகத்தை நிறுவ உள்ளது.
- இந்த ஆய்வகத்திற்கு MOI-TD (My Orbital Infrastructure - Technology Demonstrator) என்று பெயரிடப் பட்டுள்ளது.
- இதில் தரவுகளை நேரடியாக விண்வெளியில் செயலாக்குவதன் மூலம், MOI-TD ஆனது பயனர்களுக்கு பொருத்தமான நுண்ணறிவுகளை வழங்குகிறது.

- ❖ இது தரவுப் பரிமாற்றச் செலவினம் மற்றும் தாமதம் ஆகிய இரண்டையும் வெகுவாகக் குறைக்கிறது.



## புதிய மோய்ர் மீக்கடத்தி

- ❖ மீக்கடத்தி பொருட்களிலிருந்து தயாரிக்கப்படும் மோய்ர் என்ற வகை பொருட்களும் மீக்கடத்தியாக செயல்படும் என்று அறிவியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.
- ❖ இந்த ஒரு பண்பானது, முன்னதாக கிராபைன் அமைப்பு மட்டுமே கொண்டிருந்ததாக கருதப் படுகிறது.
- ❖ மோய்ர் பொருட்கள் என்பது இரு பரிமாண அமைப்புகளாகும்.
- ❖ மோய்ர் வடிவம் (குறுக்கீட்டுரு வடிவம்) என்பது அணுவின் ஒரு ஒழுங்கற்ற சீரமைப்பின் விளைவாக ஏற்படும் ஒரு வரிசை அமைப்பாகும்.



## அணுசக்தியால் இயங்கும் வைர மின்கலம்

- ஐக்கியப் பேரரசினைச் சேர்ந்த அறிவியலாளர்கள் உலகின் முதல் கார்பன்-14 வைர மின்கலத்தினை வெற்றிகரமாக உருவாக்கியுள்ளனர்.
- கதிரியக்கக் கரிமக் காலக் கணிப்பு எனும் ஒரு முறையில் பொதுவாகப் பயன்படுத்தப் படும் கார்பன்-14 எனப்படுகின்ற கதிரியக்க ஐசோடோப்பின் கதிரியக்கச் சிதைவு மின்சாரம் உருவாக்கப் பயன்படுத்தப்படுகிறது.
- கார்பன்-14 ஆனது சுமார் 5,700 ஆண்டுகள் என்ற அரை ஆயுளைக் கொண்டிருப்பதால், ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்குப் பிறகும் இந்த மின்கலமானது தனது ஆற்றலில் பாதியைத் தக்க வைத்துக் கொள்ளும்.
- இந்த மின்கலங்களில் பெருமளவு பயன்படுத்தப்படும் கார்பன்-14 ஆனது, அணுக்கருப் பிளவு உலைகளின் வினை விளை உற்பத்திப் பொருளான கிராஃபைட் தொகுதிகளில் இருந்து பிரித்தெடுக்கப்படுகிறது.
- ஐக்கியப் பேரரசு மட்டும் சுமார் 95,000 டன் கிராஃபைட் தொகுதிகளைக் கொண்டு இருக்கிறது.




## வெப்பமண்டல தாவரம் சூபா புல்

- இன்சுலின் உணர்திறனை மேம்படுத்துவதில் சூபா புல் மரம் கொண்டுள்ள திறனை ஒரு புதிய ஆராய்ச்சி வெளிப்படுத்தியுள்ளது என்ற நிலையில் இது இரண்டாம் வகை நீரிழிவு நோயை கையாள்வதற்கான புதிய நம்பிக்கையை அளிக்கிறது.
- சூபாபுல் அல்லது லுகேனா லியூகோசெபலா (லாம்.) டி விட் என்பது வெப்ப மண்டலம் மற்றும் மித வெப்ப மண்டலப் பகுதிகளில் பொதுவாகக் காணப்படுகின்ற வேகமாக வளரும் முதிரைத் தாவர இனத்தினைச் சேர்ந்த மரமாகும்.
- இது பெரும்பாலும் ஆந்திரப் பிரதேசம், கேரளா, மகாராஷ்டிரா, ஒடிசா மற்றும் தமிழ்நாடு ஆகிய இடங்களில் காணப்படுகிறது.
- இரண்டாம் வகை நீரிழிவு நோயில், மனித உடலானது இன்சுலினை மிகவும் சரியாகப் பயன்படுத்துவதில்லை என்பதால் இரத்தத்தில் உள்ள சர்க்கரை சாதாரண அளவில் இருக்காது.
- GLUT2 என்பது குளுக்கோஸ் மற்றும் பிரக்டோஸைச் செல் சவ்வுகளில் இடம் பெயரச் செய்ய உதவும் ஒரு புரதமாகும்.




## நுண் குமிழி தொழில்நுட்பம் - டெல்லி உயிரியல் பூங்கா




- டெல்லியில் உள்ள தேசிய விலங்கியல் பூங்காவானது, தண்ணீரைச் சுத்தப் படுத்தச் செய்வதற்கும் அதனைச் சுத்திகரிப்பதற்கும் விரைவில் 'நுண் குமிழி என்ற தொழில் நுட்பத்தினை' செயல்படுத்த உள்ளது.
- இது அசுத்தங்களை அகற்றவும் பாசி வளர்ச்சியைத் தடுக்கவும் மேம்பட்ட வடிகட்டுதல் மற்றும் மறுசுழற்சி முறைகளைப் பயன்படுத்துகிறது.
- செயல் திறம் மிக்க மறுசுழற்சியை செயல்படுத்துவதன் மூலம் இந்தத் தொழில்நுட்பம் தண்ணீர் வீணாவதையும் குறைக்கிறது.
- இந்த நுண் குமிழி தொழில்நுட்பம் ஆனது, தண்ணீரில் கரையும் சிறியக் குமிழிகளை உருவாக்குகிறது.
- இந்தக் குமிழ்கள் ஆக்ஸிஜன் அளவை வெகுவாக அதிகரிப்பதன் மூலம் தண்ணீரைச் சுத்திகரிக்கின்றன.
- அவை மாசுக்களை திறம்பட குறைத்து நீரின் தெளிவுத் தன்மையினை மேம்படுத்தும்.

## மிகவும் ஆற்றல் வாய்ந்த காஸ்மிக் கதிர்கள்

- ❖ நமீபியா நாட்டில் உள்ள உயர் ஆற்றல் முப்பரிமாண அமைப்பு (HESS) ஆய்வகத்தின் அறிவியலாளர்கள், இது வரையில் கண்டுபிடிக்கப்பட்டதில் மிகவும் ஆற்றல் வாய்ந்த காஸ்மிக் (அண்டக்) கதிர்களைக் கண்டறிந்துள்ளனர்.
- ❖ இவை பூமிக்கு மிக அருகில் உள்ள மர்மமான மூலங்களால் உற்பத்தி செய்யப் படுகின்றன.
- ❖ இந்தக் கதிர்கள் 40 டெரா எலக்ட்ரான் வோல்ட் (TeV) வரையிலான சில ஆற்றல்களில் அல்லது புலப்படும் ஒளியின் 40,000 மடங்கு ஆற்றலைக் கொண்டுள்ளன.
- ❖ காஸ்மிக் கதிர்கள் 1912 ஆம் ஆண்டில் ஆஸ்திரியாவின் இயற்பியலாளர் விக்டர் ஹெஸ் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது.
- ❖ இந்தக் கதிர்கள் ஆனது சூரியன், மீவொளிர் விண்முகில்கள், வேகமாகச் சுழலும் துடிப் பண்டங்கள் மற்றும் பிற அறியப்படாத மூலங்களால் உற்பத்தி செய்யப்படும் உயர் ஆற்றல் துகள்கள் ஆகும்.




## உலகின் முதல் சுயமாக இயங்கும் செயற்கைக்கோள்

- ❖ உலகின் முதல் 'சுய இயக்க' செயற்கைக் கோள்களை சீனா வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியுள்ளது.
- ❖ இந்த செயற்கைக்கோள்கள் தரைக் கட்டுப்பாட்டு அமைப்புகளின் குறுக்கீடு எதுவும் இல்லாமல் தங்கள் இயக்கப் பாதைகளைத் தன்னிச்சையாகப் பேணுகின்ற அல்லது மாற்றும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.
- ❖ அது செயல்பாட்டிற்கு வந்தவுடன், இந்தச் செயற்கைக்கோள்கள் உயர் தெளிவுத்திறன் கொண்ட, நாள் முழுவதும் எடுக்கப்படும், அனைத்து வானிலையிலும் எடுக்கப்படும் ரேடார் படங்களை வழங்கும்.
- ❖ நிலநடுக்கம் மற்றும் வெள்ளம் போன்ற இயற்கைப் பேரிடர்களைக் கண்காணித்தல், காடுகளை அழிப்பதைக் கண்காணித்தல், இராணுவக் கண்காணிப்பு ஆகியவற்றில் இது உதவும்.



## வெப்பத் தாக்குப் புரதம் 70 (HSP70)




- மலேரியா மற்றும் கோவிட்-19 நோய்க்கான சிகிச்சையை மாற்றியமைக்கக் கூடிய புதியதொரு பெரும் கண்டுபிடிப்பினை ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் (JNU) அறிவியலாளர்கள் உருவாக்கியுள்ளனர்.
- மலேரியா மற்றும் கோவிட்-19 போன்ற நோய்கள் பரவுவதில் Hsp70 என்ற மனித புரதம் ஒரு முக்கிய காரணியாக இருப்பதை அவர்கள் அடையாளம் கண்டுள்ளனர்.
- Hsp70 (வெப்பத் தாக்குப் புரதம் 70) என்பது ஒரு வகை மூலக்கூறு சாப்பரோன் ஆகும்.
- இது மற்ற புரதங்களை அவற்றின் மிகச் சரியான வடிவங்களில் மடிக்க உதவுவதிலும் தவறாக மடிவதைத் தடுப்பதிலும் முக்கியப் பங்கு வகிக்கின்ற ஒரு புரதமாகும்.
- Hsp70 புரதத்தினை ஒரு இலக்காகக் குறிவைப்பதன் மூலம், நோய்க்கிருமிகளின் நகல் எடுக்கும் திறனை மற்றும் நோயெதிர்ப்பு மண்டலத்திலிருந்து பாதுகாத்துக் கொள்ளும் வைரசின் திறனைச் சீர்குலைக்கலாம்.

## புரோபா-3 செயற்கைக்கோள்

- இஸ்ரோ நிறுவனம் ஆனது, 'C-59' எனப்படும் தனது 61வது வணிக ரீதியிலான ஆய்வுப் பயணமான ஐரோப்பிய விண்வெளி முகமையின் PROBA-3 செயற்கைக்கோளை மிக வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது.
- PROBA-3 விண்கலத்தின் நோக்கம் ஆனது, சூரியனின் கரோனா அடுக்கு குறித்து முன்பு எப்போதும் மேற்கொள்ளப்படாத துல்லியமான ஆய்வினை மேற்கொள்வதாகும்.
- இது துல்லியமான கட்டமைப்பு சுற்றுப் பயணத்தினை உருவாக்குவதற்காக வேண்டி வடிவமைக்கப் பட்டுள்ளது.
- இந்த இரண்டு செயற்கைக் கோள்களும் மில்லிமீட்டர் அளவு துல்லியத்துடன் சுமார் 150 மீட்டர் இடைவெளியைப் பேணும்.
- அவை ஒன்றாக இணைந்து, விண்வெளி அறிவியலில் ஒரு தனித்துவமான நிகழ்வான செயற்கையான சூரிய கிரகணத்தை உருவாக்கும்.
- இது இயற்கை கிரகணங்களின் குறுகிய காலத்தினை விட மிகவும் அதிகமாக நீண்ட காலத்திற்கு சூரியனின் கரோனா அடுக்கினை நன்கு ஆய்வு செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பொதுவாக செயற்கைக்கோள்களால் இரண்டு வகையான வடிவங்கள் உருவாக்கப் படும்.
- ஒரு நிலையான வடிவத்தில், இந்த விண்கலம் ஆனது ஒன்றுக்கொன்று தொடர்புடைய நிலையான தொலைவினையும் நோக்குநிலையையும் பேணுகிறது.
- மாறுநிலை வடிவத்தில், விண்கலம் ஆனது, விண்வெளியின் வெவ்வேறு பகுதிகளுக்கு இடையே இந்த விண்கலங்கள் நகர வேண்டிய ஆய்வுப் பகுதிகளின் அடிப்படையில் அவற்றின் தொடர்பு நிலைகளை மாற்றும்.




## எதிர் நிலையினை அடையும் வியாழன்

- வியாழன் கோளானது, வானில் அதன் அண்மைப் புள்ளியை (சூரியனுக்கு மிக அருகில்) அடைந்தது.
- இந்தக் கட்டத்தில் சூரியன், பூமி மற்றும் வியாழன் ஆகியவை முற்றிலும் நேர்கோட்டில் அல்லது எதிர் நிலையில் இருக்கும்.

- இது 13 மாதங்களுக்கு ஒருமுறை நடைபெறும் நிகழ்வாகும்.
- பூமியானது சூரியனுக்கும் வியாழனுக்கும் இடையில் எதிரெதிர் நிலையில் அமைந்து இருப்பதால் இந்தக் கிரகத்தைப் பூமிக்கு மிகவும் அருகில் உள்ள இடத்திலும் ஒரு முழு வெளிச்சத்திலும் பார்க்க இயலும்.
- வியாழன் கோளானது 2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் பூமிக்கு மிக அருகில் இருப்பதால், இந்த ஆண்டு இரவு வானத்தில் அது பிரகாசமாகவும் மிகத் தெளிவாகவும் இருக்கும்.
- இந்த கட்டத்தில், வியாழன் பூமிக்கு மிக அருகில் இருக்கும் மற்றும் கோட்பாட்டளவில் அதன் தொலைதூர அல்லது சேய்மைப் புள்ளியுடன் ஒப்பிடும்போது இரண்டு மடங்கு அளவு பெரிதாக தோன்றும்.
- வியாழன் கோளானது அடுத்ததாக 2026 ஆம் ஆண்டு ஜனவரி 10 ஆம் தேதியன்று எதிரெதிர் நிலையில் வரும், பின்னர் மீண்டும் 2027 ஆம் ஆண்டு பிப்ரவரி 10 மற்றும் 2028 ஆம் ஆண்டு மார்ச் 13 ஆகிய தேதிகளில் அந்த நிலைக்கு வரும்.




## ஹான்லே ஆய்வகம் – துளிம சமிக்ஞைகள்




- இராமன் ஆராய்ச்சி நிறுவனத்தின் (RRI) அறிவியலாளர்கள், துளிம சமிக்ஞைகளை விண்வெளியில் செலுத்துவதற்கு உகந்த இடங்களை இந்தியாவில் கண்டறிந்துள்ளனர்.
- ஹான்லேயில் உள்ள இந்திய வானியல் ஆய்வகம் (IAO) ஆனது, ஆய்வு செய்யப்பட்ட பல்வேறு தளங்களில் மிகக் குறைவான சமிக்ஞை இழப்பைக் கொண்டுள்ளது.

- இது அதன் மிகவும் வறண்டப் பருவநிலை மற்றும் குறைந்த வளிமண்டல நீராவி அளவு ஆகியவற்றின் காரணமாக இந்த இடம் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.
- துளிம சமிக்ஞைகள் என்பது துளிம இயக்கவியலின் கொள்கைகளைப் பயன்படுத்தி அனுப்பப்படும் தகவலைக் குறிக்கிறது.
- துளிம இயக்கவியல் ஃபோட்டான்கள், எலக்ட்ரான்கள் அல்லது அணுக்கள் போன்ற மிகவும் சிறிய அளவுகளில் உள்ள பல துகள்களின் நடத்தையை / செயல்பாடுகளை நிர்வகிக்கிறது.

## ஒலி அடிப்படையிலான தேர்வு




- அந்துப்பூச்சிகளானவை தாவரங்கள் வெளியிடும் பல்வேறு ஒலிகளைக் கேட்டு எந்தச் செடியில் முட்டையிட வேண்டும் என்பதைத் தேர்ந்தேடுப்பதற்கு அந்த ஒலிகளை நன்கு சார்ந்து இருக்கின்றன.
- எகிப்திய பருத்தி இலைப்புழு என்று அழைக்கப்படும் அந்துப்பூச்சி இனமானது, தங்கள் முட்டைகளை எங்கு இடுவது என்பதை தீர்மானிப்பதற்கு என்று பெரும் அழுத்தமிக்கத் தாவரங்களால் உற்பத்தி செய்யப்படும் சுட்டு ஒலிகளைப் பயன்படுத்தியது.
- அந்துப்பூச்சிகள் "அமைதியான" ஒலி எழுப்பாத தாவரத்தில் முட்டையிட விரும்புவதாக ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- அந்துப்பூச்சியில் தோராயமாக 160,000 இனங்கள் உள்ளன.
- மிகவும் தகவமைப்பு கொண்ட இனங்களாக இருப்பதால், துருவ வாழ்விடங்களைத் தவிர, அனைத்து பருவநிலை வகைகளிலும் இவை காணப்படுகின்றன.
- அந்துப்பூச்சியின் பெரும்பாலான இனங்கள் இரவு வாழ் இனமாகும், இருப்பினும் இதில் சில பகலிரவு வாழ் இனங்களும் உள்ளன.

## வியாழன் கோளில் கண்டறியப்பட்ட கரிய நீள்வட்ட வடிவங்கள்

- வானியலாளர்கள் வியாழன் கிரகத்தின் துருவங்களில், பெருஞ்சிவப்புப் பகுதியினைப் போலவே பூமியின் அளவிலான கரிய நீள்வட்ட வடிவங்கள் இருப்பதைக் கண்டறிந்து உள்ளனர்.
- அவை பொதுவாக அந்தக் கிரகத்தின் துருவ மின்னொளி மண்டலங்களுக்குக் கீழே காணப் படுகின்றன.
- 2015 மற்றும் 2022 ஆகிய ஆண்டுகளுக்கு இடையிலான கண்காணிப்புகள், சுமார் 75% படங்களில் தோன்றுவதால் இந்த சில அம்சங்கள் தென் துருவத்தில் அதிகம் காணப் படுவதாகவும் கூறப்படுகின்றது.
- ஆனால் அவை வட துருவத்தில் அரிதாகவே காணப்படுகின்றன.



## ஆண்ட்ரோமெடா அண்டத்தில் உள்ள மீவொளிர் விண்முகிலிலிருந்து வெளி வரும் புற ஊதா உமிழ்வுகள்

- பூமிக்கு மிகவும் அருகிலுள்ள ஆண்ட்ரோமெடா அண்டத்தில் உள்ள மீவொளிர் விண்முகிலிலிருந்து (நோவாவிலிருந்து) புற ஊதா (FUV) கதிர் உமிழ்வு வெளி வருவதை வானியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- இது திடீரென்று ஒரு பிரகாசமானத் தோற்றத்தை ஏற்படுத்தும் நிலையற்ற வானியல் நிகழ்வின் ஒரு சிறப்புஜ பகுதியாகும்.
- இது சில வாரங்கள் அல்லது மாதங்களில் மங்கிவிடும் ஒரு புதிய நட்சத்திரத்தின் திடீர் வெடிப்பு காரணமாக ஏற்படுகிறது.



## எறிகணை எதிர்ப்பு அமைப்பு - டார்க் ஈகிள்




- அமெரிக்க நாடானது, டார்க் ஈகிள் என்ற ஒரு புதிய எறிகணை எதிர்ப்பு அமைப்பினை உருவாக்கியுள்ளது.
- இது எதிரி நாடுகளின் எறிகணைகளை நடுவானிலேயே இடைமறித்து தாக்கும் திறன் கொண்டது.
- இது நடுத்தர தூர வரம்புடைய எறிகணைகளைக் கொண்டுள்ளதோடு, மணிக்கு 20,826 கிலோ மீட்டர் வேகத்தில் கணைகளை ஏவக் கூடிய வேகத் திறன் கொண்டது.
- ரஷ்யாவின் S-300V4, S-400 மற்றும் S-500 அமைப்புகளை விட இந்த அமைப்பு பல மடங்கு அதிக செயல்திறன் கொண்டது என்று அமெரிக்கா கூறுகிறது.
- இது 50 கிலோமீட்டர் உயரத்தில் வினாடிக்கு 3000-3700 மீட்டர் வேகத்தில் பயணிக்கிறது.
- ரஷ்யாவிடம் அமெரிக்காவின் டார்க் ஈகிளுடன் ஒப்பிடக் கூடிய வகையிலான 53T6M எறிகணை எதிர்ப்பு அமைப்பு உள்ளது.

## செயற்கை சூரிய கிரகணம் - ப்ரோபா 3

- ப்ரோபா-3 என்பதன் மூலம், ஐரோப்பிய விண்வெளி முகமை ஆனது இயற்கையான சூரிய கிரகணங்களுக்காகக் காத்திருப்பதற்குப் பதிலாக புதிய இரண்டு செயற்கைக் கோள்களை ஒன்றிணைத்து செயற்கை சூரிய கிரகணத்தினை உருவாக்கியுள்ளது.
- இந்தச் செயற்கை கிரகணம் ஆனது கரோனா எனப்படுகின்ற சூரியனின் வெளிப்புற மண்டலத்தை ஆய்வு செய்ய பயன்படுத்தப்பட உள்ளது.
- சூரியனின் ஒரு வெளிப்புற அடுக்கான கரோனா என்பது இன்றும் சூரியனின் மிகவும் மர்மமான பகுதிகளில் ஒன்றாக உள்ளது.
- சூரியனின் மேற்பரப்பு சுமார் 5,500°C வெப்பநிலையில் இருந்தாலும், இந்த கரோனா பகுதியின் வெப்பநிலை 1-3 மில்லியன் டிகிரி செல்சியஸ் வரை உயர்கிறது.

- ❖ பொதுவாக, முழு சூரிய கிரகணத்தின் போது, நிலவானது சூரியனிலிருந்து வரும் சில ஒளிப் பிழம்புகளை தடுக்கும் என்பதால் சூரியன் முழுவதும் மறையும் போது கரோனா அடுக்குத் தெரியும்.
- ❖ ஆனால், இந்த இயற்கை நிகழ்வுகள் அரிதாக மற்றும் குறுகிய காலத்திற்கு மட்டுமே நிகழ்கின்றன.




## நீர் மற்றும் சூரிய ஒளியைப் பயன்படுத்தி ஹைட்ரஜன் எரிபொருள் உற்பத்தி




- ❖ ஜப்பான் நாட்டின் அறிவியல் ஆராய்ச்சியாளர்கள், நீர் மூலக்கூறுகளை ஹைட்ரஜன் மற்றும் ஆக்சிஜனாகப் பிரிப்பதற்காக என, நீர் மற்றும் சூரிய ஒளியைப் பயன்படுத்தச் செய்கின்ற பெரும் ஒளிச்சேர்க்கைப் படலங்களைக் கொண்ட ஒரு சிறப்பு உலையைப் பயன்படுத்துகின்றனர்.

- இது பசுமை இல்ல வாயுக்களை வெளியிடாமல் புதுப்பிக்கத்தக்க வகை ஹைட்ரஜன் எரிபொருளை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தச் செயல் முறை ஆனது, தற்போது 1% செயல்திறனில் மட்டுமே செயல்படுகிறது.
- இது வணிகப் பயன்பாடு சார்ந்த நம்பகத்தன்மைக்குத் தேவையான சுமார் 5% செயல் திறனை விட குறைவாகவே உள்ளது.

## போல்ட்ஸ்-1

- மாசாசூசெட்ஸ் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் அறிவியலாளர்கள், போல்ட்ஸ்-1 எனப்படுகின்ற ஒரு மிக சக்தி வாய்ந்த, பொதுப் பயன்பாட்டு செயற்கை நுண்ணறிவு மாதிரியை அறிமுகப் படுத்தியுள்ளனர்.
- இது உயிரியல் மருத்துவ ஆராய்ச்சி மற்றும் மருந்து மேம்பாட்டினை மிக கணிசமாக துரிதப் படுத்தும்.
- போல்ட்ஸ்-1 ஆனது AlphaFold3 என்ற மாதிரியின் அதிநவீனச் செயல்திறனுக்கு நிகரான நிலையைக் கொண்டுள்ளது.
- AlphaFold3 என்பது புரதக் கட்டமைப்புகளைக் கணிப்பதில், கூகுளின் DeepMind என்ற நிறுவனத்தின் ஒரு தனியுரிம மாதிரியாகும்.




## மனித பாதுகாப்பு அம்சத்துடன் வடிவமைக்கப்பட்ட ஏவு வாகனம் மார்க்-3

- ககன்யான் விண்வெளிப் பயணத்தின் முதலாவது விண்வெளி வீரர்கள் இல்லாத பயணத்திற்காக மனிதப் பாதுகாப்பு மீதான கவனத்துடன் வடிவமைக்கப்பட்ட ஏவு வாகனமான மார்க்-3 (HLVM3) ஏவுகலத்தின் ஒருங்கு சேர்ப்புப் பணிகளை இஸ்ரோ தொடங்கியுள்ளது.
- இந்த நிகழ்வு ஆனது 2014 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் மார்க்-3 ஏவு வாகனம் (LVM3-X/CARE (Crew module Atmospheric Re-entry Experiment) ஏவப்பட்டதன் 10வது ஆண்டு நிறைவுடன் ஒன்றி வருகிறது.

- HLVM3 என்பது புவி தாழ் மட்ட சுற்றுப் பாதைக்கு (LEO) சுமார் 10 டன்கள் எடை வரையில் சாதனங்களை சுமந்து செல்லும் திறன் கொண்ட மூன்று-நிலை கொண்ட ஏவு வாகனம ஆகும்.





## புதிய ஊடுகதிர் இரட்டை அமைப்பு




- நாசாவின் IXPE (வரைபடமாக்கல் ஊடுகதிர் முனைவாக்கமானி ஆய்வுக்கலம்) ஆனது, கருந்துளைக்கு மிகவும் அவசியமான கட்டமைப்புகளின் பல்வேறு வடிவங்கள் குறித்து வானியலாளர்கள் நன்கு புரிந்துகொள்ள உதவியது.
- ஸ்விஃப்ட் J1727.8-1613 என்ற இரட்டை அமைப்பின் ஒரு பகுதியான நட்சத்திர நிறை கொண்ட இந்தக் கருந்துளையானது 2023 ஆம் ஆண்டின் கோடை காலத்தின் போது கண்டுபிடிக்கப்பட்டது.
- ஒரு நட்சத்திரம் ஆனது ஒரு மீயொளிர் விண்மீன் வெடிப்பிற்கு உள்ளாகும் போது ஊடு கதிர் இரட்டை அமைப்பு உருவாகிறது.
- ஊடுகதிர் இரட்டை அமைப்புகளில் பொதுவாக வாழ்க்கைச் சுழற்சியின் வெவ்வேறு நிலைகளில் உள்ள இரண்டு நட்சத்திரங்கள் நெருங்கி அமைந்திருக்கும்.

❖ இந்த அமைப்பு ஆனது சுற்றுப்பாதையில் இரண்டு நட்சத்திரங்களைக் கொண்டுள்ளது, மேலும் ஒன்று அதன் அணு எரிபொருளை (சக்தியை) இழந்த பிறகு கருந்துளைக்குள் ஈர்க்கப் பட்டது.

## பார்க்கர் ஆய்வுக் கலம் 2024




❖ நாசாவின் பார்க்கர் என்ற சூரிய ஆய்வுக் கலமானது, மனிதனால் உருவாக்கப்பட்ட ஒரு கருவியினால் இதுவரையில் பதிவு செய்யப்படாத வகையில் சூரியனுக்கு மிகவும் ஒரு நெருக்கமானப் பகுதியினை நெருங்கியுள்ளது.

❖ இந்த ஆய்வுக் கலம் ஆனது சூரியனின் மேற்பரப்பில் இருந்து வெறும் 6.1 மில்லியன் கிலோமீட்டர்கள் (3.8 மில்லியன் மைல்கள்) தொலைவில் நெருங்கி பறந்து சென்று உள்ளது.

❖ சூரியனை நெருக்கமானப் பகுதியில் இருந்து ஆய்வு செய்வதற்காக பார்க்கர் சூரிய ஆய்வுக் கலம் ஆனது 2018 ஆம் ஆண்டில் விண்ணில் ஏவப்பட்டது.

❖ இந்தப் பார்க்கர் ஆய்வுக் கலம் ஆனது, இதற்கு முந்தைய விண்கலத்தை விட ஏழு மடங்கு அதிக நெருக்கமான தொலைவில் சூரியனை நெருங்கி, அதிகபட்சமாக 430,000 மைல் வேகத்தில் பயணித்தது.

## MASLD நோய்

❖ முன்னதாக, NAFLD (ஆல்கஹால் பயன்பாடு சாராத கொழுப்பு மிகுந்த கல்லீரல் நோய்) என்ற சொல் ஆனது MASLD (வளர்சிதை மாற்றம் சார்ந்தச் செயலிழப்புடன் தொடர்பு உடைய கொழுப்பு மிகுந்த கல்லீரல் நோய்) என மறுபெயரிடப்பட்டது.

❖ இந்தப் புதிய பெயர் ஆனது, கொழுப்பு மிகுந்த கல்லீரல் நோய் மற்றும் உடல் பருமன், இரண்டாம் வகை நீரிழிவு நோய், மற்றும் அசாதாரணமான கொழுப்பு/கொலஸ்ட்ரால் அளவுகள் போன்ற வளர்சிதை மாற்றப் பிரச்சனைகளுக்கு இடையே உள்ள தொடர்பை எடுத்துக்காட்டுகிறது.

❖ MASLD ஆனது உலகளவில் சுமார் 25 சதவீத அளவு மக்களைப் பாதிக்கிறது என்பதோடு இரண்டாம் வகை நீரிழிவு நோய் அல்லது உடல் பருமன் உள்ளவர்களில் இந்தப் பாதிப்பு விகிதம் 50-70 சதவீதமாக உள்ளது.




## இஸ்ரோவின் LVM3 ஏவுகலம் - பல் சுற்றுப்பாதை திறன்




- இஸ்ரோ நிறுவனமானது அதன் மிகப்பெரிய LVM3 ஏவுகலத்தினைக் கொண்டு, ஒரே ஏவுதலின் மூலம் வெவ்வேறு உயரங்களில் உள்ள ஒரு சுற்றுப்பாதையில் செயற்கைக் கோள்களை செலுத்துவதற்கு உதவுகின்ற ஒரு மிகவும் முக்கியமான சோதனையை வெற்றிகரமாக மேற்கொண்டுள்ளது.

- 'பன்மய எரிமூட்டு அமைப்பின்' உருவாக்கத்தின் காரணமாக இந்த மீள் தொடக்கச் செயல்பாட்டுத் திறன் ஆனது சாத்தியமானது.
- இது LVM3 ஏவுகலத்தில் உள்ள 'CE-20' கிரையோஜெனிக் எஞ்சினை மீள் தொடங்க செய்ய உதவும்.
- LVM3 ஏவுகலத்தின் இறுதிக் கட்டத்தில் கிரையோஜெனிக் எஞ்சின் உள்ளது என்ற ஒரு நிலையில் இது செயற்கைக் கோள்களை விண்வெளியில் வெவ்வேறு நியமிக்கப்பட்ட சுற்றுப்பாதைகளில் (உயரத்தில்) நிலைநிறுத்துவதற்கு அவசியமானதாகும்.

## IRIS செயற்கைக்கோள்

- IRIS²/ஐரிஸ்² திரள் என்பது செயற்கைக்கோள் மூலமான நெகிழ்திறன், இடையிணைப்பு மற்றும் பாதுகாப்பிற்கான உள்கட்டமைப்பைக் குறிக்கிறது.
- இது சுமார் 300 செயற்கைக் கோள்களைக் கொண்ட பல்சுற்றுப்பாதை தொகுதி ஆகும்.
- அவை ஐரோப்பிய ஒன்றிய அரசாங்கங்கள், ஐரோப்பிய நிறுவனங்கள் மற்றும் குடிமக்களுக்காக நெகிழ்திறன் மிக்க மிகப் பாதுகாப்பான மற்றும் விரைவான தகவல் தொடர்புகளை வழங்கும்.
- இது மிகப் பாதுகாப்பான அரசாங்க தகவல் தொடர்பு சேவைகளுக்கான தடையில்லா அணுகலை உறுதிசெய்து, உயர்தர வணிகச் சேவைகளை வழங்கும்.




## குறுங்கோள்களை ஒத்த வால் நட்சத்திரம்

- குறுங்கோள்களை ஒத்த வால் நட்சத்திரம்/இருண்ட வால் நட்சத்திரங்கள் ஆனது ஒளிரும் நீட்சிகள் இல்லாத மற்றும் குறுங்கோள்களை ஒத்த வானியல் அமைப்புகள் ஆகும்.
- நாசா நிறுவனமானது, 2017 ஆம் ஆண்டில் நமது சூரிய குடும்பத்தில் நுழையும் முதல் விண்மீன் பொருளைக் கண்டறிந்து பின்னர் அதனை உறுதிப்படுத்தியது.

- குறுங்கோள்களை ஒத்த வால் நட்சத்திரங்கள் ஆனது பெரும்பாலும் சிறியவையாகும், அதாவது சில மீட்டர்கள் முதல் சில நூறு மீட்டர்கள் வரை அகலம் கொண்டவையாகும்.
- அவை விசித்திரமான சுற்றுப்பாதைகள் மற்றும் அளவில் பெரிய "வெளிப்புற இருண்ட வால் நட்சத்திரங்கள்" எனவும், "உள்புற இருண்ட வால் நட்சத்திரங்கள் எனவும் வகைப் படுத்தப் படுகின்றன.
- அவை சூரியக் குடும்பத்தின் மிகவும் தொலைதூரப் பகுதிகளுக்குச் செல்வதற்கு முன்னதாக அவற்றைச் சூரியனுக்கு அருகில் கொண்டு வரும் நீளமான, நீள்வட்டப் பாதைகளைப் பின்பற்றுகின்றன.



Parts of Comets

# சுற்றுச்சூழல் செய்திகள்

## COP29 – பருவநிலை நிதி ஒப்பந்தம்

- வளர்ச்சியடைந்த நாடுகளால் பாகுவில் நடைபெற்ற COP29 கூட்டத்தில், 2035 ஆம் ஆண்டு முதல் ஆண்டிற்கு வெறும் 300 பில்லியன் டாலர்களை மட்டுமே திரட்டுவதற்கு உறுதியளிக்கும் வகையிலான ஓர் ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டுள்ளது.
- ஆனால் வளந்து வரும் நாடுகள் NCQG இலக்கினை ஒவ்வோர் ஆண்டும் 1.3 டிரில்லியன் டாலர்களாக நிர்ணயிக்க வேண்டும் என்று கோரியுள்ளன.
- இந்த இலக்கு அல்லது புதிய கூட்டு அளவுரு சார்ந்த இலக்கு (NCQG) ஆனது, 2025 ஆம் ஆண்டில் காலாவதியாகவிருக்கும் தற்போதைய 100 பில்லியன் டாலர் நிதி திரட்டல் இலக்கிற்கு மாற்றாகும்.
- தற்போதைய வடிவத்திலான இந்த இலக்கு முன்மொழிவை இந்தியா ஏற்கவில்லை.
- 2009 ஆம் ஆண்டில், வளர்ச்சியடைந்த நாடுகள் 2020 ஆம் ஆண்டு முதல் ஆண்டிற்கு 100 பில்லியன் டாலர்களை திரட்ட முன் வந்தன.

## கேரளாவில் உள்ள அபூர்வ கீழை வல்கழுகு

- பறவைக் கண்காணிப்பாளர் ஒருவர், கோலே பகுதியில் அறிவியல் ரீதியாக அக்விலா ஹெலியாகா என அழைக்கப்படும் அரிய கழுகு இனத்தினைக் கண்டுள்ளார்.
- கீழை வல்கழுகு ஆனது கடைசியாக 2003 ஆம் ஆண்டில் கண்ணூரில் தென்பட்டது.
- இது தென்கிழக்கு ஐரோப்பா, மற்றும் மேற்கு மற்றும் மத்திய ஆசியாவில் இனப் பெருக்கம் செய்கிறது.
- குளிர்காலத்தில், அவை வடகிழக்கு ஆப்பிரிக்கா, மேற்கு ஆசியா மற்றும் தென்கிழக்கு ஆசியாவின் சில பகுதிகளுக்கு வலசை போகின்றன.
- IUCN அமைப்பானது அதன் செந்நிறப் பட்டியலில் கீழை வல்கழுகு பறவை இனத்தினை அழிந்து போகும் அபாயம் உள்ள ஓர் இனமாகப் பட்டியலிட்டுள்ளது.



## 'பருவநிலை நடவடிக்கைக்கான கல்வி' அறிக்கை

- உலக வங்கி குழுவானது, சமீபத்தில் 'Choosing Our Future: Education for Climate Action - நமது எதிர்காலத்தைத் தேர்ந்தெடுத்தல்: பருவநிலை நடவடிக்கைக்கான கல்வி' என்ற ஒரு அறிக்கையை வெளியிட்டது.
- பருவநிலை மாற்றத்தினால் ஏற்படும் வெப்பம் மற்றும் தீவிர வானிலை நிகழ்வுகள் கணிசமான அளவில் கற்றலைச் சீர்குலைப்பதோடு, பருவநிலை தணிப்பு மற்றும் ஏற்பு அமைப்புகளுக்கு இளையோர்களுக்குப் பெரும் அதிகாரம் அளிக்கவும், அதற்கு ஏற்ப அவர்களைச் சித்தப்படுத்தவும் மற்றும் அவர்களின் திறன்களை அளிக்கவும் கல்வி முறை உதவுகிறது என்பதை வலியுறுத்துகிறது.
- பருவநிலை தொடர்பான பள்ளி மூடல்களால் பாதிக்கப்பட்டப் பள்ளிகளில் ஆண்டிற்கு சராசரியாக 11 நாட்கள் அளவிலான பயிற்றுவிப்பு நாட்களை உலக நாடுகள் தற்போது இழக்கின்றன.
- மிக குறைவான மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளில் பருவநிலை மாற்ற விழிப்புணர்வு இன்னும் 65% மட்டுமே உள்ளது.
- உலகளாவியப் பசுமை மாற்றங்களுக்குத் தேவையான 100 மில்லியன் புதிய வேலை வாய்ப்புகளுக்குத் திறமையான தொழிலாளர்கள் தேவை.

## உலகளவிலான முக்கியச் சதுப்பு நில வரைபடம் 2024

- ஐக்கிய நாடுகள் சபையின் சுற்றுச்சூழல் திட்ட அமைப்பானது (UNEP), உலகளவிலான முக்கியச் சதுப்பு நில வரைபடத்தினை வெளியிட்டுள்ளது.

- இந்த வரைபடமானது, ஆராய்ச்சி மற்றும் கண்காணிப்பிற்கான சில முதலீடுகளுடன், சதுப்பு நிலங்களின் பாதுகாப்பையும் மறுசீரமைப்பையும் மேம்படுத்த வேண்டியதன் அவசியத்திற்கான ஆதாரங்களை வழங்குகிறது.
- உலகளவில் 488 மில்லியன் ஹெக்டேர் பரப்பிலான சதுப்பு நிலப்பரப்பு மற்றும் அதில் 12% பரப்பு ஆனது அதிகளவில் சீர்குலைந்துள்ளது.
- பூமியின் நிலப்பரப்பில் 3-4% ஆக மட்டுமே உள்ள சதுப்பு நிலமானது என்பதோடு அது உலகின் மூன்றில் ஒரு பங்கு மண் சார்ந்த கார்பனையும் கொண்டுள்ளது.
- இது உலக அளவில் காடுகளில் காணப்படும் கார்பன் அளவை விட இருமடங்காகும்.
- சதுப்பு நிலங்கள் ஆனது, குறைந்த பட்சம் 40 செ.மீ. அளவிலான கரிமப் பொருட்களுடன் முதன்மையாக கார்பன் (கரி) நிறைந்த கரிம மண்ணால் ஆனது.
- சதுப்பு நிலங்கள் ஆனது, மனித செயல்பாடு காரணமாக ஆண்டிற்கு 1,941 மெட்ரிக் டன் அளவிலான கார்பன் டை ஆக்சைடிற்கு சமமான வாயுவினை ($CO_2e$) வெளியிடுகிறது.
- சுமார் 0.2% ஆக மதிப்பிடப்பட்டுள்ள இந்தியாவில் இருக்கும் சதுப்பு நிலங்கள் ஆனது, பொதுவாக கிழக்கு இமயமலை, மேற்குத் தொடர்ச்சி மலைகள் மற்றும் வட கிழக்கு இந்தியப் பகுதியில் காணப்படுகின்றன.
- காங்கோ நதிப் படுகையில், மிகப் பெரிய அறியப்பட்ட வெப்பமண்டலச் சதுப்பு நிலம் காணப்படுகிறது.




## பட்டை வால் மூக்கன் பறவை - பழவேற்காடு ஏரி

- பழவேற்காடு ஏரியில் அமைந்துள்ள ஒரு நிலப்பரப்பில் ஐந்து பட்டை வால் மூக்கன் பறவைகள் தென்பட்டுள்ளன.
- இந்தப் பறவைகளை ஒன்றாகப் பார்ப்பது மிகவும் அரிதான நிகழ்வாகும்.
- அவற்றின் இனப்பெருக்கம் செய்யும் இடங்களில், அவை தனது பரவல் எல்லைக்காக தொடர்ந்து சண்டையிடும் பறவை இனமாக அறியப்படுகிறது.

- 2022 ஆம் ஆண்டில், ஒரு பட்டை வால் மூக்கன் பறவை ஆனது அலாஸ்காவிலிருந்து தெற்கு ஆஸ்திரேலியா வரை 13,560 கிலோ மீட்டர் தூரம் பறந்தது சாதனை அளவிலான அதிக தூர பயண பதிவாகும்.
- இந்தியாவில், இந்தப் பறவைகள் அனைத்து கடலோர மாநிலங்களிலும் காணப் படும் என்ற நிலையில் அவை இங்கு கூடுகளை அமைப்பதில்லை அல்லது இனப்பெருக்கம் செய்வதில்லை.




## சுறா மற்றும் திருக்கை மீன்களின் எண்ணிக்கையில் சரிவு

- உலகின் சுறாக்கள் மற்றும் திருக்கை மீன்களின் எண்ணிக்கையானது 1970 ஆம் ஆண்டு முதல் 50 சதவீதத்திற்கும் மேலாக குறைந்துள்ளன.
- மிதமிஞ்சிய மீன்பிடித்தல் என்பது காண்டிரிக்தியான் வகை (குறுத்தெலும்பு மீன்கள்) மீன்களின் பெரும் எண்ணிக்கையை - சுறாக்கள், திருக்கை மற்றும் சிமேராக்கள் (சுறா இனத்துடன் நெருங்கிய தொடர்புடையது) - கடந்த 50 ஆண்டுகளில் பாதிக்கும் மேலாக அழித்துள்ளது.
- வாழ்விடச் சீரழிவு, பருவநிலை மாற்றம் மற்றும் மாசுபாடு ஆகியவற்றின் விளைவாக மூன்றில் ஒரு பங்கு காண்டிரிக்தியன்கள் தற்போது அழிவின் பெரும் அச்சுறுத்தலை எதிர் கொள்கின்றன.




## உலகின் மிகப் பழமையான காட்டுப் பறவை

- உலகின் மிகப் பழமையான காட்டுப் பறவையானது விஸ்டம் எனப்படுகின்ற லேசன் அல்பாட்ராஸ் ஆகும்.
- இந்தப் பறவையானது அதன் 74வது வயதில் தற்போது ஒரு முட்டையை இட்டுள்ளது.
- இது ஹவாயில் கடந்த நான்கு ஆண்டுகளில் அதன் முதல் முறையான முட்டையிடுதல் ஆகும்.
- 1956 ஆம் ஆண்டில் முதன்முதலில் இளம் பறவை என்று குறியிடப்பட்ட விஸ்டம், 2006 ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் மிட்வே அட்டோல் பகுதியை வந்தடைகிறது.
- ஒரு லேசன் அல்பட்ராஸ் பறவையின் வழக்கமான ஆயுட்காலம் 68 ஆண்டுகள் ஆகும்.



## நெகிழ்திறன் மிக்க வறண்ட நிலங்களுக்கான உலகளாவிய உத்தி 2030

- ❖ வேளாண் ஆராய்ச்சியில் உலகளவில் முன்னணியில் உள்ள நிறுவனமான CGIAR (Consultative Group on International Agricultural Research), அதன் 2030 ஆம் ஆண்டிற்கான நெகிழ்திறன் மிக்க வறண்ட/உலர் நிலங்களுக்கான உலகளாவிய உத்தியை (GSRD) அறிமுகப்படுத்தியுள்ளது.
- ❖ இது ரியாத் நகரில் நடைபெற்ற UNCCD உடன்படிக்கையின் 16 வது பங்குதாரர்கள் மாநாட்டில் (COP 16) வெளியிடப்பட்டது.
- ❖ உலக மக்கள்தொகைக்கு வறண்ட நிலங்கள் மிக முக்கியமானவையாகும்.
- ❖ இது உலகிலுள்ள ஒவ்வொரு மூன்றில் ஒருவருக்கும், சுமார் பாதியளவு கால்நடைகள் மற்றும் 44 சதவீத உணவு முறைகளுக்கு ஆதாரமாக உள்ளது.
- ❖ ஆனால் அவற்றில் 20-35 சதவீதம் பகுதிகள் வளம் குன்றியுள்ளன.

## இந்தியப் பாறை மலைப்பாம்புகளின் எண்ணிக்கை குறித்த அறிக்கை 2024

- ❖ இந்தியப் பாறை மலைப்பாம்பு (பைத்தான் மொலுரஸ்) ஆனது, தமிழ்நாடு முழுவதும், குறிப்பாக வேளாண் பகுதிகள் மற்றும் பாறைகள் நிறைந்த மலையடிவாரங்களில் பெரும்பாலும் காணக் கூடியதாக இருந்தது.
- ❖ இருப்பினும், தன் வாழ்விட இழப்பு காரணமாக, மோயார் பள்ளத்தாக்கு தவிர, மாநிலம் முழுவதும் இந்த இனங்கள் குறைந்து விட்டதாக நம்பப்படுகிறது.
- ❖ இது IUCN அமைப்பின் செந்நிறப் பட்டியலில் "அச்சுறுத்தல் நிலையினை அண்மித்த இனமாக" வகைப்படுத்தப் பட்டுள்ளது.
- ❖ 2018 மற்றும் 2020 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில், MTR, STR மற்றும் பவானி சாகர் ஆகிய இடங்களில் குறைந்த பட்சம் 80 பாறை மலைப் பாம்புகள் இருந்தன.
- ❖ பாறை மலைப்பாம்புகள் விஷமற்றவை என்பதோடு அவை பொதுவாக மனிதர்களின் பார்வையில் படுவதைத் தவிர்க்கின்றன.



## நில மேலாண்மை பற்றிய அறிக்கை 2024

- UNCCD அமைப்புடன் இணைந்து பருவநிலைத் தாக்க ஆராய்ச்சிக்கான போட்ஸ்டாம் நிறுவனம் ஆனது 'Stepping back from the precipice: Transforming land management to stay within planetary boundaries' என்ற அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- நில வளம் குன்றல்/நிலச் சீரழிவானது, சுமார் 15 மில்லியன் சதுர கிலோமீட்டர் பரப்பு அளவிலான நிலத்தினையும், உலகளவில் 1.2 பில்லியன் மக்களையும் பாதிக்கிறது.
- நில வளம் குன்றலின் பொருளாதாரச் செலவினமானது ஆண்டுதோறும் 6.3 முதல் 10.6 டிரில்லியன் அமெரிக்க டாலர்கள் வரை இருக்கும் என மதிப்பிடப் பட்டுள்ளது.
- ஒன்பது எல்லைகளுள், அறிவியல் ரீதியாக நிர்ணயிக்கப்பட்ட வரம்புகளுக்குள் மனித குலம் பாதுகாப்பாக செயல்படக் கூடிய ஏழில் நிலம் மையமான ஒன்றாக உள்ளது.




## பளிங்கு வாத்து

- அரியானாவின் சுல்தான்பூர் தேசியப் பூங்காவில் ஓர் அசாதாரண குளிர்கால வலசை போகும் பளிங்கு வாத்து/பளிங்கு தாரா தென்பட்டுள்ளது.
- 1990 ஆம் ஆண்டு முதல் சுல்தான்பூரில் இந்த இனம் தென்படவில்லை.
- இந்த இனம் ஆனது IUCN அமைப்பின் செந்நிறப் பட்டியலில் உலகளவில் "மிக எளிதில் பாதிக்கப்படக் கூடிய இனம்" ஆக வகைப்படுத்தப்பட்டுள்ளது.
- இவை ஐரோப்பாவைத் தாயகமாகக் கொண்டவை என்பதோடு இங்கு இவை கோடை காலங்களில் இனப்பெருக்கம் செய்கின்றன.
- 2022 ஆம் ஆண்டில் பிந்தவாஸ் ஈரநிலத்தில் கடைசியாக தென்பட்டது.
- இவை கிழக்கு மற்றும் மேற்கு மத்தியத் தரைக் கடல் மற்றும் ஈரான் ஆகிய மூன்று வெவ்வேறு பகுதிகளில் இனப்பெருக்கம் செய்வதாக அறியப்படுகிறது.




### மலாய் குருகு - மதுரை



- தென்கிழக்கு ஆசியாவில் இருந்து வலசை வரும் மலாய் குருகு பறவையானது, முதன் முறையாக மதுரையில் தென்பட்டுள்ளது.
- மியான்மர், தாய்லாந்து மற்றும் மலேசியாவை தாயகமாகக் கொண்ட இந்தப் பறவை ஆனது, குளிர்காலத்தில் இந்தியாவிற்கு வலசை வருகிறது.
- முதன்மையாக வட தமிழகம் வழியாக பறந்து செல்கின்ற இந்தப் பறவையானது மிகப் பொதுவாக கேரளா மற்றும் கர்நாடகாவில் தென்படும்.

### IISR சுரசா - புதிய இஞ்சி வகை

- இந்திய நறுமணப் பொருட்கள் ஆராய்ச்சி நிறுவனமானது (IISR), அதன் புதிய இஞ்சி வகையை வணிகப் பயன்பாட்டிற்காக அறிமுகப் படுத்தியுள்ளது.
- IISR சுரசா எனப் பெயரிடப்பட்ட இந்த இரகம் ஆனது, விவசாயிகளின் பங்கேற்புடன் கூடிய தாவர இன உருவாக்கத் திட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்டுள்ளது.
- காய்கறியாகப் பயன்படுத்துவதற்காக வேண்டி மிகவும் பிரத்தியேகமாக உருவாக்கப் பட்ட இந்தியாவின் முதல் இஞ்சி வகை இதுவாகும்.

## அரிய டார்வின் குளவிகளின் 5 புதிய இனங்கள்



- இந்தியா மற்றும் தாய்லாந்தில் டார்வின் குளவியின் துணைக் குடும்பமான மைக்ரோ லெப்டினேவினை (ஹைமனோப்டெரா:இச்நியுமோனிடே) சேர்ந்த ஐந்து புதிய குளவி இனங்களை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- டார்வின் குளவிகள் ஒட்டுண்ணி குளவிகள் ஆகும் என்பதோடு அவற்றின் லார்வாக்கள் அதன் ஓம்புயிரியின் உள்ளே இருந்து உணவினை பெற்றுக் கொள்ளும்.
- இந்தியாவில் இந்த துணைக் குடும்பத்தின் இனங்கள் கண்டறியப்படுவது இது முதல் முறையாகும்.
- இச்நியுமோனிடே வகை குடும்பமானது, 42 துணைக் குடும்பங்களைக் கொண்டுள்ளது என்ற நிலையில் இதில் மைக்ரோலெப்டினே மிகச்சிறிய ஒன்றாகும்.
- இது உலகளவில் முன்னர் அறியப்பட்ட 14 இனங்களைக் கொண்ட மைக்ரோலெப்டெஸ் என்ற ஒற்றை இனத்தைக் கொண்டுள்ளது.
- தற்போது வரையில், 1998 ஆம் ஆண்டில் மியான்மரில் பதிவாகிய மைக்ரோலெப்டெஸ் மலைசெய், கிழக்கத்தியப் பகுதியில் அறியப்பட்ட ஒரே இனமாகும்.
- இந்தியாவில் பதிவான நான்கு புதிய இனங்களில், மைக்ரோலெப்ட்ஸ் சியானி வகை இனமானது தமிழ்நாட்டின் களக்காடு - முண்டந்துறை புலிகள் வளங்காப்பகத்தில் (KMTR) பதிவு செய்யப்பட்டுள்ளது.
- இதர மற்ற 3 இனங்களான மைக்ரோலெப்டெஸ் கௌரிசங்கரி, மைக்ரோலெப்ட்ஸ் சந்தேஷ்கதுரி மற்றும் மைக்ரோலெப்டெஸ் டெஹ்ரியென்சிஸ் ஆகியனவாகும்.

## UNCCD உடன்படிக்கையின் COP 16 மாநாட்டின் முடிவுகள்

- சவூதி அரேபியாவின் ரியாத் நகரில் நடைபெற்ற வறட்சியை எதிர்கொள்வதற்கான உடன்படிக்கை நிறைவுறாமல் பாலைவனமாக்குதலை எதிர்த்துப் போராடுவதற்கான ஐக்கிய நாடுகள் சபையின் உடன்படிக்கைக்கான (UNCCD) 16வது பங்குதாரர்கள் (COP 16) உச்சி மாநாடு நிறைவடைந்தது.
- மத்தியக் கிழக்கு மற்றும் வட ஆப்பிரிக்க (MENA) பிராந்தியத்தில் UNCCD COP மாநாடு நடத்தப் படுவது இதுவே முதல் முறையாகும்.
- உலகெங்கிலும், அதிலும் மிகவும் குறிப்பாக மிகவும் பாதிக்கப்படக்கூடிய நாடுகளில் பாலைவனமாக்கல், நிலங்களின் வளம் சீரழிப்பு மற்றும் வறட்சியை எதிர்கொள்ளச் செய்வதற்காக 12 பில்லியன் டாலருக்கும் அதிகமான நிதி அளிக்கப்படும் என உறுதி அளிக்கப் பட்டது.
- இந்த மாநாட்டில் சர்வதேச வறட்சி நெகிழ்திறன் கண்காணிப்பு மையத்தின் ஒரு முன் மாதிரி அறிமுகப்படுத்தப்பட்டது.
- மிகவும் கடுமையான வறட்சியைச் சமாளிக்கும் ஒரு திறனை மதிப்பிடுவதற்காகவும் மேம்படுத்துவதற்காகவும் உலக நாடுகளுக்கு உதவும் முதல் உலகளாவிய செயற்கை நுண்ணறிவு மூலம் இயக்கப்படும் தளம் இதுவாகும்.
- ரியாத் உலகளாவிய வறட்சி நெகிழ்திறன் கூட்டாண்மையானது, உலகின் மிகவும் பாதிக்கப்படக்கூடிய 80 நாடுகளுக்கு வறட்சியைத் தாங்கும் திறன் கொண்ட பல்வேறு அம்சங்களை உருவாக்க உதவுவதற்காக 12.15 பில்லியன் டாலர் நிதியினை திரட்டி உள்ளது.
- ஆப்பிரிக்கா தலைமையிலான மாபெரும் பசுமை தடுப்பு (GGW) முன்னெடுப்பு ஆனது, வளம் குன்றிய 100 மில்லியன் ஹெக்டேர் பரப்பிலான நிலத்தை மீட்டெடுப்பதற்காக பல்வேறு நாடுகளில் இருந்து நிதியினை திரட்டியுள்ளது.
- அமெரிக்கா மற்றும் பிற பங்குதார நாடுகள் மற்றும் நிறுவனங்கள் ஆனது, மிகவும் தகவமைக்கப்பட்டப் பயிர்கள் மற்றும் மண் வளத் திட்டங்களை (VACS) மிகவும் நன்கு மேம்படுத்துவதற்காக என்று சுமார் 70 மில்லியன் டாலர் முதலீடு செய்ய உள்ளதாக அறிவித்துள்ளன.
- UNCCD ஆனது 1994 ஆம் அநாடு ஜூன் 17 ஆம் தேதியன்று பாரீஸ் நகரில் ஏற்றுக் கொள்ளப் பட்டு, 1996 ஆம் ஆண்டு டிசம்பர் 26 ஆம் தேதியன்று நடைமுறைக்கு வந்தது.
- இது பாலைவனமாக்கல் மற்றும் வறட்சியின் விளைவுகளை நிவர்த்தி செய்வதற்காக அமைக்கப்பட்ட ஒரே சட்டப்பூர்வக் கட்டமைப்பாகும்.
- 196 நாடுகள் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் உட்பட 197 பங்குதாரர் நாடுகள் இந்த உடன்படிக்கையின் சாரர்களாக உள்ளன.

## உலகின் நச்சு மிக்கத் தாவரம்

- அறிவியல் ரீதியாக டெண்ட்ரோக்நிடே மோரோய்டெஸ் என அழைக்கப்படும் ஜிம்பி - ஜிம்பி தாவரமானது உலகிலேயே நச்சு மிக்கத் தாவரமாக கருதப்படுகிறது.
- இது முதன்மையாக ஆஸ்திரேலியா, மொலுக்காஸ் மற்றும் இந்தோனேசியாவின் மழைக் காடு பகுதிகளில் காணப்படுகிறது.
- இது இதய வடிவிலான இலைகளுடன் கூடிய புதர் அமைப்பினைக் கொண்டது.

- இத்தாவரத்தின் உடல் முழுவதும் சக்தி வாய்ந்த நியூரோடாக்சின் நிறைந்துள்ள முடி போன்ற ஊசிகள் உள்ளன.




## இராஜஸ்தானில் சிறுஞ்சில்லை பறவை



- பறவைக் கண்காணிப்பாளர்கள் இராஜஸ்தானில் இதுவரை கண்டிராத சிறுஞ்சில்லை எனும் பறவையினைக் கண்டுள்ளனர்.
- லிட்டில் பன்டிங் எனும் சிறுஞ்சில்லை பறவையானது, பொதுவாக வடகிழக்கு இந்தியா மற்றும் தெற்கு சீனாவில் குளிர்காலங்களில் வலசை போகும் ஒரு சிறிய பறவை ஆகும்.
- இது வடகிழக்கு ஐரோப்பா மற்றும் வட ஆசியாவின் டைகா ஆகிய பகுதிகளில் இனப் பெருக்கம் செய்கிறது.

## ஆர்க்டிக் பகுதி குறித்த அறிக்கை 2024



- கடந்த 15 ஆண்டுகளாக, ஆர்க்டிக் பகுதியின் பனிக்காலம் ஆனது வரலாற்று ரீதியாக இருந்ததை விட ஓரிரு வார காலங்கள் குறுகியதாக உள்ளது.
- ஒட்டு மொத்தமாக, 1900 ஆம் ஆண்டில் இது குறித்த அளவீடுகள் தொடங்கியதிலிருந்து 2024 ஆம் ஆண்டானது ஆர்க்டிக் பகுதியில் இரண்டாவது அதிக வெப்பநிலை கொண்ட ஆண்டாக பதிவானது, மேலும் இதுவரை பதிவு செய்யப்பட்டதில் அதிகபட்ச ஈரப்பதம் கொண்ட கோடைகாலத்தினைக் கொண்டதாக இருந்தது.
- ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக, பெரும் புதர்கள் மற்றும் நிலத்தடி உறைபனி அல்லது உறைந்த நிலப் பரப்பினைக் கொண்ட ஆர்க்டிக் துந்த்ரா நிலப்பரப்பு ஆனது, கார்பன் டை ஆக்சைடு ஈர்ப்பு/ உறிஞ்சு பகுதியாக செயல்படுகிறது.
- கிரீன்லாந்து பனிப் படலத்தில் 27 ஆண்டுகாலத்தில் இல்லாத அளவிற்கான ஒரு பனி இழப்பு பதிவாகியுள்ளது.

## பெருங்கடல்களில் வாழும் உயிரினங்களைப் பாதுகாத்தல் - யுனெஸ்கோ

- யுனெஸ்கோ அமைப்பானது eDNA ஆய்வுப் பயணங்களின் அடிப்படையில் தயாரிக்கப் பட்ட 'பெருங்கடல்களில் வாழும் உயிரினங்களைப் பாதுகாப்பதில் சில சமூகங்களை ஈடுபடுத்துதல்' என்ற தலைப்பிலான ஓர் அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- யுனெஸ்கோ அமைப்பின் கடல்சார் பல்லுயிர்ப் பெருக்க வரைபடமாக்கல் மீதான ஒரு முன்னெடுப்பானது, சுற்றுச்சூழல் சார் டிஎன்ஏ (eDNA) மாதிரியைப் பயன்படுத்தி 21 உலகப் பாரம்பரியத தளங்களில் சுமார் 4,500 இனங்களை அடையாளம் கண்டுள்ளது.
- இந்தத தளங்களில் 70 சதவீதத்திற்கும் மிகஅதிகமானவை பருவநிலை மாற்றத்தினால் அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளதோடு மேலும் இந்தப் பகுதிகள் அச்சுறுத்தப்பட்ட நிலையில் உள்ள சுமார் 35% கடல் வாழ் இனங்களைக் கொண்டுள்ளன.
- மிகவும் மோசமான ஒரு பருவநிலை மாற்றச் சூழ்நிலையில், இந்தப் பகுதிகளில் உள்ள அனைத்து மீன் இனங்களும் அவற்றின் வெப்ப சகிப்புத்தன்மை வரம்புகளை விஞ்சக் கூடும் என்று ஆராய்ச்சியாளர்கள் கணித்துள்ளனர்.
- SSP 8.5 அல்லது 'வழக்கம் போலான சூழல்' போக்கு எனவும் அழைக்கப்படும் இந்த ஒரு சூழ்நிலையானது நீடித்தால், நூற்றாண்டின் இறுதியில் உலக வெப்பநிலை 4.4 ° C ஆக உயரும் என்று குறிப்பிடுகிறது.

Figure 1. Locations of the 21 UNESCO World Heritage marine sites participating in UNESCO eDNA Expeditions.



## வ்ரோட்டனின் நீண்ட வால் கொண்ட வெளவால்

- ❖ மொலோசஸ் எனும் வெளவால் வகையினைச் சேர்ந்த மிகவும் அரிதான வ்ரோட்டனின் நீண்ட வால் கொண்ட வெளவால் ஆனது டெல்லியில் தென்பட்டுள்ளது.
- ❖ இந்த வெளவால் இனமானது பெரும்பாலும் மேற்குத் தொடர்ச்சி மலையில் காணப் படுகிறது.
- ❖ மேகாலயாவின் ஜெயிந்தியா மலைக் குன்றுகளில் ஒரு சிறு கூட்டங்களாகவும், மேலும் கம்போடியாவில் தனி இனமாகவும் இது தென்பட்டுள்ளது.
- ❖ 2000 ஆம் ஆண்டு வரை, மேற்குத் தொடர்ச்சி மலைகளில் ஒரே ஒரு வெளவால் மட்டுமே இருந்ததன் காரணமாக இந்த இனம் மிக அருகி வரும் இனமாகக் கருதப்பட்டது.
- ❖ பின்னர் இந்த வெளவால் இனங்கள் IUCN அமைப்பின் செந்நிறப் பட்டியலில் தரவுக் குறைபாடுகள் உள்ள இனமாகச் சேர்க்கப்பட்டது.



## உலகளவிலான உவர்தன்மையினால் பாதிக்கப்பட்ட மண்ணின் நிலை 2024




- ❖ 2024 ஆம் ஆண்டு சர்வதேச மண் மற்றும் நீர் மன்றம் ஆனது தாய்லாந்தின் பாங்காக் நகரில் நடைபெற்றது.
- ❖ உணவு மற்றும் வேளாண் அமைப்பால் இதற்கு உலகளவிலான உவர்தன்மையினால் பாதிக்கப் பட்ட மண்ணின் நிலை என்ற தலைப்பு வழங்கப் பட்டது.

- ❖ சுமார் 1.4 பில்லியன் ஹெக்டேர் பரப்பிலான நிலம் அல்லது உலக நிலப்பரப்பில் 10.7 சதவீத நிலப்பரப்பானது உவர் தன்மையால் பாதிக்கப்பட்டுள்ளது.
- ❖ உவர்தன்மையினால் பாதிக்கப்பட்ட மண் ஆனது மிகப் பெரும்பாலான தாவரங்களின் வளர்ச்சியை மோசமாகப் பாதிக்கின்ற, கரையக்கூடிய உப்புகள் (உவர் தன்மை ஏறிய மண்) அதிக அளவு கொண்ட மண்ணின் ஒரு குறிப்பிட்ட தொகுதியாகும்.
- ❖ தற்போது வரை, ஆப்கானிஸ்தான், ஆஸ்திரேலியா, அர்ஜென்டினா, சீனா, கஜகஸ்தான், ரஷ்யா, அமெரிக்கா, ஈரான், சூடான் மற்றும் உஸ்பெகிஸ்தான் ஆகிய பத்து நாடுகள் உலகின் உவர்தன்மையினால் பாதிக்கப்பட்ட மண்ணில் சுமார் 70 சதவீதப் பங்கினை கொண்டுள்ளன.
- ❖ உவர்தன்மையினால் பாதிக்கப்பட்ட மண்ணைக் கொண்ட 3 மிகவும் பெரிய பகுதிகள் ஆஸ்திரேலியா (357 மில்லியன் ஹெக்டேர் அல்லது mha), அர்ஜென்டினா (153 mha) மற்றும் கஜகஸ்தான் (94 mha) ஆகிய நாடுகளில் காணப்பட்டன.
- ❖ உவர்தன்மை மற்றும் களர் மண் (சோடியம்) தன்மை ஆகியவற்றால் அதிகம் பாதிக்கப் பட்ட 3 நாடுகள் ஓமன் (நாட்டின் நிலப்பரப்பில் 93.5 சதவீதம்), உஸ்பெகிஸ்தான் (92.9 சதவீதம்) மற்றும் ஜோர்டான் (90.6 சதவீதம்) ஆகியனவாகும்.
- ❖ இந்தியா சுமார் 6.72 மில்லியன் ஹெக்டேர் பரப்பில் அல்லது அதன் மொத்தப் புவியியல் பகுதியில் 2.1 சதவீதம் உவர்த் தன்மையினால் பாதிக்கப்பட்டப் பகுதியைக் கொண்டு இருந்தது.
- ❖ அதில், சுமார் 2.95 மில்லியன் ஹெக்டேர் உவர் தன்மை மிக்க நிலமாகவும், மீதமுள்ள 3.77 மில்லியன் ஹெக்டேர் களர் நிலமாகவும் இருந்தது.
- ❖ குஜராத் (2.23 mha), உத்தரப் பிரதேசம் (1.37 mha), மகாராஷ்டிரா (0.61 mha), மேற்கு வங்காளம் (0.44 mha) மற்றும் இராஜஸ்தான் (0.38 mha) ஆகியவை நாட்டின் உவர் தன்மையினால் பாதிக்கப்பட்ட மண்ணில் சுமார் 75% பங்கினைக் கொண்டுள்ளன.

## வண்ணத்துப் பூச்சி இனங்களின் அதிக எண்ணிக்கை

- ❖ துறையூர் அருகேயுள்ள பச்சமலையில் வண்ணத்துப் பூச்சி இனங்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருவதாக சமீபத்தியக் கணக்கெடுப்பில் கண்டறியப்பட்டு உள்ளது.
- ❖ 2016 ஆம் ஆண்டில் 15 இனங்களும் 2022 ஆம் ஆண்டில் 109 இனங்களும் அடையாளம் காணப்பட்ட நிலையில் தற்போதையக் கணக்கெடுப்பில் அவற்றில் 126 இனங்கள் இந்த மலைகளில் கண்டறியப்பட்டுள்ளன.
- ❖ பச்சமலைக் குன்றுகள் பல காப்புக் காடுகளை உள்ளடக்கியதாகும்.
- ❖ இது செங்காட்டுப்பட்டி நீட்சி, காளியம்மன் கோவில் திட்டு, சோலமதி, கன்னிமார் சோலை, சுற்றுச்சூழல் சார் சுற்றுலாப் பூங்கா பகுதி (மேல் மட்ட செங்காட்டுப்பட்டி) மற்றும் மங்கலம் நீர்வீழ்ச்சி பகுதியின் காப்புக்காடுகளை உள்ளடக்கியது.
- ❖ வாழ்விட மதிப்பீடு ஆனது, கலப்பு இலையுதிர் காடுகள், நதிக்கரை மற்றும் இரண்டாம் நிலை காடுகளின் வளர்ச்சியை உள்ளடக்கியது.
- ❖ சுமார் 126 இனங்களின் ஒரு எண்ணிக்கையானது வளமான வண்ணத்துப் பூச்சியின் எண்ணிக்கை என அழைக்கப்படுகிறது.
- ❖ இந்த மலைக் குன்றுகள் ஆனது 175 வண்ணத்துப் பூச்சி இனங்களைக் கொண்டிருக்கும் ஆற்றல் கொண்டது.




## ஆர்க்டிக் துந்த்ராவின் கார்பன் உமிழ்வு நெருக்கடி




- ஆர்க்டிக் துந்த்ரா பகுதியானது தற்போது, வெப்பப் பிடிப்பு பசுமை இல்ல வாயுக்களின் (GHGs) மூல ஆதாரமாக மாறியுள்ளது.
- அதிகரித்த காட்டுத்தீ மற்றும் வழக்கத்திற்கு மாறாக அதிக வெப்பநிலை ஆகியவை இந்த ஆர்க்டிக் சுற்றுச்சூழலின் வியத்தகு மாற்றத்திற்கு முக்கியக் காரணங்களாகும்.
- தாவர மற்றும் விலங்கு எச்சங்கள் அதன் நிரந்தர உறைபனியின் ஓர் அடுக்கில் ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக சிக்கிக் கொள்ளலாம்.

- ஆர்க்டிக் மண் பகுதி முழுவதும் 1.6 டிரில்லியன் மெட்ரிக் டன் கார்பனை சேமிக்கிறது.
- இது வளிமண்டலத்தில் உள்ள கார்பனின் இருமடங்காகும்.
- 2024 ஆம் ஆண்டில் ஆர்க்டிக் பகுதியில் பதிவான வருடாந்திர மேற்பரப்பு காற்று வெப்ப நிலை 1900 ஆம் ஆண்டிற்குப் பிறகு பதிவு செய்யப்பட்ட இரண்டாவது மிகவும் அதிக வெப்பமானதாக இருந்தது.

## ஹம்ப்பேக் திமிங்கலம் இடம்பெயர்வு




- ஓர் ஆண் இன ஹம்ப்பேக் (திமில் கொண்ட) திமிங்கலம் ஆனது தென் அமெரிக்கா பகுதியிலிருந்து ஆப்பிரிக்கா வரை 13,046 கிலோ மீட்டர் தொலைவிற்கு நீந்தியுள்ளது.
- இது அந்த இனத்தின் மிக நீண்ட இடம்பெயர்வு மற்றும் இரண்டு இனப்பெருக்கக் கால தொலைவுகளைக் கடந்த பயணம் என்ற சாதனையினைப் படைக்கிறது.
- பசிபிக் மற்றும் இந்தியப் பெருங்கடல்களுக்கு இடையே ஒரு வயது முதிர்ந்த ஆண் ஹம்ப்பேக் திமிங்கலம் பயணிப்பது இதுவே முதல் முறையாகும்.
- வழக்கமான ஹம்ப்பேக் திமிங்கலத்தின் இடம்பெயர்வுகள் ஒரு வழியில் சுமார் 4,971 மைல்கள் (8,000 கிலோ மீட்டர்) வரையே பரவியுள்ளன.

## கடல் வெப்ப அலை

- அமெரிக்காவின் அலாஸ்காவில் ஏறத்தாழ 4 மில்லியன் வட துருவக் கடற்பறவைகள் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட 'தி ப்ளாப்' என்று பெயரிடப்பட்டுள்ள ஒரு கடல் வெப்ப அலையால் உயிரிழந்துள்ளன.
- 'தி ப்ளாப்' என்ற இந்நிகழ்வானது, 2014 ஆம் ஆண்டின் பிற்பகுதியிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரையில் வடகிழக்குப் பசிபிக் பெருங்கடலில் வழக்கத்திற்கு மாறாக அதிக வெப்பநிலை கொண்ட மேற்பரப்பு நீர் காணப்படும் நிகழ்வாகும்.
- இது கலிபோர்னியா முதல் அலாஸ்கா வரையிலான கடல் சூழலியல் அமைப்புகளை பாதித்தது.

- இங்குமிதவை உயிரிகளின் எண்ணிக்கை குறைந்துள்ளது, இதன் காரணமாக, இந்தப் பறவைகளின் மிகவும் முதன்மை உணவு ஆதாரமான மீன் வளங்களின் எண்ணிக்கை குறைந்தது.
- ஐரோப்பாவில் கில்லெமோட்ஸ் என்று அழைக்கப் படும் இந்தப் பறவைகள், பறக்கும் பெங்குவின் போன்று தோற்றமளிக்கும் கடற்பறவைகள் ஆகும்.




## இந்தியப் பெருங்கடலில் ஆழிநீர் வெப்ப ஊற்று

- இந்தியப் பெருங்கடலின் மேற்பரப்பிலிருந்து 4,500 மீட்டர் ஆழத்தில் தற்போது செயல் பாட்டில் உள்ள ஆழிநீர் வெப்ப ஊற்று ஒன்று இருப்பதை இந்தியாவின் ஆழ்கடல் ஆய்வு திட்டம் கண்டறிந்துள்ளது.
- NIOT மற்றும் NCPOR ஆகியவை கடலில் 4,500 மீட்டர் கீழே உள்ள செயல்பாட்டில் உள்ள ஆழிநீர் வெப்ப ஊற்றின் முதல் புகைப்படத்தை எடுத்துள்ளன.
- ஆழிநீர் வெப்ப ஊற்றுகள் பெருங்கடலின் தரைப் பகுதியில் உள்ள வெந்நீர் ஊற்றுகள் போன்றவையாகும்.
- அவை கண்டத் தட்டுகள் ஒன்றையொன்று பிரிந்து செல்லும் மத்தியப் பெருங்கடல் முகடுகளில் உருவாகின்றன.
- பூமியின் மூடகத்தில் இருந்து வெளி வரும் பாறைக் குழம்புகள் அந்த இடைவெளியை நிரப்புவதற்காக மேலெழும்பி, குளிர்ந்து புதிய கண்ட மேலோடு மற்றும் எரிமலை மலைத் தொடர்களை உருவாக்குகிறது.
- கடல் நீர் ஆனது கண்ட மேலோட்டில் உள்ள விரிசல்களுக்குள் கசியும் போது, அது இந்த பாறைக் குழம்பினால் மிக வெப்பமடைந்து, கரைந்த தாதுக்களைக் கொண்ட சுடுநீர் பிழம்புகளை வெளியேற்றுகிறது.
- இதில் வெந்நீரானது குளிர்ந்த கடல்நீரைச் சந்திப்பதால், இந்தக் கனிமங்கள் திடமாகி, துவாரங்களைச் சுற்றி புகைபோக்கி போன்ற அமைப்புகளை உருவாக்குகின்றன.
- கிழக்குப் பசிபிக் பெருங்கடலில் உள்ள கேலபோகஸ் என்ற பிளவில் 1977 ஆம் ஆண்டில் முதலாவது ஆழிநீர் வெப்ப ஊற்று கண்டறியப்பட்டது.




## நெதர்லாந்திலிருந்து கொண்டு வரப்பட்ட இரண்டு சிவப்புப் பாண்டா கரடிகள்

- கிறிஸ்துமஸ் அன்று நெதர்லாந்தில் உள்ள ரோட்டர்டாம் நகரில் இருந்து டார்ஜிலிங் உயிரியல் பூங்காவிற்கு (பத்மஜா நாயுடு இமாலய உயிரியல் பூங்கா) இரண்டு சிவப்புப் பாண்டாக் கரடிகள் கொண்டு வரப்பட்டன.
- கடந்த 10 ஆண்டுகளில் எந்தவொரு வெளிநாட்டிலிருந்தும் சிவப்புப் பாண்டா கரடிகள் இந்தியாவிற்குக் கொண்டுவரப்படவில்லை.
- இந்தியா இந்த இரண்டு செந்நிறப் பாண்டாக் கரடிகளுக்கும் விஷால் மற்றும் கோஷி என்று பெயரிட்டுள்ளது.
- தற்போது, இந்த உயிரியல் பூங்காவில் 19 சிவப்புப் பாண்டா கரடிகள் (ஏழு ஆண், 12 பெண் மற்றும் இரண்டு குட்டிகள்) உள்ளன.
- சிவப்புப் பாண்டா கரடிகள் (ஐலுரஸ் ஃபல்கென்ஸ்) கிழக்கு இமயமலை மற்றும் தென் மேற்கு சீனாவை பூர்வீகமாகக் கொண்ட ஒரு சிறிய பாலூட்டியாகும்.



### இந்திய மாநிலங்களில் ஆர்சனிக் மாசுபாடு

- 25 மாநிலங்களில் உள்ள 230 மாவட்டங்களின் நிலத்தடி நீரில் ஆர்சனிக் மாசுபாடும் மற்றும் 27 மாநிலங்களில் உள்ள 469 மாவட்டங்களின் நிலத்தடி நீரில் புளோரைடு இருப்பதும் கண்டறியப்பட்டுள்ளது.
- மேற்கு வங்காளம் மற்றும் பீகார் ஆகிய இரு மாநிலங்களும் நிலத்தடி நீரில் ஏற்படும் ஆர்சனிக் மாசுபாட்டினால் அதிகம் பாதிக்கப்படுகின்றன.
- ஆர்சனிக் என்பது காற்று, நீர் மற்றும் மண்ணில் காணப்படும் இயற்கையான ஒரு வேதி மூலக்கூறாகும்.
- இது பூமியின் கண்ட மேலோட்டில் பரவலாகக் காணப்படும் மணமற்ற மற்றும் சுவை அற்ற ஒரு உலோகமாகும்.
- உலக சுகாதார அமைப்பானது குடிநீரில் இருக்க வேண்டிய ஆர்சனிக் வரம்பினை 10 μg/L என்ற அளவாக தற்போது பரிந்துரைத்துள்ளது.




## அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

### THE இதழின் பல்துறை அறிவியல் தரவரிசை 2025

- சுமார் 65 என்ற அளவில் பல்கலைக்கழகங்களைக் கொண்டு, இந்தத் தரவரிசையில் அதிக எண்ணிக்கையிலான பல்கலைக் கழகங்கள் பிரதிநிதித்துவம் பெற்ற நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது.
- அண்ணா பல்கலைக்கழகம் ஆனது, இந்தியக் கல்வி நிறுவனங்களில் மிக உயர்ந்த இடத்தைப் பெற்று, உலக அளவில் 42வது இடத்தைப் பெற்றுள்ளது.
- அதைத் தொடர்ந்து VIT பல்கலைக்கழகம் ஆனது 65வது இடத்தையும், SRM அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் ஆனது 84வது இடத்தையும் பெற்றுள்ளன.
- இதன் முதல் 10 இடங்களில் உள்ள இடம் பெற்ற ஒரே ஆசிய நாடாக சிங்கப்பூர் நாடு தனித்துவம் பெற்றுள்ளது.
- இந்தத் தரவரிசையில், 47 பல்கலைக்கழகங்களுடன் முதல் 100 இடங்களுக்குள் அதிகப் பிரதிநிதித்துவம் பெற்ற கண்டமாக ஆசியா உள்ளது.
- அமெரிக்காவின் மாசசூசெட்ஸ் தொழில்நுட்பக் கல்விக் கழகம் ஆனது இந்தத் தர வரிசையில் முதலிடம் பிடித்தது.

- இதில் அதைத் தொடர்ந்து அமெரிக்காவின் ஸ்டான்போர்டு பல்கலைக்கழகம் மற்றும் சிங்கப்பூரின் தேசியப் பல்கலைக்கழகம் ஆகியவை இடம் பெற்றுள்ளன.




| Rank | University | Country/region |
|---|---|---|
| 1 | Massachusetts Institute of Technology | United States |
| 2 | Stanford University | United States |
| 3 | National University of Singapore | Singapore |
| 4 | California Institute of Technology | United States |
| 5 | Duke University | United States |
| 6 | University of Minnesota | United States |
| 7 | Wageningen University & Research | Netherlands |
| 8 | University of California, Santa Barbara | United States |
| 9 | Nanyang Technological University, Singapore | Singapore |
| 10 | University of Michigan-Ann Arbor | United States |

## மருந்துகளுக்கான அணுகல் அறக்கட்டளையின் 2024 ஆம் ஆண்டு அறிக்கை




- இது மிக குறைவான மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளில் (LMIC) அவற்றின் தயாரிப்புகளுக்கான அணுகலை விரிவுபடுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட பல்வேறு முயற்சிகள் குறித்து 20 முன்னணி மருந்து நிறுவனங்களை மதிப்பீடு செய்தது.
- 2022 ஆம் ஆண்டு குறியீட்டுடன் ஒப்பிடுகையில் ஒட்டு மொத்தத் தொழில் துறை செயல் திறன் குறைந்துள்ளது.
- 2022 ஆம் ஆண்டு குறியீட்டில் பதிவான 65 சதவீதத்துடன் ஒப்பிடும் போது, மதிப்பிடப் பட்டத் தயாரிப்புகளில் சுமார் 61 சதவீதம் ஆனது குறைவான வருமானம் கொண்ட நாடுகளுக்கான அணுகல் உத்திகளைக் கொண்டிருக்கவில்லை.
- 113 LMIC நாடுகளில் 43 சதவீத மருத்துவ பரிசோதனைகள் மட்டுமே நடைபெறுகின்றன.

## வரி சார் நீதியின் நிலை குறித்த அறிக்கை 2024

- இந்த அறிக்கையானது வரி நீதி வலையமைப்பினால்- Tax Justice Network- வெளியிடப் பட்டுள்ளது.
- உலக நாடுகள் ஆனது, உலக வரி முறைகேடுகளால் ஆண்டிற்குள் சுமார் 492 பில்லியன் அமெரிக்க டாலர்களை இழந்து வருகின்றன.
- இந்த இழப்பில் சுமார் பாதி அளவானது (43%) ஆஸ்திரேலியா, கனடா, இஸ்ரேல், ஜப்பான், நியூசிலாந்து, தென் கொரியா, ஐக்கியப் பேரரசு மற்றும் அமெரிக்கா போன்ற எட்டு நாடுகளில் பதிவாகியுள்ளன.
- இதில் மூன்றில் இரண்டு பங்கு (347.6 பில்லியன் அமெரிக்க டாலர்) ஆனது, வரிக் குறைப்பு போன்ற பல்வேறு வரி ஏய்ப்பு நடவடிக்கைகளுக்காக வெளிநாடுகளுக்கு இலாபத்தினைப் பரிமாற்றும் பன்னாட்டு நிறுவனங்களால் இழக்கப்படுகிறது.
- மீதமுள்ள மூன்றில் ஒரு பங்கு (144.8 பில்லியன் அமெரிக்க டாலர்கள்) செல்வந்தர்கள் தங்கள் செல்வ வளங்களை வெளிநாடுகளில் மறைத்து வைப்பதன் ஒரு காரணமாக இழக்கப் படுகின்றன.
- உலகின் வடக்கு நாடுகள் ஆனது முழுமையான வரி வருவாயில் மிகப்பெரிய அளவில் தொகையை இழக்கின்றன.
- உலகின் தெற்கு நாடுகள் ஆனது, தங்கள் வரி வருவாயில் ஒரு பங்காக மிக அதிகபட்ச இழப்புகளைச் சந்திக்கின்றன.

**Countries with the Largest Annual Tax Loss as % of GDP**

| Country | in $ million | % of GDP |
|---|---|---|
| Marshall Islands | 191 | 74.2% |
| Samoa | 577 | 68.4% |
| Seychelles | 619 | 48.1% |
| Luxembourg | 27,462 | 32.1% |
| Liberia | 948 | 27.0% |
| British Virgin Islands | 150 | 9.8% |
| Curaçao | 151 | 5.5% |
| Honduras | 1,300 | 4.6% |
| Jersey | 505 | 4.3% |
| St. Lucia | 77 | 3.9% |

**Countries with the Largest Annual Tax Loss by Value**

| Country | in $ million | % of GDP |
|---|---|---|
| United States | 73,182 | 0.3% |
| United Kingdom | 45,346 | 1.4% |
| Germany | 43,902 | 1.0% |
| China | 30,938 | 0.2% |
| Luxembourg | 27,462 | 32.1% |
| France | 23,671 | 0.8% |
| Australia | 23,555 | 1.5% |
| India | 21,577 | 0.7% |
| Japan | 15,618 | 0.3% |
| The Netherlands | 15,611 | 1.5% |

## உலகளாவிய ஊதிய அறிக்கை 2024

- இது சர்வதேச தொழிலாளர் அமைப்பால் வெளியிடப் பட்டது.
- குறைந்த ஊதியம் பெறும் கூலித் தொழிலாளர்கள் மற்றும் குறைந்த ஊதியம் பெறும் கூலி சாரா தொழிலாளர்களின் பங்கு ஆனது கடந்த 10 ஆண்டு காலப்பகுதியில் ஆண்டிற்கு சராசரியாக 11.1% என்ற வீதத்தில் குறைந்துள்ளது.
- இந்தியாவில் இது 2008 மற்றும் 2018 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் 6.3% மற்றும் 12.7% என்ற சராசரி வருடாந்திர விகிதத்தில் குறைந்துள்ளது.

- நாட்டில் உள்ள சராசரி ஒரு மணி நேர வீத ஊதியத்தில் 50 சதவீதத்திற்கும் குறைவாக ஊதியம் பெறுபவர்கள் என்ற குறைந்த ஊதியம் பெறும் கூலித் தொழிலாளர்களின் பங்கு இந்தியாவில் 9.5% ஆக உள்ளது.
- அதே சமயம், இது பாகிஸ்தானில் 9.4% ஆகவும், நேபாளத்தில் 10.5% ஆகவும், வங்காள தேசத்தில் 11.2% ஆகவும், பூட்டானில் 13.7% ஆகவும் மற்றும் இலங்கையில் 25.9% ஆகவும் உள்ளது.
- 2000 ஆம் ஆண்டு முதல், உலகளவில் ஊதியச் சமத்துவமின்மையானது, பல நாடுகளில் ஆண்டுதோறும் சராசரியாக சுமார் 0.5% முதல் 1.7% வரையிலான சராசரி விகிதத்தில் குறைந்துள்ளது.
- குறைவான வருமானம் கொண்ட பல்வேறு நாடுகளில், கடந்த 20 ஆண்டுகளில் ஊதிய சமத்துவமின்மையின் சராசரி வருடாந்திரக் குறைவு வீதம் 3.2% முதல் 9.6% வரையில் பதிவாகியிருந்தது.
- கடந்த ஆண்டு உலகளாவிய உண்மையான ஊதியம் ஆனது 1.8% அதிகரித்துள்ளது.
- இந்தியாவின் வருமானம் ஈட்டும் பிரிவினரில் முதல் சுமார் 10 சதவிகிதத்தினர், கடை நிலையில் உள்ள 10 சதவிகிதத்தினரை விட சுமார் 6.8 மடங்கு மிக அதிகமாக ஊதியம் பெறுகின்றனர்.




## UNAIDS அறிக்கை 2024

- எய்ட்ஸ் தொற்றுநோயை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு மனித உரிமைகளை நிலை நிறுத்துவது அவசியம் என்று குறிப்பிடும் அறிக்கை ஒன்றை ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்டுள்ளது.
- சிறுமிகள் மற்றும் பெண்களுக்கு எதிரான ஒரு பாகுபாடு மற்றும் LGBTQ+ நபர்களின் செயல்களைக் குற்றமாக்குதல் உள்ளிட்ட மனித உரிமை மீறல்கள் எய்ட்ஸ் நோயை முடிவுக்குக் கொண்டு வரும் முயற்சிகளைத் தடுக்கின்றன.
- உலகளவில் சுமார் 39.9 மில்லியன் மக்கள் எச்.ஐ.வி தொற்றுடன் வாழ்கின்றனர்.

- இவர்களில் சுமார் 9.3 மில்லியன் நபர்கள் தேவையான சிகிச்சையைப் பெற்றிருக்க இல்லை.
- கடந்த ஆண்டு 630,000 பேர் எய்ட்ஸ் தொடர்பான நோய்களால் உயிரிழந்துள்ளனர்.
- கூடுதலாக, உலகளவில் 1.3 மில்லியன் புதிய எச்.ஐ.வி தொற்றுகள் பதிவாகியுள்ளன.
- குறைந்தது 28 நாடுகளில், புதிய தொற்றுகள் அதிகரித்து வருகின்றன.

Figure 1.1 Numbers of new HIV infections and AIDS-related deaths, Asia and the Pacific, 2000–2023




## வலையமைப்பு தயார் நிலைக் குறியீடு 2024

- சமீபத்திய வலையமைப்பு தயார் நிலைக் குறியீட்டில் (NRI 2024) இந்தியா 11 இடங்கள் முன்னேறி உலகளவில் 49வது இடத்தைப் பிடித்துள்ளது.
- அமெரிக்காவின் வாஷிங்டன் DC நகரில் உள்ள போர்ட்லன்ஸ் நிறுவனமானது இந்தக் குறியீட்டினை வெளியிட்டுள்ளது.
- கடந்த பத்தாண்டுகளில், தொலைத்தொடர்பு பரவல் அடர்த்தியானது 75.2 சதவீதத்தில் இருந்து 84.69% ஆக உயர்ந்துள்ள அதே சமயம் கம்பியில்லா இணைப்புகள் சுமார் 119 கோடியை எட்டியுள்ளன.
- குறைவான மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளுள், வியட்நாம் நாட்டிற்கு அடுத்தபடியாக இந்தியா 2வது இடத்தைப் பிடித்துள்ளது.
- செயற்கை நுண்ணறிவு அறிவியல் வெளியீடுகள், செயற்கை நுண்ணறிவு சார் திறமை வளம் மற்றும் தகவல் தொடர்பு மற்றும் தொழில்நுட்பச் சேவைகள் மீதான ஏற்றுமதி ஆகியவற்றில் இந்தியா முதல் இடத்தைப் பிடித்துள்ளது.
- "உள்நாட்டுச் சந்தை அளவில்" 3வது இடத்தையும், "தொலைத்தொடர்புச் சேவைகளில் வருடாந்திர முதலீடு" 4வது இடத்தையும் இந்தியா பெற்றுள்ளது.
- அமெரிக்கா, சிங்கப்பூர் மற்றும் பின்லாந்து ஆகியவை இக்குறியீட்டில் முதலிடத்தில் உள்ளன.
- இதில் சீனா 17வது இடத்திலும், வங்காளதேசம் 89வது இடத்திலும், பாகிஸ்தான் 97வது இடத்திலும் உள்ளன.

| High Income Countries | Upper-Middle Income Countries | Lower-middle Income Countries | Low Income Countries |
|---|---|---|---|
| 1. United States of America (1) | 1. China (17) | 1. Viet Nam (45) | 1. Rwanda (91) |
| 2. Singapore (2) | 2. Malaysia (36) | 2. India (49) | 2. Uganda (118) |
| 3. Finland (3) | 3. Thailand (40) | 3. Philippines (63) | 3. Malawi (119) |

## தொற்று தடுப்பு மற்றும் கட்டுப்பாடு பற்றிய உலகளாவிய அறிக்கை 2024




- 71% நாடுகளில் தற்போது தொற்றுத் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு (IPC) திட்டம் செயலில் இருந்தாலும், 2023-2024 ஆம் ஆண்டில் உலக சுகாதார அமைப்பின் குறைந்தபட்ச IPC நிபந்தனைகள் அனைத்தையும் வெறும் 6% நாடுகள் மட்டுமே பூர்த்தி செய்துள்ளன.
- உலக சுகாதார அமைப்பின் ஒரு உலகளாவியச் செயல் திட்டம் மற்றும் IPC மீதான கண்காணிப்புக் கட்டமைப்பில், 2030 ஆம் ஆண்டிற்குள் 90 சதவீதத்திற்கும் அதிகமான இலக்கை அடைய வேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்ட இலக்கை விட இது மிகவும் பின் தங்கியுள்ளது.
- மருத்துவமனையில் நன்கு சிகிச்சை பெற்ற அனைத்து வகை சீழ்த்தொற்று (செப்சிஸ்) பாதிப்புகளில் நான்கில் ஒன்று (23.6%) சுகாதாரப் பாதுகாப்புடன் தொடர்புடையது.
- வயது வந்தோருக்கான தீவிர சிகிச்சைப் பிரிவுகளில் (ICU) சிகிச்சை பெறும் உறுப்பு செயலிழப்புடன் கூடிய செப்சிஸ் தொற்றின் அனைத்து வகையானப் பாதிப்புகளிலும் சுமார் பாதி (48.7%) அளவிலான பாதிப்புகள் மருத்துவமனை வழியே பெறப்பட்டவை ஆகும்.

- ஒவ்வோர் ஆண்டும், சுமார் 7.7 மில்லியன் உயிரிழப்புகள் உலகளவில் இப்பாக்டீரியா தொற்றுகளால் ஏற்படுகின்றன.
- நுண்ணுயிர் எதிர்ப்பிகளை எதிர்க்கும் திறன் கொண்ட மருத்துவமனையில் ஏற்படும் நோய்த் தொற்றுகளின் உலகளாவிய எண்ணிக்கையானது ஆண்டுதோறும் சுமார் 136 மில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளது.
- ஆண்டுதோறும் சுமார் 4.95 மில்லியன் உயிரிழப்புகள் பாக்டீரிய AMR வகை உடன் தொடர்புடையவையாகும்.

## உலகளாவியக் கண்ணோட்ட அறிக்கை 2025

- 2025 ஆம் ஆண்டில் உலகளாவிய உள்நாட்டு உற்பத்தி (GDP) வளர்ச்சிக்கான ஒட்டு மொத்தக் கண்ணோட்டம் ஆனது 2024 ஆம் ஆண்டைப் போலவே சுமார் 3% ஆக இருக்கும்.
- உலகின் இரண்டு பெரிய நாடுகளான அமெரிக்கா மற்றும் சீனாவின் பொருளாதார வளர்ச்சி அடுத்த ஆண்டு குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- உலகின் தலை சிறந்த சுமார் 45 பொருளாதாரங்களில் ஒன்று கூட அடுத்த ஆண்டு மந்த நிலையில் இருக்காது என எதிர்பார்க்கப்படுகிறது.
- ஐரோப்பா, ஜப்பான், கனடா மற்றும் ஐக்கியப் பேரரசு உட்பட பெரும்பாலானவை 2025 ஆம் ஆண்டில் வேகமாக வளர்ச்சியடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- சீனா உலகின் இரண்டாவது பெரிய பொருளாதாரம் ஆக திகழ்வதோடு மேலும் உலகப் பொருளாதாரத்தில் சுமார் 18% பங்கையும் கொண்டுள்ளது.

GDP % change (not annualized)

| G7 countries | 4Q 2024* | 3Q 2024* | 2Q 2024 | 1Q 2024 | 4Q 2023 | 3Q 2023 | 2Q 2023 | 1Q 2023 |
|---|---|---|---|---|---|---|---|---|
| Canada | 0.4% | 0.3% | 0.5% | 0.4% | 0.1% | -0.1% | 0.2% | 0.9% |
| France | 0.0% | 0.4% | 0.2% | 0.3% | 0.5% | 0.1% | 0.7% | 0.0% |
| Germany | 0.1% | 0.1% | -0.3% | 0.2% | -0.4% | 0.2% | -0.2% | 0.1% |
| Italy | 0.2% | 0.0% | 0.2% | 0.3% | 0.0% | 0.2% | -0.2% | 0.4% |
| Japan | 0.4% | 0.2% | 0.6% | -0.6% | 0.1% | -1.1% | 0.7% | 1.3% |
| United Kingdom | 0.3% | 0.1% | 0.5% | 0.7% | -0.3% | -0.1% | 0.0% | 0.1% |
| United States | 0.5% | 0.7% | 0.8% | 0.4% | 0.8% | 1.1% | 0.6% | 0.7% |

## 2023 ஆம் ஆண்டில் பெண் கொலைகள்

- UNODC (போதைப் பொருள் மற்றும் குற்றங்கள் குறித்த ஐக்கிய நாடுகள் அலுவலகம்) ஆனது "2023 ஆம் ஆண்டில் பெண் கொலைகள்: துணைவியர்/குடும்ப உறுப்பினராக உள்ள பெண்களின் கொலைகள் பற்றிய ஒரு உலகளாவிய மதிப்பீடுகள்" என்ற ஒரு அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- 2023 ஆம் ஆண்டில் மட்டும் உலகளவில் 85,000 பெண்கள் மற்றும் சிறுமிகள் திட்டமிட்டு கொல்லப்பட்டுள்ளனர்.
- ஒவ்வொரு நாளும், (ஒவ்வொரு 10 நிமிடங்களுக்கும் ஒரு மரணம் என்ற வீதத்தில்) மிகச் சராசரியாக சுமார் 140 பெண்கள் மற்றும் சிறுமிகள் அவர்களின் நம்பிக்கைக்கு உரிய ஒருவரால் கொல்லப்பட்டனர்.

- 2022 ஆம் ஆண்டில் பதிவான 48,800 என்ற எண்ணிக்கையினை விட 2023 ஆம் ஆண்டில் பதிவான மதிப்பீடு அதிகமாகும்.
- 2023 ஆம் ஆண்டில் துணைவர் அல்லது குடும்ப உறுப்பினர்களால் கொல்லப்பட்ட 21,700 பெண்கள் மற்றும் சிறுமிகளுடன், ஆப்பிரிக்காவில் அதிக எண்ணிக்கையிலான பெண் கொலைகள் பாதிவாகியுள்ளது.
- அதன் மக்கள்தொகையுடன் ஒப்பிடுகையில், 100,000 நபர்களுக்கு சுமார் 2.9 பேர் என்ற விகிதத்தில், இந்தக் கண்டம் மிக அதிகமானப் பெண் கொலை விகிதத்தைக் கொண்டு உள்ளது.
- அதனைத் தொடர்ந்து 100,000 நபர்களுக்கு முறையே 1.6 மற்றும் 1.5 என்ற விகிதத்தில் அமெரிக்கா மற்றும் ஓசியானியா இடம் பெற்றுள்ளன.
- ஆசியா மற்றும் ஐரோப்பாவில் 100,000 நபர்களுக்கு சுமார் 0.8 மற்றும் 0.6 என்ற அளவில் குறைந்த விகிதங்கள் பதிவாகியுள்ளன.




## வருடாந்திர சர்வதேசக் கடன் அறிக்கை 2024




- உலக வங்கியானது சமீபத்தில் 2024 ஆம் ஆண்டின் சர்வதேசக் கடன் அறிக்கையினை வெளியிட்டுள்ளது.

- அதிக வருமானம் உள்ள பல நாடுகளில் விதிக்கப்படும் நெருக்கடி மிக்க பணவியல் கொள்கைகளானது வட்டி விகிதங்களை 20 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு உயர்த்தி உள்ளது.
- வளர்ந்து வரும் நாடுகள் ஆனது, 2023 ஆம் ஆணடில் தங்கள் வெளிநாட்டுக் கடனைச் செலுத்துவதற்கு முன்னெப்போதும் இல்லாத வகையில் சுமார் 1.4 டிரில்லியன் டாலர் தொகையினைச் செலவிட்டுள்ளன.
- வட்டி செலுத்துதலுக்கானச் செலவினம் சுமார் 33 சதவீதம் அதிகரித்து 406 பில்லியன் டாலராக உள்ளது.
- உலகின் மிகவும் ஏழ்மையான மற்றும் மிகவும் பாதிக்கப்படக் கூடிய நாடுகள் இந்த ஆண்டில் 96.2 பில்லியன் டாலர் மதிப்பிலான கடன்களைச் செலுத்தியுள்ளன.
- அசல் தொகையினைத் திருப்பிச் செலுத்துதல் ஆனது, சுமார் 8 சதவீதம் குறைந்து 61.6 பில்லியன் டாலராக உள்ள நிலையில், வட்டிச் செலவுகள் இதுவரை இல்லாத அளவுக்கு 34.6 பில்லியன் டாலரினை எட்டியது.
- இது ஒரு தசாப்தத்திற்கு முன்பு இருந்ததை விட நான்கு மடங்கு அதிகமாகும்.
- மிகக் குறைவான மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளின் ஒருங்கிணைந்த வெளிநாட்டுக் கடனானது 2023 ஆம் ஆண்டின் இறுதியில் 8.8 டிரில்லியன் டாலர்களை எட்டிய நிலையில் இது 2020 ஆம் ஆண்டில் இருந்த அளவினை விட சுமார் 8 சதவிகிதம் அதிகரித்துள்ளது.
- வங்காளதேசம் மற்றும் இந்தியா ஆகிய இரு நாடுகளானது, 2023 ஆம் ஆண்டில் வட்டித் தொகையில் 90 சதவீதத்திற்கும் அதிகமான அதிகரிப்பைச் சந்தித்துள்ளன.

## 100 முன்னணி ஆயுத உற்பத்தி மற்றும் இராணுவ சேவை நிறுவனங்கள், 2023



TOP LINE CHECK Sipri top 100 arms companies 2023

| Rank 2022 | Rank 2023 | Company | Country | Arms revenue 2023 ($ bn) | Change (%) |
|---|---|---|---|---|---|
| 1 | 1 | Lockheed Martin | US | 60.81 | -1.6 |
| 2 | 2 | RTX | US | 40.66 | -1.3 |
| 3 | 3 | Northrop Grumman | US | 35.57 | 5.8 |
| 4 | 4 | Boeing | US | 31.1 | 2.0 |
| 5 | 5 | General Dynamics | US | 30.2 | 3.2 |
| 43 | 43 | Hindustan Aeronautics | India | 3.71 | 6.9 |
| 65 | 67 | Bharat Electronics | India | 1.94 | 0.5 |
| 96 | 94 | Mazagon Dock Shipbuilders | India | 1.09 | 12.4 |

- ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனம் (SIPRI) ஆனது, அதன் 2024 ஆம் ஆண்டு அறிக்கையில், உலகளாவிய ஆயுத வருவாய் ஆனது 2023 ஆம் ஆண்டில் சுமார் 632 பில்லியன் டாலர்களை எட்டியதாகக் குறிப்பிட்டுள்ளது.
- இது முந்தைய ஆண்டை விட 4.2% அதிகமாகும்.
- இவற்றில், அமெரிக்க நிறுவனங்கள் சுமார் 317 பில்லியன் டாலர் அல்லது உலகளாவிய மொத்தத்தில் பாதியளவுப் பங்கினைக் கொண்டுள்ளன.
- லாக்ஹீட் மார்ட்டின், RTX , நார்த்ரோப் குருமன், போயிங் மற்றும் ஜெனரல் டைனமிக்ஸ் ஆகியவை இந்தப் பட்டியலில் முன்னணியில் உள்ள 5 நிறுவனங்களாகும்.

- முதல் 100 இடங்களில் உள்ள மூன்று இந்திய நிறுவனங்களின் வருவாய் என்பது சுமார் 5.8% அதிகரித்து 6.7 பில்லியன் டாலர் ஆக பதிவாகியுள்ளன.
- இந்தியாவின் மிகப்பெரியதொரு ஆயுத உற்பத்தி நிறுவனமான ஹிந்துஸ்தான் ஏரோ நாட்டிக்ஸ் லிமிடெட் (HAL) நிறுவனத்தின் ஆயுத உற்பத்தி வருவாய் 6.9% அதிகரித்து 3.7 பில்லியன் டாலராக உள்ளது.

## UBS பில்லியனர்களின் வளங்கள் அறிக்கை 2024

- உலக கோடீஸ்வரர்களின் செல்வ வளமானது கடந்த ஆண்டை விட சுமார் 17 சதவீதம் உயர்ந்துள்ளது.
- மொத்தக் கோடீஸ்வரர்களின்/பில்லியனர்களின் எண்ணிக்கையானது ஓராண்டிற்கு முன்பு 2,544 ஆக இருந்து 2,682 ஆக உயர்ந்துள்ள நிலையில் அவர்களின் சொத்து மதிப்பு 12 டிரில்லியன் டாலரில் இருந்து 14 டிரில்லியன் டாலர் ஆகவும் உயர்ந்துள்ளது.
- 2015 ஆம் ஆண்டில், அவர்களின் மொத்தச் சொத்து மதிப்பு 6.3 டிரில்லியன் டாலராக இருந்தது.
- அமெரிக்காவில் உள்ள கோடீஸ்வரர்களின் எண்ணிக்கை 751 என்ற எண்ணிக்கையில் இருந்து 835 ஆக உயர்ந்துள்ளது.
- சீனாவில் உள்ள கோடீஸ்வரர்களின் எண்ணிக்கை சுமார் 520 என்ற எண்ணிக்கையில் இருந்து 427 ஆக குறைந்துள்ளது.
- இந்தியாவின் கோடீஸ்வரர்களின் எண்ணிக்கை கடந்த ஆண்டில் ஐந்தில் ஒரு பங்கு அதிகரித்து 185 ஆகவும், அவர்களின் சொத்து மதிப்பு 40 சதவீதத்திற்கும் அதிகமாக அதிகரித்து சுமார் 906 பில்லியன் டாலர்களாகவும் உள்ளது.




## கைபேசிகளில் பரவும் தீநிரல் தாக்குதல்களின் உலகளாவிய தரவரிசை

- தற்போது உலக அளவில் கைபேசிகளில் பரவும் தீ நிரல் தாக்குதல்களின் பட்டியலில் இந்தியா முதலிடத்தில் உள்ளது.
- உலகளவில் நடைபெறும் மொத்தக் கைபேசி சார் தீநிரல் தாக்குதல்களில் இந்தியா தற்போது 28% பங்கினைக் கொண்டுள்ளது.
- இது அமெரிக்கா (27.3%) மற்றும் கனடா (15.9%) ஆகியவற்றைக் கூட விஞ்சியுள்ளது.

- ஆனால் APAC (ஆசியா-பசிபிக்) பிராந்தியத்தில் 5வது இடத்திலிருந்து 7வது இடத்திற்கு மாறி, இந்தியா ஒரு குறைந்த தீ நிரல் தோற்ற இடமாக இத் தரவரிசையில் முன்னேறி உள்ளது.




## உலக மலேரியா அறிக்கை 2024 - WHO




- 2023 ஆம் ஆண்டில், தென்கிழக்கு ஆசியப் பகுதியில் நான்கு மில்லியன் பாதிப்புகள் பதிவாகியுள்ள எட்டு மலேரியா தொற்று மிக்க நாடுகள் உள்ளன.
- பிராந்தியத்தில் பதிவாகியுள்ள பாதி எண்ணிக்கையிலான பாதிப்புகள் இந்தியாவில் மட்டுமே பதிவாகியுள்ள நிலையில் அதைத் தொடர்ந்து இந்தோனேசியாவானது சுமார் மூன்றில் ஒரு பங்கினைக் கொண்டுள்ளது.

- இந்தியாவில், 2000 முதல் 2023 ஆம் ஆண்டு வரை 17.7 மில்லியன் பாதிப்புகள் குறைந்து உள்ளன.
- 1,000 பேருக்கு சுமார் 20 பாதிப்புகளாக இருந்த ஆபத்து நிலையில் உள்ளவர்களின் எண்ணிக்கையானது சுமார் 1.5 பாதிப்புகளாகக் குறைந்துள்ளதையடுத்து, மலேரியா பாதிப்புகள் 93% குறைந்துள்ளது.
- 2016 ஆம் ஆண்டில் இலங்கை மலேரியா பாதிப்பு அற்ற நாடு என சான்றளிக்கப்பட்டது.
- உலகளவில், 2023 ஆம் ஆண்டில், 83 மலேரியா தொற்று மிக்க நாடுகளில் 29 நாடுகள் உலகளாவிய மலேரியா பாதிப்புகளில் சுமார் 95% பாதிப்புகளுக்கும், மலேரியா காரணமான உயிரிழப்புகளில் 96% உயிரிழப்புகளுக்கும் காரணமாக இருந்தன.
- நைஜீரியா (25.9%), காங்கோ ஜனநாயகக் குடியரசு (12.6%), உகாண்டா (4.8%), எத்தியோப்பியா (3.6%), மற்றும் மொசாம்பிக் (3.5%) ஆகியவை உலகம் முழுவதும் உள்ள மலேரியா நோயாளிகளில் பாதிக்கும் மேற்பட்ட பாதிப்புகளைக் கொண்டுள்ளன.
- நைஜீரியா (30.9%), காங்கோ ஜனநாயகக் குடியரசு (11.3%), நைஜர் (5.9%), மற்றும் தான்சானியா (4.3%) ஆகிய நான்கு நாடுகள் மட்டும் உலகளவிலான மலேரியா உயிரிழப்புகளில் பாதிக்கும் மேற்பட்ட பங்கினைக் கொண்டுள்ளன.

## மனித கடத்தல் பற்றிய UNODC அமைப்பின் உலகளாவிய அறிக்கை




- 2019 ஆம் ஆண்டு பெருந்தொற்றிற்கு முந்தைய புள்ளி விவரங்களுடன் ஒப்பிடுகையில், 2022 ஆம் ஆண்டில் உலகளவில் கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களின் ஒட்டு மொத்த எண்ணிக்கையில் சுமார் 25 சதவீதம் அதிகரிப்புப் பதிவாகியுள்ளதாக இந்த அறிக்கை கூறுகிறது.
- 2019 மற்றும் 2022 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில், உலகளவில் கட்டாய உழைப்பு என்பதற்காக கடத்தப்பட்டவர்களின் எண்ணிக்கை 47 சதவீதம் அதிகரித்துள்ளது.

- கடத்தப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை ஆனது 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2022 ஆம் ஆண்டில் 31 சதவீதம் அதிகரித்துள்ளதோடு பெண்களில் இது 38 சதவீதம் அதிகரித்துள்ளது.
- உலகளவில் கடத்தலால் பெருமளவில் பாதிக்கப்பட்டதாக கண்டறியப்பட்ட நபர்களில் மிகப் பெரும்பான்மையானவர்கள் (2022 ஆம் ஆண்டில் 61 சதவீதம்) பெண்கள் மற்றும் சிறுமிகளாக உள்ளனர்.
- இதில் கடத்தலால் பாதிக்கப்பட்டதாக கண்டறியப்பட்ட சிறுவர்களில் 45 சதவீதம் பேர் கட்டாய உழைப்புக்காக கடத்தப் படுகிறார்கள் என்பதோடு மேலும் 47 சதவீதம் பேர் பிற நோக்கங்களுக்காக சுரண்டப் படுகிறார்கள்.
- மொத்தத்தில், வெவ்வேறு நாட்டினைச் சேர்ந்த குறைந்தபட்சம் சுமார் 162 பேர், 2022 ஆம் ஆண்டில் 128 வெவ்வேறு நாடுகளுக்கு கடத்தப் பட்டுள்ளனர்.

## இயற்கை அடிப்படையிலான தீர்வுகள் சார்ந்த வேலைவாய்ப்புகளில் முறையான வேலைவாய்ப்பு 2024

| Region | Current employment (thousands of persons) | Additional employment by 2030 (thousands of persons) |
|---|---|---|
| North America | 233 – 706 | 190 – 318 |
| EU27 | 274 – 398 | 190 – 318 |
| Rest of Europe and Central Asia | 204 – 337 | 1,166 – 1,426 |
| Latin America and the Carribean | 571 – 612 | 1,375 – 5,799 |
| Arab States | 1 | 615 – 780 |
| Asia and the Pacific | 57,291 – 58,819 | 10,942 – 15,779 |

- இந்த அறிக்கையானது ரியாத் நகரில் நடைபெற்ற UNCCD அமைப்பின் COP 16 என்ற மாநாட்டில் வெளியிடப்பட்டது.
- இந்த அறிக்கையானது இந்தத் தொடரின் இரண்டாவது அறிக்கையாகும் என்பதோடு இதன் முதல் பதிப்பு 2022 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது.
- இந்த அறிக்கையின்படி, உலகின் இயற்கை அடிப்படையிலான தீர்வுகள் (NbS) சார்ந்த வேலைவாய்ப்புகளில் சுமார் 93-95 சதவீதம் ஆனது ஆசிய-பசிபிக் பிராந்தியத்தில் குவிந்துள்ளது.
- இந்தியாவில் உள்ள மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் (MGNREGS) ஆனது இதில் முக்கியப் பங்காற்றுகிறது.
- NbS மூலம் உருவாக்கப்பட்ட வேலை வாய்ப்புகள் மூலம் உலகளவில் பயனடைந்த 59 மில்லியன் மக்களில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் பெண்கள் ஆவர்.
- 57 சதவீதச் செலவினம் ஆனது, அதிக வருமானம் கொண்ட நாடுகளில் ஏற்படுகிறது, அதே சமயம் ஆசிய-பசிபிக் பகுதியானது உலகளாவிய NbS செலவினத்தில் 44 சதவீதப் பங்கினை கொண்டுள்ளது.

- உலகளவில், உலகின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.3 சதவீதம் மட்டுமே NbS மூலம் பங்களிக்கப் படுகிறது.

## தொழிலாளர் சந்தைக்கான திறன்கள்

- இந்த அறிக்கையானது 'Navigating Tomorrow: Mastering Skills in a Dynamic Global Labor Market' என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ளது.
- இந்தியத் தொழில்துறை வல்லுநர்களில் சுமார் 70 சதவீதத்திற்கும் அதிகமான நபர்கள் திறமையை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகளைத் தீவிரமாக நாடுகின்றனர்
- திறன் மேம்பாட்டிற்கு ஆதரவளிக்கும் அரசாங்கங்களின் திறன் மீதான உலகளாவிய நம்பிக்கை 20 சதவீதம் என்ற அளவில் குறைவாகவே உள்ளது.
- அமெரிக்கா போன்ற நாடுகளில் 15 சதவீதம், ஐக்கியப் பேரரசில் 12 சதவீதம் என்ற மிக குறைவான நம்பகத்தன்மை அளவே பதிவாகி உள்ளன.
- இந்தியாவில் இந்தக் கணக்கெடுப்பில் பங்கெடுத்தவர்கள், தொழிலாளர்களின் பெரும் மேம்பாட்டில் தனியார் துறையின் பங்கினை வலியுறுத்தி, வணிகங்களில் 49 சதவீத நம்பிக்கையை வெளிப்படுத்தியுள்ளனர்.

| | GDP per capita | Population | Working age population | Employed | Participation | Unemployed | NEET |
|---|---|---|---|---|---|---|---|
| | Current US$ | Million | | | % | | |
| Australia | 63,933 | 26 | 22 | 14 | 65.5 | 3.7 | 8.9 |
| Brazil | 18,583 | 216 | 172 | 99 | 62.8 | 7.9 | 20.6 |
| China | 23,588 | 1,426 | 1,141 | 747 | 70.9 | 5.1 | 12.7 |
| India | 9,609 | 1,429 | 883 | 472 | 55.6 | 4.2 | 23.5 |
| Japan | 52,594 | 123 | 110 | 67 | 62.9 | 2.6 | 3.1 |
| Jordan | 12,115 | 11 | 8 | 2 | 38.6 | 18.2 | 31.5 |
| Nigeria | 5,936 | 224 | 93 | 73 | 81.3 | 3.8 | 13.9 |
| Norway | 80,003 | 5 | 5 | 3 | 66.1 | 3.6 | 6.2 |
| Saudi Arabia | 69,396 | 32 | 23 | 14 | 61.1 | 5.6 | 18.4 |
| South Africa | 15,533 | 60 | 45 | 19 | 58.5 | 28 | 31.8 |
| Spain | 49,394 | 48 | 42 | 21 | 57.9 | 12.2 | 9.1 |
| United Kingdom | 57,448 | 68 | 54 | 33 | 63.2 | 3.8 | 11.2 |
| United States | 81,695 | 340 | 267 | 161 | 62.6 | 3.6 | 11.2 |
| Vietnam | 13,666 | 99 | 76 | 55 | 73.1 | 1.5 | 11.3 |

## சிறந்த சுவைகள் குறித்த வரைபடம் - 2024-25 சிறந்த உணவு நகரங்கள்

- "உலகின் 100 சிறந்த உணவு வகைகள்" பட்டியலில் இந்தியா 12வது இடத்தைப் பெற்று உள்ளது.
- இதில் கூடுதலாக, நான்கு அசைவ இந்திய உணவுகள் "உலகின் 100 சிறந்த உணவுகள்" என்ற பட்டியலில் இடம் பெற்றுள்ளன.
- ஆறு இந்திய நகரங்கள் அவற்றின் சமையல் சிறப்புக்காக என்று "உலகின் 100 சிறந்த உணவுப் பகுதிகளில்" ஒன்றாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன.
- மும்பை அதன் வடபாவ் எனும் உணவிற்காக உலகளவில் 5வது இடம் பிடித்துள்ளது.
- புது டெல்லி மற்றும் ஐதராபாத் ஆகியவை முறையே 45வது மற்றும் 50வது இடங்களைப் பெற்றுள்ளன.

- 71வது மற்றும் 75வது இடங்களைப் பெற்று கொல்கத்தா மற்றும் சென்னையும் இந்தப் பட்டியலில் இடம் பிடித்துள்ளன.
- பீட்சா என்ற உணவின் பிறப்பிடமாக விளங்கும் புகழ்பெற்ற இத்தாலியின் நேபிள்ஸ் நகரம் இந்தப் பட்டியலில் முதலிடத்தில் உள்ளது.




## QS அமைப்பின் உலகப் பல்கலைக்கழகத் தரவரிசை: நிலைத்தன்மை 2025

| 2025 Rank | 2024 Rank | Institution | Country |
|---|---|---|---|
| 1 | 1 | University of Toronto | Canada |
| 2 | 18 | ETH Zurich | Switzerland |
| 3 | 8 | Lund University | Sweden |
| 3 | 2 | University of California, Berkeley (UCB) | United States |
| 5 | 189 | UCL | United Kingdom |
| 5 | 4 | University of British Columbia | Canada |

- QS அமைப்பின் 2025 ஆம் ஆண்டிற்கான நிலைத் தன்மை தரவரிசையில் மொத்தம் 78 இந்தியப் பல்கலைக்கழகங்கள் இடம் பெற்றுள்ளன.
- இந்த ஆண்டு, இந்தத் தரவரிசையில் மொத்தம் 21 பல்கலைக் கழகங்கள் புதியதாக இடம் பெற்றுள்ளன.
- இந்தியாவில் இந்த ஆண்டு டெல்லியின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் (உலக அளவில் 171வது இடம்) முதல் இடத்தைப் பெற்றுள்ளது.
- கான்பூரின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் மற்றும் சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் ஆகியவை இந்தியாவில் முறையே நான்காவது மற்றும் ஐந்தாவது இடத்தையும், உலக அளவில் முறையே 245வது மற்றும் 277வது இடத்தையும் பெற்றன.

- உலகளவில், டொராண்டோ பல்கலைக்கழகமானது இந்த ஆண்டின் தரவரிசையில் முதல் இடத்தினைப் பெற்ற பல்கலைக்கழகம் ஆகும்.
- அதைத் தொடர்ந்து சுவிட்சர்லாந்து நாட்டின் ETH சூரிச் பல்கலைக்கழகமும் சுவீடனில் உள்ள லுண்ட் என்ற பல்கலைக்கழகமும் மற்றும் பெர்க்லியில் உள்ள கலிபோர்னியா பல்கலைக் கழகமும் (UCB) ஆகியவை கூட்டாக மூன்றாவது இடத்திலும் உள்ளன.
- ஆசியாவில், நான்கு நாடுகளைச் சேர்ந்த ஆறு பல்கலைக்கழகங்கள் இதன் முதல் 100 இடங்களில் இடம் பெற்றுள்ளன.

## நில வளம் குன்றல் பற்றிய ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கை

**LAND DEGRADATION IN NUMBERS**

60%: Remaining global forest cover — well below the safe boundary of 75%.

15 MN SQ KM: Degraded land area, more than the size of Antarctica, expanding by 1 mn sq km annually.

20%: Earth's land surface covered by the savanna, now under threat from cropland expansion and poorly planned afforestation.

46%: Global land area classified as drylands, home to a third of humanity

90%: Share of recent deforestation directly caused by agriculture.

20%: Decline in trees' and soil's CO2 absorption capacity since 2015 attributed to climate change

25%: Share of biodiversity found in soil

50%+: World's major rivers disrupted by dam construction

47%: Aquifers being depleted faster than they are replenished

*Source: UNCCD report*

- முந்தைய 30 ஆண்டு காலத்துடன் (1961-1990) ஒப்பிடும் போது, 2020 ஆம் ஆண்டு வரையிலான 30 ஆண்டுகளில் புவியில் உள்ள நிலத்தில் 77.6 சதவீதம் நிரந்தரமாக வறண்டு விட்டதாக கூறப்படுகிறது.
- வறண்ட நிலங்களின் பரப்பளவு சுமார் 4.3 மில்லியன் சதுர கிலோ மீட்டர் பரப்பில் விரிவடைந்துள்ள நிலையில். இது இந்தியாவை விட கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்கு பெரிய பகுதியாகும் என்பதோடு மட்டுமல்லாமல் இது பூமியில் உள்ள அனைத்து நிலங்களிலும் (அண்டார்டிகாவைத் தவிர்த்து) 40.6% பங்கினைக் கொண்டுள்ளது.
- தற்போது, 2.3 பில்லியன் மக்கள் வறண்ட நிலங்களில் வசிக்கின்றனர் என்ற நிலையில் இந்த எண்ணிக்கை 2100 ஆம் ஆண்டிற்குள் ஐந்து பில்லியனாக உயரும்.
- ஆசியாவில் 1.35 பில்லியன் வறண்ட நில பரப்புகளில் வசிக்கின்றனர் என்ற நிலையில் இது உலகளவிலான மொத்த எண்ணிக்கையில் பாதிக்கும் மேலான அளவாகும்.
- உலகளவில் வறண்ட நிலத்தில் வசிக்கும் மக்கள் தொகையின் எண்ணிக்கையின் அடிப்படையில் சீனா, இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகள் கூட்டாக சுமார் 50 சதவீதப் பங்கினைக் கொண்டுள்ளன.
- இதற்கிடையில், ஆப்பிரிக்கக் கண்டத்தின் மக்கள்தொகையில் சுமார் பாதி பேர் (620 மில்லியன் மக்கள்) வறண்ட பகுதிகளில் வாழ்கின்றனர்.

- 1990 மற்றும் 2015 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில், பெரும் வறட்சியின் காரணமாக ஆப்பிரிக்க நாடுகள் அவற்றின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) சுமார் 12 சதவீத அளவில் சரிவினை எதிர் கொண்டுள்ளன.
- ஆனால் ஆசிய நாடுகளில், அதே காலக் கட்டத்தில் சுமார் 2.7 சதவிகித GDP வீழ்ச்சிக்கு வறட்சியே காரணமாகக் கருதப்பட்டது.

## சுற்றுப் பயணம் மற்றும் சுற்றுலா மேம்பாட்டுக் குறியீடு 2024




- உலகப் பொருளாதார மன்றமானது (WEF) சுற்றுப் பயணம் மற்றும் சுற்றுலா மேம்பாட்டுக் குறியீட்டினை (TTDI) வெளியிட்டுள்ளது.
- இதில் 119 நாடுகளில் இந்தியா 39வது இடத்தில் உள்ளது.
- 2021 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட முந்தையக் குறியீட்டில், இந்தியா 54வது இடத்தில் இருந்தது.
- இருப்பினும், WEF மன்றத்தின் வழிமுறையில் ஒரு திருத்தம் செய்யப்பட்டதால், 2021 ஆம் ஆண்டில் இந்தியாவின் தரவரிசை 38 வது இடத்திற்கு மாற்றப்பட்டது.
- 2024 ஆம் ஆண்டிற்கான குறியீட்டில் முதல் 5 இடங்களில் உள்ள நாடுகள் அமெரிக்கா, ஸ்பெயின், ஜப்பான், பிரான்ஸ் மற்றும் ஆஸ்திரேலியா ஆகியனவாகும்.
- 2024 ஆம் ஆண்டில் இக்குறியீட்டின் முதல் 30 மதிப்பெண்களைப் பெற்ற நாடுகளுள், 19 நாடுகள் ஐரோப்பாவினையும், ஏழு நாடுகள் ஆசியா-பசிபிக் பிராந்தியத்தினையும், மூன்று நாடுகள் அமெரிக்காவினையும் மற்றும் ஒன்று (ஐக்கிய அரபு அமீரகம்) மத்திய கிழக்கு மற்றும் வட ஆப்பிரிக்கா பிராந்தியத்தினையும் (MENA) சேர்ந்தவையாகும்.

## ILO அமைப்பின் 4வது உலகளாவியப் புலம்பெயர்ந்தோர் மதிப்பீடுகள்

- சர்வதேசத் தொழிலாளர் அமைப்பின் (ILO) சமீபத்தியப் புலம்பெயர்ந்தோர் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.
- சர்வதேசப் புலம்பெயர்ந்தோர், உலகத் தொழிலாளர் சந்தையில் தொடர்ந்து முக்கியப் பங்கு வகிக்கின்றனர் என்பதோடு இது 2022 ஆம் ஆண்டில் பதிவான தொழிலாளர் வளத்தில் 4.7 சதவீதமாக உள்ளது.
- 2022 ஆம் ஆண்டில் 167.7 மில்லியன் புலம்பெயர்ந்தோர் தங்கள் இலக்கு நாடுகளின் தொழிலாளர் வளத்தின் ஒரு பகுதியாக இருந்தனர்.

- இவர்களில் சுமார் 102.7 மில்லியன் ஆண்கள் மற்றும் 64.9 மில்லியன் பெண்கள் ஆவர்.
- இது 2013 ஆம் ஆண்டிலிருந்து சுமார் 30 மில்லியனுக்கும் அதிகமான அதிகரிப்பைக் குறிப்பதோடு இது முக்கியமாக 2013-2019 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் பதிவானது.
- தொழிலாளர் வளத்தில் உள்ள பெரும்பான்மையான புலம்பெயர்ந்தோர் மிகவும் அதிக வருமானம் கொண்ட நாடுகளில் குவிந்துள்ளனர்.
- இது மொத்தத்தில் 68.4 சதவிகிதம்(114.7 மில்லியன் மக்கள்) ஆகும், அதைத் தொடர்ந்து 17.4 சதவிகிதம் பேர் (29.2 மில்லியன்) மேல்மட்ட நடுத்தர வருமானம் கொண்ட சில நாடுகளில் உள்ளனர்.
- 2022 ஆம் ஆண்டு தொழிலாளர் வளத்தில் பங்குபெற்ற சுமார் 167.7 மில்லியன் புலம் பெயர்ந்தவர்களில், 155.6 மில்லியன் பேர் வேலைவாய்ப்பு பெற்றனர், அதே நேரத்தில் 12.1 மில்லியன் பேர் வேலைவாய்ப்பில்லாமல் இருந்தனர்.
- புலம்பெயர்ந்தோர் (சுமார் 7.2 சதவீதம்), புலம் பெயராதவர்களுடன் (சுமார் 5.2 சதவீதம்) ஒப்பிடப் படும் போது அதிக வேலைவாய்ப்பின்மை விகிதத்தை எதிர்கொண்டனர்.
- புலம்பெயர்ந்தப் பெண்கள் (சுமார் 8.7 சதவீதம்) ஆண்களை விட (சுமார் 6.2 சதவீதம்) அதிக வேலைவாய்ப்பின்மை நிலைகளை எதிர்கொள்கின்றனர்.

## நிலக்கரி தேவை குறித்த அறிக்கை




- 2027 ஆம் ஆண்டு வரையிலான உலக நாடுகளின் நிலக்கரி தேவை, விநியோகம் மற்றும் வர்த்தக போக்குகளை இந்த அறிக்கை கணித்துள்ளது.
- சர்வதேச எரிசக்தி முகமை (IEA) ஆனது, உலகளாவிய நிலக்கரி நுகர்வு ஆனது 2024 ஆம் ஆண்டில் 8.7 பில்லியன் மெட்ரிக் டன்களை எட்டியுள்ளதாக தெரிவித்துள்ளது.
- தற்போது, சீனாவின் மின்சார உற்பத்தியில் சுமார் 60% நிலக்கரியிலிருந்து மட்டுமே மேற்கொள்ளப் படுகிறது.
- இந்தியா, சீனா, இந்தோனேசியா போன்ற வளர்ந்து வரும் நாடுகளில் நிலக்கரியின் தேவைகள் அதிகரித்து வருகின்றன.
- உலகளாவிய நிலக்கரி உற்பத்தியானது 2024 ஆம் ஆண்டில் இதுவரையில் இல்லாத அளவிற்கு சாதனை உச்சத்தை எட்டும் என்றும், பின்னர் இந்த நிலையானது 2027 ஆம் ஆண்டில் சீரடையும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

- உலக நிலக்கரி உற்பத்தி வளர்ச்சியில் இந்தியா மிகப்பெரியதொரு பங்களிப்பாளராக உள்ளதோடு 2023 ஆம் ஆண்டில் முதல் முறையாக இந்தியாவின் நிலக்கரி உற்பத்தி 1 பில்லியன் டன்களை தாண்டியது.
- இந்திய நிலக்கரி உற்பத்தியானது 2023 ஆம் ஆண்டில் 10% வளர்ச்சியடைந்தது, மேலும், 2024 ஆம் ஆண்டில் 8% உயரும் என எதிர்பார்க்கப் படுகிறது.

## நீரில் மூழ்கி உயிரிழப்பதைத் தடுத்தலின் நிலை குறித்த அறிக்கை 2024




- உலக சுகாதார அமைப்பானது, நீரில் மூழ்கி உயிரிழப்பதைத் தடுத்தலின் நிலை குறித்த தனது முதல் உலகளாவிய அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- உலகம் முழுவதும் 2021 ஆம் ஆண்டில் சுமார் மூன்று லட்சம் பேர் (ஒவ்வொரு மணி நேரத்திற்கும் 30 பேர்) நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.
- இத்தகைய உயிரிழப்புகளில் 92% ஆனது குறைவான மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளில் நிகழ்ந்துள்ளன.
- உலக சுகாதார அமைப்பின் தென்கிழக்கு ஆசியப் பிராந்தியத்தில் (இந்தியாவை உள் அடக்கிய பகுதி) 83,000 உயிரிழப்புகள் அல்லது உலகளாவிய எண்ணிக்கையில் 28% பதிவாகியுள்ளது.
- ஆனால் நீரில் மூழ்குவதால் ஏற்படும் உயிரிழப்புகள் 2000 ஆம் ஆண்டு முதல் 38% அளவு குறைந்துள்ளது.
- உலக சுகாதார அமைப்பின் ஐரோப்பியப் பிராந்தியத்தில் இந்த எண்ணிக்கையில் 68% சரிவானது பதிவாகியுள்ள அதே நேரத்தில் தென்கிழக்கு ஆசியப் பிராந்தியத்தில் 48% அளவிற்குச் சரிவானது பதிவாகியுள்ளது.
- நீரில் மூழ்கி உயிரிழப்பவர்களில் ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளின் உயிரிழப்பு பெரும் பங்கைக் கொண்டுள்ளது (24%) என்பதோடு, மேலும் 19% உயிரிழப்புகள் ஆனது ஐந்து முதல் 14 வயது வரையிலான குழந்தைகள் மத்தியிலும், 14% உயிரிழப்புகள் 15 முதல் 29 வயதுடைய இளைஞர்கள் மத்தியிலும் பதிவாகியுள்ளது.
- தற்போதையப் போக்குகள் இனி தொடர்ந்தால் 2050 ஆம் ஆண்டில், 7.2 மில்லியனுக்கும் அதிகமான அளவு மக்கள், முக்கியமாக குழந்தைகள், இந்த விபத்தின் காரணமாக உயிரிழக்க நேரிடும்.

# மாநிலச் செய்திகள்

## கொரகா பழங்குடியினர் - ஸ்மைல் நடவடிக்கை திட்டம்

- காசர்கோடு மற்றும் மஞ்சேஸ்வரம் ஆகிய தாலுக்காக்களில் உள்ள பட்டியலிடப்பட்டப் பழங்குடியினர் (ST) பிரிவான கொரகா என்ற சமூகத்தினருக்கு நிலப் பட்டா (பட்டா) வழங்குவதற்கான நடவடிக்கைகளை கேரளா தொடங்கியுள்ளது.
- இந்த முன்னெடுப்பானது ஸ்மைல் நடவடிக்கை என்ற திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப் படுகிறது.
- இந்த நடவடிக்கைக்கு, பழங்குடியினர் மேம்பாட்டுத் துறையின் தொகுப்பு நிதிப் பயன் படுத்தப் படுகிறது.
- இந்த மாவட்டத்தில் உள்ள கொரகா சமூகத்தின் மக்கள் தொகை 539 குடும்பங்களில் மொத்தமாக 1,706 பேர் ஆகும்.
- ஸ்மைல் நடவடிக்கையானது கிராமப் பஞ்சாயத்து அமைப்பு, பழங்குடியினர் நிர்வாக விரிவாக்க அமைப்புகள் மற்றும் கிராம அலுவலகங்களில் இருந்து மதிப்பீட்டாளர்கள் மற்றும் அதிகாரிகள், அத்துடன் அந்தச் சமூகத்தினைச் சேர்ந்த முதியவர்கள் மற்றும் ஊக்குவிப்பாளர்களை உள்ளடக்கியது.




## மாநிலங்களில் இணையவெளிக் குற்றங்களின் அதிகரிப்பு

- தேசியக் குற்றப் பதிவு வாரியம் ஆனது (NCRB) இந்தத் தகவல்களை வெளியிட்டுள்ளது.
- மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் இணைய வெளிக் குற்றங்கள் சுமார் 24.4 சதவீதம் அதிகரித்துள்ளது.
- இணையவெளிக் குற்றங்களின் கீழ் மொத்தம் 65,893 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு உள்ள நிலையில் இது 2021 ஆம் ஆண்டில் பதிவானதை விட (52,974 வழக்குகள்) 24.4 சதவீதம் அதிகரித்துள்ளது.

- ❖ பெங்களூரு மாநகரமானது, 22.6 சதவீத குற்றப் பத்திரிகை விகிதத்துடன் 2022 ஆம் ஆண்டில் 9940 வழக்குகள் பதிவு செய்யப் பட்டுள்ளதுடன் பெருநகரங்களில் (2020-2022) அதிக எண்ணிக்கையிலான இணைய வெளிக் குற்றங்கள் பதிவாகியுள்ள நகரமாகத் திகழ்கிறது.
- ❖ இதைத் தொடர்ந்து அதே காலக் கட்டத்தில் இது மும்பையில் சுமார் 4724 ஆகவும், ஐதராபாத்தில் 4436 ஆகவும், புது டெல்லியில் 685 ஆகவும் இணைய வெளிக் குற்றங்கள் பதிவாகியுள்ளன.

| Sl No | State Ut | 2020 | 2021 | 2022 | Mid Year Projected Population In Lakhs 2022 | Rate Of Cognizable Crimes Ipc 2022 | Chargesheeting Rate 2022 |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | Andhra Pradesh | 188997 | 173611 | 158547 | 530.3 | 298 | 56.5 |
| 2 | Arunachal Pradesh | 2744 | 2626 | 2308 | 15.5 | 148.8 | 47.2 |
| 3 | Assam | 111558 | 119883 | 59315 | 354.9 | 167.1 | 22.6 |
| 4 | Bihar | 194698 | 186006 | 211079 | 1256.3 | 168.1 | 75.4 |
| 5 | Chhattisgarh | 65216 | 70519 | 73822 | 299.5 | 246.5 | 60.4 |
| 6 | Goa | 3393 | 2099 | 2711 | 15.7 | 172.8 | 75.9 |
| 7 | Gujarat | 381849 | 273056 | 134902 | 709.3 | 189.8 | 89.9 |
| 8 | Haryana | 103276 | 112720 | 125435 | 299.7 | 418.6 | 43.3 |
| 9 | Himachal Pradesh | 14803 | 13041 | 13239 | 74.4 | 177.8 | 62.9 |
| 10 | Jharkhand | 51033 | 47584 | 48726 | 391.4 | 124.5 | 58.2 |

## மெ·காங் திருவிழா 2024

- ❖ "Echoes of Tradition" என்ற ஒரு கருத்துருவில் நடைபெற்ற 2024 ஆம் ஆண்டு மெ·காங் திருவிழாவானது, காரோ மக்களின் மிகவும் வளமானப் பாரம்பரியம் மற்றும் பழக்க வழக்கங்களைக் கொண்டாடியது.
- ❖ மேற்கு காரோ மலைக் குன்றுகளின் ஜெங்ஜால் என்னுமிடத்தில் அமைந்த பால்ஜெக் விமான நிலையத்தில் இந்த இரண்டு நாட்கள் அளவிலான நிகழ்ச்சி நடைபெற்றது.
- ❖ காரோ மலைக் குன்றுகள் மேகாலயாவில் உள்ள ஒரு மலைப் பகுதியாகும்.
- ❖ இது அதன் வளமான கலாச்சாரப் பாரம்பரியத்திற்காக அறியப்படுகிறது.
- ❖ இந்தப் பகுதி காரோ பழங்குடியினரின் ஒரு தாயகமாகும்.

## ELEMENT திட்டம்

- ❖ உலக வங்கியானது, அதன் நிலப்பரப்பு மற்றும் சுற்றுச்சூழல் அமைப்புகளின் மீதான மேலாண்மையினை மேம்படுத்துதல் (ELEMENT) திட்டத்தின் கீழ் 225.5 மில்லியன் டாலர் நிதியினை வழங்குவதற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- ❖ திரிபுரா மற்றும் நாகாலாந்தில் உள்ள 400க்கும் மேற்பட்ட கிராமங்களில் வன நிலப் பரப்புகளைச் சிறப்பாக மேலாண்மை செய்தல் மற்றும் வனம் சார்ந்த மதிப்புச் சங்கிலிகளை மேம்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இரு மாநிலங்களிலும் உள்ள வன நிலப்பரப்புகளை மிகவும் சிறப்பாக மேலாண்மை செய்வதற்கும், வனம் சார் மதிப்பு சங்கிலியை மேம்படுத்தவும் 700,000க்கும் மேற்பட்ட மக்களுக்கு இந்த திட்டம் உதவும்.
- இது தனியார் துறையுடன் இணைந்து அகர் மரம், மூங்கில் மற்றும் தேன் போன்ற காடுகளிலிருந்து கிடைக்கப் பெறும் பல்வேறு பொருட்களின் மதிப்புச் சங்கிலிகளை மேம்படுத்துவதன் மூலம் வனங்களைச் சார்ந்திருக்கும் பல்வேறு சமூகங்களுக்குப் பொருளாதார வாய்ப்புகளை வழங்கும்.




## மாட்டிறைச்சி உண்பதற்குத் தடை – அசாம்

- அசாம் மாநில அரசானது, உணவகங்கள், உணவு விடுதிகள் மற்றும் பொது இடங்களில் மாட்டிறைச்சி பரிமாறுவதற்கும் சாப்பிடுவதற்கும் மாநிலம் முழுவதும் தடை விதித்து உள்ளது.
- அசாம் மாநிலத்தில் மாட்டிறைச்சி உண்பது சட்டவிரோதமானது அல்ல.
- ஆனால் 2021 ஆம் ஆண்டின் அசாம் கால்நடைப் பாதுகாப்புச் சட்டம் ஆனது, அந்த மாநிலத்தில் அனைத்துக் கால்நடைகளின் இடமாற்றம் மற்றும் படுகொலை மற்றும் மாட்டிறைச்சி மற்றும் மாட்டிறைச்சிப் பொருட்களின் விற்பனை ஆகியவற்றினை ஒழுங்குபடுத்துகிறது.
- இந்துக்கள், சமணர்கள் மற்றும் சீக்கியர்கள் ஆகியோர் பெரும்பான்மையாக உள்ள பகுதிகளிலும், கோவில் அல்லது சத்திரத்தின் (வைணவ மடாலயம்) ஐந்து கிலோமீட்டர் சுற்றளவிலும் கால்நடைகளைக் கொல்வதையும், மாட்டிறைச்சி விற்பனை செய்வதை தடுப்பதையும் இந்தச் சட்டம் தடை செய்கிறது.
- இம்மசோதாவின் விதிகளை மீறினால், மூன்று முதல் எட்டு ஆண்டுகள் வரை சிறைத் தண்டனையும் 3 லட்சம் முதல் 5 லட்சம் ரூபாய் வரையிலான அபராதமும் விதிக்கப் படும்.

## டாட்டோ-I நீர் மின் நிலையம்




- ❖ அருணாச்சலப் பிரதேசத்தில் அமைக்கப்பட உள்ள டாட்டோ-I புனல் மின்னாற்றல் உற்பத்தி நிலையத்திற்காக (HEP) சுமார் 1750 கோடி ரூபாய் முதலீடு செய்ய மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- ❖ இந்த நிலையம் ஆனது ஷி யோமி மாவட்டத்தில் அமைக்கப்பட உள்ளதோடு மேலும், இதன் பணிகள் 50 மாதங்களுக்குள் முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- ❖ 186 MW (3 x 62 MW) நிறுவப்பட்டத் திறனுடன், டாட்டோ-I HEP நிலையம் ஆண்டுதோறும் 802 மில்லியன் அலகு (MU) மின்சாரத்தை உற்பத்தி செய்யும்.

## நாகாலாந்தின் 25வது இருவாட்சி திருவிழா

- ❖ 25வது இருவாட்சி திருவிழாவானது கிசாமாவில் உள்ள நாகா பாரம்பரியக் கிராமத்தில் நடைபெற்றது.
- ❖ இந்த ஆண்டு, இது 62வது நாகாலாந்து மாநில தினக் கொண்டாட்டங்களுடன் ஒன்றி வந்தது.
- ❖ இந்தத் திருவிழா நாகாலாந்தின் 17 முக்கியப் பழங்குடியினரை ஒன்றிணைப்பதோடு ஒவ்வொன்றும் அவர்களின் தனித்துவமான பழக்கவழக்கங்கள், பாரம்பரிய உடைகள் மற்றும் துடிப்பு மிகு நடனங்களை வெளிப்படுத்துகின்றன.
- ❖ ஜப்பான், வேல்ஸ், பெரு மற்றும் பல்கேரியா ஆகிய நாடுகள் இந்தப் பெரு நிகழ்வில் பங்கேற்றன.
- ❖ இந்த நிகழ்வு ஆனது 1999 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் ஆண்டுதோறும் நடத்தப் படுகிறது.

## அரசு இணையச் சந்தை 2024



FOCUS ON TRANSPARENCY

- No conditions contrary to **GeM** rules are permitted
- Price discovery bids, offline contracts, and unit quantity-based **GeM bids** are strictly prohibited
- Requesting samples during bid evaluation is prohibited
- To encourage micro & small enterprises, tender eligibility (turnover and past performance) criteria have been relaxed
- All depts are required to procure at least **25%** of their annual purchase from **MSEs**
- Penalty will be imposed if service providers fail to pay outsourced personnel in time

Minimum wage, **EPF**, and **ESI** benefits to outsourced employees is mandatory

- Service providers can't arbitrarily remove or replace outsourced employees after hiring
- In cases of collusion or manipulation in GeM bids, there is provision of sending bids to GeM team for probe
- Compliance-related complaints can be sent to **gemcellup@gmail.com** and **gemcellgoup@gmail.com**
- Complaints are resolved by high-level committee chaired by **UP chief secy**, with **additional secys/principal secys** as members



- ❖ மத்திய அரசின் இணையச் சந்தையுடனான (GeM) தனது கொள்முதல் நடைமுறையை முழுமையாக ஒருங்கிணைத்த நாட்டின் முதல் மாநிலமாக உத்தரப் பிரதேசம் மாறி உள்ளது.
- ❖ இந்த ஒருங்கிணைப்பு ஆனது, அனைத்துச் சேவை வழங்குநர்களும் மத்திய அரசின் விதிமுறைகளைக் கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது.
- ❖ ஒரு நிறுவனமானது GeM நெறிமுறைகளைப் பின்பற்றுவதில் ஏதேனும் ஒரு விலகல் ஏற்பட்டால், உத்தரப் பிரதேச அரசாங்கத்துடன் வணிகம் நடத்துவதில் இருந்து தகுதி நீக்கம் செய்யப்படும்.

## குழந்தை திருமணத்திற்கு எதிரான பிர்ஹோர் பழங்குடியினர்

- ❖ ஜார்க்கண்ட் மாநிலத்தின் கிரிதி என்ற பகுதியில் உள்ள எளிதில் பாதிக்கப்படக் பழங்குடியினர் குழுவான பிர்ஹோர் பழங்குடியினர் முதன்முறையாக குழந்தைத் திருமணத்திற்கு எதிரான இயக்கத்தில் இணைந்துள்ளனர்.
- ❖ பிர்ஹோர் இன மக்கள் காடுகளைச் சார்ந்துள்ள, பகுதியளவு நாடோடி வாழ்க்கை முறையினைச் சார்ந்த, பொருளாதார ரீதியாகவும் மற்றும் சமூக ரீதியாகவும் மற்ற இனங்களை விட மிகவும் பின்தங்கி உள்ள பழங்குடியினச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர்.
- ❖ குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு அமைப்பான குழந்தைகளுக்கான உரிமைகள் கூட்டணி (JRC) எனப்படுகின்ற ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனமானது, இதற்கான நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கிறது.

## பஞ்சாப் விளையாட்டுச் சட்டம் 2024

- ❖ பஞ்சாப் மாநிலத்தில் விளையாட்டுப் போட்டிகளை ஊக்குவிப்பதற்காக 2024 ஆம் ஆண்டு பஞ்சாப் மாநில (விளையாட்டு மேம்பாடு மற்றும் ஊக்குவிப்பு) சட்டம் என்ற ஒரு புதியச் சட்டத்தினை இயற்றுவதற்கான விளையாட்டுத் துறையின் திட்டத்திற்கு பஞ்சாப் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- ❖ இந்தியாவில் இத்தகையதொரு சட்டத்தினை இயற்ற உள்ள முதல் மாநிலமாக பஞ்சாப் விளங்கும்.
- ❖ விளையாட்டுகளுக்கான சிறந்த நடைமுறைகளைப் பின்பற்றுவதும், விளையாட்டு வீரர்களை நியாயமான முறையில் தேர்வு செய்வதை உறுதி செய்வதும் இதன் முக்கிய நோக்கமாக உள்ளது.
- ❖ ஒரு மாவட்டம் அல்லது மாநில அளவில் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கும் விளையாட்டு வீரர்களின் அணியை ஐந்து பேர் கொண்ட குழு தேர்ந்தெடுக்கும்.
- ❖ ஒரு மாவட்ட அளவில், ஐந்து பேர் கொண்ட பாலியல் துன்புறுத்தல் விவகாரக் குழுவும் மாவட்ட ஆட்சியரால் அமைக்கப்படும்.

## புனிதத் தோப்புகளுக்குச் சட்டப் பாதுகாப்பு – இராஜஸ்தான்




- ❖ அனைத்து மாவட்டங்களிலும் உள்ள புனிதத் தோப்புகள் (ஓரன்கள்) கணக்கெடுப்பு மற்றும் அறிவிப்பை நிறைவு செய்யுமாறு ராஜஸ்தான் மாநிலத்திற்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
- ❖ இராஜஸ்தானின் வனத் துறைக்கு, ஒவ்வொரு புனிதத் தோப்புக்கும் விரிவான நில சார் மற்றும் செயற்கைக்கோள் வரைபடத்தினை மேற்கொள்ளுமாறு உத்தரவிடப்பட்டது.
- ❖ இதில் ஓரன்கள், தேவ்-வான்கள், ருந்துகள் அல்லது அந்தந்தப் பகுதியில் அவை அறியப் படும் பெயரில் உள்ள அனைத்துத் தோப்புகள் அடங்கும்.
- ❖ 1972 ஆம் ஆண்டு வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ், குறிப்பாக 36-C பிரிவு மூலம் ஓரன் பகுதிகளுக்குப் பாதுகாப்பு வழங்க வேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் பரிந்துரைத்துள்ளது.
- ❖ இந்தப் பிரிவு ஆனது 'சமூக இருப்புக்கள்' என்ற அறிவிப்பினை வழங்க அனுமதிக்கிறது.

## கோவா சட்டசபையின் பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் இட ஒதுக்கீடு மசோதா 2024

- கோவாவில் பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் மக்கள்தொகையைக் கண்டறிவதற்காக மக்கள்தொகை கணக்கெடுப்பு ஆணையருக்கு அதிகாரம் அளிப்பதை இந்த மசோதா நோக்கமாகக் கொண்டுள்ளது.
- தேர்தல் ஆணையம் ஆனது மக்கள் தொகைக் கணக்கெடுப்புத் தரவைப் பயன்படுத்தி சட்டமன்ற உறுப்பினர் இடங்களை ஒதுக்கவும், குறிப்பிட்ட இடங்களைப் பட்டியலிடப் பட்ட பழங்குடியினர்களுக்கு ஒதுக்கவும் முடிவு மேற்கொள்ளும்.
- 2001 ஆம் ஆண்டில் 566 ஆக இருந்த கோவாவின் பட்டியலிடப்பட்டப் பழங்குடியினர் மக்கள் தொகை ஆனது 2011 ஆம் ஆண்டில் 149,275 ஆக உயர்ந்துள்ளது.
- 2003 ஆம் ஆண்டில் குன்பி, கௌடா மற்றும் வேலிப் சமூகங்கள் ST பட்டியலில் சேர்க்கப் பட்டதன் விளைவாக இந்த எண்ணிக்கை அதிகரிப்பு ஏற்பட்டது.
- இந்த மக்கள்தொகை மாற்றத்திற்குப் பிரதிநிதித்துவத்தின் மறு மதிப்பீடு அவசியம் ஆகும்.




## ஜார்க்கண்ட் - தனியார் துறை வேலை ஒதுக்கீடு

- ஜார்க்கண்ட் மாநிலத்தில் உள்ள தனியார் நிறுவனங்களில் வேலை வாய்ப்புகளில் உள்ளூர் மக்களுக்கு சுமார் 75% இடஒதுக்கீட்டை அமல்படுத்துவதற்கு ஜார்க்கண்ட் உயர்நீதிமன்றம் தடை விதித்துள்ளது.
- தனியார் துறை நிறுவனங்களில் 40,000 ரூபாய் வரை சம்பளத்துடன் கூடிய 75% பணியிடங்களில் உள்ளூர் ஆட்களை நியமிக்க வேண்டும் என்ற சட்டம் 2021 ஆம் ஆண்டு முதல் மாநிலத்தில் அமலில் உள்ளது.
- முன்னதாக ஹரியானா மாநில அரசும் இதே போன்ற ஒரு சட்டத்தை அமல்படுத்தியது, ஆனால் இது பஞ்சாப்-ஹரியானா உயர் நீதிமன்றத்தினால் ரத்து செய்யப்பட்டது.




## போர்தோய்பம்-பில்முக் பறவைகள் சரணாலயம்

- வடகிழக்கு அசாமில் உள்ள ஒரு முக்கிய ஈரநிலத்தில் காணப் படுகின்ற பறவை இனங்களின் எண்ணிக்கை கடந்த 27 ஆண்டுகளில் சுமார் 72% குறைந்துள்ளது.
- 1997 ஆம் ஆண்டில் மொத்தம் 167 பறவை இனங்கள் அங்கு பதிவு செய்யப்பட்டன.
- ஆனால் அந்தச் சரணாலயத்தில் மேற்கொள்ளப்பட்ட 18 மாத கால ஆய்வின் போது 16 வகைப்பாடுகளின் கீழ் 47 இனங்கள் மற்றும் 29 குடும்பங்கள் மட்டுமே கண்டறியப் பட்டன.
- 1997 ஆம் ஆண்டு முதல் இங்கு காணப்படும் பறவை இனங்களின் எண்ணிக்கையில் பதிவான வீழ்ச்சி 71.85% ஆக உள்ளது.
- 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் போது 41 குடும்பங்களைச் சேர்ந்த 133 வகையான பறவை இனங்கள் இந்தச் சரணாலயத்தில் பதிவு செய்யப்பட்டன.
- 133 இனங்களில், 86 பறவை இனங்கள் இங்கு நிரந்தரமாக வசிக்கின்றன என்பதோடு, 23 இனங்கள் வலசை போகும் பறவை இனங்கள் மற்றும் 24 இனங்கள் உள்நாட்டிலேயே வலசை போகும் பறவை இனங்களாக உள்ளன.

- 17 உள்நாட்டுப் பறவை இனங்கள் உட்பட சுமார் 950 வகையான பறவை இனங்களுடன் இந்தியாவில் பல்லுயிர்ப்பெருக்கம் நிறைந்த மாநிலங்களில் அசாம் மாநிலமும் ஒன்று ஆகும்.
- இந்த மாநிலத்தில் 55 முக்கியமான பறவைகள் மற்றும் பல்லுயிர்ப் பெருக்கப் பகுதிகள் உள்ளன என்பதோடு அவை பல்வேறு பறவை இனங்களின் ஒரு பல்லுயிர்ப் பெருக்க மையங்களாக விளங்குகின்றன.




## ஐந்து மாநிலங்களுக்கு புதிய ஆளுநர்கள்




- இந்தியக் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அவர்கள், இரண்டு புதிய ஆளுநர்களை நியமித்துள்ளார், மேலும் மூன்று பேரை இடம் மாற்றி, ஐந்து மாநிலங்களின் ஆளுநர் பதவிகளை மறுசீரமைத்துள்ளார்.
- மணிப்பூர் மாநிலத்தின் ஆளுநராக உள்ள அனுசுயா உய்கேக்கு பதிலாக அஜய் குமார் பல்லா நியமிக்கப்பட்டுள்ளார்.

- கேரள ஆளுநராக இருந்த ஆரிப் முகமது கான், பீகாருக்குப் பணியிட மாற்றம் செய்யப் பட்டுள்ளார்.
- மிசோரம் மாநில ஆளுநராக இருந்த ஹரி பாபு கம்பம்பட்டி ஒடிசா மாநிலத்திற்கு மாற்றப் பட்டுள்ளார்.
- ஜெனரல் (டாக்டர்) விஜய் குமார் சிங், தற்போது மிசோரம் மாநில ஆளுநராகப் பணியாற்ற உள்ளார்.
- பீகார் மாநிலத்தின் ஆளுநராக இருந்த இராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் கேரள மாநிலத்திற்கு மாற்றப்பட்டுள்ளார்.

## ஓங்கில்களுக்கான அடையாளக் குறியிடல் முன்னெடுப்பு – அசாம்

- வனவிலங்கு வளங்காவலர்கள் கொண்ட ஒரு குழுவானது, முதன்முறையாக பார்வைத் திறனற்ற கங்கை நதி ஓங்கில்களுக்கு அடையாளக் குறியீடு பொருத்தியுள்ளது.
- இது அசாம் மாநில வனத்துறை மற்றும் ஆரண்யக் எனப்படும் பல்லுயிர்ப்பெருக்க வளங்காப்புக் குழுவுடன் இணைந்து இந்திய வனவிலங்கு நிறுவனத்தினால் (WII) மேற் கொள்ளப்பட்டது.
- இது ஓங்கில்களின் பருவகால மற்றும் இடம்பெயர்வு முறைகள், வரம்பு, பரவல் மற்றும் வாழ்விடப் பயன்பாடு ஆகியவற்றை மிகவும் நன்குப் புரிந்து கொள்வதற்கு உதவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தியாவில் சுமார் 90% ஓங்கில் இனங்கள் உள்ளன என்பதோடு இவை வரலாற்று ரீதியாக கங்கை – பிரம்மபுத்திரா - மேக்னா மற்றும் கர்ணபுலி நதிப் படுகைகளில் காணப் படுகின்றன.

## மத்தியப் பிரதேச அரசின் புலிகள் இடமாற்ற நடவடிக்கை

- மத்தியப் பிரதேச மாநில அரசானது, விலங்கு இடமாற்றத் திட்டத்தின் கீழ் 14 புலிகளை இராஜஸ்தான், ஒடிசா மற்றும் சத்தீஸ்கர் ஆகிய மாநிலங்களுக்கு இடமாற்றம் செய்ய உள்ளது.
- இதில் நான்கு புலிகள் ராஜஸ்தானுக்கும், இரண்டு புலிகள் ஒடிசாவிற்கும், எட்டு புலிகள் சத்தீஸ்கருக்கும் இடமாற்றம் செய்யப்படும்.
- மத்தியப் பிரதேசத்தின் பந்தவ்கர், பன்னா, கன்ஹா மற்றும் பென்ச் ஆகிய இடங்களில் உள்ள புலிகள் வளங்காப்பகங்களில் இருந்து இவை இடம் மாற்றப்பட உள்ளன.
- முன்னதாக, மத்தியப் பிரதேசம் இரண்டு வங்காளப் புலிகளை (ஓர் ஆண் மற்றும் ஒரு பெண் புலிகள்) பந்தவ்கர் புலிகள் வளங்காப்பகத்திலிருந்து (BTR) குஜராத்திற்கு இடம் மாற்றியது.
- நம் நாடு முழுவதும் உள்ள 3,800 பெரும் பூனை இனங்களில் 785க்கும் அதிகமானவை மத்தியப் பிரதேசத்தில் உள்ளன.




## க்ரீடா செயலி - முதல் விளையாட்டுத் துறை சார் செயலி




- ஆந்திரப் பிரதேசத்தின் விளையாட்டு ஆணையம் (SAAP) ஆனது, இந்தியாவில் முதன் முறையாக 'க்ரீடா செயலி' எனப்படும் இந்த வகையிலான கைபேசிச் செயலியினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இது மாநிலம் முழுவதும் விளையாட்டுத் துறை மேலாண்மையை நவீனப்படுத்தவும், சீரமைக்கவும் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- விரிவான விளையாட்டுத் தரவை நிர்வகிப்பதற்கான ஓர் ஒருங்கிணைந்தத் தளத்தை வழங்குவதோடு, விளையாட்டுத் துறை சார்ந்த இட ஒதுக்கீட்டுச் சான்றிதழ்களை வழங்குவதில் உள்ள முறைகேடுகளை அகற்றச் செய்வதை இந்தச் செயலியானது ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது விளையாட்டு வீரர்களின் பதிவு, செயல்திறன் கண்காணிப்பு, போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் மற்றும் உபகரணங்கள் விநியோகம் ஆகியவற்றில் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்கிறது.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## அர்ஜுன் வாஜ்பாய்

- அர்ஜுன் வாஜ்பாய், சுமார் 8,000 மீட்டர் உயரமுள்ள சிகரங்களில் 8வதாக ஷிஷாபங்மா மலையில் (திபெத்தில் உள்ளது) ஏறி சாதனை ஒன்றைப் படைத்துள்ளார்.
- இந்த மலையில் ஏறிய முதல் இந்தியர் என்ற பெருமையை இது குறிக்கிறது.
- மலை அடிவார முகாமில் இருந்து 72 மணி நேரத்திற்குள் மலை உச்சியினை வேகமாக அடைந்த சாதனையும் இதில் அடங்கும்.
- எவரெஸ்ட் (2010) மற்றும் லோட்சே (2011) ஆகிய சிகரத்தில் ஏறிய இளம் நபர் என்ற ஒரு பெருமையினையும் இவர் கொண்டுள்ளார்.
- அவர் தற்போது பூமியில் உள்ள 14 உயரமான மலைகளில் 8 மலைகளின் உச்சியை அடைந்துள்ளார்.
- 8,000 மீட்டர் உயரம் கொண்ட எட்டு சிகரங்களில் ஏறிய முதல் இந்தியர் என்ற ஒரு பெருமையினையும் இவர் கொண்டுள்ளார்.




## இந்திரா காந்தி அமைதி பரிசு 2024

- சிலி நாட்டின் முன்னாள் அதிபர் மிச்செல் பேச்லெட் 2024 ஆம் ஆண்டிற்கான இந்திரா காந்தி அமைதி, ஆயுத நீக்கம் மற்றும் மேம்பாட்டிற்கான பரிசைப் பெற உள்ளார்.
- மனித உரிமைகள், அமைதி மற்றும் சமத்துவம் ஆகியவற்றில் இவரின் பெரும் பங்களிப்புகளை இந்தப் பரிசு கௌரவிக்கிறது.
- இவர் சிலி நாட்டின் அதிபராக 2006 முதல் 2010 ஆம் ஆண்டு வரையிலும், மீண்டும் 2014 முதல் 2018 ஆம் ஆண்டு வரையிலும் பணியாற்றினார்.
- அவர் 2010 முதல் 2013 ஆம் ஆண்டு வரையில் ஐக்கிய நாடுகள் சபையின் பெண்கள் அமைப்பிற்குத் தலைமை தாங்கினார் என்பதோடு பின்னர் 2018 முதல் 2022 ஆம் ஆண்டு வரையில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான உயர் ஆணையராகவும் பணியாற்றினார்.
- சிலி நாட்டுடனான இந்தியாவின் உறவுகளுக்கு அவர் ஆற்றியப் பங்களிப்பையும் இந்த விருது அங்கீகரித்துள்ளது.

- 1986 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்தப் பரிசானது, சர்வதேச அமைதி மற்றும் சமூக மேம்பாட்டினை ஊக்குவிக்கும் தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு என்று ஆண்டு தோறும் வழங்கப்படுகிறது.

## உலக கடல்சார் தொழில்நுட்ப மாநாடு

- உலக கடல்சார் தொழில்நுட்ப மாநாட்டின் கீழ் 3 ஆண்டுகளுக்கு ஒருமுறையில் WMTC நடத்தப் படுகிறது.
- இதன் கடல் சார் பொறியியல் நிறுவனத்தின் (இந்தியா) சென்னை கிளையானது இந்த ஆண்டு WMTC நிகழ்ச்சியினை நடத்தியது.
- WMTC ஆனது 17 நாடுகளைச் சேர்ந்த 21-உறுப்பினர் அமைப்புகளைக் கொண்டுள்ள நிலையில் இது கடல்சார் தொழில்நுட்பத் துறை மற்றும் அதனுடன் தொடர்புடைய சில துறைகளில் உள்ள நிபுணர்களை ஒன்றாக இணைக்கிறது.

## ஐக்கிய நாடுகள் சபையின் புவி வாகையர் 2024

- புவி வாகையர் விருது என்பது பொது மற்றும் தனியார் துறைகள், குடிமைச் சமூகம் மற்றும் கல்வித்துறையைச் சேர்ந்த முன்னோடிகளை அங்கீகரித்து, ஐக்கிய நாடுகள் சபையினால் வழங்கப்படும் மிக உயரியச் சுற்றுச்சூழல் கௌரவ விருதாகும்.
- இது 2005 ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் வழங்கப்படுகிறதோடு இன்று வரையில் 122 பேருக்கு இந்த விருது வழங்கப்படுகிறது.
- இந்த ஆண்டு இந்த விருதினைப் வெற்றியாளர்கள்
    - சோனியா குஜாஜாரா - பிரேசிலின் பழங்குடி மக்கள் அமைச்சர்.
    - ஆமி போவர்ஸ் கார்டலிஸ் - பழங்குடியின உரிமை வழக்கறிஞர்.
    - கேப்ரியல் பான் - ரோமானியச் சுற்றுச்சூழல் பாதுகாவலர்
    - மாதவ் காட்கில் - இந்திய சூழலியலாளர்
    - எகிப்து நாட்டின் SEKEM முன்னெடுப்பு.

## தேசியப் பஞ்சாயத்து விருதுகள் 2024

- மாநிலத்தின் ஆறு பஞ்சாயத்து அமைப்புகளுக்கு அவற்றின் அடிமட்டத் தளத்திலான மேம்பாட்டுப் பணிக்காக 2024 ஆம் ஆண்டு தேசியப் பஞ்சாயத்து விருதுகள் வழங்கப் பட்டுள்ளது.
- இந்த விருதுகள் ஆனது, பஞ்சாயத்து ராஜ் அமைச்சகத்தினால் பல பிரிவுகளின் கீழ் வழங்கப்பட்டன.
- தீன் தயாள் உபாத்யாய் பஞ்சாயத்து சதத் விகாஸ் புரஸ்கார் (DDUPSVP) பிரிவில் தமிழ்நாடு 2 விருதுகளை வென்றுள்ளது.

| Sl.No. | State/UT | Category-wise awardees | | | | | | | Grand Total |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | Deen Dayal Upadhyay Panchayat Satat Vikas Puraskar | Nanaji Deshmukh Sarvottam Panchayat Satat Vikas Puraskar | | | Gram Urja Swaraj Vishesh Panchayat Puraskar | Carbon Neutral Vishesh Panchayat Puraskar | Panchayat Kshamta Nirmaan Sarvottam Sansthan Puraskar | |
| | | Gram Panchayats | Gram Panchayats | Block Panchayats | District Panchayats | Gram Panchayats | Gram Panchayats | Institutions | |
| 1 | Andhra Pradesh | 4 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 4 |
| 2 | Assam | 1 | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 2 |
| 3 | Bihar | 3 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 3 |
| 4 | Chhattisgarh | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 1 |
| 5 | Gujarat | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 1 |
| 6 | Himachal Pradesh | 2 | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 3 |
| 7 | Karnataka | 1 | 0 | 0 | 1 | 0 | 0 | 0 | 2 |
| 8 | Kerala | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 1 | 2 |
| 9 | Ladakh | 2 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 2 |
| 10 | Maharashtra | 1 | 1 | 1 | 0 | 1 | 1 | 1 | 6 |
| 11 | Odisha | 2 | 0 | 1 | 1 | 1 | 1 | 1 | 7 |
| 12 | Tamil Nadu | 2 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 2 |
| 13 | Telangana | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 1 |
| 14 | Tripura | 4 | 0 | 1 | 1 | 1 | 0 | 0 | 7 |
| 15 | Uttar Pradesh | 1 | 0 | 0 | 0 | 0 | 1 | 0 | 2 |
| | Total | 27 | 3 | 3 | 3 | 3 | 3 | 3 | 45 |

## கர்மவீர் சக்ரா விருதுகள் 2024-25

- ❖ இது ஐக்கிய நாடுகள் சபையுடன் இணைந்து தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் (iCONGO) சர்வதேச கூட்டமைப்பினால் வழங்கப்படும் ஒரு உலகளாவிய குடிமை விருது ஆகும்.
- ❖ T-Hub என்ற நிறுவனத்தின் அறிவுரையாளர் மற்றும் நிறுவனருமான ருமானா சின்ஹா சேஹ்கல் 2024-2025 ஆம் ஆண்டு கர்மவீர் சக்ரா பிளாட்டினம் பதக்கத்தைப் பெற்று உள்ளார்.
- ❖ ஸ்விட்செகோ என்ற நிறுவனத்தின் நிறுவனர் அக்ஷய் தேஷ்பாண்டே கர்மவீர் சக்ரா வெண்கலப் பதக்கத்தினைப் பெற்றுள்ளார்.
- ❖ Goodebag என்ற நிறுவனத்தின் நிறுவனர், நிலையான கழிவு மேலாண்மையில் அந்த நிறுவனத்தின் முன்னோடி மிக்க முயற்சிகளுக்காக இந்த விருதினைப் பெற்றுள்ளார்.

## குகேஷ் - 18வது உலக சதுரங்க வாகையர்

- ❖ சிங்கப்பூரில் நடைபெற்ற உலக சதுரங்கச் சாம்பியன்ஷிப் (வாகையர்) போட்டியில் இந்தியாவைச் சேர்ந்த D.குகேஷ் (சென்னை), நடப்புச் சாம்பியனானச் சீனாவினைச் சேர்ந்த டிங் லிரனைத் தோற்கடித்தார்.
- ❖ இந்த வெற்றியின் மூலம் இவர் தனது 18வது வயதில் உலக சாம்பியன் பட்டம் பெற்ற இளம் சதுரங்க வீரர் என்ற பெருமையினைப் பெற்றுள்ளார்.

- குகேஷுக்கு முன்னதாக, ரஷ்ய ஜாம்பவான் கேரி காஸ்பரோவ் 1985 ஆம் ஆண்டில் தனது 22 வயதில் உலக சாம்பியன் பட்டம் பெற்ற இளம் வீரர் என்ற பெருமையினைப் பெற்றிருந்தார்.
- 2007 ஆம் ஆண்டில் இந்தப் பட்டத்தினை வென்று, நான்கு முறை அந்தப் பட்டத்தினை வென்று 2013 ஆம் ஆண்டு வரை அந்தப் பட்டத்தினை வென்றவர் என்ற பெருமைக்கு உரியவராக இருந்த இந்தியாவைச் சேர்ந்த முதல் கிராண்ட் மாஸ்டர் மற்றும் உலக சாம்பியன் விஸ்வநாதன் ஆனந்த் ஆவார்.

## E.V.K.S. இளங்கோவன்




- தமிழ்நாடு காங்கிரஸ் குழுவின் முன்னாள் தலைவரும், ஈரோடு (கிழக்கு) தொகுதியின் சட்டமன்ற உறுப்பினருமான E.V.K.S. இளங்கோவன் காலமானார்.
- 1984 ஆம் ஆண்டில் சத்திய மங்கலம் தொகுதியிலும், 2023 ஆம் ஆண்டில் நடைபெற்ற இடைத்தேர்தலில் ஈரோடு கிழக்குத் தொகுதியிலும் இவர் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- 2004 ஆம் ஆண்டில், தான் பங்கெடுத்த முதல் மக்களவைத் தேர்தலில் கோபிச்செட்டிப் பாளையம் தொகுதியில் அவர் வெற்றி பெற்றார்.
- இவர் மத்தியப் பெட்ரோலியம், இயற்கை எரிவாயு மற்றும் வணிகத்துறையின் இணை அமைச்சராகப் பணியாற்றினார்.
- அவர் 2014 ஆம் ஆண்டு அக்டோபர் 31 ஆம் தேதியன்று தமிழ்நாடு காங்கிரஸ் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டார்.

## உஸ்தாத் ஜாகிர் உசேன்

- தனது தலைமுறையின் தலைசிறந்த தபேலா கலைஞர் ஜாகீர் உசேன் (மகாராஷ்டிரா) சமீபத்தில் காலமானார்.
- இவர் தனது வாழ்க்கையில் நான்கு கிராமி விருதுகளைப் பெற்றுள்ளார்.
- அவர் 1988 ஆம் ஆண்டில் பத்மஸ்ரீ, 2002 ஆம் ஆண்டில் பத்ம பூஷன் மற்றும் 2023 ஆம் ஆண்டில் பத்ம விபூஷன் ஆகிய விருதுகளையும் பெற்றுள்ளார்.




## துளசி கௌடா - காடுகளின் கலைக்களஞ்சியம்




- கர்நாடகாவைச் சேர்ந்த சுற்றுச்சூழல் ஆர்வலரும் பத்மஸ்ரீ விருது பெற்றவருமான துளசி கௌடா காலமானார்.

❖ அவர் ஹலக்கி பழங்குடியின சமூகத்தினரால் "மரங்களின் தெய்வம்" என்று போற்றப் படுகிறார்.

❖ அவர் 'காடுகளின் கலைக்களஞ்சியம்' என்றும் அழைக்கப்படுகிறார்.

❖ கௌடா கர்நாடகா முழுவதும் 1 லட்சம் மரங்களை நட்டு வளர்த்தப் பெருமையினை கொண்டுள்ளார்.

❖ அவர் ஒரு சமூக வளங்காப்பகம், ஐந்து புலிகள் வளங்காப்பகங்கள், 15 பாதுகாப்புச் சரணாலயங்கள் மற்றும் 30 வனவிலங்குச் சரணாலயங்கள் உள்ளிட்டப் பலவற்றினை உருவாக்குவதில் மிக முக்கியப் பங்காற்றினார்.

## ஃபோர்ப்ஸ் 2024 - 3 இந்தியப் பெண்கள்

❖ ஃபோர்ப்ஸ் இதழானது, தனது 21வது வருடாந்திர உலகின் 100 மிக அதிகாரம் வாய்ந்த பெண்களின் பட்டியலை வெளியிட்டுள்ளது.

❖ இந்த உலகளாவிய அளவில் மாற்றத்தை ஏற்படுத்தும் பெண்களின் பட்டியலில் இடம் பெற்றுள்ள மூன்று இந்தியப் பெண்கள் அந்தந்தத் துறைகளில் மிக குறிப்பிடத்தக்க சாதனைகளைப் படைத்துள்ளனர்.

❖ நிதி மற்றும் பெரு நிறுவன விவகார அமைச்சர் நிர்மலா சீதாராமன் இந்தப் பட்டியலில் 28வது இடத்தினைப் பெற்றுள்ளார்.

❖ HCL டெக்னாலஜிஸ் நிறுவனத்தின் தலைவரான ரோஷ்னி நாடார் மல்ஹோத்ரா இந்தப் பட்டியலில் 81வது இடத்தைப் பிடித்துள்ளார்.

❖ உயிரித் தொழில்நுட்பத் துறையில் உள்ள கிரண் மஜும்தார்-ஷா 82வது இடத்தைப் பிடித்துள்ளார்.

## M.T. வாசுதேவன் நாயர்




❖ புகழ்பெற்ற மலையாள எழுத்தாளர் M.T.வாசுதேவன் நாயர் சமீபத்தில் காலமானார்.

- அவர் 1973 ஆம் ஆண்டில், அந்த ஆண்டின் சிறந்த திரைப்படத்திற்கான தேசிய விருதை வென்ற நிர்மால்யம் திரைப்படத்தின் மூலம் இயக்குநராக அறிமுகமானார்.
- 1995 ஆம் ஆண்டில், M.T. அவர்களுக்கு ஞானபீடம் விருதும் 2005 ஆம் ஆண்டில் பத்ம பூஷன் விருதும் வழங்கப்பட்டன.
- கேரள மாநில அரசால் வழங்கப்படும் மிக உயரியக் குடிமை விருதான கேரள ஜோதி விருது 2022 ஆம் ஆண்டில் அவருக்கு வழங்கப்பட்டது.

## ரான் உத்சவ் 2025

- ரான் உத்சவ் நிகழ்ச்சியானது, இரண்டு நாட்கள் அளவிலான திருவிழாவாக தொடங்கி, உள்ளூர் கலை மற்றும் கலாச்சாரத்தின் புகழ்பெற்ற 100 நாட்கள் அளவிலான ஒரு கொண்டாட்டமாக உருப்பெற்றது.
- ரான் ஆஃப் கட்ச் என்பது உலகின் இரண்டாவது பெரிய உவர் மண் கொண்ட சதுப்பு நிலம் (7,500 சதுர கிலோமீட்டர்கள்) ஆகும் என்பதோடு அதன் கரடுமுரடான உப்புப் படலமானது வறண்ட பாலைவனத்தினை ஒரு வெண்மையான படலமாக தோன்றச் செய்கிறது.
- இந்தத் திருவிழா கச் பகுதியின் வளமான கலாச்சார மற்றும் கலைப் பாரம்பரியத்தை வெளிப்படுத்துவதாக உள்ளதால், இந்தியா மற்றும் வெளிநாடுகளில் இருந்து இது சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கிறது.

## 100வது தான்சென் சங்கீத் சமரோ

- பெரிய அளவில் கொண்டாடப்படும் பாரம்பரிய இசை விழாவான 100வது தான்சென் சங்கீத் சமரோ நிகழ்வானது மத்தியப் பிரதேசத்தின் குவாலியர் நகரில் நடைபெற்றது.
- இந்தப் பெரு நிகழ்வில், தபேலா ஜாம்பவான் பண்டித ஸ்வபன் சௌதுரிக்கு 2023 ஆம் ஆண்டிற்கான இராஷ்ட்ரிய தான்சென் சம்மான் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.
- இந்தூரைச் சேர்ந்த சனந்த் நியாஸ் சன்ஸ்தாவுக்கு 2023 ஆம் ஆண்டிற்கான இராஜா மான்சிங் தோமர் சம்மான் விருது வழங்கப்பட்டது.

## முன்னாள் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் மறைவு

- முன்னாள் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள் (92) காலமானார்.
- 1971 ஆம் ஆண்டில் வர்த்தகத் துறை அமைச்சகத்தின் பொருளாதார ஆலோசகராக இந்திய அரசாங்கத்தில் அவரது பயணம் தொடங்கியது.
- அவர் 1976-1980 ஆகிய காலகட்டத்தில் இந்திய ரிசர்வ் வங்கியின் இயக்குநராகப் பணி ஆற்றினார்.
- 1980-82 ஆம் ஆண்டில் திட்ட ஆணையத்தின் துணைத் தலைவராகப் பணியாற்றினார்.
- 1982 ஆம் ஆண்டில் இந்திய ரிசர்வ் வங்கியின் ஆளுநரானார்.
- அவர் இந்திய ரிசர்வ் வங்கிச் சட்டத்தில் ஒரு புதிய அத்தியாயத்தை அறிமுகப்படுத்தி, நகர்ப்புற வங்கிகள் துறையை நிறுவினார்.
- 1985-87 ஆம் ஆண்டில் திட்ட ஆணையத்தின் தலைவராக இருந்தார்.

- ❖ அவருக்கு 1987 ஆம் ஆண்டில் பத்ம விபூஷன் விருது வழங்கப்பட்டது.
- ❖ 1991 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் பல்கலைக்கழக மானியக் குழுவின் தலைவராக அவர் ஆனார்.
- ❖ 1991 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் எதிர்பாராத விதமாக அவர் நிதியமைச்சராக நியமிக்கப் பட்டார்.
- ❖ இவரே இந்தியப் பொருளாதாரத்தினைக் கடுமையான வரவுச் செலவு சமநிலை நெருக்கடியிலிருந்து காப்பாற்றிய சீர்திருத்தங்களின் சிற்பி ஆவார்.
- ❖ அவர் இந்த ஆண்டு பிப்ரவரி மாதத்தில் இராஜஸ்தானைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மாநிலங்களவை உறுப்பினராக இருந்து ஓய்வு பெற்றார்.
- ❖ இதற்கு முன்பு, அவர் 1991 ஆம் ஆண்டிலிருந்து ஆறு முறைகள் மேலவையில் அசாம் மாநிலத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினராக இருந்தார்.
- ❖ 2004 முதல் 2014 ஆம் ஆண்டு வரை இரண்டு முறை இந்தியப் பிரதமராகப் பணி ஆற்றினார்.
- ❖ 1998-2004 ஆகிய காலகட்டத்தில் மாநிலங்களவையில் அவர் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தார்.
- ❖ 2004 ஆம் ஆண்டில், இந்தியாவின் முதல் இந்து சமயம் சாராத பிரதமராக பதவி ஏற்றார்.
- ❖ அவரது அரசாங்கம் ஆனது 2005 ஆம் ஆண்டில் தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதிச் சட்டத்தினை (NREGA) அறிமுகப்படுத்தியது.
- ❖ அவர் பிரதமராக இருந்த காலத்தில் (2004-2014), இந்தியா வலுவான ஒரு பொருளாதார வளர்ச்சியைக் (ஆண்டிற்கு சராசரியாக 7-8%) கண்டது.
- ❖ அவரது கொள்கைகள் இந்தியாவை உலகின் வேகமாக வளரும் பொருளாதாரங்களில் ஒன்றாக மாற்ற உதவியது.
- ❖ பலர் தொலைபேசி இணைப்பு கிடைக்காமல் காத்திருந்த நேரத்தில், அவரது ஆட்சியில் தான் தொலைத்தொடர்பு துறையில் பல்வேறு புரட்சிகள் ஏற்படுத்தப்பட்டன.
- ❖ அவர் 1993 ஆம் ஆண்டு நிதி அமைச்சருக்கான யூரோ பண விருதையும், 1993 மற்றும் 1994 ஆம் ஆண்டுகளுக்கான நிதி அமைச்சருக்கான ஆசியப் பண விருதையும் வென்று உள்ளார்.



## சாகித்ய அகாடமி விருதுகள் 2024

- ❖ பல்வேறு இந்திய மொழிகளைச் சேர்ந்த 21 எழுத்தாளர்கள் மற்றும் கவிஞர்களுக்கு 2024 ஆம் ஆண்டிற்கான சாகித்ய அகாடமி விருதுகள் சமீபத்தில் அறிவிக்கப்பட்டுள்ளன.
- ❖ இந்த விருதுகள் புதினங்கள், கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள், நாடகங்கள் மற்றும் இலக்கிய விமர்சனம் போன்ற பல்வேறு பிரிவுகளில் சிறந்தப் படைப்புகளைக் கௌரவிக்கின்றன.
- ❖ இந்தி மொழிக் கவிஞர் ககன் கில் மேன் ஜப் தக் ஆய் பஹார் என்ற தனது கவிதைப் புத்தகத்திற்காக இந்த விருதினைப் பெற்றுள்ளார்.
- ❖ ஆங்கில மொழி எழுத்தாளர் ஈஸ்டரின் கிரே அவரது ஸ்பிரிட் நைட்ஸ் புதினத்திற்காக விருதினைப் பெற்றுள்ளார்.
- ❖ வங்காள மொழி, டோக்ரி மற்றும் உருது ஆகிய மொழிகளுக்கான விருதுகள் இன்னும் அறிவிக்கப் படவில்லை.

| Category | Awardees |
|---|---|
| Poetry | Sameer Tanti (Assamese), Dileep Jhaveri (Gujarati), Gagan Gill (Hindi), K. Jayakumar (Malayalam), Haobam Satyabati Devi (Manipuri), Paul Kaur (Punjabi), Mukut Maniraj (Rajasthani), Dipak Kumar Sharma (Sanskrit) |
| Novel | Aron Raja (Bodo), Easterine Kire (English), Sohal Koul (Kashmiri) |
| Short Stories | Yuva Baral (Nepali), Hundraj Balwani (Sindhi) |
| Essays | Mukesh Thali (Konkani), Mahendra Malangia (Maithili), Baishnab Charan Samal (Odia) |
| Literary Criticism | K.V. Narayana (Kannada), Sudhir Rasal (Marathi), Penugonda Lakshminarayana (Telugu) |
| Play | Maheswar Soren (Santali) |
| Research | A.R. Venkatachalapathy (Tamil) |

## பிரதான் மந்திரி இராஷ்ட்ரிய பால் புரஸ்கார் விருது 2024

- ❖ குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அவர்கள், ஏழு பிரிவுகளில் 17 குழந்தைகளுக்கு பிரதமரின் தேசிய விருதினை வழங்கினார்.
- ❖ கலை மற்றும் கலாச்சாரம், துணிச்சல், புத்தாக்கம், அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், சமூக சேவை, விளையாட்டு மற்றும் சுற்றுச்சூழல் ஆகிய ஏழு முதன்மைப் பிரிவுகளில் மேற்கொள்ளப் பட்ட மிக அசாதாரணச் சாதனைகளை அங்கீகரிக்கும் விதமாக இந்த விருதுகள் வழங்கப்படுகின்றன.
- ❖ இந்த விருதினைப் பெறுபவதற்கு ஏழு சிறுவர்கள் மற்றும் 10 சிறுமிகள்-14 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டனர்.
- ❖ தமிழகத்தைச் சேர்ந்த சிந்தூர ராஜா (15) நடுக்குவாதம் உள்ள நோயாளிகளுக்கு சுய நிலைப்பாட்டுச் சாதனங்களை உருவாக்கியதற்காக இந்த விருதினைப் பெற்றார்.
- ❖ செங்கல்பட்டைச் சேர்ந்த கர்நாடக இசைப் பிரிவு மாணவரான ஜனனி நாராயணன் (14) என்பவரும் இந்த விருதைப் பெற்றுள்ளார்.
- ❖ 2023-24 ஆம் ஆண்டில் தமிழக அரசினால் நிறுவப் பட்ட கலைமாமணி விருதையும் இவர் பெற்றுள்ளார்.

# விளையாட்டுச் செய்திகள்

## சையத் மோடி இந்தியா சர்வதேச சூப்பர் 300 போட்டி 2024

- P.V. சிந்து சீனாவின் வுயோ யு வூ என்பவரை வீழ்த்தி உத்தரப் பிரதேச மாநிலத்தின் லக்னோவில் நடைபெற்ற சையத் மோடி 2024 என்ற போட்டியில் தனது 3வது பட்டத்தை வென்றுள்ளார்.
- லக்ஷ்யா சென் சிங்கப்பூரின் ஜியா ஹெங் ஜேசன் என்பவரைத் தோற்கடித்து தனது முதல் பட்டத்தை வென்றுள்ளார்.
- இந்தப் போட்டியில் இந்தியாவின் முதல் மகளிர் இரட்டையர் பட்டத்தை வென்று ட்ரீசா ஜாலி மற்றும் காயத்ரி கோபிசந்த் வரலாறு படைத்துள்ளனர்.



## ஆசிய-பசிபிக் செவித் திறன் குறைபாடு உள்ளவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் 2024

- 2024 ஆம் ஆண்டு கோலாலம்பூரில் நடைபெற்ற ஆசிய-பசிபிக் செவித் திறன் குறைபாடு உள்ளவர்களுக்கான விளையாட்டுப் போட்டியில் 8 தங்கம், 18 வெள்ளி மற்றும் 29 வெண்கலப் பதக்கங்களுடன் இந்திய அணியானது அதிகப் பதக்கங்களை (55) வென்றுள்ளது.
- 1984 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இந்தப் போட்டியின் பெரும் வரலாற்றில் இந்திய வீரர்களின் சிறந்தப் பங்கேற்பு இதுவாகும்.
- தடகளப் போட்டியில் 5 தங்கம், 12 வெள்ளி, 11 வெண்கலம் என 28 பதக்கங்களுடன் அதிகபட்சப் பதக்கங்களை வென்று சாதனை படைத்துள்ளது.
- தமிழகத்தைச் சேர்ந்த 12 வீரர்கள் பல்வேறு விளையாட்டுகளில் 6 தங்கம், 13 வெள்ளி, 5 வெண்கலம் என மொத்தம் 24 பதக்கங்களை வென்று சாதனை படைத்துள்ளனர்.

## WTA விருதுகள் 2024

- 2024 ஆம் ஆண்டிற்கான WTA (Women's Tennis Association- பெண்கள் டென்னிஸ் சங்கம்) விருதுகளைப் பெற்ற அனைத்து வெற்றியாளர்களில் அரினா சபலெங்கா ஆண்டின் சிறந்த வீராங்கனையாக அறிவிக்கப்பட்டுள்ளார்.

- எம்மா நவர்ரோ விளையாட்டில் மிகவும் மேம்பட்ட வீராங்கனை என்ற ஒரு விருதைப் பெற்றார்.
- பௌலா படோசா ஆண்டின் சிறந்த மறு அறிமுக வீரராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- லுலு சன் இந்த ஆண்டின் புதுமுக வீரர் விருதினைப் பெற்றார்.
- ஆண்டின் சிறந்த இரட்டையர் அணிக்கான விருது சாரா எர்ரானி மற்றும் ஜாஸ்மின் பௌலினி ஆகியோருக்கு வழங்கப்பட்டது.



## தடகள வீரர்களின் உடலியல் தகுதி சார் கடவுச் சீட்டு




- உலக ஊக்கமருந்துப் பயன்பாட்டு எதிர்ப்பு முகமை (WADA) ஆனது டெல்லியில் உள்ள தேசிய ஊக்கமருந்து சோதனை ஆய்வகத்திற்கு (NDTL) தடகள வீரர்களின் கடவுச்சீட்டு மேலாண்மை அலகினை (APMU) நிறுவுவதற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- விளையாட்டுத் துறையில் நியாயத் தன்மையினை உறுதி செய்யும் நோக்கத்துடன் விளையாட்டு வீரர்களின் உயிரியல்/ உடலியல் சார்ந்த விவரங்களை NDTL நிர்வகிக்க உள்ளது.

- ❖ தடகள வீரர்களின் உடலியல் தகுதி சார் கடவுச் சீட்டு (ABP) என்பது பல ஆண்டுகளாக விளையாட்டு வீரரின் உயிரியல் குறி காட்டிகளைக் கண்காணிக்கின்ற ஒரு மேம்பட்ட ஊக்கமருந்துப் பயன்பாட்டு எதிர்ப்பு கருவியாகும்.
- ❖ இரத்தம் மற்றும் ஊக்கமருந்து குறித்த விவரங்கள் போன்ற அளவுருக்களில் உள்ள சில மாறுபாடுகளை நன்கு பகுப்பாய்வு செய்வதன் மூலம், விளையாட்டுகளில் நியாயத் தன்மையினை உறுதிப்படுத்தவும், எந்தவித ஊக்கமருந்து பயன்பாடும் இல்லாத ஒரு வகையில் விளையாட்டு வீரர்களைப் பாதுகாக்கவும் ABP உதவுகிறது.
- ❖ 2022 ஆம் ஆண்டில், மிக அதிக சதவீத ஊக்கமருந்து பயன்பாட்டுக் குற்றவாளிகளைக் கொண்ட நாடுகளில் இந்தியா முதலிடத்தில் உள்ளது.
- ❖ ரஷ்யா (85), அமெரிக்கா (84), இத்தாலி (73) மற்றும் பிரான்சு (72) போன்ற சில முக்கிய நாடுகளை விட இந்தியாவின் ஊக்கமருந்து பயன்பாட்டு மீறல்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது.

## அஸ்வின் ஓய்வு




- ❖ இந்தியக் கிரிக்கெட் வீரர் இரவிச்சந்திரன் அஸ்வின் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.
- ❖ அவர் தனது 14 ஆண்டு கால கிரிக்கெட் பயணத்தினை டெஸ்ட் போட்டிகளில் எடுத்த 537 விக்கெட்டுகளுடன் நிறைவு செய்துள்ள நிலையில் இது அனில் கும்ப்ளேவின் 619 விக்கெட்டுகள் என்ற சாதனைக்கு அடுத்த நிலையில் உள்ளது.

- அஸ்வின் 116 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 156 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ள நிலையில் T20 போட்டிகளில் 72 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார்.
- பல்வேறு வடிவத்திலான கிரிக்கெட் போட்டிகளில் 765 சர்வதேச விக்கெட்டுகளுடன், கும்ப்ளேவுக்கு (953) அடுத்தபடியாக இந்தியாவின் இரண்டாவது அதிக கிரிக்கெட் விக்கெட்டுகளை வீழ்த்திய கிரிக்கெட் வீரராக அஷ்வின் திகழ்கிறார்.
- உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் போட்டியில் 100 விக்கெட்டுகளை எட்டிய முதல் பந்து வீச்சாளர் என்ற பெருமையைப் பெற்றார்.
- தற்போது 41 போட்டிகளில் 195 வீரர்களை ஆட்டமிழப்பு செய்ததுடன் உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் போட்டியில் மிக அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய வீரர்கள் பட்டியலில் முன்னணியில் அவர் உள்ளார்.

## FIFA கூட்டமைப்பின் சிறப்பு விருதுகள் 2024

- ரியல் மாட்ரிட் அணியின் பிரேசில் நாட்டினைச் சேர்ந்த விங்கர் வினிசியஸ் ஜூனியர் FIFA அமைப்பின் ஆடவருக்கான சிறந்த ஆட்டக்காரர் விருதினை வென்றுள்ளார்.
- பார்சிலோனா எனும் அணியின் ஸ்பெயின் நாட்டினைச் சேர்ந்த மிட்ஃபீல்டர் ஐதானா பொன்மதி FIFA அமைப்பின் மகளிருக்கான சிறந்த ஆட்டக்காரர் விருதினை வென்று உள்ளார்.
- மான்செஸ்டர் யுனைடெட் எனும் அணியின் இளம் வீரர் அலெஜான்ட்ரோ கர்னாச்சோ புஸ்காஸ் விருதைப் பெற்றுள்ளார்.
- பிரேசிலின் மார்டா, இந்த ஆண்டு சர்வதேச பிரண்ட்லீஸ் என்ற போட்டியில் ஜமைக்கா அணிக்கு எதிராக கோலடித்ததற்காக முதலாவது ‘மார்டா’ விருதை வென்றுள்ளார்.
- அர்ஜென்டினா நாட்டு அணியின் கோல்கீப்பர் எமிலியானோ மார்டினெஸ் (ஆடவர் கோல்கீப்பர்) மற்றும் பிரிட்டிஷ் பயிற்சியாளர் எம்மா ஹேய்ஸ் (மகளிர் பயிற்சியாளர்) ஆகியோர் தங்கள் வாழ்க்கையில் இரண்டாவது முறையாக அந்தந்தப் பிரிவுகளில் விருதுகளை வென்றுள்ளனர்.

## 38வது தேசிய விளையாட்டுப் போட்டிகள் 2025

- உத்தரகாண்ட் மாநில அரசானது, வருகின்ற 2025 ஆம் ஆண்டு ஜனவரி 28 ஆம் தேதி முதல் பிப்ரவரி 14 ஆம் தேதி வரையில் தேசிய விளையாட்டுப் போட்டிகளை நடத்த உள்ளது.
- 38வது தேசிய விளையாட்டுப் போட்டிகளுக்கான உருவச் சின்னம், முத்திரைச் சின்னம், ஆடை, கீதம், வாசகம் ஆகியவை டேராடூனின் ராய்ப்பூரில் வெளியிடப் பட்டன.
- "மௌலி" என்று பெயரிடப்பட்ட இதன் உருவச்சின்னம் ஆனது, மோனல் எனப்படும் உத்தரகாண்ட் மாநிலப் பறவையின் பெயரிலிருந்து பெறப்பட்டது.
- மோனல் என்ற பறவையினைக் கொண்டு உருவாக்கப்பட்ட முத்திரைச் சின்னம் ஆனது, உத்தரகாண்ட் மாநிலத்தின் இயற்கை அழகு மற்றும் பன்முகத் தன்மையை எடுத்துக் காட்டுகிறது.
- விளையாட்டுப் போட்டிகளுக்கான வாசகம் “சங்கல்ப் சே ஷிகர் தக்” (From Resolve to Zenith) என்பதாகும்.

# முக்கிய தினங்கள்

## உலக ஒட்டிப் பிறந்த இரட்டையர்கள் தினம் - நவம்பர் 24

- இந்த ஆண்டு முதல் முறையாக இத்தினம் அனுசரிக்கப்படுகிறது.
- இது ஒட்டிப் பிறந்த இரட்டையர்களைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தச் செய்வது, அவர்களின் நல்வாழ்வை ஆதரிப்பது மற்றும் அவர்களின் சமூக உள்ளடக்கத்தை (சமூக இணக்கம்) மேம்படுத்துவது ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 50,000 பிறப்புகளில் 1 ஆக மதிப்பிடப்பட்ட ஒட்டிப் பிறக்கும் இரட்டையர்கள் பிறப்பு ஆனது ஓர் அரிய பிறப்பு நிலையாகும்.

## உலகப் பாரம்பரிய வாரம் 2024 - நவம்பர் 19/25

- உலகின் பல்வேறு பகுதிகளின் மரபுகள் மற்றும் கலாச்சாரங்கள் பற்றிய ஒரு விழிப்பு உணர்வை பரப்புவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தியத் தொல்லியல் துறையானது (ASI), நாடு முழுவதும் உள்ள சுமார் 3,650 பழங்கால நினைவுச் சின்னங்கள் மற்றும் தொல்பொருள் தளங்களைப் பாதுகாத்து வருகிறது.
- 2024 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "Discover and Experience Diversity" என்பதாகும்.

## விமானப் பாதுகாப்பு விழிப்புணர்வு வாரம் - நவம்பர் 25/29




- விமானத்தின் அனைத்து அம்சங்களிலும் அதன் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான தொழிற்துறையின் உறுதிப்பாட்டை வலுப்படுத்துவதற்காக ஆண்டுதோறும் நவம்பர் மாதத்தின் கடைசி வாரத்தில் இத்தினம் அனுசரிக்கப்படுகிறது.
- இந்தியாவின் முதல் பொது விமானப் போக்குவரத்து ஆனது, அலகாபாத் மற்றும் நைனிஆகியவற்றுக்கு இடையே முதல் வணிக ரீதியிலான விமானச் சேவையுடன் 1911 ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டது.

- 1932 ஆம் ஆண்டில் டாடா ஏர்லைன்ஸ் சேவை தொடங்கப்பட்டது என்பது இந்தியாவில் திட்டமிடப்பட்ட விமானச் சேவைகளின் தொடக்கத்தைக் குறிக்கிறது.
- இந்தியாவானது 1947 ஆம் ஆண்டில் சர்வதேசப் பொது விமானப் போக்குவரத்து அமைப்பில் (ICAO) இணைந்தது.
- இன்று, இந்தியா உலகளவில் மூன்றாவது பெரிய உள்நாட்டு விமானச் சந்தையாகத் திகழ்கிறது.

## உலக எய்ட்ஸ் தினம் – டிசம்பர் 01

- இது முதன்முதலில் 1988 ஆம் ஆண்டில் உலக சுகாதார அமைப்பினால் (WHO) நிறுவப் பட்டது.
- எச்.ஐ.வி/எய்ட்ஸ் தொற்றுநோய் மீது உலகளாவிய கவனத்தை ஈர்த்தல், அதற்கு விழிப்பு உணர்வை ஏற்படுத்துதல் மற்றும் எய்ட்ஸ் நோயால் உயிரிழந்தவர்களுக்கு மதிப்பு அளித்தல் ஆகியவற்றை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2024 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "Take the rights path: My health, my right!" என்பதாகும்.




## தேசிய மாசுக் கட்டுப்பாட்டுத் தினம் - டிசம்பர் 02

- போபால் விஷவாயு விபத்தில் உயிர் இழந்தவர்களை இந்த நாள் நினைவு கூர்கிறது.
- மாசுபாடு தொடர்பான பல்வேறு பிரச்சினைகள் மற்றும் அது நம் தினசரி அன்றாட வாழ்க்கையை எவ்வாறு பாதிக்கிறது என்பதை மக்களுக்கு உணர்த்துவதற்காக இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது.
- மாசுபாடு என்பது உலகம் முழுவதும் மிகப்பெரும் பிரச்சனையாக உள்ளதோடு, காற்று மாசுபாடு காரணமாக உலகளவில் ஒவ்வோர் ஆண்டும் சுமார் 7 மில்லியன் மக்கள் உயிரிழக்கின்றனர்.
- போபால் விஷ வாயு விபத்து ஆனது 1984 ஆம் ஆண்டு டிசம்பர் 02 ஆம் தேதியன்று நடைபெற்றது.
- நச்சுத்தன்மை வாய்ந்த மெத்தில் ஐசோசையனேட் (MIC) வாயு கசிந்து அது உடன் வளி மண்டலத்தில் வேகமாக பரவிய பிறகு அது சுமார் 15,00 முதல் 20,000 உயிர்களைப் பலி வாங்கியது.

- 2024 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "Clean Air, Green Earth: A Step Towards Sustainable Living" என்பதாகும்.




## அடிமைத்தனத்தை ஒழிப்பதற்கான சர்வதேச தினம் - டிசம்பர் 02

- இந்த நாள் அடிமைத்தனத்தின் நவீன கால வடிவங்களை ஒழிப்பது, மனிதக் கடத்தல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல் மற்றும் அனைத்து தனிநபர்களின் உரிமைகள் மற்றும் கண்ணியத்தை மேம்படுத்துதல் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.
- 1949 ஆம் ஆண்டில் இந்த நாளில் தான், UNGA ஆனது மனிதர்களை அடிமையாக விற்கும் நடைமுறைகளை ஒடுக்கச் செய்வதற்கும் மற்றவர்களின் பாலியல் ரீதியான தொழில்முறையில் மேற்கொள்ளப்படும் பல்வேறு சுரண்டல் நடவடிக்கைகளை நன்கு ஒடுக்கச் செய்வதற்குமான ஐக்கிய நாடுகள் சபையின் உடன்படிக்கையினை ஏற்றுக் கொண்டது.
- சர்வதேசத் தொழிலாளர் அமைப்பின் படி, 2021 ஆம் ஆண்டில் உலகளவில் சுமார் 27.6 மில்லியன் மக்கள் கட்டாய உழைப்பில் ஈடுப்பட்டுள்ளனர்.
- 2016 முதல் 2021 ஆம் ஆண்டு வரை, இந்த எண்ணிக்கையானது பெரும்பாலும் தனியார் நிறுவனங்களின் மூலமாக பெருமளவு திணிக்கப்பட்ட கட்டாய உழைப்பு நடவடிக்கை காரணமாக 2.7 மில்லியனாக அதிகரித்துள்ளது.
- 2023 ஆம் ஆண்டு உலகளாவிய அடிமைத்தனக் குறியீட்டின்படி, இந்தியாவில் சுமார் 11 மில்லியனுக்கும் அதிகமான அடிமைகள் உள்ளனர் என்ற நிலையில் இது எந்த ஒரு நாட்டிலும் இல்லாத அளவிலான எண்ணிக்கையாகும்.

## உலக கணினி அறிவு தினம் - டிசம்பர் 02




- இந்த நாள் ஆனது கணினி சார்ந்தக் கல்வியறிவை ஊக்குவிக்கிறது மற்றும் கணினிப் பயன்பாட்டை அனைவருக்கும் அணுகக்கூடியதாக மாற்றுவதையும் ஊக்குவிக்கிறது.
- இந்த நாள் ஆனது தேசியத் தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தினால் (N.I.I.T.) தொடங்கப் பட்டது.
- இது பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு கணினி சார்ந்த கல்வியறிவினை அளிக்கச் செய்வதில் கவனம் செலுத்துவதன் மூலம் எண்ணிம ரீதியிலான பிளவைக் களைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- தேசியத் தகவல் தொழில்நுட்ப நிறுவனம் (NIIT) ஆனது 1981 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட ஓர் இந்தியப் பன்னாட்டு நிறுவனமாகும்.
- இந்த நாள் ஆனது முதன்முதலில் 2001 ஆம் ஆண்டில் இந்த அமைப்பின் 20வது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் கொண்டாடப் பட்டது.

## சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினம் - டிசம்பர் 03

- இந்த உலகளாவிய சுகாதார நிகழ்வு ஆனது கடந்த 23 ஆண்டுகளாக (1998 ஆம் ஆண்டு முதல்) அனுசரிக்கப்பட்டு வருகிறது.
- அரசியல், சமூக, பொருளாதார மற்றும் கலாச்சார வாழ்க்கையின் அனைத்து சிறப்பு அம்சங்களிலும் மாற்றுத் திறனாளி நபர்களின் சூழ்நிலைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2024 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு: “Amplifying the leadership of persons with disabilities for an inclusive and sustainable future” என்பதாகும்.
- மாற்றுத் திறனாளிகள் உலக மக்கள் தொகையில் 16% ஆக உள்ளனர்.

## இந்தியக் கடற்படை தினம் - டிசம்பர் 04

- இந்த நாளானது இந்தியக் கடற்படையின் பெரும்பங்கு மற்றும் முக்கிய சாதனைகளை அங்கீகரிக்கிறது.
- 1971 ஆம் ஆண்டு இந்தியா-பாகிஸ்தான் போரின் போதான மேற்கொள்ளப்பட்ட ஒரு முக்கியமான கடற்படைத் தாக்குதலான ட்ரைடென்ட் என்ற நடவடிக்கையின் ஆண்டு நிறைவைக் குறிக்கிறது.
- இந்தியக் கடற்படையானது இந்த ஆண்டிற்கான இத் தினத்தின் கொண்டாட்டத்தின் போது ஒடிசாவின் பூரி நகரின் நீலக் கொடி கடற்கரையில் ஒரு பெரிய நடவடிக்கை செயல் விளக்கத்தினை நிகழ்த்தியது.
- இந்திய கடற்படையானது, 1612 ஆம் ஆண்டில் கிழக்கிந்தியக் கம்பெனியால் நிறுவப் பட்டது.
- இந்தியக் கடற்படையானது நாட்டின் கடல்சார் இறையாண்மை மற்றும் பல்வேறு கடல் நடவடிக்கைகளின் மிகவும் எண்ணற்றப் பயன்பாட்டிற்கு முதன்மைச் செயல்பாட்டு அமைப்பாகவும் பாதுகாப்பு உத்தரவாத அமைப்பாகவும் செயல்படுகிறது.

## உலக மண் தினம் - டிசம்பர் 05

- 2002 ஆம் ஆண்டில் சர்வதேச மண் அறிவியல் சங்கம் (IUSS) ஆனது இந்த நாளின் அனுசரிப்பிற்குப் பரிந்துரைத்தது.
- இது தாய்லாந்தின் மறைந்த மன்னர் பூமி போல் அதுல்ய தேஜ் அவர்களின் பிறந்த நாளை நினைவுகூருகிறது.
- உணவுப் பாதுகாப்பு, வறுமை ஒழிப்பு மற்றும் பலவற்றிற்கு அவசியமான நிலையான மண் மேலாண்மை மற்றும் புத்துயிர்ப்பு ஆகியவற்றின் முக்கியத்துவம் குறித்த ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக அவர் பணியாற்றினார்.
- 2024 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, “Caring for soils: measure, monitor, manage” என்பதாகும்.
- இந்தியாவின் மண் வளமானது, மிக நீண்ட காலமாக நைட்ரஜன் மற்றும் பாஸ்பரஸின் அதிகப் படியான பற்றாக்குறையை எதிர்கொள்கிறது.
- 1990 ஆம் ஆண்டுகளில் பொட்டாசியம் குறைபாடு அதிகமாக நிலவியது என்பதோடு மேலும் 2000 ஆம் ஆண்டுகளில் சல்பர் குறைபாடு ஒரு மிகப்பெரியப் பிரச்சனையாக உருவானது.

## உலக வனவிலங்கு வளங்காப்பு தினம் - டிசம்பர் 04

- பூமியின் அருகி வரும் தாவரங்கள் மற்றும் விலங்கினங்களைப் பாதுகாப்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த நாளானது வனவிலங்குப் பாதுகாப்பின் ஒரு பெரும் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகிறது மற்றும் அருகி வரும் உயிரினங்களைப் பாதுகப்பதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டி மக்களை ஊக்குவிக்கிறது.
- 2012 ஆம் ஆண்டு நவம்பர் 08 ஆம் தேதியன்று நடைபெற்ற "வனவிலங்கு கடத்தல் மற்றும் வளங்காப்பு" நிகழ்வின் போது அப்போதைய அமெரிக்க வெளியுறவுத் துறை

செயலாளராக இருந்த ஹிலாரி கிளிண்டன் தலைமையிலான முயற்சிகளுடன் இந்த நாளின் அனுசரிப்பானது தொடங்கப்பட்டது.

- 2024 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "Connecting People and Planet: Exploring Digital Innovation in Wildlife Conservation" என்பதாகும்.

## சர்வதேச வங்கிகள் தினம் - டிசம்பர் 04

- நிலையான மேம்பாட்டிற்கு நிதியளிப்பதில் வங்கிகளின் குறிப்பிடத்தக்க ஒரு திறனை அங்கீகரிப்பதை இத்தினம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2019 ஆம் ஆண்டு டிசம்பர் 19 ஆம் தேதியன்று, ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை ஆனது இந்த நாளை அனுசரிப்பதற்கான ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது.
- 2024 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "Empowering Sustainable Development Through Finance" என்பதாகும்.

## ஆயுதப்படைகளின் கொடி நாள் - டிசம்பர் 07

- இது இந்தியாவின் ஆயுதப் படைகளின் வீரர்கள் மற்றும் மூத்த ராணுவ வீரர்களைக் கௌரவிப்பதற்காக அர்ப்பணிக்கப்பட்ட தினமாகும்.
- ஆயுதப்படை வீரர்கள், குறிப்பாக கடுமையான போர் முறை நடவடிக்கையில் காயம் அடைந்தவர்கள் அல்லது கொல்லப்பட்டவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் நலனுக்காக நிதி சேகரிப்பதை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- குடிமக்கள் ஆயுதப் படைகளுக்கான தங்களின் ஒரு கூட்டுப் பொறுப்புணர்வினையும் தங்கள் ஆதரவையும் வெளிப்படுத்துவதற்கு இது ஒரு வாய்ப்பாக அமைகிறது.

## மகா பரிநிர்வாண் திவாஸ் - டிசம்பர் 06



- மகா பரிநிர்வாண் திவாஸ் என்பது டாக்டர் பீம்ராவ் ராம்ஜி அம்பேத்கர் அவர்களின் நினைவு நாள் ஆகும்.
- அவர் 1956 ஆம் ஆண்டு டிசம்பர் 06 ஆம் தேதியன்று காலமானார்.
- இந்த ஆண்டு 69வது மகா பரிநிர்வாண் திவாஸ் அனுசரிக்கப்பட்டது.
- "மகா பரிநிர்வாண்" என்ற ஒரு சொல் பௌத்த/புத்த மதத் தத்துவத்திலிருந்து பெறப் படுவதோடு இது மரணத்திற்குப் பிறகு அடையப்படும் நிர்வாண (மோட்ச) நிலையைக் குறிக்கிறது.
- 1956 ஆம் ஆண்டில், டாக்டர் அம்பேத்கர் தமதுஆயிரக்கணக்கான சீடர்களுடன் புத்த மதத்தைத் தழுவினார்.

## அகில இந்தியக் குடிமை தற்காப்பு மற்றும் ஊர்க்காவல் படை தினம் - டிசம்பர் 06




- 1946 ஆம் ஆண்டு டிசம்பர் 06 ஆம் தேதியன்று பழைய பம்பாய் மாகாணத்தில் ஊர்க் காவல் படை உருவாக்கப்பட்டது.
- இது குடிமைசார் கலவரம் மற்றும் வகுப்புவாத கலவரங்களைக் கட்டுப்படுத்தச் செய்வதற்காக காவல்துறைக்கு உதவும் ஒரு தன்னார்வப் படையாகும்.
- 1962 ஆம் ஆண்டு சீன ஆக்கிரமிப்பைத் தொடர்ந்து, மத்திய அரசானது மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களை ஏற்கனவே உள்ள தன்னார்வ அமைப்புகளை ஒரே சீரான தன்னார்வப் படையாக இணைக்க அறிவுறுத்தியது.
- ஊர்க்காவல் படையானது, மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களின் ஊர்க் காவல் படை சட்டம் மற்றும் விதிகளின் கீழ் உருவாக்கப்படுகின்றன.
- நாட்டில் உள்ள மொத்த ஊர்க்காவல் படையினரின் எண்ணிக்கை 5,73,793 ஆக உள்ளது, அதன் அதிகரிக்கப்பட்ட எண்ணிக்கை 4,86,401 ஆக உள்ளது.
- இந்த அமைப்பு ஆனது கேரளாவைத் தவிர அனைத்து மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களிலும் உள்ளது.

## சர்வதேச சிவிங்கிப் புலி தினம் - டிசம்பர் 04

- இது சிவிங்கிப் புலிகளைப் பாதுகாப்பதற்காக என்று அர்ப்பணிக்கப்பட்ட முன்னணி அமைப்பான சிவிங்கிப் புலி வளங்காப்பு நிதியத்தினால் (CCF) நிறுவப்பட்டது.

- டிசம்பர் 04 ஆம் தேதியானது, CCF நிறுவனர் டாக்டர் லாரி மார்க்கரால் வளர்க்கப்பட்ட கயாம் என்ற ஒரு சிவிங்கிப் புலி குட்டியினை நினைவு கூரும் விதமாக தேர்ந்தெடுக்கப் பட்டது.
- சிவிங்கிப் புலிகளை அழிவிலிருந்து காப்பாற்ற வேண்டிய அவசரத் தேவை குறித்து உலகளாவிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- சிவிங்கிப் புலிகள் முதன்மையாக ஆப்பிரிக்காவின் துணை-சஹாரா பகுதிகளில் காணப் படும் திறந்தப் புல்வெளிகளில் காணப்படுகின்றன.
- 2020 ஆம் ஆண்டில், 8,000க்கும் குறைவான சிவிங்கிப் புலிகளே காடுகளில் இருந்தன என்பதோடு கடந்த 40 ஆண்டுகளில் 50% வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

## சர்வதேச பொது விமானப் போக்குவரத்து தினம் - டிசம்பர் 07

- பொருளாதார வளர்ச்சி மற்றும் உலகளாவிய இணைப்பை மேம்படுத்துவதில் பொது விமானப் போக்குவரத்தின் பங்கு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இது ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த நாள் சர்வதேசப் பொது விமானப் போக்குவரத்து அமைப்பினால் (ICAO) நிறுவப் பட்டது.
- பொருளாதார வளர்ச்சி மற்றும் உலகளாவிய இணைப்பை ஊக்குவிக்கும் சர்வதேசப் பொது விமானப் போக்குவரத்துக்கான 1944 ஆம் ஆண்டு உடன்படிக்கையினை இந்தத் தினம் கௌரவிக்கிறது.
- 2024 ஆம் ஆண்டு அமெரிக்க நாட்டின் சிகாகோ நகரில் சர்வதேச பொது விமானப் போக்குவரத்து ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்ட 80வது ஆண்டு நிறைவையும் இந்தத் தினம் குறிக்கிறது.
- அமெரிக்கா மற்றும் சீனாவிற்கு அடுத்தபடியாக, இந்தியாவானது மூன்றாவது பெரிய உள்நாட்டு விமானப் போக்குவரத்துச் சந்தையாக திகழ்கிறது.

## இனப்படுகொலை தடுப்பு தினம் - டிசம்பர் 09

- இது இனப்படுகொலைக் குற்றத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் நினைவு மற்றும் கண்ணியம் மற்றும் அதனைத் தடுப்பதற்கான சர்வதேச தினம் என்றும் அழைக்கப் படுகிறது.
- இத்தினம் இனப்படுகொலைக் குற்றத்தைத் தடுத்தல் மற்றும் தண்டனை வழங்குதல் தொடர்பான 1948 ஆம் ஆண்டு 'உடன்படிக்கையினை ஐக்கிய நாடுகள் சபை ஏற்றுக் கொண்டதைக் குறிக்கிறது.
- 1948 ஆம் ஆண்டு டிசம்பர் 10 ஆம் தேதியன்று, ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையானது முதல் மனித உரிமைகள் ஒப்பந்தத்தினை ஏற்றுக் கொண்டது.

## சர்வதேச ஊழல் எதிர்ப்பு தினம் - டிசம்பர் 09

- ஊழல் நடவடிக்கைகள் குறித்த விழிப்புணர்வைப் பரப்புவதை இந்த நாள் நோக்கமாக கொண்டுள்ளது.
- ஊழலுக்கு எதிரான ஐக்கிய நாடுகள் சபையின் ஒரு உடன்படிக்கையானது 2003 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- 2024 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "Uniting with Youth Against Corruption: Shaping Tomorrow's Integrity" என்பதாகும்.
- ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல் நிறுவனத்தால் ஆண்டுதோறும் ஊழல் புலனாய்வுக் குறியீடு வெளியிடப்படுகிறது.

## மனித உரிமைகள் தினம் - டிசம்பர் 10




- இந்த நாளானது 1948 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது மனித உரிமைகளுக்கான ஒரு உலகளாவியப் பிரகடனத்தை (UDHR) ஏற்றுக் கொண்டதைக் குறிக்கிறது.
- இனம், பாலினம், மதம், தேசியம் அல்லது வேறு எந்தப் பண்புகளையும் பொருட் படுத்தாமல், ஒவ்வொருவரும் கண்ணியத்துடனும் மரியாதையுடனும் வாழ முடியும் என்பதை உறுதிப்படுத்தவும், மக்களைப் பாதுகாக்கும் உரிமைகளைக் கொண்டாடச் செய்வதற்கும் மேம்படுத்துவதற்கும் இந்த நாள் அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.
- 2024 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, 'Our Rights, Our Future, Right Now' என்பது ஆகும்.

## 78வது UNICEF ஸ்தாபன தினம் - டிசம்பர் 11

- 1946 ஆம் ஆண்டு டிசம்பர் 11 ஆம் தேதியன்று, ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை மற்றும் லுட்விக் ராஜ்ச்மன் ஆகியோர் இணைந்து UNICEF அமைப்பினை நிறுவினர்.
- இரண்டாம் உலகப் போரால் பாதிக்கப்பட்ட நாடுகளில் உள்ள குழந்தைகளின் பல்வேறு தேவைகளை நன்கு நிவர்த்தி செய்வதையும், போரினால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் மற்றும் தாய்மார்களுக்கு அவசர உதவி வழங்குவதையும் இது முக்கிய நோக்கமாகக் கொண்டிருந்தது.
- அதன் செயல்பாடுகள் ஆனது, வளர்ந்து வரும் நாடுகளில் உள்ள குழந்தைகள் மற்றும் பெண்களின் நீண்ட காலத் தேவைகளை நிவர்த்தி செய்வதற்காக 1950 ஆம் ஆண்டில் நீட்டிக்கப்பட்டன.
- 1953 ஆம் ஆண்டில், இது ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிரந்தர உறுப்பினராக ஆனது.

## அனைவருக்குமான சுகாதார சேவைக்கான சர்வதேச தினம் - டிசம்பர் 12

- அனைவருக்குமான சுகாதார சேவை (UHC) பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- UHC ஆனது, நிதி நெருக்கடியை எதிர்கொள்ளாமல், எல்லா இடங்களிலும் ஒரு தரமான சுகாதாரச் சேவைகளுக்கான அணுகலை அனைவருக்கும் வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது முதன்முதலில் 2012 ஆம் ஆண்டில் டிசம்பர் 12 ஆம் தேதியன்று ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையால் (UNGA) தொடங்கப்பட்டது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Health: It's on the government" என்பதாகும்.




## சர்வதேச நடுநிலைமை தினம் - டிசம்பர் 12

- அரசுகளுக்கிடையேயான உறவுகளில் நடுநிலைமையின் ஒரு முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதும், உலக அளவில் அமைதி மற்றும் பாதுகாப்பை வலுப்படுத்துவதும் இதன் நோக்கமாகும்.
- ஒரு நடுநிலைமை என்பது பிற அரசுகளுக்கிடையேயான போர்களில் பங்கேற்பதைத் தவிர்ப்பதற்கான ஒரு நாட்டின் முடிவின் விளைவாக ஏற்படும் ஒரு சட்டப்பூர்வமான நிலையாகும்.
- 1995 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் துர்க்மெனிஸ்தான் நாடானது ஐக்கிய நாடுகள் சபையினால் நிரந்தர நடுநிலை நாடாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

## இந்தியக் கடற்படை நீர்மூழ்கிக் கப்பல் தினம் - டிசம்பர் 08

- 1967 ஆம் ஆண்டு இதே நாளில் தான், முன்னதாக INS கல்வாரி எனப்படும் முதல் நீர் மூழ்கிக் கப்பல் படையில் இணைக்கப்பட்டது.
- இந்தியப் பெருங்கடலில் வேட்டையாடும் புலிச்சுறா/வள்ளுவன் சுறாவின் மலையாளப் பெயர் கல்வாரி ஆகும்.
- 29 ஆண்டுகால சேவைக்குப் பிறகு 1996 ஆம் ஆண்டில் கல்வாரி கப்பல் பணியிலிருந்து நீக்கப்பட்டது.
- INS கல்வாரி ரஷ்யாவிலிருந்து பெறப்பட்டது.
- தற்போது, இந்தியா 18 வழக்கமான (டீசல்-மின்சார எஞ்சின்) நீர்மூழ்கிக் கப்பல்களை இயக்குகிறது, இதில் ஐந்து ஸ்கார்பியன் ரகம் (பிரான்சு), நான்கு HDW ரகம் (ஜெர்மனி) மற்றும் ஏழு கிலோ ரகம் (ரஷ்யா) ஆகியவை அடங்கும்.




## தேசிய எரிசக்தி வளங்காப்புத் தினம் - டிசம்பர் 14

- இது அன்றாட வாழ்வில் ஆற்றல் சேமிப்பின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மின்சக்தி அமைச்சகத்தின் கீழ் உள்ள எரிசக்தி செயல்திறன் வாரியம் (BEE) ஆனது, இந்தியாவில் ஆற்றல் செயல்திறன் மற்றும் வளங்காப்பினை மேம்படுத்துதல் மற்றும் ஒழுங்குபடுத்துதல் ஆகிய பணிகளை மேற்கொள்கிறது.
- இந்த ஆண்டு அனுசரிப்பின் போது, பல்வேறு பிரிவுகளில் தேசிய எரிசக்தி வளங்காப்பு விருதுகள் வழங்கப்பட்டன.
- தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகிதங்கள் லிமிடெட் நிறுவனமானது காகிதம் மற்றும் கூழ் தொழில் துறை பிரிவில் விருதை வென்றது.
- காஞ்சிபுரத்தில் உள்ள SMR ஆட்டோமோட்டிவ் சிஸ்டம்ஸ் இந்தியா லிமிடெட் நிறுவனம் ஆனது நெகிழித் தொழில் துறை பிரிவில் விருதை வென்றது.
- சென்னையில் உள்ள தாஜ் கிளப் ஹவுஸ் மற்றும் தி ரெசிடென்சி ஆனது கட்டிட வகையின் தங்கும் விடுதிகள் துறைகளில் தகுதிச் சான்றிதழை/விருதுகளைப் பெற்று உள்ளன.
- சென்னையின் SBOA பள்ளி மற்றும் இளநிலைக் கல்லூரி (தமிழ்நாடு) 2024 ஆம் ஆண்டு எரிசக்தி வளங்காப்பு குறித்தத் தேசிய அளவிலான ஓவியப் போட்டியில் பாராட்டுப் பரிசினைப் பெற்றுள்ளது.

## விஜய் திவாஸ் - டிசம்பர் 16

- இந்த தினமானது 1971 ஆம் ஆண்டில் பாகிஸ்தானுக்கு எதிராக நடைபெற்ற போரில் இந்தியா பெற்ற ஒரு தீர்க்கமான வெற்றியை நினைவு கூரும் வகையில் அனுசரிக்கப் படுகிறது.
- பாகிஸ்தான் நாட்டின் பெரும் தோல்வியின் விளைவாக கிழக்கு பாகிஸ்தான் ஆனது இஸ்லாமாபாத்தின் கட்டுப்பாட்டில் இருந்து விடுவிக்கப்பட்டு வங்காளதேசம் எனும் தனி நாடாக உருவாக்கப்பட்டது.
- இந்த நாள் இந்திய ஆயுதப்படை வீரர்களின் தியாகம், துணிச்சல் மற்றும் உத்தி சார் திறமை ஆகியவற்றினைக் கொண்டாடுகிறது.




## ஓய்வூதியர்கள் தினம் - டிசம்பர் 17




- 1982 ஆம் ஆண்டின் இதே நாளில் தான், ஓய்வு பெற்ற அதிகாரிகள் மற்றும் ஓய்வூதிய நபர்களுக்கான பேரு மதிப்பு மற்றும் கண்ணியத்தை உறுதி செய்யும் வகையில் உச்ச நீதிமன்றம் ஒரு முக்கிய தீர்ப்பை வழங்கியது.
- இந்தச் சமூகத்திற்கு கண்ணியத்தையும் பெரு மதிப்பினையும் வழங்குவதற்காக பல ஆண்டுகளாகப் போராடிய மறைந்த D.S. நகரா அவர்களை நினைவு கூறும் விதமாக இத்தினம் அனுசரிக்கப்படுகிறது.
- 1979 ஆம் ஆண்டில் மத்திய அரசினால் செயல்படுத்தப்பட்ட தாராளமய ஓய்வூதிய முறையானது ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு ஒப்பீட்டளவில் பயனுள்ளதாக இருந்தது.

❖ இருப்பினும், இது 1979 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதிக்குப் பிறகு பணி ஓய்வு பெற்றவர்களுக்கு மட்டுமே பொருந்தும் என்று வரம்பு நிர்ணயிக்கப்பட்டது.

❖ இந்தப் பாகுபாட்டினை எதிர்த்து D.S. நகரா நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்தார்.

❖ உரிமையியல் நிறுவனங்களுக்கான அரசு ஆணையமானது 1881 ஆம் ஆண்டில் முதன் முதலில் அரசு ஊழியர்களுக்கு ஓய்வூதியப் பலன்களை வழங்கியது.

❖ 1919 மற்றும் 1935 ஆம் ஆண்டுகளில் இயற்றப்பட்ட இந்திய அரசாங்கச் சட்டங்கள் மேற் கொண்ட விதிமுறைகளை உருவாக்கின.

## சர்வதேசப் புலம்பெயர்ந்தோர் தினம் - டிசம்பர் 18

❖ இந்தத் தினமானது ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையினால் 2000 ஆம் ஆண்டில் நிறுவப் பட்டது.

❖ UNGA ஆனது 1960 ஆம் ஆண்டில் பதிவான மாபெரும் அகதிகள் குடியேற்றங்கள் பற்றிய அதன் முதல் மாநாட்டில், புலம்பெயர்ந்தோரின் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான கடமைகளின் தொகுப்பை உருவாக்கியது.

❖ 1990 ஆம் ஆண்டில், UNGA ஆனது அனைத்து புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சர்வதேச உடன்படிக்கைக்கு ஒப்புதல் அளித்தது.

❖ சுமார் 8500க்கும் அதிகமான உயிரிழப்புகளுடன், 2023 ஆம் ஆண்டானது மிக அதிக எண்ணிக்கையிலான புலம்பெயர்ந்தோர் உயிரிழப்பு பதிவான ஆண்டாக இருந்தது.

## தேசிய நுகர்வோர் தினம் - டிசம்பர் 24




❖ இது 1986 ஆம் ஆண்டு நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் இயற்றப்பட்டதை நினைவு கூருகிறது.

- இது நுகர்வோர் உரிமைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல், நுகர்வோரைப் பாதுகாப்பதன் ஒரு முக்கியத்துவத்தை வலியுறுத்துதல் மற்றும் நியாயமான வர்த்தக நடைமுறைகளை ஊக்குவித்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "Virtual Hearings & Digital Access to Consumer Justice" என்பதாகும்.

## சிறுபான்மையினர் உரிமைகள் தினம் 2024 - டிசம்பர் 18




- இந்தத் தினமானது 1992 ஆம் ஆண்டு டிசம்பர் 18 ஆம் தேதியன்று ஐக்கிய நாடுகள் சபையின், தேசிய அல்லது இன, மத மற்றும் மொழி சார் சிறுபான்மைக் குழுக்களைச் சேர்ந்த நபர்களின் உரிமைகள் பிரகடனத்தினைக் குறிக்கிறது.
- இந்தப் பிரகடனம் ஆனது சிறுபான்மையினரின் கலாச்சாரம், மொழி மற்றும் அடையாளத்தைப் பாதுகாப்பதற்கான உரிமையை மிகவும் வலியுறுத்தும் விதமாக உலகளவில் உள்ள சிறுபான்மையினரைப் பாதுகாப்பதற்கான சில கொள்கைகளை வகுத்தது.
- இந்திய அரசும் 1992 ஆம் ஆண்டில் தேசிய சிறுபான்மையினர் ஆணையத்தினை (NCM) நிறுவியது.

## கோவா விடுதலை நாள் - டிசம்பர் 19

- 1947 ஆம் ஆண்டில் இந்தியா சுதந்திரம் அடைந்திருந்தாலும், 1961 ஆம் ஆண்டில் கோவா விடுதலை பெற்ற நாளை இத்தினம் நினைவு கூருகிறது.
- கோவா பகுதியானது 450 ஆண்டுகளுக்கும் மேலாக போர்த்துகீசிய காலனித்துவத்தின் கொடுங்கோன்மை ஆட்சியின் கீழ் இருந்தது.
- இந்திய ஆயுதப் படைகள் ஆனது விஜய் நடவடிக்கை என்ற உத்திசார் இராணுவ நடவடிக்கையைத் தொடங்கி கோவா பகுதியினை வெற்றிகரமாக விடுவித்தது.

- 1961 ஆம் ஆண்டு டிசம்பர் 19 ஆம் தேதியன்று போர்த்துகீசியத் தலைமை ஆளுநர் வசாலோ இ சில்வா சரணடைந்தார்.
- எனவே, கோவா இந்திய ஒன்றியத்தின் ஒரு பகுதியாக மாறியது, மேலும், 1987 ஆம் ஆண்டில் அதற்கு முழு மாநில அந்தஸ்தும் வழங்கப்பட்டது.




**நல்லாட்சி வாரம் 2024 - டிசம்பர் 19/24**




- 2021 ஆம் ஆண்டில் நல்லாட்சி வாரத்தினை (சுஷாசன் சப்தா) கொண்டாடுவதற்கான முடிவானது மேற்கொள்ளப்பட்டது.

- பொது மக்களின் குறைகளை நிவர்த்தி செய்தல் மற்றும் சேவை வழங்கீட்டினை மேம்படுத்துவதற்காக 2024 ஆம் ஆண்டில் "பிரஷாசன் காவ்ன் கி ஓர்" என்ற நாடு தழுவிய பிரச்சாரம் ஆனது 700க்கும் மேற்பட்ட மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டது.
- இந்தப் பிரச்சாரமானது பொதுமக்களின் குறைகளைத் திறம்பட நிவர்த்தி செய்தல் மற்றும் சேவை வழங்கலை மேம்படுத்துதல் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.

## வீர் பால் திவாஸ் - டிசம்பர் 26




- சீக்கிய சமூகத்தினரின் பத்தாவது குருவான குரு கோவிந்த் சிங் அவர்களின் நான்கு மகன்களின் தியாகத்தினை இந்த நாள் குறிக்கிறது.
- அவர்கள் தங்களது சீக்கிய விழுமியங்களைப் பாதுகாப்பதற்கும், அவற்றை நிலை நிறுத்துவதற்கும், பாதுகாப்பதற்குமான தங்களது அசாதாரணமான துணிச்சலையும் அர்ப்பணிப்பையும் வெளிப்படுத்தினர்.
- 1705 ஆ ஆண்டு டிசம்பர் மாதத்தில் நடைபெற்ற சம்கௌர் போரின் போது இரண்டு மூத்த மகன்களான அஜித் சிங் மற்றும் ஜுஜார் சிங் ஆகியோர் துணிந்து தங்கள் உயிர்களைத் துறந்தனர்.
- அவர்களின் துணிவு, அர்ப்பணிப்பு மற்றும் தியாகத்தைப் போற்றும் வகையில் இந்திய அரசு ஆனது 2022 ஆம் ஆண்டில் இந்த நாளைத் தொடங்கியது.

## சர்வதேச தொற்றுநோய் தயார்நிலை தினம் - டிசம்பர் 27

- உலகெங்கிலும் தொற்றுநோய்க்கான தயார்நிலையினைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும் வலுப்படுத்துவதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- கோவிட்-19 பெருந்தொற்றின் போது ஏற்பட்ட சுகாதார நெருக்கடியின் அனுபவங்களை கருத்தில் கொள்வதற்காக, 2020 ஆம் ஆண்டில் UNGA சபையினால் இந்தத் தினம் ஆனது தொடங்கப் பட்டது.
- இந்த நாள் உலகளாவிய ஒற்றுமை மற்றும் ஒத்துழைப்பை மேம்படுத்த உதவுகிறது.

## சர்வதேச மனிதகுல ஒற்றுமை தினம் - டிசம்பர் 20

- இந்தத் தினமானது, மக்களின் பகிரப்பட்ட மனித நேயத்தையும், நாம் அனைவரும் உலகளாவியச் சமூகத்தின் ஒரு பகுதி என்ற எண்ணத்தையும் அங்கீகரிக்கிறது.
- வறுமை, சமத்துவமின்மை மற்றும் சமூக அநீதி உள்ளிட்ட பல்வேறு உலகளாவிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக, ஒற்றுமை, ஒத்துழைப்பு மற்றும் பகிரப்பட்டப் பொறுப்புணர்வை மேம்படுத்துவதை இத்தினம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது பன்முகத் தன்மை மற்றும் நல்லிணக்கத்தைக் கொண்டாட வேண்டி மக்களை ஒன்றிணைக்கும் அதே வேளையில் சர்வதேச ஒப்பந்தங்களின் கீழ் அரசாங்கத்தின் கடமையை நினைவூட்டுகிறது.
- இந்தத் தினமானது 2005 ஆம் ஆண்டு டிசம்பர் 22 ஆம் தேதியன்று ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் அதிகாரப் பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டது.




## SSB உருவாக்க தினம் - டிசம்பர் 20



- இது 1962 ஆம் ஆண்டில் சீன ஆக்கிரமிப்புக்குப் பின்னர், 1963 ஆம் ஆண்டில் சிறப்புப் படையாக நிறுவப்பட்டது.
- இது 2001 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் இந்திய நேபாளத்திற்கான முன்னணி உளவுத் துறை /புலனாய்வு முகமையாக அறிவிக்கப்பட்டு, அதற்கான ஒரு பணி பிராந்தியமாக அதற்கு இந்திய நேபாள எல்லைப் பாதுகாப்பு பணிகள் ஒதுக்கப் பட்டன.
- 2004 ஆம் ஆண்டில், இந்திய பூடான் எல்லைப் பாதுகாப்பு பணிகளும் ஒதுக்கப்பட்டன.
- இது உள்துறை அமைச்சகம் மற்றும் மத்திய ஆயுதக் காவல் படைகளின் (CAPF) ஒரு பிரிவின் கீழ் செயல்படுகிறது.

## முதலாவது உலக தியான தினம் - டிசம்பர் 21

- இந்த ஆண்டு, ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையானது முதலாவது உலக தியான தினத்தினைத் தொடங்கியுள்ளது.
- இந்த நிகழ்ச்சியைக் குறிக்கும் வகையில், இந்தியாவின் நிரந்தரத் தூதரகமானது நியூயார்க் நகரில் உள்ள ஐ.நா தலைமையகத்தில் ஒரு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தது.
- குளிர்கால நீண்ட இரவு நாளின் கலாச்சார மற்றும் வானியல் முக்கியத்துவத்திற்காக இந்தத் தேதியானது தேர்ந்தெடுக்கப் பட்டது.
- நாக்பூர் நகரில் உள்ள ஆரோக்கியத் துறை சார்ந்த ஒரு புத்தொழில் நிறுவனமான ஹாபில்ட், 2,87,711 பங்கேற்பாளர்களுடன் மிகப்பெரிய காணொளி வாயிலான தியான அமர்வினை நடத்தி ஒரு உலக சாதனையைப் படைத்துள்ளது.
- இந்த ஆண்டின் கருத்துரு : "Inner Peace, Global Harmony!" என்பதாகும்.




## குளிர்கால நீண்ட இரவு நாள் - டிசம்பர் 21

- இந்தத் தினமானது, வடக்கு அரைக்கோளத்தில் குளிர் காலத்தின் ஒரு அதிகாரப்பூர்வத் தொடக்கத்தைக் குறிக்கிறது.
- புவியின் வட துருவம் ஆனது, சூரியனிலிருந்து வெகு தொலைவில் சாய்ந்து காணப் படுவதால், இத்தினம் ஆண்டின் மிகக் குறுகிய பகல் மற்றும் மிக நீண்ட இரவு நாளைக் கொண்டுள்ளது.

- குளிர் கால நீண்ட இரவு நாள் ஆனது ஒவ்வொரு அரைக்கோளத்திலும் சில குறிப்பிட்ட தேதிகளில் நிகழ்கிறது.
- வடக்கு அரைக்கோளத்தில், இது ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர் 21 அல்லது டிசம்பர் 22 ஆம் தேதியன்று நிகழ்கிறது.
- தெற்கு அரைக்கோளத்தில், குளிர்கால நீண்ட இரவு நாளானது ஆண்டுதோறும் ஜூன் 20 அல்லது ஜூன் 21 ஆம் தேதியன்று நிகழ்கிறது.




## தேசிய கணித தினம் - டிசம்பர் 22




- இந்தத் தினமானது, இந்தியக் கணிதவியலாளர் சீனிவாச இராமானுஜர் அவர்களின் பிறந்த நாளைக் குறிக்கிறது.
- இந்தத் தினம் ஆனது கணிதத் துறையில் அவர் ஆற்றிய உள்ளார்ந்தப் பங்களிப்பினை அங்கீகரிப்பதற்காகவும், ஒரு நவீன சமுதாயத்தினை வடிவமைப்பதில் கணிதப் பாடம் வகிக்கும் முக்கியப் பங்கை எடுத்துரைப்பதற்காகவும் அனுசரிக்கப்படுகிறது.

- 2012 ஆம் ஆண்டில், இராமானுஜர் அவர்களின் 125வது பிறந்தநாளில் அப்போதையப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களால் இத்தின அனுசரிப்பானது அதிகாரப் பூர்வமாக தொடங்கப்பட்டது.

**தேசிய விவசாயிகள் தினம் - டிசம்பர் 23**

- இது இந்தியாவின் ஐந்தாவது பிரதமர் சௌத்ரி சரண் சிங் அவர்களின் பிறந்த நாளைக் குறிக்கிறது.
- 1979 ஆம் ஆண்டு முதல் 1980 ஆம் ஆண்டு வரையில் அவர் இந்தியாவின் ஐந்தாவது பிரதமராகப் பணியாற்றினார்.
- அவருடைய பதவிக் காலத்தில் விவசாயிகளுக்கு அதிகாரமளிப்பதில் முக்கியப் பங்கு வகித்ததால், அவர் பெரும்பாலும் "விவசாயிகளின் வாகையர்" என்று குறிப்பிடப் படுகிறார்.
- அவர் 1939 ஆம் ஆண்டின் கடன் திருப்பிச் செலுத்தல்/ மீட்பு மசோதா போன்ற முக்கியச் சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தினார்.
- 2024 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Empowering 'Annadatas' for a Prosperous Nation" என்பதாகும்.




**நல்லாட்சி தினம் - டிசம்பர் 25**

- இது முன்னாள் பிரதமரான அடல் பிஹாரி வாஜ்பாய் அவர்களின் பிறந்த நாளைக் குறிக்கிறது.
- இவர் மூன்று முறை இந்தியாவின் பிரதமராகப் பணியாற்றியுள்ளார்.
- 1996 ஆம் ஆண்டில், பிரதமராகப் பதவியேற்ற அவரது முதல் பதவிக்காலம் 13 நாட்கள் மட்டுமே நீடித்தது.

- அவரது இரண்டாவது பதவிக்காலம் ஆனது 1998 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் 1999 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரை பதின்மூன்று மாதங்கள் நீடித்தது.
- 1999 முதல் 2004 ஆம் ஆண்டு வரையிலான அவரது மூன்றாவது பதவிக் காலம் முழுவதும் அவர் பதவியில் இருந்தார்.
- 2015 ஆம் ஆண்டில் அவருக்கு இந்தியாவின் மிக உயரியக் குடிமை விருதான பாரத ரத்னா விருது வழங்கப்பட்டது.

# இதரச் செய்திகள்

## இந்தியாவின் பரபரப்பான விமான நிலையம் 2024

- 2024 ஆம் நிதியாண்டில், தேசியத் தலைநகரான டெல்லிக்கு விமானச் சேவை வழங்கும் இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையம் ஆனது, 73.67 மில்லியனுக்கும் அதிகமான பயணிகளின் போக்குவரத்தினைக் கையாண்டுள்ளது.
- பெங்களூருவில் உள்ள கெம்பேகௌடா சர்வதேச விமான நிலையம் (KIA) ஆனது, சர்வ தேசப் பயணிகள் போக்குவரத்தில் மும்பை மாநகருக்கு அடுத்தபடியாக இந்தியாவின் மூன்றாவது பரபரப்பான விமான நிலையமாக உருவெடுத்துள்ளது.
- இது 2024 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் மிக முன்னணி பெற்ற சென்னை மற்றும் கொச்சி விமான நிலையங்களை விஞ்சியுள்ளது.
- உள்நாட்டுப் பயணிகள் போக்குவரத்தில், டெல்லி மற்றும் மும்பைக்கு அடுத்தபடியாக பெங்களூரு மூன்றாவது இடத்தில் உள்ளது.

## புதிய டெரோசர் இனங்கள் - ஜப்பான்

- ஜப்பான் நாட்டில் கண்டுபிடிக்கப்பட்ட முதல் டெரோசர் இனங்களின் மாதிரியானது ஹொக்கைடோவில் உள்ள யெசோ குழுவினைச் சேர்ந்தது.
- புதிதாக அடையாளம் காணப்பட்ட இந்த ஒரு உயிரினமானது டெரோசார் குடும்பமான அஸ்தார்ச்சிடேயின் குயிட்ஷால்கோட்லினே எனப்படுகின்ற துணைக் குடும்பத்தின் ஓர் அங்கமாகும்.
- 210 முதல் 65 மில்லியன் ஆண்டுகளுக்கு முந்தையக் காலத்தில் வாழ்ந்த டெரோசார் பறக்கும் ஊர்வன இனங்களாகும்.
- அவை புவியில் வாழ்ந்த முதல் பறக்கும் முதுகெலும்புயிரிகள் ஆகும் என்ற நிலையில் பறவைகள் மற்றும் வௌவால்கள் அதன் பின்னரே தோன்றின.



### ஃபெஞ்சல் புயல்

- ஃபெஞ்சல் என்ற புயல் கரையைக் கடந்து, காரைக்கால் மற்றும் மகாபலிபுரம் இடையே தமிழகக் கரையைக் கடந்தது.
- இந்தப் புயலால், கடந்த 30 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு புதுச்சேரியில் மிக அதிக பட்சமாக 46 சென்டி மீட்டர் மழைப் பொழிவு பதிவாகியுள்ளது.
- இதற்கு முன்பு 2004 ஆம் ஆண்டு அக்டோபர் 31 ஆம் தேதியன்று அதிகபட்சமாக சுமார் 21 சென்டி மீட்டர் மழைப் பொழிவானது பதிவானது.
- ஃபெஞ்சல் என்ற பெயர் ஆனது சவுதி அரேபிய நாட்டினால் வழங்கப்பட்டது.



### ஷாஹி ஜமா மஸ்ஜித் பிரச்சினை – உத்தரப் பிரதேசம்

- சம்பலில் உள்ள 16 ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்த ஜமா மஸ்ஜித் ஒரு பழமையான ஹரி ஹரன் கோயிலின் இடத்தில் கட்டப்பட்டது என்று மனுவில் கூறப்பட்டுள்ளது.
- உத்தரப் பிரதேசத்தில் உள்ள வாரணாசியில் உள்ள ஞானவாபி மசூதி மற்றும் ஈத்கா மஸ்ஜித் மதுரா மற்றும் மத்தியப் பிரதேசத்தில் உள்ள கமால்-மௌலா மஸ்ஜித் ஆகிய

வழக்குகளில் கூறப்பட்ட கோரல்களை ஒத்ததாக இது இருந்தது.

- சம்பல் மசூதி ஒரு பாதுகாக்கப்பட்ட தேசிய நினைவுச்சின்னமாகும்.
- 1526 மற்றும் 1530 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் முகலாயப் பேரரசர் பாபர் அவர்களால் கட்டமைக்கப்பட்ட மூன்று மசூதிகளில் சம்பலில் உள்ள ஜமா மஸ்ஜித் மசூதியும் ஒன்றாகும்.
- மற்ற இரண்டு மசூதிகள் ஆனது பானிபட் நகரில் உள்ள மசூதி மற்றும் 1992 ஆம் ஆண்டில் இடிக்கப்பட்ட அயோத்தியில் உள்ள பாபர் மசூதி ஆகியனவாகும்.
- சம்பல் மசூதியானது 1528 ஆம் ஆண்டில் பாபரின் தளபதி மிர் இந்து பெக் என்பவரால் கட்டப்பட்டது.
- விஷ்ணுவின் பத்தாவது அவதாரமான கல்கி, சம்பலில் அவதரிப்பார் என்று இந்து புராணங்களில் நம்பப் படுகிறது.
- 1991 ஆம் ஆண்டு வழிபாட்டுத் தலங்கள் சட்டத்தின் படி, 1947 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 ஆம் தேதியன்று இருந்த அனைத்து வழிபாட்டுத் தலங்களின் மதத் தன்மையும் பேணப் பட வேண்டும்.
- சம்பல் மசூதி தொடர்பாக தற்போது தாக்கல் செய்யப்பட்ட மனுவில் 1991 ஆம் ஆண்டு சட்டத்திற்கு முரணாக, வழிபாட்டுத் தலத்தின் ஒரு அடிப்படைத் தன்மையை மாற்றக் கோரப் பட்டுள்ளது.



Prayers in progress amid tight security at Shahi Jama Masjid on Friday. ANI

## சைபீரிய நெட்டைக் கொக்கு - மிக நீண்ட தூர வலசை போதல் நிகழ்வு

- சைபீரிய நெட்டைக் கொக்குகள் சுமார் 3,676 கிலோமீட்டர் தொலைவிலான மிக நீண்ட பயணத்தினை மேற்கொண்டு ராஜஸ்தானுக்கு வந்தடைந்ததுடன் இந்த மாநிலத்திற்கு வரும் வலசை போகும் பறவைகளில் புதிய நீண்ட தூர பயண சாதனையாகப் பதிவாகி உள்ளது.
- முன்னதாக இதன் 2,800 கிலோ மீட்டர் தூர பயணமானது, ஒரு நீண்ட தூரப் பயணமாக மங்கோலியாவில் பதிவு செய்யப்பட்டது.

❖ ராஜஸ்தானின் பலோடி மாவட்டத்தில் உள்ள கிச்சான் என்னுமிடமானது நெட்டைக் கொக்குகளுக்கான இந்தியாவின் முதல் காப்புப் பகுதியாகும்.




## தாதுக்கள் ஏற்றப்பட்ட நீர் - அதிக ஆபத்துள்ள உணவு




❖ FSSAI ஆனது குடுவையிடப்பட்ட குடிநீர் மற்றும் தாதுக்கள் மிக ஏற்றப்பட்ட நீரை அதிக ஆபத்துள்ள உணவு வகையாக மறுவகைப்படுத்தியுள்ளது.

❖ இது பெருமளவு கடுமையான ஒழுங்குமுறை கட்டுப்பாடுகள் மற்றும் நீர்ச் சுத்திகரிப்பு ஆலைகளின் வருடாந்திர ஆய்வுகளைக் கட்டாயமாக்குகிறது.

❖ FSSAI அமைப்பின் மறுவகைப்படுத்தல் ஆனது, 2011 ஆம் ஆண்டு உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிலைகள் (விற்பனை மீதான பெரும் தடை மற்றும் கட்டுப்பாடுகள்) ஒழுங்கு முறைகளில் சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு திருத்தங்களைத் தொடர்ந்து மேற்கொள்ளப் பட்டுள்ளது.

## மின்கே திமிங்கலங்களின் கேட்கும் திறன் பரவல் எல்லை

❖ மின்கே திமிங்கலங்கள் 48-90 கிலோஹெர்ட்ஸ் (kHz) வரையிலான அதிக அதிர்வெண் ஒலிகளைக் கண்டறியக் கூடியவை என்று அறிவியலாளர்கள் நேரடியாக மதிப்பிட்டு உள்ளனர்.

- இது முன்பு நம்பப் பட்டதை விட மிக அதிகமான கேட்கும் உணர்திறனைக் கொண்டு உள்ளதைக் காட்டுகிறது.
- புவிக் கிரகத்தின் மிகப்பெரிய பாலூட்டிகள் ஆன பலீன் திமிங்கலங்கள் - தற்போது அங்கீகரிக்கப்பட்டதை விட பல்வேறு மானுடவியல் நடவடிக்கைகளால் ஏற்படும் கடல் இரைச்சலால் மேலும் அதிகமாகப் பாதிக்கப்படலாம்.




## 2024 ஆம் ஆண்டின் சிறந்த சொல்

- Dictionary.com ஆனது 2024 ஆம் ஆண்டின் சிறந்த சொல்லாக "demure" என்று அறிவித்து உள்ளது.
- demure என்ற இந்தச் சொல்லானது, "அமைதி, பணிவு மற்றும் அடக்கம்; தன்னடக்கம்/ தனியுரிமைக் காப்பு" என்று பொருள்படுகிறது.
- கேம்பிரிட்ஜ் அகராதியின் 2024 ஆம் ஆண்டிற்கான சிறந்த சொல்லாக 'Manifest' என்ற ஒரு சொல் அறிவிக்கப்பட்டுள்ளது.
- "to manifest" என்ற ஒரு சொற்றொடர் ஆனது 'நீங்கள் விரும்பும் ஒன்றை அடைவதைக் கற்பனை செய்வது' என்ற பொருளில் பயன்படுத்தப்படுகிறது.
- ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக அச்சகம் ஆனது 2024 ஆம் ஆண்டிற்கான அதன் சிறந்த சொல்லாக 'brain rot' என்ற சொல்லினை அறிவித்துள்ளது.
- இது சிந்தனை இல்லாத வகையிலான சமூக ஊடக உள்ளடக்கத்தினை அதிகளவில் காண்பதால் ஏற்படும் அறிவாற்றல் வீழ்ச்சியைக் குறிக்கிறது.

## 2024 ஆம் ஆண்டு விமானச் சேவை நிறுவனத் தரவரிசை

- இந்தியாவின் மிகப்பெரியதொரு விமானச் சேவை நிறுவனமான இண்டிகோ, 2024 ஆம் ஆண்டில் உலகின் மோசமான விமானச் சேவை நிறுவனங்களில் (103) ஒன்றாக இடம் பிடித்துள்ளது.
- 109 விமான நிறுவனங்களில் பிரசல்ஸ் ஏர்லைன்ஸ் (விமான சேவை) நிறுவனம் இந்தப் பட்டியலின் முதலிடத்திலும், கத்தார் ஏர்வேஸ் மற்றும் யுனைடெட் ஏர்லைன்ஸ் (8.04)

அடுத்தடுத்த இடங்களிலும் உள்ளன.

- இதர மற்ற 109 விமான நிறுவனங்களில் இந்தியாவில் இருந்து இடம் பெற்ற ஒரேயொரு நிறுவனமான ஏர் இந்தியா இதில் 61வது இடத்தைப் பெற்றுள்ளது.




## ஹோமோ ஜூலுயென்சிஸ்

- தனித்துவமான பெரிய மண்டை ஓடுகளுடன் கூடிய ஹோமோ ஜூலுயென்சிஸ் என்ற ஒரு புதிய மனித இனம் தற்போது கண்டுபிடிக்கப் பட்டுள்ளதோடு இதற்கு "பெரிய தலை மனிதர்கள்" என்று பெயரிடப்பட்டுள்ளது.
- ஒரு காலத்தில் கிழக்கு ஆசியாவில் ஹோமோ சேபியன்களுடன் சேர்ந்து வாழ்ந்ததாக இந்த மர்மக் குழுவானது கருதப்படுகிறது.
- இந்தப் புதைபடிவ எச்சங்கள் சுமார் 200,000 ஆண்டுகளுக்கு முந்தைய வண்டல் அடுக்குகளிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.
- இதன் ஆரம்ப அளவீடுகள் ஆனது, இவை ஹோமோ சேபியன்களின் மூளையை விட சுமார் 30% வரை பெரியதாக இருந்ததாகக் காட்டுகிறது.
- ஹோமோ ஜூலுயென்சிஸ் சுமார் 300,000 ஆண்டுகளுக்கு முன்பிலிருந்து கிழக்கு ஆசியாவில் வாழ்ந்து சுமார் 50,000 ஆண்டுகளுக்கு முன்பு மறைந்து போன இனமாகும்.



## ஆஸ்திரோ-ஆசியா நாடுகளுடன் நிக்கோபரீஸ் தொடர்பு

- சமீபத்திய ஆய்வுகள் ஆனது, தென்கிழக்கு ஆசியாவில் உள்ள பண்டைய ஆஸ்திரோ ஆசிய மக்களுடன் உள்ள தொடர்புகளை வெளிப்படுத்தியுள்ளன.
- சுமார் 11,700 ஆண்டுகளுக்கு முன்பு, நிக்கோபரீஸ் மொழியியல் மூதாதையர்கள் ஹோலோசீன் காலகட்டத்தில் நிக்கோபர் தீவுக்கூட்டத்தில் குடியேறியதாக முந்தைய கோட்பாடுகள் தெரிவிக்கின்றன.
- இருப்பினும், நிக்கோபார் தீவுவாசிகள் ஏறக்குறைய 5000 ஆண்டுகளுக்கு முன்பு தான் அங்கு குடியேறியதாக இந்தப் புதிய ஆய்வுகள் தெரிவிக்கின்றன.




## மெல்யே-அமிலி – புளிக்கச் செய்யப்பட்ட மூங்கில் குருத்து

- மெல்யே-அமிலி கொண்டுள்ள உடல் பருமன் எதிர்ப்பு பண்புகள் ஆனது, எடையினைச் சீராகப் பேணுவதற்கும் வளர்சிதை மாற்ற ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்குமான இயற்கையான உணவுத் தீர்வினை வழங்குகிறது.
- இது திரிபுராவின் பாரம்பரிய புளிக்கச் செய்யப்பட்ட மூங்கில் குருத்து வகையாகும்.
- வட கிழக்கு இந்தியாவில், சில சமூகத்தினர் மூங்கில் குருத்துகளை மிக நன்கு புளிக்க வைப்பதற்காக வேண்டி சில தனித்துவமான முறைகளை உருவாக்கியுள்ளனர் என்ற நிலையில் இந்தத் தனித்துவமான முறைகள் அவற்றின் ஊட்டச்சத்து மதிப்பு மற்றும் சுவையை மேம்படுத்துகின்றன.



## உலகின் பணக்காரக் குடும்பங்கள் 2024

- வால்மார்ட் வால்டன்ஸ் குடும்பம் ஆனது சுமார் 432.4 பில்லியன் டாலருடன் உலகின் பணக்கார/ செல்வ வளம் மிக்கக் குடும்பமாக மீண்டும் முதலிடத்தைப் பெற்றுள்ளது.
- ஐக்கிய அரபு அமீரகத்தில் ஆட்சியில் உள்ள அரசக் குடும்பம் ஆனது, 323.9 பில்லியன் டாலர் மதிப்பிலான சொத்துக்களுடன் இந்த ஆண்டிற்கான பட்டியலில் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது.
- கத்தாரின் அல் தானி அரசக் குடும்பம் ஆனது, சுமார் 172.9 பில்லியன் டாலர் சொத்து மதிப்புடன் இந்தப் பட்டியலில் மூன்றாவது இடத்தில் உள்ளது.
- இந்தியாவின் அம்பானி குடும்பம் இதில் 8வது இடத்தைப் பிடித்துள்ளனர் (சுமார் 99.6 பில்லியன் டாலர்).
- ஷபூர்ஜி பல்லோன்ஜி மிஸ்திரி (41.4 பில்லியன் டாலர்கள்) குடும்பம் இந்தப் பட்டியலில் 23வது இடத்தைப் பிடித்துள்ளது.



## இந்தியப் பிரதமரின் குவைத் பயணம்

- 43 ஆண்டு கால இடைவெளிக்குப் பிறகு இந்தியப் பிரதமர் குவைத் பயணம் மேற் கொண்டுள்ளார்.
- அவர் 26வது அரேபிய வளைகுடா கோப்பையின் பெரும் தொடக்க விழாவில் 'கௌரவ விருந்தினராக' கலந்து கொண்டார்.
- அவருக்கு விசாம் முபாரக் அல்-கபீர் அல்லது ஆர்டர் ஆஃப் முபாரக் தி கிரேட் விருது வழங்கப்பட்டது.
- இது அவருக்கு ஓர் உலக நாடு வழங்கிய 20வது சர்வதேச விருது ஆகும்.
- இங்கிலாந்தின் இராணி இரண்டாம் எலிசபெத், முன்னாள் அமெரிக்க அதிபர்களான ஜார்ஜ் H.W. புஷ் மற்றும் பில் கிளிண்டன், சவுதி அரேபியாவின் மன்னர் சல்மான் மற்றும் பலர் இந்த விருதைப் பெற்றவர்கள் ஆவர்.
- குவைத்தின் மொத்த மக்கள் தொகையில் இந்தியர்கள் சுமார் 21 சதவீதம் (1 மில்லியன்) மற்றும் அதன் பணியாளர்களில் 30 சதவீதம் (சுமார் 9 லட்சம்) பேர் இந்தியர்கள் ஆவர்.

- குவைத் நாட்டின் உடனான இருதரப்பு வர்த்தகம் ஆனது 2023-24 ஆம் நிதியாண்டில் 10.47 பில்லியன் டாலர் மதிப்புடையதாக இருந்தது.
- குவைத் நாடானது, நாட்டின் எரிசக்தி தேவையில் சுமார் 3% பூர்த்தி செய்வதுடன் இந்தியாவின் ஆறாவது பெரிய கச்சா எண்ணெய் வழங்கீட்டு நாடாக உள்ளது.
- குவைத் நாட்டிற்கான இந்திய ஏற்றுமதிகள் முதன்முறையாக 2 பில்லியன் டாலரை எட்டியது அதே நேரத்தில் இந்தியாவில் குவைத் முதலீட்டு ஆணையத்தின் முதலீடுகள் 10 பில்லியன் டாலர் மதிப்பினைத் தாண்டியது.
- இதற்கு முன்னதாக 1981 ஆம் ஆண்டில் அப்போதைய இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி குவைத் நாட்டிற்குப் பயணம் மேற்கொண்டார்.




## டிங்கா வைரஸ் நோய் – உகாண்டா

- இந்த மர்ம நோய் ஆனது, நடனத்தினை ஒத்த அசைவு போன்ற கட்டுப்படுத்த முடியாத நடுக்கத்தினைக் கொண்டு குறிக்கப் படுகிறது.
- மிக முதன்மையாக பெண்களும் சிறுமிகளுமே இந்த நோயினால் அதிகம் பாதிக்கப் படுகின்றனர்.
- தற்போது வரையில், மூலிகை மருத்துவம் உட்பட எந்த மருந்துகளும் இந்த நோயைக் குணப் படுத்தும் என்பதற்கு எந்த அறிவியல் பூர்வ ஆதாரமும் இல்லை.



## யானா கண்டுபிடிப்பு



- சைபீரியாவின் தொலைதூர யாகுடியா பகுதியில் உள்ள உருகி வரும் நிலத்தடி உறை பனியில் கண்டுபிடிக்கப்பட்ட 50,000 ஆண்டுகள் பழமையான குட்டி மாமோத்தின் (கம்பளி யானை) எச்சங்களை ரஷ்ய அறிவியலாளர்கள் வெளிப்படுத்தியுள்ளனர்.
- ஒரு கண்டுபிடிக்கப்பட்ட நதிப் படுகையினைக் கொண்டு இதற்கு "யானா" என்று அழைக்கப் படுகிறது.
- இது இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட "சிறந்த முறையில் பாதுகாக்கப்பட்ட" மாமோத் சடலம் என்று கூறப்படுகிறது.
- முன்னதாக சுமார் 32,000 ஆண்டுகளுக்குக் குறைவான வயதுடையதாகக் கருதப்படும் கொடுவாள் புலியின் பகுதியளவு பதப்படுத்தப்பட்ட ஒரு உடலை அறிவியலாளர்கள் கண்டுபிடித்தனர்.
- இந்த ஆண்டின் தொடக்கத்தில், 44,000 ஆண்டுகள் பழமையான ஓநாயின் எச்சங்களும் கண்டறியப்பட்டன.

## 2024 ஆம் ஆண்டின் உலகின் பரபரப்பான உள்நாட்டு விமான வழித்தடம்

- இந்தியாவின் பரபரப்பான விமான வழித்தடமான மும்பை-டெல்லி ஆனது 2024 ஆம் ஆண்டு தரவரிசையில் உலகளவில் எட்டாவது பரபரப்பான உள்நாட்டு வழித்தடமாக தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது.
- ஆசிய பசிபிக் பிராந்தியத்தில், மும்பை-டெல்லி வழித்தடம் ஆறாவது பரபரப்பான வழித் தடமாக தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது.
- தென் கொரியா வழித் தடத்தில் ஜெஜு இன்டர்நேஷனல் - சியோல் ஜிம்போ முதல் இடத்தைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது.



## பெல்காம் அமர்வின் 100வது ஆண்டு நிறைவு

- காங்கிரஸ் தலைவர்கள் 1924 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க காங்கிரஸ் மாநாட்டிற்கு மகாத்மா காந்தி அவர்கள் தலைமை தாங்கிய நிகழ்வின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுகின்றனர்.
- 1924 ஆம் ஆடனில் பெல்காம் நகரில் நடைபெற்ற அமர்வு ஆனது, இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தில் ஒரு தனித்துவமான இடத்தைப் பெற்றுள்ளது.
- காங்கிரஸ் தலைவராக ஓர் அமர்விற்கு மகாத்மா காந்தி அவர்கள் தலைமை வகித்த ஒரே அமர்வு அதுவேயாகும்.
- காந்தி ஒத்துழையாமை இயக்கத்தை இடைநிறுத்த வழி வகுத்த 1922 ஆம் ஆண்டு சௌரி சௌரா சம்பவத்தைத் தொடர்ந்து இந்த அமர்வு நடைபெற்றது.
- இது மோதிலால் நேரு மற்றும் C.R.தாஸ் தலைமையிலான சுராஜ்ஜிய தரப்பினருக்கும், காந்தியின் அகிம்சையான எதிர்ப்பு என்ற கொள்கையினை ஆதரித்த மாற்றத்தை விரும்பாத தரப்பினருக்கும் இடையே கட்சியில் பிளவை ஏற்படுத்தியது.
- இந்த அமர்வின் போது, காந்தி அவர்கள் அகிம்சை, மத நல்லிணக்கம் மற்றும் "சுய ராஜ்ஜியம்" பற்றிய தனது கருத்துக்களை முன்வைத்தார்.




## CPI உருவாக்கப்பட்டதன் 100வது ஆண்டு விழா

- இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (CPI) இந்தியாவின் பழமையான கம்யூனிஸ்ட் கட்சியாகும்.
- CPI ஆனது, 1925 ஆம் ஆண்டு டிசம்பர் 26 ஆம் தேதியன்று நவீனகால கான்பூர் நகரில் நிறுவப் பட்டது.
- CPI ஆனது பிரிட்டிஷ் கால காலனித்துவத்திற்கு எதிர்ப்பு, சாதி அமைப்புக்கு எதிரான போராட்டம் மற்றும் நிலச் சீர்திருத்தம் ஆகியவற்றில் பெரிதும் ஈடுபட்டது.
- மதராசினைச் சேர்ந்த மலையபுரம் சிங்காரவேலு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நிறுவனர்களில் ஒருவரானார்.

- கான்பூரில் நடைபெற்ற அதன் தொடக்க மாநாட்டிற்கு அவர் தலைமை தாங்கினார்.
- 1964 ஆம் ஆண்டில் CPI கட்சியில் இருந்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) தனியாகப் பிரிந்தது.
- இது 1920 ஆம் ஆண்டு அக்டோபர் 17 ஆம் தேதியை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நிறுவன நாளாகக் கருதுகிறது.
- இந்த நாளில், M.N. ராய், ஈவ்லின் ட்ரென்ட்-ராய், அபானி முகர்ஜி, ரோசா ஃபிடிங்கோவ், முகமது அலி, முகமது ஷஃபீக், மற்றும் M.P.T.ஆச்சார்யா ஆகியோர் இந்தியாவில் கம்யூனிஸ்ட் இயக்கத்தை உருவாக்க என உஸ்பெக்கிஸ்தான் நாட்டின் தலைநகரான தாஷ்கண்டில் கூடினர்.




## பெண்களின் தலைமையில் இயங்கும் புத்தொழில் நிறுவனங்கள் - இந்தியா




- இந்தியப் புத்தொழில் நிறுவனங்கள் முன்னெடுப்பின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட குறைந்த பட்சம் ஒரு பெண் இயக்குனரைக் கொண்ட சுமார் 73,000க்கும் மேற்பட்ட புத்தொழில் நிறுவனங்கள் இந்தியாவில் உள்ளன.
- இது அரசாங்கத்தினால் ஆதரிக்கப்படும் 1,57,066 புத்தொழில் நிறுவனங்களில் சுமார் பாதி எண்ணிக்கையினைக் குறிக்கிறது.

- 2023 ஆம் ஆண்டில், உள்நாட்டு தொழில்நுட்பத் துறைக்கான ஒரும் ஒட்டு மொத்த நிதி உதவியில் 13% ஆன 1.1 பில்லியன் டாலர் நிதி பெண்கள் தலைமையிலான புத்தொழில் நிறுவனங்கள் மூலம் பெறப்பட்டுள்ளது.
- சுமார் 100க்கும் மேற்பட்ட யூனிகார்ன் நிறுவனங்களுடன், இந்தியாவானது உலகளவில் மிகத் துடிப்பு மிக்க புத்தொழில் நிறுவன சூழல் அமைப்புகளில் ஒன்றாக உருவெடுத்து உள்ளது.

## பெருங்கடல் ஆக்ஸிஜன் குறைபாட்டு நிகழ்வு 1a

- பெருங்கடல் ஆக்ஸிஜன் குறைபாட்டு (அனாக்ஸிக்) நிகழ்வு 1a (OAE 1a) என்பது கடந்த 200 மில்லியன் ஆண்டுகளில் உலகளாவிய கார்பன் சுழற்சி நிலை மற்றும் பருவநிலை அமைப்பின் மிகப்பெரிய இடையூறுகளில் ஒன்றாகும்.
- இது 119.5 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு தூண்டப்பட்டு 1.1 மில்லியன் ஆண்டுகள் நீடித்தது என்று புதிய ஆராய்ச்சி முடிவு செய்துள்ளது.
- இந்த நிகழ்வு ஆனது பெருங்கடல்களில் ஆக்ஸிஜன் (நீரில் காணப்படும் ஆக்ஸிஜன்) பற்றாக்குறையை ஏற்படுத்தியது மற்றும் பெருமளவிலான அழிவுகளுக்கு, குறிப்பாக பிளாங்க்டன் உயிரினங்களின் அழிவிற்கு வழி வகுத்தது.
- OAE 1a நிகழ்வு ஏற்படுவதற்கான ஒரு காரணம் கடலுக்கு அடியில் ஏற்படும் எரிமலை வெடிப்புகள் ஆகும், இதன் விளைவாக கடல் மற்றும் வளிமண்டலத்தில் மாபெரும் அளவிலான கார்பன் டை ஆக்சைடு (CO2) விரைவாக வெளியேற்றப்பட்டது.




## 5,000 ஆண்டுகள் பழமையான நீர் மேலாண்மை முறை

- அரியானாவின் ராக்கிகர்ஹி என்ற தளத்தில் நடைபெற்று வரும் ஒரு தொல்லியல் அகழ்வாராய்ச்சியில், ஏறக்குறைய சுமார் 5,000 ஆண்டுகளுக்கு முந்தைய அதிநவீன நீர் மேலாண்மை அமைப்புகள் மற்றும் கலாச்சார நடைமுறைகளின் சான்றுகள் கண்டறியப் பட்டுள்ளன.
- ஒன்று மற்றும் இரண்டு மேடுகளுக்கு இடையே 3.5 முதல் 4 அடி வரை மதிப்பிடப்பட்ட ஆழங்களுடன் கூடிய நீர்ச் சேமிப்புப் பகுதிகள் கண்டறியப்பட்டுள்ளன.
- அந்த இடத்திலிருந்து சுமார் 300 மீட்டர் தொலைவில் சௌதாங் நதி (திரிஷாவதி நதி என்றும் அழைக்கப்படுகிறது) என அடையாளம் காணப்பட்ட வறண்ட ஆற்றுப்படுகை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- இந்தப் பகுதியில் வாழ்ந்த மக்கள் தங்கள் நீர் சேவைக்காக இந்த நதியை சார்ந்திருந்து உள்ளனர் என்பதோடு அவர்கள் நீடித்தப் பயன்பாட்டிற்காக நீர்த்தேக்கங்கள் மற்றும் கால்வாய்களில் தண்ணீரை சேமித்து வைத்திருந்தனர்.

- 865 ஏக்கர் பரப்பளவைக் கொண்ட ராக்கிகர்ஹி, மிகப்பெரிய ஹரப்பா காலத் தளம் ஆகும்.
- அதன் வரலாறு ஆனது, ஆரம்ப கால ஹரப்பா காலம் முதல் கடைநிலை ஹரப்பா காலம் வரையில் பல நிலைகளில் கி.மு. 5000 முதல் 2000 வரை பரவியுள்ளது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★